https://www.facebook.com/uthayan.print https://twitter.com/uthayanprint | விலை : ரூபா.30 | பக்கங்கள் : 60

# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 032 வள்ளுவர் ஆண்டு: 2045 மார்கழி 13, ஞாயிற்றுக்கிழமை 28.12.2014

**வானிலை**
மேகமூட்டமான வானிலை காணப்படும் மாலை, இரவு வேளை மழை பெய்யக் கூடும்.

## முல்லையிலும் டெங்கு அபாயம்

முல்லைத்தீவு டிசெ 28
வடக்கில் யாழ்ப்பாணத்தில் மாத்திரமன்றி முல்லைத்தீவிலும் டெங்கு நோய்த் தொற்று ஏற்படுவது சடுதியாக அதிகரித்துள்ளது. இந்த மாதம் 23 பேர் முல்லைத்தீவில் டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சுப் புள்ளி விவரங்கள் தெரிவித்துள்ளன.
யாழ்.மாவட்டத்தில் இந்த மாதம் இதுவரையான காலப் பகுதியில் 314 பேரும், கடந்த மாதம் 317 பேரும் டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர். முல்லைத்தீவில் செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்

பக்.29

## ராணுவத்தின் பரப்புரைகளை உடன் நிறுத்த உத்தரவு

கொழும்பு, டிசெ. 28
ஜனாதிபதி மஹிந்தவுக்கு ஆதரவாக இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்ட தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறு தேர்தல்கள் ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார்.
ஜனாதிபதிக்கு ஆதரவாக 2 லட்சத்து 60 ஆயிரம் கடிதங்கள் அனுப்பும் நடவடிக்கையை இராணுவத்தினர் முன்னெடுத்திருந்த நிலையில் குறித்த நடவடிக்கையையே நிறுத்தத் தேர்தல்கள் ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார்.
ஜனாதிபதி மஹிந்த கடந்த 10 ஆண்டு காலத்தில் செய்த

பக்.29

## முடிவுகளை வெளியிடும் பொறுப்பு தேர்தல் செயலகத்திடம்

இதுவரை காலமும் முடிவுகளைத் தெரிவிக்கும் பணிக்குப் பொறுப்பாக இருந்து வந்த அரச தகவல்கள் திணைக்களத்திடமிருந்து அந்தப் பொறுப்பைத் தேர்தல்கள் செயலகம் சுவீகரித்துக் கொண்டுள்ளதாகவும் இனிமேல் தேர்தல் முடிவுகள் தேர்தல்கள் செயலகத்தால் நேரடியாக வெளியிடப்படுமெனவும் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்திருக்கிறார்.
அரச தகவல்கள் திணைக்களத்தில் அரசியல் ஊடுருவல்கள் மிகுந்துள்ளதாக தேர்தல்கள் செயலகத்துக்குக்

பக்.29

# விடாமுயற்சியே சாதிக்க வைத்தது

### தேசிய ரீதியில் முதலிடம் பெற்றயாழ். இந்து மாணவன் டாருகீசன்



யாழ்ப்பாணம், டிசெ. 28
விடாமுயற்சியுடன் சாதிக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் கூடிய கவனம் எடுத்துப் படித்தால் சாதிக்க முடியும் என கணிதப் பிரிவில் தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவன் பாக்கியராஜ் டாரு கீசன் தெரிவித்தார்.
நேற்று வெளியான ஜி.சி.ஈ உயர்தரப்பரீட்சையில் தேசிய ரீதியில் முதலாம் இடத்தை யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் பாக்கியராஜ் டாருகீசன் பெற்றுச் சாதனை படைத்தார்.
தனது வெற்றி தொடர்பில் அவர் உதயனுக்கு வழங்கிய விஷேட செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-
எனது சொந்த இடம் மீசாலை. ஆனால் இப்போது யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலருகில் வசித்து

பக்.29

# 58,000 பேர் வடக்கில் பாதிப்பு

### 21 ஆயிரத்து 917 பேர் இடம்பெயர்வு தொடரும் சீரற்ற காலநிலையால்



யாழ்ப்பாணம், டிசெம்பர் 28
வடக்கில் பெய்துவரும் கன மழை காரணமாக யாழ். மாவட்டம் தவிர்ந்த ஏனைய நான்கு மாவட்டங்களிலும் 18 ஆயிரத்து 421 குடும்பங்களைச் சேர்ந்த 58 ஆயிரத்து 642 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
அவர்களில் 4 ஆயிரத்து 526 குடும்பங்களைச் சேர்ந்த 21 ஆயிரத்து 917 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். அவ்வாறு இடம்பெயர்ந்தவர்கள் 78 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஒரு பகுதியினர் தத்தம் உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர் என்று மாவட்டங்களின் இடர் முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர்கள் தெரிவித்தனர்.
வடக்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு வவுனியா, மன்னார் மாவட்டங்களில்

பக்.29

## யாழ். இந்துவின் டாருகீசன் தேசிய ரீதியில் முதலிடம்

யாழ்ப்பாணம், டிசெ 28
ஜி.சி.ஈ உயர்தரப் தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று மாலை வெளியிடப்பட்டன.
இதன் அடிப்படையில் கணிதப் பிரிவில் 3 ஏ சித்திகளைப் பெற்று தேசிய ரீதியில் முதலிடம் பெற்றுள்ளார் யாழ். இந்துக் கல்லூரி மாணவன் பாக்கியராஜ் டாருகீசன்.
இதேவேளை கணிதப் பிரிவில் தேசிய ரீதியில் 8ஆம் இடத்தையும் யாழ். இந்து மாணவன் ஒருவர் பெற்றுள்ளார்.
உயிரியல் பிரிவில் சென்.ஜொன்ஸ் கல்லூரி மாணவன் தர்சிகன் முகுந்தனும், கலைப்பிரிவில்

பக்.29

## சந்திரிகாவை குறி வைத்து பேருவளையில் தாக்குதல்

கொழும்பு, டிசெ 28
பொது எதிரணி மீதான தாக்குதல்கள் தொடர்ச்சியாக அதிகரித்து வரும் நிலையில், நேற்று முன்தினம் இரவு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க மற்றும் மேல் மாகாண சபை உறுப்பினர் ஹிருணிகா ஆகியோரை இலக்கு வைத்து தாக்குதல் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இதில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த மூவர் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்கும் பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு பேருவளைக் கடற்கரை மைதானத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டம் முடிவடைந்த பின்னர் ஐக்

பக்.29

## துணைவேந்தரின் செயல் தேர்தல் விதிமுறை மீறல்

### தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு உடனடியாக நிறுத்துமாறும் உத்தரவு

யாழ்ப்பாணம், டிசெ. 28
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாழ்த்துத் தெரிவித்து, கையொப்பம் பெற்றுக் கொள்வதற்கு யாழ்பல்கலைக்கழகத் துணைவேந்தர் மேற்கொண்ட நடவடிக்கை தேர்தல் விதிமுறைகளை மீறிய செயல் எனத் தெரிவித்த, தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய இந்த நடவடிக்கையை உடன் நிறுத்துமாறும் உத்தரவிட்டுள்ளார்.

பக்.29

## தலைமையின் முடிவின் பின்னரே தேர்தல் பரப்புரை

### வவுனியாவில் கூட்டமைப்பினர் தீர்மானம்

யாழ்ப்பாணம், டிசெ. 28
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தலைமை முடிவெடுத்த பின்னரே, ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவான பரப்புரை நடவடிக்கைகளில் களமிறங்குவது என்றும் வவுனியாவில் நேற்று நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாவட்ட மட்டக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் இதுவரை எந்தவொரு அறிவிப்பையும் வெளியிடவில்லை.

பக்.29

யாழ் நகரில்
PEARSON
UNIVERSITY OF WOLVERHAMPTON
London South Bank University
edexcel HNDs IN...
♦ Quantity Surveying ♦ Business Management
♦ Civil Engineering ♦ Computing
♦ Biomedical Science
Leading to BSc (Hons) / BA (Hons) / B Eng (Hons) from more than 105 Universities in UK, USA, Australia & Canada etc...
BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
16, Point Pedro Road, Jaffna.
Tel : 021 221 9910
Hotline : 077 710 2131
Building Careers - Transforming Lives
Colombo | Mt.Lavinia | Kandy | Batticaloa | Kurunegala | Ampara | Jaffna | Qatar



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## செய்திகள்

# மஹிந்தவுக்கே வாக்கு என்று கடவுள் முன்னால் சத்தியம்

### யாழில் அரங்கேற்றுகிறது அரச ஆதரவுக் கட்சி

யாழ்ப்பாணம், டிசெ. 28

ஜனாதிபதி மஹிந்தவுக்கு வாக்களிக்கவேண்டும் என்று கடவுள் படங்களின் முன்னால் சத்தியம் வாங்கி, சமுர்த்திப் பணம் விநியோகிக்கும் சம்பவங்கள் யாழ். மாவட்டத்தில் அரங்கேறி வருகின்றன. ஆளும் கட்சியின் பங்காளிக் கட்சியாக யாழ்ப்பாணத்திலுள்ள கட்சியின் பிராந்திய அமைப்பாளர்களே இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

சமுர்த்திப் பயனாளிகளுக்கு செழிப்பான இல்லம் என்ற திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகின்றது. இதில் முதல் கட்டமாக 2 ஆயிரத்து 500 ரூபா பணம் சகல சமுர்த்திப் பயனாளிகளின் கணக்கிலும் வரவு வைக்கப்பட்டுள்ளது.

தற்போது தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், பயனாளிகளின் சமுர்த்தி வங்கிப் புத்தகத்தில் வைப்பிலிட்ட தொகையை, பயனாளிகளிடம் நேரடியாக வழங்கும் நடவடிக்கை யாழ்.மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக இடம்பெற்று வருகின்றது.

ஆளும் கட்சியின் பங்காளியாகவுள்ள குறித்த கட்சியின் பிராந்திய அமைப்பாளர்கள், தமது பகுதிக்குரிய சமுர்த்தி வங்கி முகாமையாளர்களிடம், தாமே குறித்த பணத்தைச் சமுர்த்தி பயனாளிகளுக்குவழங்குவோம் என்று தெரிவித்துள்ளனர். இதற்கு வேறு வழியின்றி முகாமையாளர்களும் சம்மதித்துள்ளனர்.

கடந்த காலத் தேர்தல்களின் போதும், மக்கள் இவ்வாறு பணத்தைப் பெற்றுக் கொண்டு குறித்த கட்சி சார்ந்த பிரதிநிதிகளுக்கு வாக்களிக்காமல் விட்டிருந்தனர். இதனால் தற்போது பணத்தை வழங்கும்போது, கடவுள் படங்களை வைத்து அதன் முன்னால் சத்தியம் வாங்கிப் பணத்தை வழங்கும் நடவடிக்கைகளை இவர்கள் மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)




ஜேர்மனியில் ஆலன்,பேர்ளின் மற்றும் எஸ்சேன் நகர்களில் ஆழிப்பேரலையின் 10ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் புலம் பெயர் தமிழர்களால் உணர்வு பூர்வமாக முன்னெடுக்கப்பட்டன. அங்கு ஆழிப்பேரலை காவுகொண்ட மக்களின் நினைவாக வைக்கப்பட்ட நினைவுத் தூபிக்கு மலர் மற்றும் சுடர் ஏற்றி உறவுகள் அஞ்சலி செலுத்தினர். (த)

## சமுர்த்தி அதிகாரிகளை தேர்தல் பிரசாரத்துக்கு அழைக்கிறார் டக்ளஸ்

யாழ்ப்பாணம், டிசெ. 28

ஜனாதிபதி மஹிந்த யாழ்ப்பாணத்துக்கு எதிர்வரும் 2 ஆம் திகதி வரும்போது, ஈ.பி.டி.பியின் அமைப்பாளர்களால் மேற்கொள்ளப்படும், மக்களைத் திரட்டும் நடவடிக்கைக்கு சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கட்சி அலுவலகமான ஸ்ரீதர் தியேட்டரில், நேற்று மாலை சமுர்த்தி வங்கி முகாமையாளர்களுடன் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஜனவரி மாதம் 2 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த தேர்தல் பரப்புரைக்காக யாழ்.மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளார். இதன் போது ஈ.பி.டி.பியின் ஒவ்வொரு அமைப்பாளர்களும் தலா 30 ஆயிரம் பேரைத் திரட்டவுள்ளனர். இதற்குச் சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள் ஒத்துழைக்க வேண்டும்.

எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர், மக்களைத்திரட்டும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுத்தனக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இதற்குரிய போக்குவரத்து ஒழுங்குகளைத்தான் மேற்கொள்வதாகக் கூறியுள்ளார். (த-5)

## தலையசிட்டி பகுதியில் உருக்குலைந்த வீடுகள்

### பார்வையிட்டு ஏக்கமடைந்த மக்கள்



யாழ்ப்பாணம், டிசெ 28

வலி.வடக்குப் பகுதியில் உயர் பாதுகாப்புப் பிரதேசத்தில் உள்ள வீமன்காமம் கிராமத்தில் அமைந்துள்ள தலையசிட்டிக் கிராமத்தில் வீற்றிருக்கும் தலையசிட்டி ஞான வைரவர் ஆலயத்தை தரிசிக்கச் சென்ற மக்கள் தங்களது பரம்பரைச் சொத்தான சொந்த நிலங்களையும் உருக்குலைந்த வீடுகளையும் பார்வையிட்டு ஏக்கத்துடன் திரும்பினர்.

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா -மகேஸ்வரனின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் உள்ள ஞானவைர வர் ஆலயத் தரிசிப்புக்காக் ஆல யக் குருக்கள் மற்றும் கிராம மக்கள் ஆகியோர் அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

அவ்வாறு சென்றவர்கள் ஆலய வழிபாடுகளில் ஈடுபட்ட பின்பு உயர் பாதுகாப்புப் பகுதியில் இருந்து வெளியேறும்போது தமது கிராமங்களையும் பார்வையிட்டனர்.

ஆலயப்பகுதி உட்பட மக்கள் குடியிருப்புப் பகுதிகள் அனைத்தும் பெரும் பற்றைக்காடுகளாகவே காட்சி அளிப்பதாகவும், வீடுகள் எல்லாம் உருக்குலைந்து போயுள்ளதாகவும் அந்த மக்கள் கூறினர். (த-101)

## 8 அரச உறுப்பினர்கள் மைத்திரிக்கு ஆதரவு

கொழும்பு, டிசெ. 28

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முன்னாள் மாகாண சபை, பிரதேச சபை உறுப்பினர்கள் உட்பட 8 பேர் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்குவதாக நேற்று அறிவித்துள்ளனர்.

பொது வேட்பாளரின் தேர்தல் பரப்புரைக் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவர்கள் தமது ஆதரவு தொடர்பில் அறிவித்தனர்.

பாணந்துறை நகர சபையின் முன்னாள் தலைவர் நந்தன குணதிலக தலைமையில் இவர்கள் பொது எதிரணியில் இணைந்து கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மொனறாகல மாவட்ட முன்னாள் மாகாண சபை உறுப்பினர் உதய குமார, பதுளை மாவட்ட முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பூமிநாதன், அனுராதபுர மாவட்ட முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான ஆ.ஜயரத்ன, ரோஹான புஷ்பகுமார, மற்றும் அனுர திசாநாயக உட்ப ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முன்னாள் பாணந்துறை பிரதேச சபை உறுப்பினர் சுராஜ் பத்மா குமார, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மொனறாகல மாவட்ட செயலாளரும், முன்னாள் படல்கும்புர பிரதேச சபை உறுப்பினருமான சரித ஸ்ரீ சிந்தக, ஊவா மாகாண நூலக சேவைகள் குழுவின் முன்னாள் தலைவர் காமினி விஜயரத்ன ஆகியோரே இவ்வாறு பொது எதிரணியில் நேற்று இணைந்து கொண்டவர்களாவர். (த-5)

## மீனவருக்கு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 28

புத்தளத்தில் இருந்து பொத்துவில் ஊடாகக் காங்கேசன்துறை வரையான கடற்பகுதில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்கள் சீரற்ற காலநிலை குறித்து மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் 150 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சிக்கு வாய்ப்புள்ளதாக தெரிவித்துள்ள வானிலை அவதான நிலையம், மழை நேரங்களில் இடி, மின்னல் தாக்குதல்களினால் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் கோரியுள்ளது.

இதேவேளை, சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட மலையக மார்க்கத்திலான ரயில் போக்குவரத்து சேவைகள் இது வரை வழமைக்குத் திரும்பவில்லை. பெரும்பாலான ரயில்கள் மட்டுப்படுத்தப்பட்டும் நிறுத்தப்பட்டும் உள்ளதாக ரயில் போக்குவரத்து அதிகாரி எல்.ஏ. ஆர். ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். (த-10)

## பிடியாணை பிரதியமைச்சர் தப்பியோடினார் வெளிநாடு

கொழும்பு, டிசெ. 28

நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த பிரதியமைச்சர் நிஸாந்த முத்துஹெட்டிகம, வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்கின்றார் என்ற தகவல் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்றும் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால், கட்டுநாயக்கா விமான நிலையத்தின் விஷேட விருந்தினர் வாயில் ஊடாக நேற்று முன்தினம் அதிகாலை அவர் சிங்கப்பூருக்குத் தப்பிச் சென்றுள்ளார்.

பொது எதிரணியின் பரப்புரை மேடையைக்காலியில்தீவைத்து எரித்த சம்பவத்துடன் தொடர்புடைய மூவரைப் பொலிஸார் கைது செய்திருந்தனர். கைது செய்யப்பட்ட மூவரையும் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று பலவந்தமாக விடுவித்ததன் பேரில், பிரதியமைச்சர் நிஸாந்தமுத்துஹெட்டிகமவுக்கு நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 12.51 மணிக்குச் சிங்கப்பூர் வானூர்திச் சேவையின் எஸ்.கியூ. 468 என்ற வானூர்தியில் சிங்கப்பூருக்குச் சென்றுள்ளார்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தின் விஷேட விருந்தினர் வெளியேறும் வாயிலையே அவர் இதற்காகப் பயன்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள பொலிஸ் ஊடகப் பேச்சாளர், 'அவர் சிங்கப்பூருக்குச் சென்றிருப்பதாகவே அறிகின்றோம். நாட்டுக்கு திரும்பும் போது கைது செய்வோம்'. சரி, அப்படியானால் அவர், சிங்கப்பூருக்குப் பயணமாகும்போது ஏன் கைது செய்யப்படவில்லை என்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எந்தப் பதிலையும் வழங்கவில்லை.

இதேவேளை, பிரதியமைச்சர் அதிவேக நெடுஞ்சாலையின் ஊடாக கட்டுநாயக்கவுக்குச் செல்வதாக பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் சகோதரர், கடந்த வியாழக்கிழமை இரவு 10.56 இற்கு 119 என்ற பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்பு கொண்டு அறிவித்துள்ளார்.

இதன் பின்னர், இரவு 11.01 இற்கும் 11.02 இற்கும் பொலிஸ் ஊடகப் பிரிவின் காரியாலயத்துடன் தொடர்பு கொண்ட இரு சந்தர்ப்பங்களிலும் இன்னும் இரண்டு மணிநேரத்துக்குள் முத்து ஹெட்டிகம, நாட்டைவிட்டு வெளியேறவிருக்கின்றார் என்ற தகவல்கள் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுத்துறைக்குள் அரசியல் தலையீடுகள்

## அமைச்சர் ஐங்கரநேசன் சாடல்

யாழ்ப்பாணம்.டிசெ.28

காலகாலமாக கூட்டுறவுத்துறையில் அரசியல் தலையீடுகள் தாராளமாக இருந்து வருகிறது. தங்களுடைய வாக்கு வங்கிக்காகவும், தங்களுக்கு தேவையானவர்கள் இருக்கவேண்டும் என்பதற்காகவும் கூட்டுறவுத்துறையைப் பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் இனிவரும் காலங்களில் எந்தவித அரசியல் தலையீடுகளும் இல்லாமல் நாட்டுக்கு உழைக்கக் கூடிய கூட்டுறவு எண்ணம் கொண்டவர்களை துறைக்குள் உள்வாங்கவேண்டும் என்று வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.



கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் மீன்பிடிச் சமாசத்துக்குநீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் மீன்பிடி வலைகள் வழங்கும் நிகழ்வு நேற்று விவசாய அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கூட்டுறவு இயக்கம் மக்களுக்கானது. கூட்டுறவுத் துறையில் பெரிய மாற்றங்களை இனி ஏற்படுத்தவேண்டும். இன்று இருக்கக்கூடிய துறைகளில் மிகவும் நலிவடைந்த துறையாகக் கூட்டுறவுத்துறையுள்ளது. ஒரு காலத்தில் கூட்டுறவுத்துறை பிரபல்யமாக இருந்தது.

ஆனால் இன்று காலம் மாறிவிட்டது கூட்டுறவுக்கும் பயனாளிகளான மக்களுக்கும் இடையில் பெரிய இடைவெளி ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணமாகவும், கூட்டுறவுத்துறையின் பின்னடைவுக்கும் மூன்று தசாப்பத காலமாக இடம்பெற்ற போரைச் சொல்கின்றோம். இதற்கு முற்றுமுழுதாக போரைக் காரணமாகக் கூற முடியாது. கூட்டுறவுத்துறையின் பின்னடைவுக்கு பல்வேறு வகையான காரணங்கள் உள்ளன.

வியாபாரத்தில் பல்வேறு வகையான உத்திகளைக் கைக்கொண்டும் உலக மயமாக்கல் சூழலில் கூட்டுறவுத்துறையை வைத்திருக்கின்றோம். தனியார் நிறுவனங்களை எதிர்கொள்ளக்கூடியவகையில் கூட்டுறவுத் துறையை மாற்றியமைக்கவேண்டும்.

ஒரு காலத்தில் வெளிநாட்டு உற்பத்திகளின் வரவு குறைவாக இருந்தபோது உள்ளூர் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பு அதிகமாக இருந்தது. ஆனால் தற்போது பாதைகள் சீரமைப்பு செய்யப்பட்ட பின்னர் வெளிநாட்டு உற்பத்திகளின் வருகை அதிகரித்துள்ளது. இதனால் கூட்டுறவுத் துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு பெரிய வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது–என்றார்.

வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் மதுமதி வசந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த விவசாய நடவடிக்கைககளில் ஈடுபடும் 10 கூட்டுறவுச் சங்கங்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரமும், பூநகரி மீன்பிடி சமாசத்துக்கு உட்பட்ட நன்னீர் மீன்பிடியாளர்களுக்கு மீன்பிடி வலைகளும் வழங்கப்பட்டன.

(த–14)



# யாழ்ப்பாணச் சங்கத்தின் பணியாளர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 28

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்திய பணியாளர் கௌரவிப்பு மற்றும் ஒளிவிழா நிகழ்வுகள் நேற்று சங்கத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சங்கத்தின் தலைவர் மு.ஜெ. சுஜீந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சங்கத்தில் தொடர்ந்து 25 வருடங்கள் சேவையாற்றிய பணியாளர்கள் மலர் மாலை அணிவிக்கப்பட்டுப் பதக்கம் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிழ்வில் சிறப்பு விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.கபிலன் கலந்து கொண்டார். வண பிதா அருட்திரு பத்திநாதன் அடிகளார் ஆசியுரை வழங்கினார்.

தொடர்ந்து சங்கத்தின் வியாபார நிலையங்களில் அதிக விற்பனை மேற்கொண்ட கிளை முகாமையாளர்கள், விற்பனையாளர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுப் பரிசில்களும் வழங்கப்பட்டன. சங்கத்தின் வளர்ச்சி கருதி விடுமுறை பெறாமல் தொடர்ந்து பணியாற்றிய பணியாளர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

இதனைவிட சங்கத்தின் எரிபொருள் நிலையம் யாழ்.மாவட்டத்தில் இம்முறை இரண்டாம் இடத்தை தட்டிக் கொண்டது. இதற்காக எரிபொருள் நிரப்பு நிலையப் பணியாளர்களும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் கலந்துகொண்ட சிறுவர்களுக்கு சங்கத்தின் பொது முகாமையாளர் சதீஸ்குமார், கணக்காளர் செல்வி.அ.அருள் அரசி, செயலாளர் திருமதி சி.சிவகுமார் ஆகியோர் பரிசில்களை வழங்கினார்கள்.

(த–17)



ஏ-9 பிரதான வீதியில் சாவகச்சேரியில். நீலப் படையினால் ஜனாதிபதி மஹிந்தவை ஆதரித்து நேற்று மேற்கொள்ளப்பட்ட தேர்தல் பரப்புரை நடவடிக்கையின்போது, சிலர் ஹெல்மட் அணியாத நிலையில் பயணித்ததோடு. அரச அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களும் பயன்படுத்தப்பட்டன.

(த-5)

# கள்ளப்பாடு அ.த.கவில் ஆழிப்பேரலை நினைவு



முல்லைத்தீவு, டிசெ. 28

ஆழிப்பேரலை 10 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று முல்லைத்தீவு கள்ளப்பாடு அ.த.க. பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.

பாடசாலையில் கல்வி கற்று உயிரிழந்த 63 சிறார்களின் நினைவாக அவர்களின் பெற்றோர், உறவினர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

சிறார்களின் நினைவாகப் பாடசாலை முன்றலில் கட்டப்பட்ட தூபியின் முன்வைக்கப்பட்டிருந்த பொதுச் சுடரை வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் மற்றும் கள்ளப்பாடு வடக்கு முன்னாள் கிராம அலுவலர் ஆகியோர் இணைந்து ஏற்றி வைத்தனர். அதன் பின்னர் நிகழ்வில் கலந்து கொண்ட உறவுகள் மலர் தூவி கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

பாடசாலை அபிவிருத்திச் சபைச் செயலாளர் மா.ஆனந்தராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன், முன்னாள் கிராம சேவகர் சேந்தன், பாடசாலை அதிபர் இரவீந்திரராசா ஆகியோர் நினைவுரையாற்றினர்.

(த–86)

# திருட்டு மணல் ஏற்றியவர்கள் பொலிஸை கண்டதும் ஓட்டம்

## டிராக்டர் பெட்டியைக் கைவிட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 28

டிராக்டரில் திருட்டு மணல் ஏற்றிச் சென்றவர்கள் பொலிஸாரைக்கண்டதும் மணலுடன்டிராக்டர் பெட்டியைக் கழற்றி விட்டு இயந்திரத்துடன் தப்பியோடியுள்ளனர் என்று. கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

கொடிகாமம்பாலாவியில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பாலாவியில் திருட்டுத்தனமாக மணல் அள்ளிச் செல்லப்படுவது தொடர்ந்து கொண்டிருக்கிறது. இன்றுவரை அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படாமையால் சமூக விரோதிகள் மணலைத்திருட்டுத்தனமாக ஏற்றிச் சென்று விற்பனை செய்து வருகின்றனர்.

இரவு பகலாக இது இடம் பெறுகின்றது. பொலிஸாரைக் கண்டதும் மணலைப் பறித்து விட்டு தப்பியோடுவதும் மணல் ஏற்றும் இடத்திலிருந்து மறைந்து வெளியேறுவதும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

அந்தத் திருடர்கள் பொலிஸாரிடம் அகப்படுவது குறைவாகவே உள்ளது. இந்த நிலையில் நேற்று திருடர்கள் பாலாவியில் மணல் ஏற்றிக்கொண்டு செல்லும் போது சிவில் உடையில் சென்ற பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டனர். அதனால் டிராக்டர் பெட்டியைக் கழற்றிவிட்டு இயந்திரத்துடன் தப்பியோடி விட்டனர்.

அது தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது. சம்பந்தப்பட்டவர்கள் விரைவில் கைது செய்யப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திகள்

## சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களை மீட்கத் தவறியுள்ளது மஹிந்த அரசு

### இடர் ஏற்பட முன்னரே மக்களைப் பாதுகாக்க நடவடிக்கை என்கிறார் மைத்திரி

கொழும்பு, டிசெ.28

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பௌதீக ரீதியாக கட்டியெ ழுப்பவும், பாதிக்கப்பட்ட மக்களை அதிலிருந்து மீட்பதற்கும் தற்போதைய அரசு மறந்துள்ளது என எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள் ளார்.

விசேட தொழில்நுட்பத்தினூடாக இயற்கை இடர் தொடர்பில் மக்களுக்கு முன்கூட்டியே அறிவிப்பு விடுத்து, அவர்களைப் பாதுகாக்க தெளிவான வேலைத்திட்டம் தமது ஆட்சியில் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

ஆழிப்பேரலை இடரின் 10 ஆம் ஆண்டை நினைவு கூரும் வகையிலும், உயிர்நீத்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறி சேன தலைமையில், நேற்று முன்தினம் காலை கொழும்பு, மட்டக்குளியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, முன்னாள் அமைச்சர்களான ராஜித சேனாரட்ன, சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் பங்கேற்றனர். ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களிலுள்ள பிள்ளைகளுக்கு இதன் போது நிதியுதவி வழங்கப்பட்டது.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட பொது வேட்பாளர் மைத் திரிபால சிறிசேன,

"ஆழிப்பேரலை இடரால் 40 ஆயிரம் உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. இதனால், முழு நாட்டு மக்களும் கண்ணீர் சிந்தினர். அந்தக் கண்ணீர் முழு நாட்டையும் ஒன்றிணைத்தது. இந்த இடரால் காவுகொள்ளப்பட்ட மக்களின் ஆத்ம சாந்திக்காக நாம் அஞ்சலிக்கின்றோம்.



ஆழிப்பேரலை ஏற்பட்டு 10 வருடங்கள் கடந்துள்ளபோதும், பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோரின் பிரச்சினைகள் தீர்க்கப்படாத நிலையிலுள்ளன. தற்போதைய அரசு, ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்பவில்லை. அரசு என்ற வகையில் ஆழிப்பேரலையால் உயிர்நீத்த மக்களை நினைவுகூர ஆகக் குறைந்தது ஒரு தேசிய வேலைத்திட்டத்தைக்கூட முன்னெடுக்கவில்லை. இது குறித்து நாம் மிகவும் கவலையடைகின்றோம்.

ஆழிப்பேரலையால் ஏற்பட்ட பூகோள மற்றும் சூழல் நிலைமைகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, இயற்கை இடர் ஏற்படும்போது நாடு என்ற வகையில் அதற்கு முகங்கொடுக்கவும், இடர்கள் ஏற்படுவதற்கு முன்னர் விசேட தொழில்நுட்பத்தினூடாக மக்களுக்கு முன்கூட்டியே அறிவித்தல் விடுத்து அவர்களைப் பாதுகாக்கவும் எமது புதிய அரசில் நடவடிக்கை எடுக்க தெளிவான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும். இதற்காக அரசு என்ற வகையில் நாம் மிகவும் பொறுப்புடன் செற்படுவோம்" – என்றார். (த)

## நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சிவப்புஅறிவித்தல் விடுப்பு

நாட்டில் நிலவுகின்ற மிக மோசமான காலநிலையை அடுத்து நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சிவப்பு அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

புத்தளம் முதல் காங்கேசன்துறை ஊடாகப் பொத்துவில் வரை கரையோரப் பகுதிகளில் வாழ்கின்றவர்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**ரயில் சேவைகள் நிறுத்தம்**

இதேவேளை, மலையகத்துக்கான ரயில் சேவைகள் முற்று முழுதாக நிறுத்தப்பட்டுள்ளன என்று ரயில்வே கட்டுப்பாட்டறை அறிவித்துள்ளது.

அத்துடன், மட்டக்களப்புக்கான ரயில்சேவைகளும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

**பஸ் சேவைகள்**

கொழும்பு–குருணாகல் வீதியில் வெள்ளம் ஏற்பட்டுள்ளமையால் இல.5, இல.06 வீதிகளின் ஊடாக போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

**நுவரெலியா மாவட்டத்தின் நுழைவாயில்கள் மூடல்**

நுவரெலியாவுக்கான நுழைவாயில்கள் யாவும் மூடப்பட்டுள்ளதாக நுவ ரெலியா பொலிஸார் அறிவித்துள் ளனர்.

நுழைவாயில்களை அண்மித்த பகுதிகளில் ஏற்பட்டுள்ள மண்சரிவையடுத்தே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.(த)

## எனது உயிர் போனாலும் பரவாயில்லை முஸ்லிம்கள் நிம்மதியாக வாழவேண்டும்

### அதற்காகவே பொது எதிரணியில் இணைந்தேன் என்கிறார் ரிஷாத் பதியுதீன்

எனது உயிர்போனாலும் பரவாயில்லை. எமது முஸ்லிம் மக்கள் இந்த நாட்டில் நிம்மதியாக வாழக்கூடிய நிலை ஏற்பட வேண்டும். அதற்காகவே நான் பொது எதிரணியை ஆதரிக்க முன்வந்திருக்கிறேன் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் கல்முனையில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மக்கள் சந்திப்பும், தேர்தல் பரப்புரைக் கூட்டமும் கட்சியின் செயலாளர் நாயகம் வைஎல். எஸ்.ஹமீட் தலைமையில் நேற்றுமுன்தினம் கல்முனை ஆசாத் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில்,

"பொது பல சேன என்ற கொடூர இனவாதஅமைப்பைஅரசிலிருக்கும் ஒரு சிலர் வழிநடத்தி வருகின்ற நிலையில் கடந்த 2 வருடகாலமாக முஸ்லிம்கள் பட்ட கஷ்டங்களை இனிவரும் காலங்களில் எந்த ஆட்சியாளரும் செய்யக் கூடாது. அப்படி நடந்தால் நாம் இது போன்ற முடிவையே ஆட்சியாளர்களுக்கு கொடுப்போம்.

நாம் வெளியேறுகின்ற நேரத்தில் பல தூதுக்கள் எம்மிடம் வந்து மஹிந்தவை விட்டு மாறவேண்டாம், அதற்காக என்ன வேண்டுமானாலும் தருகிறோம் – என்று கூறியது மட்டுமல்லாது, நீங்கள் உயிரிழக்கக் கூடிய நிலையும் ஏற்படலாம் என்றும் கூறின. என்னை நாடாளுமன்றம் அனுப்பிய மக்கள் அரசில் இருக்கவே சொன்னார்கள். ஆனாலும் ஒட்டுமொத்த முஸ்லிம்களுக்காகவே இந்த முடிவை நாம் எடுத்திருக்கின்றோம். அதனால் எமது உயிர் போனாலும் முஸ்லிம்களுக்காக அதற்கும் தயாராக இருக்கின்றோம் என்று நாம் கூறியே இப்போது மக்களிடம் வந்துள்ளோம்.



ஜனாதிபதி அகங்காரம் பிடித்த ஒரு வராக இருந்தார். முஸ்லிம்களுக்குக் கடந்த இரண்டு வருடகாலம் நடந்த கொடுமையைத் தட்டிக் கேட்க முனைந்த போதெல்லாம் நாம் ஜனாதிபதியினால் வஞ்சிக்கப்பட்டோம். தம்புள்ளை முதற்கொண்டு நாட்டின் நாலா புறங்களிலும் உள்ள அனைத்துப் பிரதேச முஸ்லிம்களின் உரிமைகளையும் கருத்தில்கொண்டே நான் அரசில் இருக்கும் நெருக்கத்தையும் மீறி, இலங்கை வாழ் முஸ்லிம்களின் உரிமை, மத சுதந்திரம், அச்சமற்ற வாழ்வு என்ற விடயங்களுக்காக இன்று அனைத்தையும் துறந்து உங்கள் முன்வந்திருக்கின்றேன்.

எமது முஸ்லிம் சமூகத்திற்கு எதிராகப் பொதுபல சேனவினால் மேற்கொள்ளப்படும் இன விரோத செயற்பாடுகளை விரும்பாத – அர்சுக்குள் இருக்கும் நல்ல மனிதர் அமைச்சர் பஸில். அவரின் நட்பை இழந்தமையையிட்டுக் கவலையடைகின்றேன். அவர் எமது உணர்வுகளைப் புரிந்து கொள்ளக்கூடிய ஒருவராவார்.

இருந்தபோதிலும், எம் சமூகத்தின் பாதுகாப்பு, இருப்பு, சுய கௌரவம், கலாசார விழுமியங்களின் பாதுகாப்பு, எமது பள்ளிவாசல்களின் பாதுகாப்பு என்பவற்றைக் கருத்தில் கொண்டும், எமக்கு ஆணை வழங்கிய மக்களின் கருத்துகளையும், உணர்வுகளையும் உள்வாங்கியும் எடுத்த முடிவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனாவை ஆதரிப்பதாகும்.

எமது கட்சி இவ்வாறான முடிவை எடுக்கும் என அரசோ, மக்களாகிய நீங்களோ நினைத்திருக்கமாட்டீர்கள். ஆனால் நீங்கள் நினைத்ததெல்லாம் முஸ்லிம்களின் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்ற கட்சியினர் இவ்வாறான முடிவை எடுப்பார்கள் என நினைத்தீர்கள். அது இன்னும் நடக்கவில்லை. அவர்கள் இதுவரை ஐம்பது கூட்டங்களைக் கூட்டியும் முடிவுக்கு வரவில்லை.

ஆனால், எமது கட்சி ஒரு கூட்டத்தை மாத்திரமே கூட்டி முடிவெடுத்துள்ளது.

இதுவரையில் பொது எதிரணியில் இணைந்துள்ளவர்களில் எமது கட்சி மட்டுமே நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள் உட்பட 70இற்கும் மேற்பட்ட ஆகக் கூடுதலான உறுப்பினர்களுடன் இணைந்து பெரும் பலத்தைப் பொது எதிரணிக்குக் கொடுத்துள்ளது.

நடைபெறவிருக்கும் இத்தேர்தல் கல்முனைக்கோ, அக்கரைப்பற்றுக்கோ, சம்மாந்துறைக்கோ, காத்தான்குடிக்கோ நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றுக்கொள்ளும் தேர்தல் அல்ல. எனவே, கட்சி பேதங்களை மறந்து முஸ்லிம்கள் அனைவரும் எதிர்கால ஆபத்திலிருந்து பாதுகாப்புப்பெற மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்க முன்வரவேண்டும்" – என்றும் குறிப்பிட்டார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுப்பினர்களின் வெற்றிடங்களை உடன் நிரப்புங்கள்

## கூட்டமைப்பிடம் வலி.தென்மேற்கு ஆதரவாளர்கள் கோரிக்கை

வலி.தென்மேற்கு,டிசெ.28
வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்கான தேர்தலின்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வாக்குகளின் அடிப்படையில் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படாமல் காத்திருக்கும் வேட்பாளர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கும் வகையில் பிரதேச சபையில் காலியாகவிருக்கும் இரு உறுப்பினர்களின் வெற்றிடத்துக்கு வேட்பாளர் பட்டியலில் அடுத்ததாக உள்ள இருவரை நியமிக்குமாறு கட்சியின் ஆதரவாளர்கள் கூட்டமைப்பின் தலைமைப் பீடத்தைக் கோரியுள்ளனர்.

கடந்த 2011ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பிரதேச சபையின் ஆட்சியைக் கைப்பற்றி நிர்வாகத்தை நடத்தி வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த 12 உறுப்பினர்களில் கே.கௌரிகாந்தன் என்பவர் கூட்டமைப்பின் அறிவுறுத்தலுக்கமைய யாழ்.மாவட்டத் தேர்தல் திணைக்கள அதிகாரியினால் கடந்த இரு மாதங்களுக்கு முன் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். இதனால் இவருடைய உறுப் பினர் பதவி வெற்றிடமாகவுள்ளது.

ஆரம்ப காலம் தொட்டுத் தவிசாளராகக் கடமையாற்றிய அ.ஜெபநேசன் தனது பதவியில் இருந்து விலகியதை அடுத்துக் கடந்த ஆறு மாதங்களாகத் தவிசாளராகக் கடமையாற்றி வந்த எஸ்.சிவகுமார் சுகயீனம் காரணமாக உயிரிழந்தார். இப்போது இரு உறுப்பினர் பதவிகள் வெற்றிடமாக உள்ளன. பிரதேச சபையின் ஆயுள்காலம் முடிவடைவதற்குச் சில மாதங்கள் மட்டுமே இருப்பதனால் பிரதேச சபையில் காலியாக விருக்கும் இரு உறுப்பினர்களின் பதவிகளுக்கு வாக்கு எண்ணிக்கையில் அடுத்துள்ள வேட்பாளர்களை நியமிக்கு மாறு கட்சியின் ஆதரவாளர்கள் தலைமைப் பீடத்தைக் கோரியுள்ளனர். (த-115)

## அடகு வைத்த தங்க நகையை அநியாயமாக இழந்த முதியவர்

கைதடி,டிசெ.28
தனியார் வங்கி ஒன்றில்73 வயது முதியவர் ஒருவரால் அடகு வைக்கப்பட்ட 5 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் தபாலக ஊழியரின் அசமந்தப் போக்கினால் ஏலத்தில் போன சம்பவம் ஒன்று கடந்த மாதம் கைதடியில் இடம்பெற்றுள்ளது.
இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-
கைதடி தெற்கைச் சேர்ந்த முதியவரொருவர் தனது மனைவியின் சத்திர சிகிச்சைக்காகத் தன்னிடம் வசதி இல்லாத காரணத்தால் தனது உறவினர் ஒருவரின் தாலிக்கொடி, சங்கிலி,காப்பு மற்றும் மோதிரம் உட்பட ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளைக் கைதடியிலுள்ள தனியார் வங்கி ஒன்றில் அடகு வைத்தார். தாலிக்கொடியை ஒரு லட்சத்து 80ஆயிரம் ரூபாவுக்கும் ஏனைய நகைகளை ஒரு லட்சம் ரூபாவுக்கும் என கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் அளவில் அவர் அடகு வைத்திருந்தார்.
வங்கியிலிருந்து கடிதம் வந்ததும் மீள நகைகளை எடுக்கும் நோக்கோடு இருந்த அவருக்கு கடந்த நவம்பர் மாதமளவில் வங்கியில் இருந்து வந்த கடிதம் பெரும் கவலையையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அந்தக் கடிதத்தில், நகைகளை மீட்காத காரணத்தினால் நகை ஏலம் போய் விட்டதாகவும், அதில் தங்களுக்குச் சேரவேண்டிய ஒரு லட்சத்து 176 ரூபாவை வங்கிக் கடமைநேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளுமாறும் குறிப்பிடப்பட்டிருந்தது.
உடனடியாக வங்கிக்குச் சென்ற முதியவர் ஏன் எனக்கு அறிவிக்காமல் ஏலத்தில் விற்றீர்கள் என வங்கி முகாமையாளரிடம் வினவினார். அதற்கு வங்கி முகாமையாளர் இரு தடவைகள் சாதாரண தபாலிலும், மேலும் இரு தடவை பதிவுத் தபாலிலும் காலம் போய்விட்டது, எனவே நகைகளை அடகில் இருந்து எடுக்குமாறும் அறிவித்திருந்தோம் எனப் பதில் கூறினார்.
இந்த ஒரு பதிவுத் தபாலே எனது கையில் கிடைத்தது. இதில் நகைகள் ஏலத்தில் விற்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டதனாலேயே நான் இங்கு வந்தேன் என முதியவர் மிகக் கவலையோடு கூறினார். உறவினரின் நகை என்பதால் அவர்களுக்கு என்ன பதில் சொல்வது என கண்ணீர் விட்டவாறு தபாலகத்தில் விசாரிக்கச் சென்றார்.
அங்கு சென்ற அவருக்குத் தபாலக ஊழியரின் அசண்டையீனப் போக்கே தனது நகைகள் ஏலத்தில் பறிபோகக் காரணம் என்பதை அறிந்தார். மேற்படி அவரது பிரதேசத்துக்கான தபாலக ஊழியர், இவருக்கு வரவேண்டிய கடிதங்களைத் தீர விசாரிக்காமல் வலிகாமத்தில் இருந்து வந்து கைதடியில் திருமணம் செய்த இவரது முழுப் பெயரை ஒத்த வர்த்தகர் ஒருவரிடம் கொடுத்துள்ளார். அந்த வர்த்தகரோ இது எனக்கான கடிதம் இல்லை. நான் அடகு வைத்த நகைகளை ஏற்கனவே மீட்டு விட்டேன் எனக் கூற, நகைகள் மீட்டாலும் இப்படிக் கடிதம் வரும் எனக் கூறி அவரிடம் இரு தடவைகள் கடிதங்களை ஒப்படைத்து விட்டுச் சென்று விட்டார். அவரும் அவற்றைத் தனது கடையிலே வைத்துவிட்டு தன் பாடென இருந்து விட்டார்.
இந்த நிலையில் மூன்றாவது கடிதம் பதிவுத் தபாலில் வர அதை வர்த்தகர் பயம் காரணமாக வாங்க மறுத்துவிட்டார். ஆனால் தபாலக ஊழியரோ அந்தக் கடிதத்தைத் தானே பிரித்து, இது உமக்குத் தான் வந்த கடிதம். நகைகள் அடகு எடுத்தாலும் வங்கி சம்பிரதாயத்துக்கு இப்படி அனுப்பிக் கொண்டே தான் இருப்பார்கள் எனக் கூறிவிட்டுச் சென்றுவிட்டார்
இவ்வாறான நிலையில் நான்காவது கடிதமும் பதிவுத் தபாலில் வர வர்த்தகர் அதனை வாங்காது திருப்பி அனுப்பிவிட்டார். இந்தவேளையில் தான் இந்தப் பெயரில் வேறு யாராவது இருப்பார்களோ என்ற சந்தேகத்தில் தபாலக ஊழியர் விசாரித்துக் கொண்டு சென்றால் தபால் நிலையத்திலிருந்து 500 மீற்றர் தூரத்தில் கடிதத்தின் சொந்தக்காரர் இருப்பதை இனங்கண்ட அவர் கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டார். இவ் வேளையே நகைகள் ஏலம் போன விடயம் அடகு வைத்தவருக்குத் தெரிய வந்தது. இது சம்பந்தமாக தபாலகத்துக்குச் சென்று விசாரித்த வேளை உங்கள் கடிதத்தை கைதடிச் சந்தியிலுள்ள வர்த்தகர் தனக்கு வந்த கடிதம் எனக் கூறி வாங்கி விட்டார். எம்மில் தவறில்லை எனப் பொறுப்பற்ற பதிலைத் தபாலகம் இவருக்கு கூறி இவரை வெளியே அனுப்பிவிட்டது.
தற்போது முதியவர் நகை உரிமையாளருக்கு என்ன பதிலைச் சொல்வது என்ன செய்வது எனத் தெரியாது தடுமாறி நிற்கிறார். இதற்கு எதிராகத் தான் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் கூறினார். (த-288)

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

அல்வாய் தெற்கு ஓடைப் பகுதியிலுள்ள பொதுக் கிணற்றிலிருந்து குடும்பஸ்தரின் சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.
அல்வாய் தெற்கு ஓடையைச் சேர்ந்த செல்லையா மகாலிங்கம் (வயது-45) என்பவரே கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டவராவார்.
நேற்று மாலை வீட்டில் இருந்து புறப்பட்ட இவர் வீடு திரும்பாத நிலையில் தேடியபோது வீட்டுக்கு அருகில் காணப்பட்ட பொதுக் கிணற்றில் உயிரிழந்த நிலையில் சடலமாகக் காணப்பட்டார். இதனை அடுத்து நெல்லியடிப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலை அடுத்து சடலம் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக் கப்பட்டது. (த-108-109)

## பிறப்பு, இறப்பு பதிவு விண்ணப்பங்கள் இடைநிறுத்தம்

யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் எதிர் வரும் 31 ஆம் திகதி அன்று பிறப்பு, இறப்பு மற்றும் திருமணச் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.
வருட இறுதி வேலைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் இடைநிறுத்தப்படும் இந்தப் பணிகள் எதர்வரும் ஜனவரி மாதம் 1ஆம் திகதி முதல் மீளவும் வழமை போல் இடம்பெறும் என யாழ்ப்பாண பிரதேச செயலர் திருமதி எஸ்.தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார். (ஒ-10)

## வடமராட்சிப் பிரதேசத்துக்கு சரவணபவன் எம்.பி நிதியுதவி



வடமராட்சி, டிசெ 28
நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து வடமராட்சிப் பிரதேசத்தில் பல்வேறு வேலைத் திட்டங்களுக்கு மூன்று இலட்சத்து 60ஆயிரம் ரூபாவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நேற்று முன் தினம் வழங்கினார்.
வடமராட்சி துன்னாலை தெற்கு கலிகைக் கந்தன் சனசமூக நிலையத்துக்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து கட்டட நிர்மாணப் பணிகளுக்கு 50 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கினார்.
தொடர்ந்து அல்வாய் பிரதேசத்திலுள்ள விண்மீன் விளையாட்டுக் கழகத்துக்கு 30 ஆயிரம் ரூபா பெறுமதியான உடற்பயிற்சி உபகரணங்களை வழங்கினார். அத்துடன் அந்தப் பிரதேசத்தில் உள்ள பிரச்சினைகளையும் மக்களிடம் கேட்டறிந்து கொண்டார்.
பொலிகண்டி பாரதி சனசமூக நிலைய கட்டட நிர்மாணப் பணிகளுக்கென 40 ஆயிரம் ரூபா நிதியுதவியும், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களையும், பருத்தித்துறை தும்பளை கிழக்கு சனசமூக நிலையத்திற்கு 30 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்களையும், சிறுமலர் பாலர் பாடசாலைக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிவாங்கி மற்றும் தளபாடங்களையும் அவர் வழங்கினார்.
தும்பளை நாவலர் விளையாட்டு கழகத்திற்கு 30 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்களை வழங்கியதுடன், தும்பளை மேற்கு சனசமூக நிலையம் முன்பள்ளிக்கு 30 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்களையும், விவேகானந்தா விளையாட்டு கழகத்துக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்களையும் வழங்கினார். (த-108)

## விடைத்தாள் மதிப்பீடு இன்று ஆரம்பம்

கரணவாய்,டிசெ.28
நடைபெற்று முடிந்த ஜீ.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.
விடைத் தாள் மதிப்பீட்டுப் பணிகள் இன்று முதல் எதிர்வரும் 5ஆம் திகதி வரை அதற்கென ஒதுக்கப் பட்ட மதிப்பீட்டு நிலையங்களில் நடை பெறவுள்ளன. வடமராட்சி வலயத் தில் நெல்லியடி மத்திய கல் லூரியில் மதிப்பீட்டுப்பணிகள்இடம்பெறவுள்ளன(த-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திகள்

## தேர்தல் குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ. 28

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு வல்வெட்டித்துறை நகரசபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழ் சட்டத்தரணிகள் சங்கமும், தமிழ் சிவில் சமூகமும் இணைந்து இந்தக் கலந்துரையாடலை ஒழுங்குபடுத்தியுள்ளன. இதில் பொதுமக்கள் கலந்து கொண்டு தமது சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## தென்மராட்சி வயல்களில் மடிச்சுக் கட்டித் தாக்கம்

தென்மராட்சி தெற்கு நெல் வயல்களில் நெற்பயிர்களை மடிச்சுக் கட்டி நோய் ஏற்பட்டுள்ளதாக நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

நெற்பயிர்களிலிருந்து கதிர்வரும் காலகட்டத்தில் இந்த நோய் தாக்கி வருவதால் உடனடியாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் கேட்டுள்ளனர். (த-9)

## கிணறுகளுக்கு குளோரின் இடுக

தென்மராட்சி, டிசெ.28

அண்மைய காலநிலை காரணமாக கிணற்று நீரின் மட்டம் உயர்ந்து வருகிறது. இதனால் கிணறுகளுக்கு குளோரின் இடுவதுடன் நீரைக் கொதிக்க வைத்து குடிக்குமாறு சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

கிணற்று நீரின் மட்டம் திடீரென அதிகரித்து வருவதால் தொற்று நோய்கள் பரவக்கூடிய அபாயம் காணப்படுவதால் பொது மக்கள் பயன்படுத்தும் நீரினை பாதுகாப்பானதாக இருக்க உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் அறிவித்துள்ளனர்.

கிணறுகளுக்குப் போடுவதற்கான குளோரின் பவுடர் பிரதேசத்தில் உள்ள பொது சுகாதார பரிசோதகர்களின் அலுவல கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதால் அங்கு சென்று பெற்று கிணறுகளுக்குப் பயன்படுத்துமாறும் பாதுகாப்பற்ற கிணறுகளில் குடிநீர் பெறுவோர் அவசியம் கொதிக்க வைத்த நீரைப் பருகுமாறும் அறிவித்துள்ளனர். (த-9)

## தெரு விளக்குகளை ஒளிர்விக்க ஏற்பாடு

தென்மராட்சி, டிசெ.28

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள தெரு விளக்குகளை ஒளிர விடுவதற்கான ஏற்பாடுகள் நகர சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொருத்தப்பட்டுள்ள தெரு விளக்குகள் இரவில் ஒளிராதிருப்பின் அது பற்றிய விவரங்களை வீதியின் பெயருடன் தெரு விளக்கு" சம்பந்தமானது என தலைப்பிட்டு நகரசபைக்கு அறிவிக்குமாறு வரியிறுப்பாளர்களை நகர சபையினர் கேட்டுள்ளனர்.

சபையினால் பராமரிக்கப்படும் தெரு விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள மின் கம்பங்களுக்கு இலக்கமிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் ஒளிராத தெரு விளக்கு காணப்படும் மின்கம்பத்தின் இலக்கத்தையும் கடிதத்தில் குறிப்பிடுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (த-9)

# வறட்சி நிவாரணம் திடீரென நிறுத்தம்

### அரச கட்சி எம்.பியின் அழுத்தத்தால்

யாழ்ப்பாணம், டிசெ. 28

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு நேற்று வறட்சி நிவாரணம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டு இறுதி நேரத்தில் அது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், தன்னாலேயே குறித்த நிவாரணம் வழங்கப்படவேண்டும் என்று தெரிவித்து, அதனை நேற்றையதினம் நிறுத்தி வைப்பதற்கு அரச அதிகாரிகளுக்கு அழுத்தம் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலத்தில் ஏற்பட்ட வறட்சி காரணமாகக் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டிருந்தனர். இவர்களுக்கான நிவாரணம் கொழும்பு அரசினால் வழங்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்குரிய ஒதுக்கீடுகள் மற்றும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

நேற்றைய தினம் குறித்த வறட்சி நிவாரணம் வழங்கப்படும் என்று சகல விவசாயிகளுக்கும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் நேற்றுக் காலை திடீரென, நிவாரணத்துக்குரிய பணம் வரவில்லை என்று தெரிவித்து இப்போதைக்கு வழங்கப்படாது என்று விவசாயிகளுக்கு அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் அழுத்தத்தினாலேயே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நேற்றையதினம் நிவாரணம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. குறித்த நாடாளுமன்ற உறுப்பினர், தானே மேற்படி நிவாரணத்தை வழங்கவேண்டும் என்று தெரிவித்து இதனை இழுத்தடித்துள்ளதாகத் தெரியவருகின்றது. (த-5)

## ஒருங்கிணைப்புக் கூட்டங்களுக்கு கூட்டமைப்பினரையும் அழைக்குக

தென்மராட்சி, செ.28

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கு சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேச சபை ஆகியவற்றின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களையும் அழைக்க யாழ்.மாவட்ட அரச அதிபரை கோர வேண்டுமென நகரசபை உறுப்பினர் பாலமயூரன் நகரசபைத் தலைவருக்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

இந்தக் கூட்டங்களுக்கு ஒரு கட்சியின் உறுப்பினர்களே அழைக்கப்படுவதால் மக்கள் பிரதிநிதிகளாக உள்ள நாங்கள் புறக்கணிக்கப்படுவதாகக் கருதுகின்றோம். பொதுவான அபிவிருத்தித் திட்டங்கள் ஒரு கட்சி சார்பான அபிவிருத்தித் திட்டங்களாக முன்னெடுக்கப்படுகின்ற ஒரு தோற்றப்பாடு நிலவி வருகிறது. இதனால் மக்கள் நலனையும் பொது நோக்கையும் கருத்தில் கொண்டு அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றமையை உறுதிப்படுத்தும் வகையில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கு கட்சிபேதம்பாராது தென்மராட்சி பிரதேச உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்குமாறு அரச அதிபரைக் கோர வேண்டுமென அவர் கேட்டுள்ளார். (த-9)


**அறைகள் நாள் வாடகைக்கு**

ஒருவருக்கு 600/=, இருவருக்கு 1500/=, நால்வருக்கு 2500/= (சி/18503) (4.3.6)

**Hotel Villa City**

422, Galle Road, வெள்ளவத்தை, 072 255 2222

**மணமகள் தேவை**

1980, யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த உத்தரட்டாதி 2 ஆம் பாதம், 41பாவம் செவ்வாய்க் குற்றமற்ற Singapore Engineer மணமகனுக்கு தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றோம்.

தொடர்பு: 0064223445162 (65352) (4.3)

mprtn2002@yahoo.com

ஆதனப் பாதுகாப்பாளர் பராமரிப்பு மேற்பார்வையாளர் தேவை. 60 வயதுக்குக் குறைந்த நேர்மையான கடின உழைப்பு கொண்டவர். வடமாகாணத்துக்கு, நகருக்கு அண்மையில் உள்ளவர் விரும்பத்தக்கது. ஓய்வுபெற்ற நேர்மையானவர்.

யூனிடெக் பிஸ்னஸ்மன்ட் (பிறைவேட்) லிமிடெட், இல. 67/A கிரசன்ட் வீதி, கொழும்பு -07. E-mail: realconnestate@gmail.com

0778535767

ஸ்டான்லி வீதி வர்த்தகப் பிரதேசத்தின் மத்தியில் யாழ்ப்பாணத்தில் நிலம் குத்தகைக்கு. புதிய மணிக்கூண்டு கோபுர வீதி, வாகன விற்பனைகளுக்கு சிறந்தது.

யூனிடெக் பிஸ்னஸ்மன்ட் (பிறைவேட்) லிமிடெட், இல. 67/A கிரசன்ட் வீதி, கொழும்பு -07. E-mail: realconnestate@gmail.com

072 7981202

**உதயன்** விளம்பரத் தொடர்புகளுக்கு

advt@uthayan.com

0215671111

**தேவை**

01. முகாமைத்துவ உதவியாளர் (Management Assistant)
குறைந்தபட்ச தகைமையாக க.பொ.த. உயர்தரத்தில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.
வர்த்தகப்பிரிவினருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
02. விற்பனையாளர்- பெண் (தகைமை O/L)

தகைமையுடையோர் முழு விவரங்களும் அடங்கிய விண்ணப்பத்தை 05.01.2015 ஆம் திகதிக்கு முன்பாக கிடைக்கக்கூடியதாக பின்வரும் விலாசத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மனிதவள முகாமையாளர்,
கிரீன்வெல் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.154, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி/18466) (4.6.3)

**பதவி வெற்றிடம்**

எமது நிறுவனத்துக்கு கீழ்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

* குடிசார் இயந்திரவியலாளர்கள் (Civil Engineers)
* தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் (Technical Officers)
* மேற்பார்வையாளர்கள் (Supervisors)
* கொள்முதல் உத்தியோகத்தர் (Purchasing Officer) - Colombo
* மோட்டார் கிரேடர் ஒப்பரேற்றர் (Motor Grader Operator)

தகைமையுடையோர் முழு விவரங்களும் அடங்கிய விண்ணப்பத்தை 08.01.2015 ஆம் திகதிக்கு முன்பாக கிடைக்கக்கூடியதாக பின்வரும் விலாசத்துக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மனிதவள முகாமையாளர்
இல.45, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (சி.18454) (46.3)
மின்னஞ்சல் முகவரி: eurovil@sltnet.lk



UK, Australia, Canada, USA, New Zealand, Denmark, France, Germany, Italy, Japan, Netherlands, Norway, Switzerland, Sweden etc...

**வங்கியில் பணவைப்பு**

Saving book, Fixed Deposit, Statement

3, 6, 12 மாதங்களுக்கான (முன், பின்) பணவைப்பு (அரசவங்கிகளில் மட்டும்)

Migration / Skill Migration / Visit Visas / Student Visas / Dependent / Business / Investment / New Applications etc...

(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).

SKYWALK Visa Solutions

ஸ்கைவோர்க் வீசா சொலுஷன்

No.65, 1/1, Galle Road, Dehiwala. (Food City - 1st Floor)

077-7711905

**Best Result! CIMA @ MCS**



சென்ற வாரம் வெளியானபெறுபேறுகளில் எமது மாணவர்கள் மிகச்சிறந்தபெறுபேறுகளை பெற்றுள்ளார்கள். 100% pass.

ALபெறுபேற்றுக்கு100 % வரைSchol.

உங்கள் பெயர், சுட்டெண் என்பவற்றை 772 395 895 ற்கு sms அனுப்பி CIMA-UK, COMP.ENG.USA புலமைப்பரிசில்களை வெல்லுங்கள்.

Operational, Managerial Case studies start soon.

CIMA<Name> & <Dateofb.> sms to 772395895

MCS யாழ் பல்கலைக்கழகம் அருகில் Listed College & Exam centre


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதிடம்




## உங்களுக்கு எப்படி?

சந்திரனுடைய முழுமையான ஆதிக்கத்தைக் காட்டும் எண். பார்க்க சற்று குள்ளமாகவும் அழகாகவும் இருப்பர். பிறரைக் கவரும் வடிவமிருக்கும். தலை நிறைய முடியும் அடர்ந்த புருவமும் காணப்படும். எப்பொழுதும் துருதுருவென்று இருப்பீர்கள்.

அலைபாயும் மனம், தண்ணீர் போல ஈரம் உள்ள நெஞ்சினர். நீர் பிறர் உயிரைக் காப்பது போல் சமயத்தில் பிறருக்கு உதவி செய்து காப்பர். இவரின் அமைதியானகுணம்பலசாதனைகளைச் செய்ய தூண்டும். பிடிவாதம் சற்று அதிகமாகவே இருக்கும். மனதில் அச்சமும், குழப்பமும் ஏற்படும்.

குடும்பத்தில் முதலில் குழப்பம் இருந்தாலும் அதை சமாளிக்கும் ஆற்றல் இருக்கும். திருமண வாழ்க்கை திருப்திகரமாக அமையும். வாழ்க்கையில் இவரை

## 2 கூட்டெண் பலன்கள் 2-2

பிறர் அனுசரித்துத் தான் நடக்க வேண்டும். ஒற்றுமை இருக்கும் அதே சமயம் போராட்டமும் நிலவும்.

இவர் ஒளிப்படம் பிடித்தல், அழகு, வாசனைப் பொருள், துணிமணி தயாரித்து விற்றல், மனோதத்துவ மருத்துவராதல் போன்ற தொழிலில் ஈடுபடுவார்கள். இவருக்கு கவிதை எழுதுதல், நடித்தல் பொருத்த மானவை. பிறந்த எண்ணும், கூட்டு எண்ணும் ஒன்றானால்பெயர் எண்படி வாழ்க்கையும் அமையும்.

கபம்,மலச்சிக்கல்,வாதம் தொடர்பான நோய்கள் ஏற்படும். இரத்தக் கொதிப்பு மூலம் மனோ கற்பனையால் உண்டாகும் பாதிப்பு போன்ற நோய்களால் பாதிக்கப்படலாம். காயங்கள், புண்கள் ஆறாமல் தொல்லை தரும் நிலை உண்டாகும்

இவ்வெண் கொண்டவர்கள் சந்திரனில் குரு சேர்ந்த ஆதிக்கம். நடுத்தர உயரமும், கழுத்து உள்ளடங்கியும் காணப்படுவர். இவர்களின் நெற்றி அகலமாகவும், மஞ்சள் நிறத்திலும் இருக்கும்.

இவர்கள் பேச்சுத் திறன் அதிகம் கொண்டவராக இருப்பர். தெய்வ பக்தி சாத்திர நம்பிக்கையும் பொது நலத்தில் அதிக ஈடுபாடும் உடையவராக இருப்பார்கள். மன உறுதியும், தந்திரமாக காரியங்களை சாதித்துக் கொள்ளும் திறமையும் இருக்கும். இவர்கள் அடிக்கடி தமக்கு ஆறுதல் கூறுவதையும், புகழுவதும் விரும்ப மாட்டார்கள்.

வெற்றி ஒன்றையே இலக்காகக் கொண்டு செயற்படும் குணம் கொண்டவர். கல்வித் திறன் அதிகமாக இருப்பதால் கவி எழுதுதல், கட்டுரை புனைதல் ஆகியவற்றில் புலமை பெற்று இருப்பர். பெண்களாயின் பாட்டு முதலிய கலைத்திறமையுடன் குடும்பப் பாங்கும் அமைய நூலறிவும் உள்ளவராக இருப்பர்.

பெரிய குடும்பத்தில் பிறப்பதால் கொஞ்சம் வறுமையும் அதன் பின் வளமும் இருக்கும். சிறு வயதிலேயே இவருக்கு திரு

## 2 கூட்டெண் பலன்கள் 2-3

மணம் நடைபெறுவதால் சில பிரச்சினைகள் வந்தாலும் அதனைச் சமாளிக்கும் மனவலிமை உடையவர். மதிப்புடன் வாழ்க்கை அமையும்.

இது உங்களுக்கு யோகமான பலன்களைத் தரும் எண்ணாகவே உள்ளது.தோல் நோய், இரத்தக் கொதிப்பு, நீரிழிவு, அல்சர், தலைவலி, மலச்சிக்கல் உண்டாகலாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 7 | | 2 | | 1 | 8 | |
| | | 5 | 3 | | 9 | 7 | | |
| | 9 | | | | | | | 5 |
| 5 | | | | | 3 | | 7 | 8 |
| 9 | 7 | 2 | 6 | | 8 | 5 | 1 | 3 |
| 8 | 1 | | 2 | | | | | 4 |
| 1 | | | | | | | 5 | |
| | | 6 | 8 | | 5 | 3 | | |
| | 5 | 9 | | 3 | | 8 | | |

## நாளை

மார்கழி-14 திங்கட்கிழமை|29.12.2014

திதி: அட்டமி பி.ப.03.19 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி மு.ப.10.42 வரை
சுபநேரம்: 12.28-01.58 வரை
இராகுகாலம்: 07.58-09.28 வரை



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா


**மேடம்**: உங்கள் செயலில் வேகம் கூடும். உடன்பிறந்தவர்கள் உங்கள் பேச்சுக்கு மதிப்பளிப்பார்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு பாராட்டுக் கிடைக்கும்.


**இடபம்**: மாறுபட்ட யோசனைகள் உங்கள் மனதில் உதிக்கும். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள்.


**மிதுனம்**: கடந்த இரண்டு தினங்களாக இருந்த சோர்வு, சலிப்பு யாவும் நீங்கும். புதியவர்களின் நட்பால் உற்சாகமடைவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.


**கடகம்**: தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். சிலர் உங்களை குறை கூறினாலும் அதைப் பெரிதாக்க வேண்டாம். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.


**சிங்கம்**: கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துகொள்வீர்கள். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும்.



**கன்னி**: குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்புக் கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.


**துலாம்**: உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.


**விருச்சிகம்**: தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். நீண்ட நாள்களாகப் பார்க்க நினைத்த ஒருவரைச் சந்தித்து மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் பழைய பிரச்சினைகள் தீரும்.


**தனுசு**: சவால்கள், விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பேச்சில் முதிர்ச்சி தெரியும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள்.


**மகரம்**: எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.


**கும்பம்**: தர்மசங்கடமான சூழ்நிலைகளில் அவ்வப்போது சிக்கித் தவிப்பீர்கள். உதவி செய்வதாக வாக்குக் கொடுத்தவர்கள் சிலர் இழுத்தடிப்பார்கள். உத்தியோகத்தில் உங்களைப் பற்றிய வதந்திகள் வரும்.


**மீனம்**:எளிதில் முடிய வேண்டிய சில காரியங்களை இரண்டு, மூன்று முறை முயன்று முடிக்க வேண்டி வரும். உறவினர், நண்பர்களால் சங்கடங்கள் வரும். உடல் அசதி, சோர்வு வந்து விலகும். புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம்.

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | 5 | 1 | 3 | 9 | 6 | 7 | 4 |
| 9 | 3 | 7 | 6 | 5 | 4 | 2 | 8 | 1 |
| 6 | 1 | 4 | 2 | 7 | 8 | 3 | 9 | 5 |
| 2 | 5 | 6 | 3 | 9 | 7 | 4 | 1 | 8 |
| 4 | 9 | 3 | 8 | 6 | 1 | 5 | 2 | 7 |
| 1 | 7 | 8 | 4 | 2 | 5 | 9 | 3 | 6 |
| 3 | 8 | 2 | 7 | 4 | 6 | 1 | 5 | 9 |
| 7 | 4 | 9 | 5 | 1 | 3 | 8 | 6 | 2 |
| 5 | 6 | 1 | 9 | 8 | 2 | 7 | 4 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி, இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக் கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வடக்கின் கல்வி வளர்ச்சிக்கு குழிபறிக்கும் போக்குத் தேவையா?

வடமாகாணத்தின் கல்விச் செயற்பாடுகளில் இராணுவத் தலையீடுகள் உள்ளதால், இங்கு கல்விச் செயற்பாடுகளை சுதந்திரமாக முன்னெடுக்க இயலாமல் உள்ளது. அது மட்டுமன்றி, கல்வி அதிகாரிகள் சுயமாகப் பணி யாற்ற முடியாத நிலையும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

மேற்போந்த கருத்தை வெளியிட்டிருக்கி றார், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செய லாளர் ஜோசப் ஸ்ராலின். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் நூற்றாண்டு விழாவில் உரை நிகழ்த்துகையிலேயே, அவர் வடக்கின் கல்வியில் ஏற்படுத்தப்பட்டுள்ள தொய்வை எடுத்தியம்பினார்.

வடக்கில் நீண்ட காலமாக ஆசிரியர்களை உருவாக்கி வந்த பலாலி ஆசிரியர் கலாசாலை உட்பட, அறுபத்தொன்பது கல்விச் சாலைக ளுக்கு மூடு விழா நடத்தப்பட்டிருப்பதனையும் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் தொட்டுக் காட்டி உள்ளார். கல்வியை வடக்கில் ஜனநாயகப் படிமுறையின் கீழ் கொண்டு வருவதற்குப் பதிலாக, இராணுவ ஆக்கிரமிப்புடன் அது இங்கு முன்னெடுக்கப்படுகிறது. அதனால் வடக்கு மாகாணத்தின் கல்விச் செயற்பாட்டுக்கு பெரும் ஆபத்து தோற்றுவிக்கப்படுகிறது. அந்த நிலையை மாற்றி அதனை ஜனநாயகக் கட்டமைப்புக்குள் கொண்டுவர வேண்டும் - என்றும் அவர் வலியுறுத்தி உள்ளார்.

வடக்கின் கல்விப் பாரம்பரியம், ஒரு காலத்தில், நாட்டின் தலைநகர் கொழும்பை ஒத்த தாக அமைந்து இருந்தது. கல்வியே கருந்தனம் என்ற நிலையில் வைத்து உயர்ச்சி கண்டிருந்தது. வெளிநாட்டவர்களின் ஆட்சிக் காலங்களின் போதும் எம்மவர்கள் கல்விக்கே முதலிடம் தந்தனர். நாடு சுதந்திரம் அடைந்த பின்னரும் வடக்கில் கல்வி வளர்ச்சி கண்டது

குறிப்பாகக் கூறுவதானால் 1956 ஆம் ஆண் டின் பின்னர், தமிழர்கள் கல்வியில் உயர்ந்து நிற்கும் நிலையை மாற்றுவதற்கு அத்திவாரம் இடப்பட்டது. அப்போதைய ஆரம்பம், இன்று வடக்கின் கல்வி வளர்ச்சியை ஆக்கிரமிப்புடன் குதறிக் குலைத்து விடும் வன்ம நிலையை நோக்கி நகர்த்தப்படுகின்றது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் அதனை அப்பட்டமாக எடுத்துரைத்து உள்ளார் எனலாம். கல்வி சுதந்திரமான செயற்பாடாக அமையவேண்டும் என்ற உலகளாவிய கோட்பாட்டுக்கு முரணாக வடக்கில் அரசின் செயற்பாடுகள் முகிழ்த்து எழுந்துள்ளன; அமைந்துள்ளன.

வடக்கின் உயர்கல்வி நிலையமான யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் ஜனநாயக ரீதியில் அமைந்த செயற்பாடுகளை தறித்து எறியும் போக்கில், நோக்கில் இராணுவம் செயற்படுவதற்கு அரசின் ஆசீர்வாதம் அதிகம் உண்டு என்பதனைச் சொல்லித்தெரிய வேண்டும் என்பதில்லை.

ஜனநாயக நாடு என்ற வகையில் இலங்கையில், அதன் அங்கங்களில் ஒன்றான வடக்கின், கல்வி மற்றும் உயர்கல்வித் துறைகளை மடக்கி, ஒடுக்கும் செயற்பாடுகளில் இராணுவத்தை ஈடுபடுத்துவது ஏற்புடைத்தல்ல.

இதனை அரசாங்கம் கருத்தில் கொள்ளுமா என்ற வேட்கை வடபகுதி வாழ் மக்களின் மனங் களில் ஆழமாக வேர் ஊன்றி வருகிறது. அதனை, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் அச்சொட்டாக வெளிப்படுத்தி உள்ளார்.

ஆட்சியாளர்களின், காதுகளில் அது ஏறுமா? இல்லையெனில் தமது நோக்கத்தைச் செயற்படுத்த, நிறைவேற்ற அரசு, தான் வகுத்துள்ள பாதையிலேயே தொடர்ந்து அதிகாரச் செருக்குடன் நடைபோடுமா?

# தேர்தலில் யாரை நிராகரிப்பது? சரியான முடிவெடுப்பர் தமிழர்கள்

கந்தவனம் கோணேஸ்வரன்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்மக்கள் யாரை ஆதரிக்கவேண்டும் என்ற தமது நிலைப்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரையில் தெரிவிக்கவில்லை. சிலதினங்களில் இதுபற்றிய தெளிவான அறிவிப்பு வெளியாகலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது நிலைப்பாட்டை தெரிவிக்காமலிருப்பது அரசுக்குத்தான் பெருந்தலையிடியாக இருப்பதுபோல் தெரிகிறது. இதனால் தமிழ்மக்கள் தொடர்பில் தங்கள் பரப்புரைகளை ஒழுங்குபடுத்த முடியாமல் அரசதரப்பு தவிக்கிறது.

தமிழ்மக்களிடையே தன்னால் நிறுவப்பட்ட கைத்தடிகள்மீது அரசு நம்பிக்கை கொண்டுள்ளதாகத் தெரியவில்லை. வேறு வழியேதுமில்லாது அரசு அவர்களைத் தனது பரப்புரைகளுக்குப் பயன்படுத்துகிறதேயொழிய, அவர்களின் பின்னால் தமிழ் மக்கள் அணிதிரள்வார்கள் என்பதிலோ, அவர்கள் கருத்துகளைத் தமிழ் மக்கள் செவிமடுப்பார்கள் என்பதிலோ அரச தரப்புக்குச் சிறிதும் நம்பிக்கை கிடையாது. அவர்களுடைய அரசியற்பலம் என்னவென்பது தமிழ் மக்களுக்கும் தெரியும்; அரசுக்கும் தெரியும். தேர்தல் காலத்தில் மேடைகள் போட்டுக் கிராமத்துத் தமிழ் மக்களையாவது வழிக்குக் கொண்டு வரலாம் என அரச கைத்தடிகள் முயல்கின்ற அதேவேளையில், வாக்களிப்புத் தினத்தன்று தம் விருப்பப்படிதான் செயற்படுவோம் என்பதில் மக்களும் தெளிவாகவும் திடமாகவும் இருக்கிறார்கள்.

இதனை உணர்ந்துள்ளதாலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் தொடர்பான தீர்மானத்தை அறிந்துகொள்ள அரசு துடி யாய்த் துடிக்கிறது. கூட்டமைப்பின் முடிவு அரசுக்குச் சாதகமாக அமையுமாயின் தேர்த லுக்கு முன்னரே அரசுக்கு வெற்றிகிடைத்தது போலாகிவிடும். மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதியாகிவிட்ட உணர்வு டன் உற்சாகமாகவே பரப்புரைகளைத் தொடர் வார். தமிழ்மக்களை விடுதலைப்புலிகளின் அடக்குமுறையிலிருந்து மீட்டெடுத்தவர் தானே எனக் கூறிக்கொண்டிருக்கும் ஜனாதிபதிக்குத் தமிழ் மக்களின் ஆதரவு கிடைக்குமாயின் அவரது கூற்றுகள் அனைத்தும் உலக அரங்கில் உண்மையென்றாகிவிடும்; ஐக்கிய நாடுக ளவை விசாரணையிலிருந்தும் அவர் தப்பிவிட வாய்ப் பேற்பட்டுவிடும்.

மஹிந்த ராஜபக்ஷவின் உலகளாவிய மதிப்புக்கு மிகப்பெரிய தடையாகவிருப்பது தமிழ்மக்களின் ஆதரவு அவருக்கு இல்லையென்பதுதான். எனவே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்மக்கள் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கலாமெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தீர்மானிக்குமாயின் அது ஜனாதிபதிக்குக் கிடைத்த மிகப்பெரும் நற்சான்றிதழாகிவிடும். உலக அரங்கில் தன்னைப் புனிதராகக் காட்டிக்கொள்ள அவருக்கு வசதியும் கிடைத்ததாகிவிடும்.

அதேபோல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு எதிரணிப் பொதுவேட்பாளருக்குக் கிடைக்குமாயின், அதனைச் சாட்டாகக் கொண்டுகூட அரசால் இலாபம் தேடமுடியும். அதற்கான திட்டங்களும் அவர்களிடம் நிறையவே இருக்கின்றன. அவற்றுக்கு முன்னோட்டமாகத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் எதிரணியின் பொதுவேட்பாளருக்கும் இடையில் இரகசிய ஒப்பந்தம் இருப்பதாக ஒரு வதந்தி ஏற்கனவே கிளப்பி விடப்பட்டிருக்கிறது.

இதற்குச் சாட்சியாகத்தான் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த திஸ்ஸ அத்தநாயக்க அரசதரப்புக்குத் தாவியதோடல்லாமல் சுகாதார அமைச்சர் பதவியையும் பெற்றுக்கொண்டிருக்கிறார். தனக்குக் கிடைத்த பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் பொய்களும் கூறத் தொடங்கியிருக்கிறார்.

எதிரணியின் பொதுவேட்பாளருக்கு ஆதரவு தருவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானம் எடுக்குமாயின் உடனடியாக வடபகுதி மக்கள் பெருந் துன்பங்களுக்கும் நெருக்குவாரங்களுக்கும் உள்ளாக நேரிடுமென சந்திரிகா வெளியிட்டுள்ள கருத்து புறந்தள்ளி விடக்கூடியதன்று.

ஆகக்குறைந்தது அனைத்துப் பகுதிகளிலும் தமிழர்களின் கருத்துச்சுதந்திரம் சிதைக்கப்படும். சுதந்திரமான நடமாட்டங்கள் கட்டுப்படுத்தப்படும். இராணுவ இறுக்கம் அதிகரிக்கப்படும். ஓமந்தையில் பயணிகள் மீண்டும் நெருக்குதல்களுக்கு உள்ளாவார்கள். கிழக்கில் அம்பாறை மாவட்டமும் எல்லைக் கிராமங்களும் ஒருவித போர் மாயைக்குள் சிக்கிக்கொள்ளும். மஹிந்தவுக்கு வாக்களித்தாலன்றித் தமிழ்மக்கள் நிம்மதியாக வாழமுடியாது என்ற நிலை தோற்றுவிக்கப்படும்.

ஆனாலும் பொதுவாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருவரில் எவருக்குத் தனது ஆதரவைத் தெரிவிக்கிறதோ, அவர் தவிர்ந்த மற்றவர் படுமோசமாக இனவாதத்தைச் சிங்கள மக்கள் மத்தியில் பரப்பி வாக்குச் சேகரிக்க முயல்வார். போர் வெற்றியில் எழுபத்தைந்து சதவீதத்தை நாங்கள் செய்தோம். மீதி இருபத்தைந்து வீதத்தைத்தான் அவர் செய்தார் என இன்று அடக்கமாகச் சொல்லப்படுபவை நாளை இனவாதப் பூச்சுடன் ஆடம்பரமாக எடுத்தாளப்படவும் இடமுண்டு. இந்த விடயத்தில் மஹிந்தவுக்கும் மைத்திரிக்கும் பெரிய வித்தியாசம் இருக்கப் போவதில்லை.

விடுதலைப்புலிகளின் நோக்கம் தமிழர்களுக்குத் தலைநிமிர்ந்த நல்வாழ்வு கிடைக்கவேண்டும் என்பதாகவே அமைந்திருந்தது. இலங்கை முழுவதையும் கைப்பற்றுவதற்காகப் போராடியவர்கள் அமைச்சர் வீரவன்ஸவின் குருவான ரோஹண விஜேவீர குழுவினரேயொழிய விடுதலைப்புலிகளல்லர் என்பது அரசு அறியாததல்ல. ஆனாலும் புலியைக் காட்டித்தான் வாக்குச் சேகரிக்க வேண்டியநிலை அரசுக்கு.

இதன் நீட்சியாகச் சிங்கப்பூரில், நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதிநிதிகள் சிலருடன் சந்திரிகா, ரணில். மைத்திரி ஆகியோர் சந்தித்து உடன்பாடொன்றுக்கு வந்துள்ளதாகக் கதைகள் பரப்பப்பட்டு வருகின்றன. அதுபற்றிய முழுமையான தகவல்கள் விரைவில் வெளியிடப் படுமென்றும் அரசதரப்பு தெரிவித்திருக்கிறது.

சிங்கள மக்களுடன் சேர்ந்து ஜனநாயக மீள்விப்புக்காகத் தமிழ் மக்களால் அளிக்கப்படும் வாக்குகள், தமிழ் மக்களை மிகக் கொடூரமாக வதைத்த கும்பலை நிராகரிப்பதற்குப் பயன்படும் என்பது தெளிவான உண்மை. அத்தகையதொரு நிலையை உருவாக்கும் ஆற்றல் தமிழ் மக்களின் வாக்குகளுக்கு இருக்கிறதென்பதை நிராகரித்துவிட முடியாது. இதனை உணர்ந்து தங்கள் வாக்குகளைச் சரியாகப் பயன்படுத்தும் பொறுப்பு தமிழர்களுக்கு இருக்கிறது.


மஹிந்த இன்று தமிழர்களாலும் முஸ்லிம்களாலும் வெறுக்கப்படும் தலைவராக மாறியுள்ளார். அவரது குடும்ப ஆட்சி கண்டு சிங்கள மக்களும் வெறுப்புடன் காணப்படுகிறார்கள். எனவே, ஆட்சி மாற்றத்தின் மூலம் புதிய இலங்கையைக் கட்டியெழுப்ப வேண்டுமென்ற எண்ணம் பரவலாகக் காணப்படுகிறது.

தேர்தல் முடிவுகள் எவ்விதத்திலேனும் அமையலாம். தமிழ் மக்கள் தெளிவாகச் சிந்தித்துச் செயற்படவேண்டும். தமிழ் மக்களுக்கு வழிகாட்டவேண்டிய பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இருக்கிறது. தமிழ்த் தலைவர்களின் தீர்மானத்துக்குத் தமிழர்கள் கட்டுப்படத் தயாராக இருக்கிறார்கள் என்பது பெருமைப்படத்தக்க உண்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 199 மருத்துவம்

# பாரிசவாதத்துக்கான இசைவாக்கம்




இன்றைய நவீன வாழ்க்கை முறையின் விளைவால் உலகை ஸ்தம்பிக்க வைக்கும் முக்கியமானதொரு நோயாக பாரிசவாதம் காணப்படுகிறது. மூளைக்கான குருதிக்கலங்களில் ஏற்படும்அடைப்புக் காரணமாகவோ, கசிவு காரணமாகவோ மூளையின் நரம்புக்கலங்களுக்கான குருதிச் சுற்றோட்டம் தடைப்படுவதால் ஏற்படும் பாரதூரமான விளைவாக பாரிசவாதம் காணப்படுகிறது. தேவையான அளவு ஒட்சிசன் மற்றும் சத்துக்கள் கிடைக்காத நரம்புக்கலங்கள் நிரந்தர தொழிற்பாட்டை இழந்து இறந்து விடுவதனால், அந்தக் கலங்களால் கட்டுப்படுத்தப்படும் தொழிற்பாடுகளும் முற்றாக செயலிழந்து விடுவதையே பாரிசவாதம் என்கிறோம். இதன் விளைவாக உடற்தொழிற்பாடுகளில் முக்கியமான ஐந்து குழப்பங்கள் ஏற்படுகின்றன.

1. அசைவுகளைக் கட்டுப்படுத்துதல்.
2. உணர்ச்சியற்ற தன்மை.
3. மொழிப் பாவனை மற்றும் புரிந்துகொள்ளல்.
4. ஞாபகசக்தி மற்றும் கிரகித்தல்.
5. உணர்வு ரீதியான பிரச்சினைகள்.

பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களில் மிகச்சிறியளவு தொகுதியினர் 24 மணித்தியாலத்துக்குள் மரணத்தைதழுவும்போதும், பெரும்பான்மையானோர் ஏதேனும் உடலியக்க குறைபாடுடன் உயிர்தப்பி நீண்டநாள்கள் வாழ்க்கையை போராட்டத்தின் மத்தியில் கழிக்க வேண்டி நேரிடுகிறது. இந்தப் போராட்ட வாழ்க்கையில் அவர்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளாக;
உடலினொரு அங்கமோ பாதி உடலோ உணர்வற்றிருத்தல்.
ஓர் அங்கமோ, பாதி உடலோ, முழு உடலோ முற்றாக செயலிழந்த தன்மை, உணவை விழுங்க முடியாமை, உடலை சமனிலைப்படுத்தி வைக்க முடியாமை, கட்டுப்படாற்ற சலம் மற்றும் மலம் கழித்தல், பாதிக்கப்பட்ட அங்கங்களில் தொடர்ச்சியான நோவு ஒன்றை உணர்தல், சிந்தனையைச் சொற்கள் மூலம் வெளிப்படுத்த முடியாமை, பேசும் அல்லது எழுதும் மொழியை புரிந்து கொள்ளும் திறனை இழத்தல், நுண்திறன் செயற்பாடுகளை இழத்தல், தூண்டுதல்களுக்கான செயற்பாட்டை வெளிப்படுத்த முடியாமை, பார்வைக் குறைபாடு, வலிப்பு, களைப்புத் தன்மை, நித்திரை சம்மந்தமான குழப்பங்கள், இவை அனைத்தாலும் ஏற்படும் விரக்தி, வாழ்க்கை பற்றிய பயம், மனஅழுத்தம்.

இவ்வாறான பலவகையான பாதிப்புக்களிலிருந்து முழுமையாகமீளமுடியாதெனினும், வைத்தியத் துறையின் புதியதொரு பரிணாமமான மறுவாழ்வுக்கான செயற்றிட்டங்கள் மூலம் பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்டவர்கள் முழுமையான இன்னொருவரது உதவியில் தங்கியிருக்காமல், தமது அடிப்படைத் தேவைகளை தாமாகவே பூர்த்திசெய்து கொள்ளும் அளவுக்கு பயிற்சியை உருவாக்கிக் கொள்ளலாம்.

**பாரிசவாதத்துக்குப் பின்னான மறுவாழ்வுச் சிகிச்சை**

பாதிப்பு ஏற்பட்டு அவசர சிகிச்சை பூர்த்தியடைந்தவுடன் இது ஆரம்பிக்கப்படுகிறது. இது பாதிக்கப்பட்டவரின் நிலைக்கு ஏற்ப மாறுபடினும், தற்போதுள்ள நவீன சிகிச்சை முறைகளால் பாதிப்பு ஏற்பட்டு 24 – 48 மணித்தியாலங்களுக்குள் ஆரம்பிக்கக் கூடியதாக உள்ளது. இந்தச் சிகிச்சையானது வைத்தியரின் ஆலோசனைக்கு இணைவாக, பொருத்தமான வாழ்க்கைமுறை தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், ஒரு குழுசார் தொழிற்பாடாகக் கட்டியெழுப்பப்படுகிறது.

இந்தக் குழுவானது:–

- நரம்பியல் வைத்திய நிபுணர்.
- மறுவாழ்வு சிகிச்சைக்காக பயிற்றப்பட்ட தாதியர்.
- உடற்பயிற்சி நிபுணர்.
- மறுவாழ்வு உத்தியோகத்தர்.
- மனநோய் வைத்திய நிபுணர்.
- தொழில்சார் பயிற்சி நிபுணர்.
- பேச்சு–மொழி ஆளுமை வளர்க்கும் உத்தியோகத்தர்
- வேலை வாய்ப்புக்கான வழிகாட்டல் உத்தியோகத்தர்
- குடும்ப உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்டு உருவாக்கப்படுகிறது. தனிப்பட்டவர்களின் தேவைக்கமைய இவர்களின் செயற்றிட்டங்கள் வேறுபடுகின்றன.

எனினும் இந்தக் குழுவினது முக்கிய குறிக்கோளாக அமைவது.

1. பாரிசவாதம் ஏற்படுத்திய பாதிப்பை எதிர்கொள்ளல்
2. இரண்டாவது தடவையாகவும் பாரிசவாதம் ஏற்படாமல் தடுத்தல்.

மறுவாழ்வு சிகிச்சையானது பாதிப்புஏற்பட்ட கட்டிலில் முடங்கியுள்ளவரை ஒரு சில மணித்தியாலங்களுக்கு ஒருமுறை திருப்பி விடுதல் மற்றும் உதவியுடன் கூடிய சிறியளவு உடற்பயிற்சிகளை கற்றுக்கொடுத்தலுடன் ஆரம்பித்து, வாழ்க்கையில் தன்னம்பிக்கையுடன் தனியாகவோ சிறிய உதவியுடனோ தனது வேலையைத் தானே செய்யக் கூடியதொரு நிலைக்கான பயிற்சி வரை தொடர்கின்றது. இவ்வாறான சிகிச்சையின் உள்ளடக்கங்களாவன:–

- ஏற்பட்ட பாதிப்புக்கான மருத்துவ சிகிச்சை.
- மீண்டும் பாரிசவாதம் ஏற்படாமலிருக்க செய்யவேண்டிய வாழ்க்கை முறை மாற்றங்கள்.
- மூளையால் மறக்கப்பட்ட அடிப்படைத் தொழிற்பாடுகளை மீண்டும் கற்பித்தல் மூலம் நாளாந்த அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பயிற்சிகள்.
- சுகாதாரமான வாழ்க்கை முறைப் பயிற்சிகள்.
- உதவியாளர்களுக்கான அறிவுரைகளும் பயிற்சிகளும்.
- உடல் அசைவுக்கான உடற்பயிற்சிகள் மூலம் பாதிக்கப்பட்ட உடலுறுப்புகளின் தொழிற்பாட்டை மீளப் பெறச் செய்தல் மற்றும் நிரந்தர நீண்ட கால பாதிப்புகளைத் தவிர்த்தல்.
- புதிதாக கற்பிக்கப்பட்ட பயிற்சிகளை தொடர்ந்து செய்வதற்கான ஊக்குவிப்பு.

மறக்கப்பட்ட மொழியாற்றலை வேறு மாற்றுமுறைகள் மூலம் தொடர்பாடலுக்காகப் பயன்படுத்துதல்.

- விழுங்குவதற்கான பயிற்சிகள்.

எஞ்சியுள்ள பாதிக்கப்படாத திறமைகளை இனங்கண்டு அவற்றை வளர்ப்பதற்கான ஊக்குவிப்பு மற்றும் தொழில்சார் வழிகாட்டல்.

- மன அழுத்தத்திலிருந்து மீளுவதற்கான அறிவுரைகளும் வழிகாட்டலும்.

இவ்வாறான சிகிச்சை முறை வைத்தியசாலைகளில் உள்நோயாளர் பிரிவுகளிலும், வெளிநோயாளர் பிரிவுகளிலும் வழங்கப் படக்கூடியவை. அரச வைத்தியசாலைகளிலோ அல்லது தனியார் வைத்தியசாலைகளிலோ அல்லது பிரத்தியேகமாக வீடுகளில் தனிப்பட்ட ரீதியாகவோ வழங்கப்படக்கூடிய சிகிச்சையாக இது காணப்படுகிறது. ஆனால் பாரிசவாதம் தொடர்பான விழிப்புணர்வு போதியளவு அற்ற காரணத்தால் பாரிசவாதத்துக்குப் பின்னான மறுவாழ்வு மறுக்கப்பட்ட ஒரு விடயமாகவே உள்ளது. இதனால் பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்ட இளம் சமூகமே பெரிதும் பாதிக்கப்படுகின்றதுஎன்பது நிதர்சனமான உண்மை.

எனவே பாரிசவாதம் நிரந்தர பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடியதுஎன்பதையும்தாண்டிஅதனைப் போராடி வென்றெடுத்து தன்னிச்சையாக வாழமுடியும் என்ற நம்பிக்கையை சமூகத்தில் கட்டியெழுப்புவதற்கு பாரிசவாதத்துக்குப் பின்னான மறுவாழ்வுச் சிகிச்சை இன்றியமையாதது. வளர்முகநாடுகளில் இவை அடிப்படையாக வயது வித்தியாசமின்றி கிடைக்கப்பெறினும், வளர்ந்து வரும் நாடுகளில் பாரிசவாத நோயாளிகளை சூழவுள்ள பாராமுகங்களாலும் போதிய விடய அறிவு அற்ற தன்மையாலும் மறுவாழ்வுச் சிகிச்சை எட்டாக் கனிபோலத் தென்படுகிறது. போதியளவு வசதிகள் காணப்படினும். அவை தொடர்பான விழிப்புணர்வற்ற தன்மையால் வளங்கள் வீணடிக்கப்படுகின்றன. ஆகையால் பாரிசவாதத்திலிருந்தும் மீண்டெழலாம் என்ற நம்பிக்கையை உண்டாக்கி பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களை மறுவாழ்வு சிகிச்சை பெற்றுக் கொள்ள ஊக்குவிப்பது சமூகப் பொறுப்புள்ள ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

**Dr.** மயூரி விஸ்வகுமார்,
நரம்பியல் பிரிவு–B,
யாழ்.போதனாவைத்தியசாலை.

# சிறுவர்களுக்கு இடையிலான வாசிப்பு பிறழ்வு

(கடந்த வாரத் தொடர்ச்சி)

வகுப்பறையில் பிள்ளைகளை அவதானிப்பதன் மூலம் இதனை இனங்கண்டு கொள்ளலாம். இந்த விடயத்தில் பெற்றோரினதும் வகுப்பறை ஆசிரியர்களினதும் கூட்டு ஒத்துழைப்பு இன்றியமையாததாகிறது. வாசிப்புத் திறனில் மந்தமாக உள்ள இவ்வாறான பிள்ளைகளை எவ்வாறு இனங்கண்டு கொள்ளலாம் என்பதைப் பற்றி சற்று நோக்குவோம்.

புத்திசாலிகளாக இருப்பினும் தெளிவான, இலகுவான வசனங்களை உடைய ஒரு பந்தியைக் கொடுத்தால் வாசிக்கவோ எழுதவோ சிரமப்படுவார்கள். இதனால் இவர்கள் சோம்பேறி, ஊமை, கவனவீனம் உடையவன், நடத்தைப் பிறழ்வு உடையவன் என பெயர் எடுத்து விடுகின்றனர். இதனால் இந்தப் பிள்ளைகள் மனத்தாழ்வுச் சிக்கலை உணர ஆரம்பிக்கின்றனர். இதன் விளைவு அவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளில் பிரதானமாக வாசிப்புப் பாடவேளை மற்றும் வாசிப்புப் பரீட்சைகளை உதாசீனம் செய்ய முனைவர். மாறாக இவ்வாறான பிள்ளைகள் சித்திரம் கீறுதல், நாடகம் நடித்தல், சங்கீதம் பாடுதல், விளையாட்டு, இயந்திரங்களை கையாளல், கட்டட வேலைப்பாடுகள் போன்ற துறைகளில் தமது கவனத்தைச் செலுத்த எத்தனிப்பர். தமக்குரிய கல்விச் செயற்பாட்டை தம்மைச் சுற்றி நடப்பவற்றை அவதானிப்பதன் மூலமும், ஒலி மற்றும் ஒளிச் சாதனங் களின் உதவியுடனும் மேற்கொள்ள முயல்வர்.

மேலும் இவ்வாறான பிள்ளைகளின் கையில் வாசிக்கும் படி ஒரு பயிற்சிப் புத்தகத்தைக் கொடுத்தால் தமக்கு அது சிரமமாக உள்ளதாக முறைப்பாடு செய்வர். பார்வை மங்கலாக இருக்கிறது என்பர்; ஆனால் உண்மை அதுவல்ல. ஓரிரு வசனங்களையே திரும்பத் திரும்ப வாசித்துக்கொண்டிருப்பர், விளையாட்டுக்களில் பந்துப் பரிமாற்றம் மற்றும் குழு விளையாட்டுக் களை தவிர்ப்பர்.

வாசிப்பில் ஈடுபாட்டை ஏற்படுத்துவதற்கு பிள்ளைகள் கல்விபயில பயன்படுத்தும் மற்றும் ஆசிரியர் அல்லது பெற்றோரால் பாவிக்கப்படும் சாதனங்களில் முன்னேற்றமான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். அதாவது ஒலி அமைப்பு வசதியை ஏற்படுத்தல், படங்கள் மற்றும் குறியீடுகள் மூலம் விளங்கப்படுத்த முனைதல் (உதாரணமாக அடுத்த பயிற்சிக்கு செல்க என்பதை தெரிவிப்பதற்கு ⇒எனும் குறியீட்டைப் பாவிக்கலாம்) பந்தியொன்றை தனியே வாசித்துக் கொண்டு போகும் போது பாதை எதுவென உணர்வதற்கு பிள்ளையின் கையில் அளவு மட்டம்/ சிறு நாடா/ கலர் பேனாக்களை கொடுத்து அடையாளமிடும்படி கூறலாம். பிள்ளைகள் வாசிக்க வேண்டிய பாடவிதானத்தை ஆசிரியர்கள் வாய்மொழி மூலமாகவும் கரும்பலகையில் எழுதிக் காட்டியும் விளங்கப்படுத்திய பின் வாசிப்பதற்கு ஊக்குவிப்பது சிறந்தது. மேலும் சிறு சிறு குழுக்களாக மாணவர்களை பிரித்து அவர்களின் வாசிப்புத் திறனை தினந்தோறும் மதிப்பீடு செய்யவேண்டும்.

மேலும் அவர்களுக்கான பயிற்சி வினாக்களின் மாதிரியை மாற்றியமைக்கலாம். உதாரணமாக ஒரு கேள்விக்குரிய பதிலை வாய்மொழி மூலம் அளிக்கும் படி சொல்லுதல், விடை எழுதுவதற்குரிய வெற்றிடத்தை பெரியளவில் விடல், வினாவுக்குரிய விடையை வெற்றிடத்தில் எழுதாமல் சரியான விடையைச் சுற்றி வட்டமிடச் சொல்லுதல் போன்றவை இவற்றில் சிலவாகும். அத்துடன், வாய்மொழி மூலமான செய்திகள், ஒலி மற்றும் ஒளி அமைப்பு மூலமாக சொல்லப்படும் தகவல்கள், சுவரொட்டிகளினூடாக தகவல்களை விளங்கிக் கொள்ள அனுமதித்தலும் ஆசிரியர் மற்றும் பெற்றோரின் செயற்பாடாக இருத்தல் வேண்டும்.

இவ்வாறான முன்னேற்பாடான வழிகளிலெல்லாம் தம்மை ஈடுபடுத்தி முன்னேற்றம் கொள்ளும் பிள்ளைகள் தமது பங்குக்கு முயற்சிக்கலாமே! உதாரணமாக, தனது சக நண்பனை ஒரு பயிற்சிப் பாடத்தை வாசிக்கச் சொல்லிவிட்டு தனது பாடக் கொப்பியில் எழுதலாம். மேலதிக நேரத்தை தமது படிப்பில் செலவழிப்பதன் மூலமும்தமதுமுன்னேற்றத்தைப்பெறலாம்.

பிள்ளையின் வளர்ச்சியின் ஆரம்பக் கட்டத்திலேயே இந்த நிலைமையை நாம் திருத்திவிட வேண்டும். இல்லையேல் அவர்களின் இளவயது பராயத்திலும் வாசிப்புப் பிறழ்வு நிலை தொடர்ந்து கொண்டேயிருக்கும். உதாரணமாக, "அ, ஆ, இ......... அல்லது A,B,C" என்பதை வாசித்தறிவதில் சிரமப்படும் சிறுபிள்ளை தனது பள்ளிப் பருவத்தில் எதிர்பாடான எழுத்துக்களை (d,b) வாசிப்பதில் திணறும்.

ஆகவே, வாசிப்புப் பிறழ்வு நிலையை சிறு வயதிலேயே மேற்கூறியவாறு கண்டு பிடித்து திருத்துவதன் மூலம் உங்கள் பிள்ளைகளை சிறந்த மாணாக்கர்களாக மாற்றியமையுங்கள்.

சி.சஸ்ரூபி,
B.Sc. Nursing.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்



## விற்பனைக்கு



### குளிரூட்டி விற்பனைக்கு

சிசில் சிறிய குளிரூட்டி. ஒரு வருடம் பாவித்தது. விற்பனைக்குண்டு.

(55283)(12.3.7) தொடர்பு: 077 414 6223/075 846 8077

### O/L MATHS

இலகுமுறையிலான பாடத்தொகுப்பு. பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம். Rs.350.00

(55316)(12.3.7) தொடர்பு: 077 224 7592

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

இரண்டு மாதங்கள் நிரம்பிய தடுப்பூசி போடப்பட்ட டாஸ் செயின் நாய்க்குட்டிகளும், இரண்டுவயது நிரம்பிய லப்றோ ஆண் நாயும் விற்பனைக்குண்டு. லப்றோ பெண் நாய் உங்களிடம் இருந்து வாங்கப்படும்.

(55294)(12.3.7) தொடர்பு: 077 101 6407

### காணிகள் விற்பனைக்கு

கொடிகாமம் புகையிரத நிலையத்திலிருந்து 100m தூரத்தில் A9 வீதியில் காணிகள் உடன் விற்பனைக்குள்ளன.

(55300)(12.3.7) தொடர்பு: 077 841 0381

### வீடு விற்பனைக்கு

நீர்வேலி வடக்கு, இராச வீதியில் அமைந்துள்ள மூன்று பரப்பு 12 குழியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

(55322)(12.3.7) தொடர்பு: 076 606 8237

### விற்பனைக்கு

Toyota 13" அலோய் வீல் நான்கும் (Alloy Rims) Impact Driller உம் விற்பனைக்குண்டு.

(55320)(12.3.7) தொடர்பு: 071 489 3055

### விற்பனைக்கு

25HP மோட்டரும், 27HP Lister இஞ்சினும் விற்பனைக்குண்டு.

(55317)(12.3.7) தொடர்பு: 077 868 9705

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

கச்சாய் அல்லாரை வீதியில் சகல வசதிகளையும் கொண்ட புதிய வீடு விற்பனைக்குண்டு. (நான்கு அறைகள் கொண்டது)

(51859)(12.3.7) தொடர்பு: 077 355 7237

### காணி விற்பனைக்கு

கொக்குவில் மேற்கு குளப்பிட்டிச் சந்திக்கும் உயர்கல்லூரிக்கும் அருகில் ஆனைக்கோட்டை றோட் முகப்புள்ள 3பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

(55267)(12.3.7) தொடர்பு: 077 625 3974/077 429 1246

### வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியில் இறயில் "மகுதன் சீமா" நிலப்பரப்பு 3 குழி 7உம் மேல் வீடும் விற்பனைக்கு உண்டு.

(55323)(12.3.7) தொடர்பு: 077 006 1651

## மணமக்கள் தேவை

### மணமகள் தேவை

வயது 34, செவ்வாய்க் குற்றமற்ற 1இல் சூரியன், 12இல் கேது, நட்சத்திரம் உத்தரம், யாழ்ப்பாணத்தை நிரந்தர வசிப்பிடமாகவுள்ள சுயதொழில் புரியும் மணமகனுக்கு யாழ்.குடா நாட்டில் மணமகள் தேவை.

(55222)(12.3.7) தொடர்பு: 077 414 6223/075 846 8077

### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 09.01.1985 11.am ஆயிலியம் 2ஆம் பாதம், கிரகபாவம் - 33 கனடா PR உத்தியோக மணமகளுக்கு, கனடா PR மட்டும் உள்ளஉத்தியோக மணமகன் தேவை.

(55270)(12.3.7) தொடர்பு: 077 153 0734

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 32வயது, உத்தரம் 3ஆம் பாதம், பாவம் 11, செவ்வாய் தோஷமற்ற 5' 8" உயரமுடைய, Skilled Migration Visaவில் லண்டனில் வசிக்கும் (PR February 2015) Civil Engineer மகனுக்கு பெற்றோர் மணமகள் (Accountant பட்டதாரி) தேடுகின்றனர்.

(55269)(12.3.7) தொடர்பு: 077 614 6123/021 222 8805

### மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1985 சுவாதி, அரசசேவையில் பணியாற்றும் மணமகளுக்கு நல்லொழுக்கமும், நற்குணமும் உள்ள உள் நாட்டில்/ வெளிநாட்டில் நற்தொழில் செய்யும் மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு: 077 599 5505 (55311)(45.3.7)

## ஏனையவை

### Printing Machine திருத்துநர்

30 வருடங்கள் அனுபவமிக்க Heidelberg கம்பனியின் மூலம் Factory Trained Engineer Heidelberg Printing Machine Polar Cutting Machine திருத்துநர்.

உங்கள் அச்சு இயந்திரங்களில் பழுதுகளை வினைத்திறனோடு செய்துகொள்ள இன்றே அழையுங்கள்.

தொடர்புகளுக்கு : விஜேந்திர

081-2240756 | 071-4759508

(சிங்களம் அல்லது ஆங்கிலத்தில் தொடர்பு கொள்ளவும்) (55176)(4.3.6)

## வாடகைக்கு

### வீடு வாடகைக்கு

கிளிநொச்சி, சேவியர்கடை சந்திக்கு அண்மையில் சகலவசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

(54130)(12.3.7) தொடர்பு: 077 844 9015

### அறை/வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் உத்தியோகத்தர் ஒருவருக்கு 3 மாதத்துக்கு அறை/வீடு வாடகைக்குத் தேவை. மாதவாடகை 10,000/= தரப்படும்.

(55232)(12.3.7) தொடர்பு: 077 323 2618

### வீடு வாடகைக்கு

இலுப்பையடிச் சந்திக்கும், அம்மன் சந்திக்கும் இடையில் சகலவசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. (வாகனத்தரிப்பிட வசதியுண்டு)

(55279)(12.3.7) தொடர்பு: 077 369 0333

### வீடு வாடகைக்கு

உரும்பிராய் தெற்கு, சேமம்புல வீதியில் வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும். பல்கலைக்கழக மாணவர்கள், உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.

(55313)(12.3.7) தொடர்பு: 077 606 2168

### வீடு வாடகைக்குண்டு

கல்வியங்காடு செங்குந்தா இந்துக்கல்லூரிக்கு அருகில் 68ஆம் இலக்கத்தில் 2 இணைந்த குளியலறைகள், 5 படுக்கையறைகளைக் கொண்ட வீடு வாடகைக்குண்டு.

(55327)(12.3.7) தொடர்பு: 071 860 5623

## கல்வி

### PERSONAL CLASS - கணினி

- 10 வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
- MS Office, Internet & E-mail, DIT, Wep Design Graphic Desing, சிறுவர்களிற்கான கற்கைநெறி.
- பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.

குறிப்பு: கணினி இல்லாதவர்களுக்கு எனது Laptopமூலமாக கற்பிக்கப்படும்.

TP: 0779672038 (55309)(12.3.7) ஆசிரியர்: KRC

## தேவை





### உடன் தேவை

டிராக்டர் கலப்பை 8 சட்டி உடைய அறோ (England) உடன் தேவை.

(55320)(12.3.7) தொடர்பு: 077 651 0696/077 946 7121

### வேலையாள்கள் தேவை

சுன்னாகம் நகரில் உள்ள தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு பெண் விற்பனையாளர்கள் தேவை. அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

(55320)(12.3.7) தொடர்பு: 077 174 6291

### தேவை

கடை ஒன்றுக்கு வேலைக்கு ஆள்கள் தேவை. (ஆண், பெண் இருபாலாரும்) (வயது 18 - 30 வரை)

917, கே.கே.எஸ்.வீதி, தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம். (55281)(12.3.7)

### கார்த்திகைக்காய் தேவை

கார்த்திகைக்காயின் பருவம் இது. நன்கு முற்றிய கார்த்திகைக்காய்கள் நல்ல விலைக்கு வாங்கப்படும்.

தொடர்பு:

ஈஸ்வரன் கதிரேசன் அன் கோ

55/1, சிறீ மகிந்த மாவத்தை, கொழும்பு - 09

(55206)(12.7) TP: 011 267 7077/011 269 7729

### FR ADVERTAISING

FR Advertaising கம்பனியானது 2015ஆம் ஆண்டுக்கான புதிய கிளையை யர்ழ்ப்பாணத்தில் ஆரம்பித்துள்ளது. வேலைக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. O/L, A/L தகைமைகளாக எதிர்பார்க்கப்படுகிறது. மேலதிக தகவல்களுக்கு.

No.09, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

(55292)(12.3.7) 077 354 8006/075 674 1731

### வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் திறக்கப்படவுள்ள பேக்கறி ஒன்றுக்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு ஆள்கள் தேவை.

- போறணை பாஸ் (அவன் பாஸ்) கேக், பிஸ்கட் போடத் தெரிந்தவர்கள்.
- பட்டா லொறி ஓட்டுநர் (Driver)

தொடர்பு: 072 699 9325 (55234)(45.3.7)

### காணி தேவை

யாழ்.மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் (யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலை எல்லைக்குள் விரும்பத்தக்கது) காணி தேவை.

(55272)(12.3.7) தொடர்பு: 077 004 8439

### பணியாளர் தேவை

மெசினில் உரப்பை தைக்க அனுபவமுள்ள பணியாளர் தேவை.

(55324)(12.3.7) தொடர்பு: 021 222 5986/075 999 2900

### வேலையாள் தேவை

கொழும்பு தெஹிவளையில் 50 வயதுக்கு மேற்பட்ட (குடிப்பழக்கம், புகைத்தல் பழக்கமற்ற) வீட்டுக்காவலுக்கு ஆண் தேவை.

யாழ்ப்பாணத்தில் தங்கிநின்று வேலை செய்வதற்கு பெண் தேவை. (40 வயதுக்கு மேற்பட்ட)

(55254)(12.3.7) தொடர்பு: 077 775 8950

### NICK CAREER IN JAFFNA

வளர்ந்துவரும் எமது நிறுவனத்தில் O/L ,A/L படித்த உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு.

Supervisor (08) Asst. managars (04) Trainee managers (20) ஆகிய தொழில் வெற்றிடங்கள் காணப்படு கின்றன. தகுந்த பயிற்சிகளுடன் நிரந்தர தொழில் வாய்ப்பு பயிற்சியின் போது 12000 ++ பயிற்சியின் பின்னர் 40, 000 வழங்கப்படும்.

175, 1st Cross Street, Jaffna

(55278)(4.3.7) தொடர்பு: 077 042 4080, 077 599 5114

### வேலையாள்கள் தேவை

குருநாகல் நகர்ப் பகுதியிலுள்ள கடை ஒன்றுக்கு வேலை செய்வதற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை.

(55325)(12.3.7) தொடர்பு: 077 886 3346


உதயன் விளம்பரத் தொடர்புக்கு-

advt@uthayan.com

0215671111


## மருத்துவம்

### விசேட பல் வைத்திய நிபுணர்கள் வருகை



- பல் முக சீராக்கல் (Consultant orthodontist)
- முக சத்திர சிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges,Implants)
- வேர்முறை சிகிச்சை(Root canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்ஷினி)

## சினிமா

### செல்லா சினிமா யாழ்ப்பாணம்

இப்பொழுது காண்பிக்கப்படும்

ஆர்யா, ஹன்சிகா நடிப்பில் 25முதல்

மீகாமன்

(தினசரி 4 காட்சிகள்)

10.30, 2.30, 6.30, 9.30

AC / DTS

தைப்பொங்கல் வெளியீடு விக்ரம் நடிப்பில் ஐ



### CEYLON THEATRES

இப்பொழுது திரையில்

கார்கில்ஸ் ஸ்குவெயர் (யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)




பிளட்டினம் 10.30 / 2.30 / 6.30




சில்வர் 10.15 / 2.15 / 6.15




ப்ரொன்ஸ் 10.30 / 2.30 / 6.30


விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்த எதிர் மைத்திரி: தமிழர்களின் நிலை என்ன?

என்.கே.அஷோக்பரன்



*(நேற்றைய தொடர்ச்சி...)*

சுதந்திரக்கட்சிப் பாசறையில் இருந்து வந்த அந்தக் கட்சியின் முக்கிய தூணாண ஒருவரை ஐக்கிய தேசியக் கட்சியின் பாரம்பரிய வாக்காளன் எப்படி ஆதரிப்பான் என்பது சிக்கலான ஒரு நிலைதான். இதை எதிர் கொள்ளவே, தனது முதல் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்ஹவை தான் பிரதமராக அறிவிப்பேன் என மைத்திரிபால சிறிசேன கூறினார். தொடர்ந்தும் அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகோத்தாவுக்குச் சென்றதும், அங்கு கூட்டமொன்றில் கலந்துகொண்டதும், தான் ஒரு கட்சிசார்ந்த வேட்பாளர் அல்ல மாறாக பொதுவேட்பாளர் என்பதை வலியுறுத்தவே. இதைவிடவும் ஹெல உறுமயவின் ஆதரவும் இங்கு உற்று நோக்கப்பட வேண்டியது. சிங்கள பௌத்த பேரினவாதகட்சியான ஹெல உறுமய மஹிந்த ராஜபக்ஷ அரசிலிருந்து விலகி இன்று மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளிப்பதாக அறிவித்திருக்கிறது. ஜாதிக ஹெல உறுமயவுடன் இரகசிய ஒப்பந்தம் எதுவுமில்லை என மைத்திரிபால மறுத்திருப்பினும், பௌத்த சமயத்திற்கான முன்னுரிமை தொடர்ந்து பேணப்படல், போர்க் குற்றத்திற்கெதிரான விசாரணைக்கு இடமளிக்காதிருத்தல், சமஷ்டித் தீர்வு என்ற பேச்சுக்கே இடமில்லை போன்றவை ஜாதிக ஹெல உறுமயவுடனான உடன்பாட்டின் குழந்தைகளாகவே மைத்திரிபால சிறிசேனவின் பிரகடனங்கள் வெளிவந்திருக்கின்றன என்பதை நாம் காணலாம்.

**நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்குதல்**

மைத்திரிபால சிறிசேன முன்வைத்திருக்கும் கொள்கையும் சரத்பொன்சேகாவினுடையதிலிருந்து பெரிதும் மாறுபட்டது. மைத்திரிபால 100 நாள்களுக்குள் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை விட்டொழித்தல் எனும் கொள்கையை முன்வைத்து தனது வேட்புரிமையை முன்னிறுத்துகிறார். இதையே அவரை ஆதரிக்கும் ஏறத்தாழ 35 கட்சிகளும், சிவில் அமைப்புக்களும் ஆதரிக்கின்றன. ஆக நிறைவேற்று ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்கும் கொள்கையை முன்வைத்து இம்முறை பொது வேட்பாளர் களம் இறங்குகிறார். இது இலங்கை மக்களால் எவ்வாறு ஏற்றுக்கொள் ளப்படும் என்பது ஒருபுற மிருக்க, இதன் அவசியப்பாடு குறித்த கேள்விகளும் அரசியல் அரங்கில் எழுப்பப்படாமல் இல்லை. கலாநிதி. தயான் ஜயதிலக்க உலகமெங்கும் வளர்ந்த, துரிதமாக வளர்ந்து வருகிற பெரும்பான்மை நாடுகளில் காணப்படும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறை ஏன் இலங்கையில் நீக்கப்பட வேண்டும் என்ற ரீதியில் கேள்வியெழுப்பியிருந்தார்.

இலங்கையைப் பொறுத்தவரை நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்குதல் என்பது பல காலமாக ஒலித்துவரும் கோரிக்கைதான். ஆனால் பதவிக்கு வந்த எந்த நிறைவேற்று ஜனாதிபதியும் இம்முறையை நீக்க நடவடிக்கையெடுத்ததில்லை. மாறாக மகிந்த ராஜபக்ஷ, ஒருவர் இரண்டு தடவைக்கு மேல் நிறைவேற்று ஜனாதிபதியாக இருக்கமுடியாது என்ற தடையை 18வது அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் நீக்கியது மட்டுமல்லாது, 17ம் சீர்திருத்தத்தினால் ஜனாதிபதியின் சில அதிகாரங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட மட்டுப்பாடு களையும் நீக்கியிருக்கிறார். ஆனால் நான் ஜனாதிபதியானால், ஜனாதிபதி மாளிகைக் குக் கூடச் செல்ல மாட்டேன் என்று மைத்திரிபால கூறியிருப்பது நிறைவேற்று அதிகாரத்தை இல்லா தொழிக்கும் தனது கொள்கையை வலியுறுத்துவதாக அமைவதை நாம் நோக்குதல் வேண்டும்.

நிறைவேற்று அதிகாரம், குடும்ப ஆட்சி, ஊழல் என்ற முழக்கங்களை முன்வைத்து பொது வேட்பாளர் தனது பிரசாரங்களை ஆரம்பித்து இருக்கிறார். ஆனால் பெரும்பான்மை மக்களைக் கவர்ந்து 50 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளைக் கவர இது மட்டும் போதுமா என்ற கேள்வி தொக்கி நிற்கிறது. பொது வேட்பாளர், பொது மகன் என்றவாறு பொது என்ற சொல்லுக்கு ஒரு கவர்ச்சியுண்டு, அதுவும் குறிப்பாக இலஞ்ச ஊழலை எதிர்க்கும் போது அதற்கென்று தனி வலிமையுண்டு. இதை நாம் இந்தியாவில் சில ஆண்டுகளுக்கு முன் உதித்த ஆம்ஆத்மி (பொது மகன்) கட்சி ஏற்படுத்திய பரபரப்பில் காணலாம். ஆனால் ஆம் ஆத்மி இந்தியத் தலைநகரான புதுடில்லியில் பெற்ற மிகச் சிறியதொரு வெற்றியைத் தவிர பெரும் வெற்றிகள் எதனையும் பெறமுடியவில்லை. குறிப்பாக நரேந்திர மோடி எனும் தேசியவாதக் குரலுக்கு முன்னால் அர்விந்த் கெஜ்ரிவாலால் வெற்றி பெற முடியவில்லை. அது அவ்வாறு இருப்பினும், இன்று இலங்கையின் நிலை வேறுபட்டது. இங்கு ஊழலுக்கெதிரான மக்கள் போராட்டங்களோ, அதை முன்னெடுக்கத்தக்க ஊடக சுதந்திரமோ இல்லை. மேலும் வெறுமனே ஊழலை ஒழித்தல் என்பது இங்கு ஒரு நகர சபைத் தேர்தலைக் கூட வெற்றிக் கொள்ளத்தக்கதொரு பிரசார ஆயுதம் அல்ல. இனவாதமும், மதவாதமும் இலங்கை வாக்குவங்கியின் பிரிக்கமுடியாத அம்சங்கள் என்பதற்கு இலங்கையின் தேர்தல் வரலாற்றை ஆராய்ந்தாலே தெரியும். இன்று நிறைவேற்று அதிகாரத்தையும், குடும்ப ஆட்சியையும், ஊழலையும் எதிர்க்கும் மைத்திரிபால சிறிசேன, சம்பிக்க ரணவக்க மற்றும்உதயகம்மன்பிலபோன்ற புடம்போட்ட சிங்கள–பௌத்த பேரினவாதிகளைக் கொண்ட ஜாதிக ஹெல உறுமயவுடன் கூட்டு ஏற்படுத்தியதும், பௌத்த பிக்குகளை பிரசாரத்தில் முன்நிறுத்துவதும், இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றி உறுதியானதொரு கொள்கையை பிரகடனம் செய்யாதிருப்பதும், பெரும்பான்மை சிங்கள–பௌத்தவாக்குவங்கியைக்கைப் பற்றவேயன்றி வேறெதற்காக இருக்கமுடியும்?

மறுபுறத்தில் வழமைபோலவே மகிந்த ராஜபக்ஷவும் இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றி மௌனம் சாதிக்கிறார். இனி அவர் உறுதிமொழியொன்றை வழங்கினால் கூட, 8 வருடங்களில் செய்ய முடியாததை இனியா செய்யப்போகிறார் என்ற சந்தேகம் தான் தமிழர்களிடம் இருக்குமேயன்றி நம்பிக்கையல்ல. மேலும் பொது பல சேனா என்ற சிங்கள–பௌத்த இனவெறி அமைப்பு மஹிந்தவுக்கு ஆதரவளிப்பதும் சிங்கள–பௌத்த பேரினவாத அரசியலின் முக்கியத்துவத்தையே பறைசாற்றுகிறது.



பொது பல சேனா ஆதரிக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் ஆதர வளிப்பதுதான் இங்கு நகை முரண்.

ஆனால் முஸ்லிம் காங்கிரஸிற்கு உரிய பதிலை ஊவா வாழ் முஸ்லிம்கள்ஊவாமாகாண சபைத் தேர்தலில் வழங்கினார்கள், அது போலவே இலங்கை வாழ் முஸ்லிம் மக்களும் தம் தலைமை களுக்கு தக்கதோர் பதிலை இம்முறை தேர்தலில் வழங்குவார்கள் என எதிர்பார்க்கலாம்.

**தமிழ் மக்களின் நிலை என்ன?**

தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிப்பது? என்பது ஒவ்வொரு தமிழனினதும் கேள்வி. காலங்காலமாக நாம் ஏய்க்கப்பட்டு வந்திருக்கிறோம் என்பது வரலாறு. சந்திரிகாவுக்கு, அவர் சொன்னதை நம்பி, நாம் வாக்களித்தோம். விளைவு என்னவென்பதற்கு அவரது ஆட்சியில் கொல்லப்பட்ட அப்பாவித் தமிழர்களின் ஆத்மாக்கள் சாட்சி சொல்லும். ரத்வத்தைகளின் காட்டாட்சியில் தமிழினம் படுகொலை செய்யப்பட்ட வரலாறு அவ்வளவு விரைவில் மறந்துவிடக்கூடியதா? 2005–ல் வடக்கு–கிழக்கு அமைதிகாத்தது. விளைவு. அடுத்த 4 வருடங்களில் வரலாறுகாணாத இனவழிப்பு போர், மனிதநேய நடவடிக்கை என்ற பெயரில் இடம்பெற்று பல்லாயிரம் அப்பாவி தமிழ்மக்களின் உயிரைப் பலிவாங்கியது. 2010ல் பெரிய தீங்கை விடுத்துக் குறைந்த தீங்கினைத் தேர்ந்தெடுத்தோம். அந்த போரை முன்னின்று நடத்திய இராணுவத்தளபதியை தமிழினம் ஆதரித்தது. மஹிந்த ராஜபக்ஷவை விட சரத் பொன்சேகா அதிக வாக்குகள் பெற்றது தமிழர் பெரும்பான்மையாக வாழும் வடக்கிலும், கிழக்கிலும், நுவரெலியாவிலும்தான். ஆனால் பெரும்பான்மை மக்கள் போர் வெற்றிக்கான பரிசை மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கினார்கள்.

இதோ மீண்டும் தேர்தல். இம்முறை மஹிந்த ராஜபக்ஷ ஒரு தரப்பிலும், பல எதிர்க்கட்சிகளும் ஒன்றுபட்டு அதன் சார்பில் மைத்திரிபால சிறிசேனவும் போட்டியிடுகிறார்கள். மஹிந்த ராஜபக்ஷ போர் வெற்றி, அபிவிருத்தி, தன்னுடைய 8 ஆண்டு கால சாதனைகளை முன்வைத்தும், மைத்திரிபால சிறிசேன நிறைவேற்று அதிகாரத்தை ஒழித்தல், குடும்ப ஆட்சியை அகற்றுதல், ஊழலை ஒழித்தல் போன்றவற்றை முன்வைத்தும் தேர்தலில் நிற்கிறார்கள். இருவரும் சொல்லிவைத்தாற்போல இனப்பிரச்சினைத் தீர்வு பற்றி விரிவானதொரு கருத்தையும் முன்வைக்கவில்லை. மாறாக அதையொரு பேசத்தகாதவிடயமாகக் காண்கிறார்கள். ஏனெனில், இனப் பிரச்சினை தீர்வாக எது முன்வைக்கப்பட்டாலும், பேரினவாதசக்திகளால் அது நாட்டைத் துண்டாடும் சூழ்ச்சியாகவே சிங்கள–பௌத்த மக்கள் மத்தியில் பிரசாரம் செய்யப்படும், அது பெரும்பான்மை வாக்கு வங்கியைப் பாதிக்கும் என இருதரப்பும் நன்கறியும். அப்படியானால் தமிழ் மக்கள் ஏன் வாக்களிக்க வேண்டும் என்ற கேள்வி தமிழர்களிடையே எழுப்பப்படாமல் இல்லை. இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மௌனம் சாதிப்பதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாக இருக்கலாம். மேலும் தேசிய அரசு ஒன்று அமைப்பது பற்றியே பொது வேட்பாளரை ஆதரிக்கும் எதிர்க் கட்சிகள் சிந்திக்கின்றன.

ஆனால் அந்த தேசிய அரசு இனப் பிரச்சினைத் தீர்வை எவ்வாறு அணுகும்?


*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுரை

# பாப்பரசரை வரவேற்பது யார்?

சிங்கள மூலம்:மவ்பிம 25.12.2014
[உப்புல்யோசேப் பெர்னாண்டோ]
தமிழில்—வீ.எஸ்.ரீ



1999ஆம் ஆண்டில் மேல் மாகாண சபைத் தேர்தலை அந்த ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் நடத்த ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்தார். ஆனால் ஏப்ரல் மாதம் கத்தோலிக்க மதத்தவர்களது தவக்காலம் என்பதால் ஏப்ரல் மாதத்தில் தேர்தலை நட்த்துவதைப் பின்போடுமாறு அந்த வேளையில் கத்தோலிக்க திருச்சபையின் பேராயராக இருந்த நிக்கலஸ் மார்க்கஸ் ஜனாதிபதி சந்திரிகாவைச் கேட்டுக் கொண்டார். சோதிடர்களது ஆலோசனைக்கு அமையவே சந்திரிகா அந்தத் தேர்தல் தினத்தை முடிவு செய்திருந்ததால் பேராயரது கோரிக்கையை அவர் பெரிதுபடுத்தாமல் தமது முடிவில் உறுதியாக



இருந்தார். ஆனால் திருச்சபைப் பேராயர், திருச்சபையின் ஏனைய அருட்பணியாளர்களூடாக கத்தோலிக்க மக்களை ஒன்று திரட்டி ஜனாதிபதி சந்திரிகாவின் குறிப்பிட்ட முடிவுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்து நடத்தினார். கடைசியில் கத்தோலிக்க மக்களது கருத்துக்கு மதிப்பளித்து, ஜனாதிபதி சந்திரிகா மேல் மாகாண சபைத் தேர்தலைப் பிற்போட வேண்டியதாயிற்று.

அன்று சந்திரிகாவுக்கு கத்தோலிக்க மக்களது ஒன்றிணைந்த கருத்தை வெளிப்படுத்திக் காட்டிய பேராயர் நிக்கலஸ் மார்க்கஸ் இன்று அந்தப் பதவியில் இல்லை. இன்று அந்தப் பதவியை வகிப்பவர் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆவார். அவர் பேராயராக மட்டுமன்றி பாப்பரசரால் கர்தினால் பதவி வழங்கப்பட்ட ஒருவருமாவார். ஆனால் பாப்பரசரின் இலங்கைக்கான பயணத்தின் முக்கியத்துவம் குறித்து மஹிந்தவுக்கு எடுத்துக்கூறி ஜனாதிபதித் தேர்தல் தினத்தைப் பிற்போடவைக்க அவரால் இயலாது போய்விட்டது.

கத்தோலிக்கத் திருச்சபையின் ஆயர்களில் பெரும்பாலானோரும் அருட்பணியாளர்களும் ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடிந்து ஒரு சில நாள்கள் இடைவெளியில் பாப்பரசரின் இலங்கைக்கான பயணம் இடம் பெறுவதை விரும்பவில்லை. பேராயர் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி ஜனாதிபதித் தேர்தல் தினத்தைப் பிற்போட வைத்திருக்க வேண்டும்; அதற்கு ஜனாதிபதி இணங்காத பட்சத்தில் பாப்பரசர் இலங்கைக்கான தமது பயணத்தை இரத்துச் செய்திருக்க வேண்டும் என்பதே அவர்களது கருத்தாக அமைந்திருந்தது.

**மஹிந்த ஒப்புதல்**

ஆனால், பாப்பரசர், கத்தோலிக்க ஆயர்கள் சபையூடாக மஹிந்தவிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்திருந்ததாகவும், அதில் ஜனாதிபதித் தேர்தல் சுதந்திரமானதாகவும் நியாயமான முறையிலும் நடத்தப்படவேண்டுமெனவும், ஒருவேளை மஹிந்த அந்தத் தேர்தலில் தோல்வியடைய நேர்ந்தால் ஜனாதிபதிப் பதவியைத் துறந்து விட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் தெரியவந்துள்ளது. அதற்கு மஹிந்தவும் ஒப்புதல் தெரிவித்திருந்ததாகவும் தெரிய வந்துள்ளது.

இதுவோர் சிறப்பான அம்சமாகும். ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பில் முறைகேடுகள் தவிர்க்கப்பட வேண்டியமை போன்றே, தேர்தலில் மஹிந்த தோல்வியுற்றால், தொடர்ந்தும் அந்தப் பதவியில் அவர் நீடித்திருக்க முயற்சி மேற்கொள்ளாது தவிர்ப்பதற்குமானதொரு அழுத்தமாக இதனைக் கொள்ள இயலும். தேர்தலில் ஊழல் இடம் பெறுமாயின், தோல்வியுறும் தரப்பு அதனை ஆட்சேபித்து வீதியில் இறங்கிப் போராடக் கூடும். அதே போன்று தேர்தல் குழப்பங்கள் நிறைந்ததாக நடந்து முடிந்தால் தோல்வியுறும் தரப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட முயலக் கூடும். அத்தகையதொரு அமைதியற்ற நிலை ஏற்படுமானால் பாப்பரசர் அதனைக் காரணம் காட்டி இலங்கைக்கான தமது பயணத்தை இரத்துச் செய்ய நேரிடக் கூடும்.

அத்தகைய நிலையில் மஹிந்த தேர்தலில் வெற்றியீட்டினாலும் அது அவரது கௌரவத்துக்கான தோல்வியாகவே கொள்ளப் படக்கூடும். மாறாக மைத்திரிபால தேர்தலில் வெற்றியீட்டினாலும் மஹிந்த தமது பதவியைத் துறக்க மறுத்தால் பாப்பரசர் தமது இலங்கைக்கான பயணத்தை இரத்துச் செய்து விடலாம்.

அந்த வகையில் இடம் பெறவுள்ள பாப்பரசரின் இலங்கைக்கான பயணம், ஜனாதிபதித் தேர்தல் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலாக நடைபெற அழுத்தம் கொடுப்பதொன்றாக அமைகிறது. இந்த அழுத்தத்திலிருந்து தப்பிக் கொள்ளவோ, நழுவிக் கொள்ளவோ வாய்ப்பற்றுப் போகிறது.

**மஹிந்தவின் விடாமுயற்சி**

பாப்பரசரை இலங்கைக்கு வரவழைக்க மஹிந்த மேற்கொண்ட முயற்சி கொஞ்ச நஞ்சமல்ல. அதற்காக அவர் இரு தடவைகள் உரோமாபுரிக்குப் பயணம் செய்து பாப்பரசரிடம் அழைப்பு விடுத்துள்ளார். தமது சகோதரரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷவையும் அனுப்பி அழைப்பு விடுப்பித்திருந்தார். தாம் அரசியல் இலாபம் தேடும் நோக்கில் பாப்பரசரை அழைக்கவில்லை எனக் காட்டிக்கொள்ள ஒரு தடவை பதில் எதிர்க்கட்சித் தலைவர் ஜோன் அமரதுங்கவையும் ஜனாதிபதி தம்முடன் உரோமாபுரிக்கு அழைத்துச் சென்றிருந்தார்.

இலங்கைக்குப் பாப்பரசர் ஒருவர் முதன்முதலில் பயணம் மேற்கொண்ட நிகழ்வு 1970 ஆம் ஆண்டில் இடம்பெற்றது. 1965ஆம் ஆண்டு முதல் 1970 ஆம் ஆண்டு வரை நாட்டின் பிரதமர் பதவியை வகித்து வந்த டட்லி சேனநாயக்காவே முதன் முதலில் அத்தகையதொரு அழைப்பை விடுத்திருந்தார். டட்லி சேனநாயக்கா குறித்த காலத்துக்கு முன்னர் சோதிடர்களது அறிவுறுத்தலுக்கமைய பொதுத் தேர்தலை நடத்தி அதில் வெற்றிபெற்று வெற்றிப் பெருமிதத்துடன் பாப்பரசரை வரவேற்கும் நோக்கில், 1970 ஆம் ஆண்டில் பொதுத் தேர்தலுக்கு உத்தரவிட்டார்.



பொதுத்தேர்தல் முடிந்து இரண்டு மூன்று மாதங்களின் பின்னரே பாப்பரசரின் இலங்கைக்கான பயணம் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது.

ஆனால் எதிர்பாராத வகையில் 1970ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் டட்லியின் தலைமையிலான ஐ.தே. கட்சி அரசு தோல்வியைச் சந்திக்க நேர்ந்தது.

இதனால் அந்தத் தேர்தலில் வெற்றியீட்டி அரசமைத்த சுதந்திரக் கட்சியின் தலைவி சிறிமாவோவுக்கே, பாப்பரசரை இலங்கை மண்ணில் வரவேற்கும் வாய்ப்புக் கிட்டியது.

இரண்டாவது தடவையாக பாப்பரசர் ஒருவர் 1995ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலேயே இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். பிரேமதாசவின் தலைமையிலான அரசாலேயே அந்த அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஜனாதிபதி பிரேமதாசவோ, 1994ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி தமது இரண்டாவது தடவையான ஜனாதிபதிப் பதவிக் காலத்தில் தாம் நாட்டின் ஜனாதிபதியென்ற பெருமிதத்துடன் பாப்பரசரை வரவேற்கத் திட்டமிட்டிருந்தார்.

ஆனால் 1993 மே மாதத்தில் பிரேமதாச படுகொலையுற நேர்ந்தது. அவருக்குப் பின்னர் ஜனாதிபதிப் பதவியை வகித்த டி.பி.விஜேதுங்க, பாப்பரசரை இலங்கை மண்ணில் வைத்து வரவேற்கும் வாய்ப்புத் தமக்கு வாய்த்திருப்பதாக எண்ணிய போதிலும் கடைசியில் அந்த வாய்ப்பு சந்திரிகாவுக்கே கிட்டியது. 1994இல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற சந்திரிகா, 1995ஆம் ஆண்டு ஜனவரியில் ஜனாதிபதியாகப் பதவியேற்றதுடன் பாப்பரசரை வரவேற்கும் வாய்ப்பையும் பெற்றார்.

**நாற்காலியில் அமர்வது யார்?**

இந்த வரலாற்றை நோக்கும் போது, இரு தடவைகளும் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட பாப்பரசர்களை இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுத்தது ஓர் அரசாகவும், அவ்விதம் அவர்கள் இங்கு பயணம் மேற்கொண்ட போது அவர்களை வரவேற்கும் வாய்ப்பு புதிதாகப் பதவியேற்ற வேறு அரசுத் தலைவர்களாகவும் அமைந்தமையை அவதானிக்க முடிகிறது. குறிப்பிட்ட இந்த இரு தடவைகளும் பதவியிலிருந்த அரசுகள் தோல்வியுற்று புதிய அரசுகள் உருவாக வழிவகுத்த தேர்தல்கள் இடம் பெற்று முடிந்த சமயங்களிலேயே பாப்பரசர்களது இலங்கைக்கான பயணங்கள் இடம் பெற்றிருந்தன.

அந்த வகையில் மேற்குறிப்பிட்ட இரு தடவைகளும் பாப்பரசர்களது இலங்கைப் பயணத்தின்போது பண்டாரநாயக்க பரம்பரையைச் சேர்ந்தவர்களாலேயே நாடு நிர்வகிக்கப்பட்டது.

அப்படியானால் இம்முறை பாப்பரசர் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும்வேளை, பண்டாரநாயக்க பரம்பரையினரை அரசியலரங்குக்குக் கொண்டு வர முயலும் மைத்திரிபால சிறிசேன நாட்டின் ஜனாதிபதி நாற்காலியில் அமர்ந்திருக்கும் நிலை ஏற்படக் கூடுமா?

அது குறித்து தற்போது எதனையும் உறுதியாகக் கூறஇயலவில்லை. ஆனால் ஒன்று, பாப்பரசர்களது இலங்கைக்கான பயணங்களுக்கும், இந்த நாட்டின் அரசியல் களத்துக்கும் இடையில் ஏதோவொரு அதிசயமான தொடர்பு இருக்கிறது என்பது மட்டும் தெளிவான தொன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# எமது போக்குவரத்துக் கொள்கை

## தேசத்தின் வளர்ச்சிக்கான உத்வேகத்தை எளிதாக்கும் ஒரு போக்குவரத்து வலையமைப்பு

### நாம் இதுவரை செய்துள்ளவை

- 2011 தொடக்கம் இன்று வரை கிராமப்புரங்களை நகரத்துடன் இணைக்கும் வகையில் “மகநெகும” திட்டம் ஊடாக 3370 கி.மீ. அளவான கிராமப்புர வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.
- ‘ரன்தோர’ திட்டத்தின் கீழ் அதிவேக பாதைகளும், நெடுஞ்சாலைகளும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. தெற்கு அதிவேகப்பாதை, கட்டுநாயக்க அதிவேகப்பாதை, மற்றும் வெளிச்சுற்றுப்புற அதிவேகப்பாதை என்பன கொழும்பைச் சூழவுள்ள சகல பிரதான பாதைகளையும் இணைக்கின்றன.
- புகையிரத மற்றும் வீதி போக்குவரத்து என்பன உட்கட்டமைப்புடன் இணைந்து தரமுயர்த்தப்பட்டுள்ளதுடன், 2013ம் ஆண்டு 281 புதிய பஸ்கள், 50 ஆடம்பர பஸ்கள் மற்றும் 03 புதிய புகையிரத என்ஜின்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- பயங்கரவாதிகளால் அழிக்கப்பட்ட புகையிரத பாதைகள் மீளமைக்கப்பட்டு இன்று யாழ்தேவி புகையிரதம் யாழ்ப்பாணம் வரை பயணிக்க ஆரம்பித்துள்ளது.

### நாம் இனி செய்ய உத்தேசித்துள்ளவை

பொதுப் போக்குவரத்து பற்றி நான் எப்பொழுதும் பொதுமகனாகவே சிந்திக்கிறேன். பயங்கரவாதிகளால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டு, தண்டவாளங்கள் கழற்றி செல்லப்பட்ட யாழ்தேவி புகையிரதம் பெருமையுடன் தனது இரண்டாவது பயணத்தை தற்போது ஆரம்பித்துள்ளது. அதில் ஏறி யாழ்ப்பாணம் நோக்கி செல்லும் போது பாதையின் இருபக்கமும் காணப்பட்ட பல்லாயிரக்கணக்கான மக்களின் மனங்களில் தோன்றிய மகிழ்ச்சியை அவர்களின் முகங்களில் மலர்ந்த புன்னகையில் நான் அறிந்து கொண்டேன். ஆடம்பர வாகனத்தில் செல்லும் பயணியும், பொது போக்குவரத்தில் செல்லும் பயணியும் வசதியாக செல்லக்கூடிய போக்குவரத்துச் சேவையை நான் அமைப்பேன்.

• வாகன விபத்து குறைந்த தேசம் • பாதைகளில் இடையூறுகளைத் தவிர்ப்போம்

மஹிந்த சிந்தனை - உலகை வெல்லும் வழி

**பாதுகாப்பான தேசம்**

**வளமான எதிர்காலம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## செய்தி

# இருமுடி கட்டி யாத்திரை ஜன.12 இல் ஆரம்பம்

### கட்டுவன் கரண்டக்குளம் ஸ்ரீ ஐயப்பன் கோயிலில்



யாழ்ப்பாணம், டிசெ.28

சபரிமலை போலவே யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக கட்டப்பட்ட கட்டுவன் கரண்டக்குளம் ஸ்ரீ ஐயப்பன் கோயிலில் வருடந்தோறும் யாத்திரை சென்று படியேறி நெய்யாபிசேகம் செய்யும் பக்தர்கள் இம்முறையும் எதிர்வரும் ஜனவரி 12 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் புலவனார் வீதியிலுள்ள கட்டுவன் ஐயப்பன் கோயில் குருஸ்வாமியின் வாசஸ்தலத்தில் இருமுடிகட்டி மறுநாள் செவ்வாய்க் கிழமை அதிகாலையில் தீபாராதனை, பஜனை, விசேடபூஜைகளின்பின் 5.30 மணியளவில் பக்திபூர்வமாக இருமுடிகள் தாங்கி யாத்திரையை மேற்கொள்வர்.

யாத்திரை புலவனார் வீதியூடாக புறப்பட்டு ஆடிய பாதம் வீதி வழியாக திருநெல்வேலிச் சந்தியைச் சென்றடைந்து அங்கிருந்து பலாலி வீதி வழியாக கோண்டாவில் சந்திக்குச் சென்று பின்னர் உப்புமடம் பிள்ளையார் கோவில் சந்தியைச் சென்றடைந்து காங்கேசந்துறை வீதி வழியாக மருதனார்மடம் – சுன்னாகம் - மல்லாகம் சந்திக்கு வந்து பின் கட்டுவன் வீதியூடாகஐயப்பன்கோயிலை வந்தடைந்தபின் 18 படிகளேறி நெய்யாபிசேகம் செய்வதுடன் யாத்திரை நிறைவு பெறும்.

மகரஜோதி தரிசனம் எதிர்வரும் ஜனவரி 15 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6.40 மணிக்கு நடைபெறும். விரும்பிய பக்தர்கள் ஆலயத்துடன் முன்கூட்டியே தொடர்பு கொண்டு தமது செதிப்படி 18 படிகளேறி நெய்யாபிசேகம் செய்ய முடியும். (கார்த்திகை மாதம் தொடக்கம் ஜனவரி 19வரை) சபரிமலையில் மண்டலம் முடிந்தபின்னர் 4 நாள்கள் நடை அடைக்கப்பட்டு மகரசங்கிராந்திக்காக மீண்டும் ஜனவரி 20 ஆம் திகதி வரை திறந்திருக்கும். சபரிமலையில் மாதாந்த பூசைக்கு மலையாள மாத ஆரம்பத்தின் 5 நாள்கள் நடை திறக்கும் வழமையுண்டு. பங்குனி உத்தர உற்சவம், சித்திரை விசு, ஆவணி ஓண விசேட தினங்களில் வழமைக்குமாறாகமேலதிகநாள்களிலும் நடை திறக்கப்பட்டு பூஜைகள் நடைபெறும். (வ)

தற்போது சம்பத் வங்கியிடமிருந்து உங்கள் தங்க ஆபரணங்களுக்கு அதிகூடிய அடகுத்தொகை..!

கரட் 24 ற்கு 31,400/-*
கரட் 22 ற்கு 28,800/-*

மாதாந்தம் 1%* குறைந்த வட்டி வீதமே அறவிடப்படும்!

சம்பத் அடகுச் சேவை

நாடு முழுவதிலுமுள்ள சம்பத் வங்கி கிளைகளில் தவணை முறையில் செலுத்தமுடியும்.

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

Sampath Bank Fitch Ratings AA-(lka) 0112 30 30 50 www.sampath.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரம்

# மாற்றத்திற்காக ஒன்றிணைவோம்

# 100 நாட்களில்

# புதியதொரு தேசம்

எங்கள் பொது வேட்பாளர் **மைத்திரிபால சிறிசேன**
அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்திலிருந்து
உங்கள் கவனத்திற்கு...............

* வடக்கிலும் தெற்கிலும் ஜனநாயக சிவில் ஆட்சியை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

* எல்லா மதஸ்தலங்களுக்கும் தேவையான பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.


* மதங்களுக்கிடையிலான சகவாழ்வுக்காகவும், தீவிரவாதத்திற்கெதிராகவும் செயற்படக்கூடிய சகல மதத்தலைவர்களையும் உள்ளடக்கி பிரதேச ரீதியிலும் தேசிய ரீதியிலும் சபைகளை உருவாக்குதல்.

* நாட்டு மக்களுக்கிடையிலோ அல்லது மதங்களுக்கிடையிலோ குரோதங்கள், பகையுணர்வுகளை வளர்க்கும் மற்றும் மதத்தலைவர்களை அவமதிக்கும் வகையில் கருத்துக்களை வெளியிடுதல்/ செயற்படுதல் என்பவற்றிற்கு எதிராக தகுந்த சட்ட நடவடிக்கைகள் மற்றும் சமூக நடவடிக்கைகளை எடுத்தல்.



## எமது வாக்கு அன்னத்திற்கே





www.facebok.com/MaithriMithuro www.twitter.com/MaithriMithuro www.maithrimithuro.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## புளியந்தீவு மரியாள் தேவாலயத்தில் நடைபெற்ற கிறிஸ்மஸ் ஆராதனை



கிறிஸ்மஸ்நள்ளிரவுஆராதனை மட்டக் களப்பு புளியந்தீவு மரியாள் தேவால யத்தில் சிறப்பாக இடம் பெற்றது. பேராலய பங்குத்தந்தை ஜே.எஸ்.மொறாயஸினால் புதன்கிழமை நள்ளிரவு 12 மணிக்கு பேராலயத்தின் உள் அமைக் கப்பட்டுள்ள மாட்டுத் தொழுவத்தில் குழந்தை இயேசு பிரானின் உருவம் வைக்கப்பட்டது. மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மறைமாவட்ட ஆயர் அருட்கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை, புனித மரியாள் பேராலயத்தின் பங்குத்தந்தை மற்றும் பேராலயத்தின் உதவிப் பங்குத் தந்தை கிறிஸ்டியன் வின்சென்ட் ஆகியோர் கூட்டுத்திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.

பேராலயத்தின் பாடல் குழு வினரால் இயேசு பாலனின் பிறப்பின் பெருமை, அன்பு மற்றும் சகிப்புத்தன்மை என்ப வற்றை வெளிப்படுத்தும்பாடல்கள் மற்றும் கரோல் கீதங்கள் என்பக இசைக் கப்பட்டன. இதன்போது ஆராதனையில் கலந்து கொண்டவர்களுக்கு பிரசாதம் வழங் கப்பட்டது. இந்த நிகழ்வுகளில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் சார்ள்ஸும் கலந்து கொண்டார்.(வ-10)







## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் நாகமுத்து பாலேந்திரன்

மலர்வு 26.07.1949 — உதிர்வு 29.11.2014

கடந்த 29.11.2014 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் நாகமுத்து பாலேந்திரன் அவர்களின் அந்தியேட்டி நிகழ்வு நாளை (29.12.2014) திங்கட்கிழமை அதிகாலையிலும் வீட்டுக் கிருத்தியக்கிரியைகள் நண்பகலும் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் மரணச்செய்தி கேட்டு உடன் வந்து உதவியவர்களுக்கும் மற்றும் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் நேரில் வந்து அனுதாபங்களைத் தெரிவித்து ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆலடி ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இம் முறை நத்தார் பரிசுகளாக வியக்க வைக்கும் பல சலுகைகள்

**MEGALINE** — ஒவ்வொரு புதிய இணைப்புடனும் குடையொன்று **இலவசம்**

**BROADBAND** — புதிய இணைப்புகளுக்கு **Wi-Fi** ரவுட்டர் ரூ.990/- இற்கு

**CITYLINK** — பிற்கொடுப்பனவு இணைப்பு கட்டணம் ரூ.1,000/- மட்டுமே.

**கோர்ட்லஸ் தொலைபேசி** — ரூ.3,690/- இற்கு கோர்ட்லஸ் தொலைபேசியை பெற்றுக்கொள்ள முடியும். (இருப்பு உள்ளவரை மட்டுமே)

**PEO TV**

- தற்போதைய மெகாலைன் Single Play வாடிக்கையாளர்களுக்கு **ஆரம்ப கட்டணத்தில் 50% கழிவு**
- தற்போதைய மெகாலைன் Double Play (Broadband) வாடிக்கையாளர்களுக்கான, புதிய PEO TV பக்கேஜ்களுக்கு 3 **மாதங்களுக்கான PEO TV** மாதாந்த **கட்டணம்** அறவிடப்படமாட்டாது
- புதிய மெகாலைன் Double Play (PEO TV) மற்றும் புதிய மெகாலைன் Triple Play வாடிக்கையாளர்களுக்கு 3 **மாதங்களுக்கு PEO TV பக்கேஜ்களுக்கான மாதாந்த கட்டணம்** அறவிடப்படமாட்டாது

**1212 ஐ அழையுங்கள்**
மேலதிக விபரங்களை அறிந்துகொள்ள

www.slt.lk | Email: 1212@sltnet.lk | Follow us on

இச்சலுகைகள் 2014 டிசம்பர் 31 வரை மட்டுமே
அருகிலுள்ள SLT பிரதேச காரியாலயம் அல்லது டெலிஷொப்பிற்கு வாருங்கள்
நிபந்தனைகளுக்கு உட்பட்டது. சகல கட்டணங்களுக்கும் அரச வரிகள் உள்ளடக்கப்படும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திகள்

## சர்வதேச லயன்ஸ் கழகம் இலங்கை (306பி1 மாவட்டம்) கழகத்தின் மாபெரும் புதிய லயன் அங்கத்தவர்களை இணைக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.28

சர்வதேச லயன்ஸ் கழகம் இலங்கை (306 பி1மாவட்டம்) கழகத்தின் மாபெரும் புதிய லயன்அங்கத்தவர்களைஇணைக்கும் நிகழ்வு யாழ்ப் பாணம் ரில்கோ விருந்தினர் விடுதியில் சிறப்பாக நடைபெற்றது.

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் 306 பி1 மாவட்டத்தின் புதிய அங்கந்தவர்கள் இணைப்பு பிரதி இணைப்பாளர் லயன்.வி. சிறிப் பிரகாஸ் எம்.ஜே.எப். தலைமையில் இடம்பெற்றது. பிரதம விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழகத்தின் இலங்கை 306 பி 1 மாவட்ட ஆளுனர் லயன்.இக்னிசியஸ் கனிலஸ் எம்.ஜே.எப்.மற்றும் அவரது பாரியாரும், கௌரவ விருந்தினர்களாக சர்வதேச லயன்ஸ் கழகத்தின் முன்னாள் தலைவர்களில் ஒருவரான இந்தியாவைச் சேர்ந்த லயன். கே.ஜி. ராமகிருஸ்ணமூர்த்தி எம்.ஜே. எப்., முன்னாள் மாவட்ட ஆளுனர் லயன்.எஸ். சிவபாதசுந்தரம், இரண்டாவது மாவட்ட ஆளுனர்லயன்டாக்டர்ஆர்தியாக ராஜா எம்.ஜே.எப்., ஜி.எம்.ரி. பிரதேசத்தலைவர்லயன்.மகேஸ் பஸ்கால் மற்றும் மாவட்ட பிரமுகர்கள் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.




நலிந்த மக்களுக்கு சேவை செய்கின்ற சர்வதேச ரீதியில் 206 நாடுகளில் செயற்படுகின்ற லயன்ஸ கழகத்தில் இம்முறை 100 இற்கும் மேற்பட்ட இளந் தலைமுறையினர் ஆர்வத் துடன் இணைந்து கொண்டு புதிய லயனர்களாக சத்தியப் பிரமாணங்களை மேற்கொண்டனர்.

புதிய லயன் அங்கத்தவர்களுக் கான சத்தியபிரமாணத்தை இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த லயன். கே.ஜி. ராம கிருஸ்ணமூர்த்தி எம்.ஜே.எப். மேற் கொண்டார். மேலும் சர்வதேச லயன்ஸ் கழகத்தின் சர்வதேச ரீதியிலான செயற் பாடுகள், சாதனைகள் தன்னுடைய சிறந்த பேச்சாற்றல் மூலம் சிறந்த சொற் பொழிவு ஒன்றையும் ஆற்றியிருந்தார்.

மேற்படி நிகழ்வில் யாழ்ப் பாணம், சங்கானை லயன்ஸ் கழகம் அதிகமான உறுப்பினர்களைச் சேர்த்துக் கொண்டமை அனைவராலும் பாராட்டப்பட்டது. (வ)






## பண்பாட்டு பெருவிழா

அச்சுவேலி, டிசெ.28

வலி.கிழக்கு பிரதேச செயலகமும் பிரதேச பண் பாட்டுப் பேரவையும் இணைந்து நடத் தும் பண் பாட்டு பெருவிழா ஆவரங்கால் சிவசக்தி மண் டபத்தில் நாளை திங்கட்கிழமை 2 மணிக்கு நடைபெறும். வலி.கிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன் தலை மையில் நடை பெறும் இந்தப் பண்பாட்டு பெரு விழா வில் யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பிரதம விருந்தினராக கலந்து கொள்கின்றார்.

இனிய விருந்தினர்களாக ஓய்வுநிலை அரச அதி பரும், கல்வி அமைச்சின் செயலாளருமான உடுவை எஸ்.தில்லைநடராசா, வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி உஷா சுபலிங்கம், பேராசிரியர் சி.சிவலிங்கராசா ஆகியோர் கலந்து கொள்கின் றனர். வலி.கிழக்கு பிரதேச கலைஞர்களின் விவரம் உள்ள டங்கிய 'கலைஞர் மஞ்சரி' நூல்வெளியீடு கலைஞர் கௌர விப்பு, கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு மற்றும் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (வ–11)

## ஆயுள்வேத டிப்ளோமா பயில விண்ணப்பிக்கலாம்

லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியில் 2015 ஆம் ஆண்டில் ஆயுள்வேத டிப்ளோமா பட்டநெறியைத் தொடர்வதற்காக விண்ணப்பம் கோரப்படு கின்றது. விண்ணப்பதாரி 31.12.2014 அன்று 18 வயதுக்கு குறை யாமலும் 30 வயதுக்கு மேற் படாமலும் இருத்தல் வேண் டும். கல்வித் தகைமை ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் இரண்டு பாடங்கள் சித்தியடைந் திருத்தல் வேண்டும். தாய் அல்லது தந்தை பரம்பரை மருத்துவராக இருந்தால் சாதாரண தர பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத தட வையில் விஞ்ஞானம் தமிழ் மொழி உட்பட 6 பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண் டும். சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை எதிர்வரும் ஜனவரி 5 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக '2015 சித்த ஆயுள்வேத டிப்ளோமா கற்கைநெறி' என்று குறிப்பிட்டு பதிவாளர், லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி, மின்சாரநிலைய வீதி, சுன்னாகம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். (வ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார முக்கியத்துவத்தை வலியுறுத்திய டெட்டோல்




குடும்பத்தின் நம்பிக்கையை வென்ற பாதுகாப்பு நாமமான டெட்டோல், நடப்பு ஆண்டில் 32 ஆயிரத்து 500 பாடசாலை மாணவர்கள், 35ஆயிரம் புதிய தாய்மார்கள், 2ஆயிரத்து 100 தாதியர்கள்மற்றும்1500உணவு கையாள்வோருக்கு ஆரோக்கியம் மற்றும் தூய்மையான செயற்பாடுகள் ஆகியவற்றை தனது ஆரோக்கியத்துக்கான செயற்திட்டத்தினூடாக வழங்கியிருந்தது. டெட்டோலின் சுகாதார விழிப்புணர்வு செயற்திட்டம் ஜனவரி மாதத்தில் ஆரம்பமாகியிருந்தது. சுகாதார அமைச்சின் அதிகாரிகள், நாட்டின் சுகாதாரப் பராமரிப்பு துறையைச் சேர்ந்தவர்கள் எனப் பலரும் பங்கேற்ற நடை பயணத்துடன் இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்தின் நோக்கம், கிருமிகளிலிருந்து விடுபட்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் வகையில் அமைந்திருந்தது. இலங்கை பாடசாலை மாணவர்கள் மத்தியில் கைகளை கழுவுவதன் முக்கியத்துவம் தொடர்பிலான டெட்டோலின் அர்ப்பணிப்பு அடிப்படையில் கொழும்பு மற்றும் அனுராதபுர மாவட்டங்களைச் சேர்ந்த 32 ஆயிரத்து500பாடசாலைமாணவர்களுக்குவிழிப்புணர்வுசெயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. சிறுவர்கள் ஆக்கபூர்வமான விளையாட்டுக்கள் மற்றும் இதர கல்விசார் திட்டங்களில் பங்கேற்றிருந்தனர்.

கைகளை கழு வுதல் தொடர்பில் முறையாகப் பயில்வதற்கான வாய்ப்பு இவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. வைத்தியர்கள் மற்றும் பொது சுகாதார மேற்பார்வையாளர்களும் சுகாதார அமைச்சின் அதிகாரிகளும் இதில் பங்கேற்றிருந்தனர்.

டெட்டோலின் பாடசாலை கைகளைக் கழுவும் திட்டம் என்பது விஸ்தரிக்கப்பட்டுள்ளதுடன், இலங்கை சாரணர் சம்மேளனத்தின் கொழும்பு மாவட்ட கிளையுடன் இணைந்து புத்தமைவான சுகாதார விழிப்புணர்வுத் திட்டத்தை பாடசாலை மாணவர்கள் மத்தியில் முன்னெடுத்திருந்தது. சுகாதார விழிப்புணர்வு திட்டம் மாதம்பே நகரில் இடம் பெற்ற சர்வதேச ஜம்போரியில் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இலங்கையின் சகல மாகாணங்களையும்சேர்ந்த3500க்கும் அதிகமான சாரணர்கள் வைத்தியர்கள் மற்றும் பொது சுகாதார மேற்பார்வையாளர்கள் ஆகியோர் சிறந்த சுகாதார செயற்பாடுகள் தொடர்பில் விளக்கங்கள் வழங்கப்பட்டு, அவர்களுக்கு 'டெட்டோல் தூய வீரர்கள்' எனும் தலைப்பில் விருதுகளையும் வழங்கியிருந்தது: புதிய 'டெட்டோல் தூய்மை வீரர் தூதுவர்கள்' தூய்மையான கரங்கள் பற்றிய செய்தியை தமது பாடசாலைகளில் பயிலும் ஏனைய மாணவர்களுக்கும் சென்றடையும் வகையில் தமது செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தனர். அவர்கள் குறித்த செய்தியை எந்தளவு சக மாணவர்கள் மத்தியில் கொண்டு சென்றிருந்தனர். என்பதைப் பொறுத்து குறித்த மாணவர்களுக்கு தங்க, வெள்ளி அல்லது வெண்கல பதக்கங்கள் வழங்கப்பட்டிருந்தன.

பிராந்திய சுகாதார அமைச்சு மற்றும் மருத்துவ நிபுணர்களுடன் இணைந்து 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புதிய தாய்மார்களுக்கு தரவுகள், புள்ளிவிவரங்கள் போன்றன வழங்கப்பட்டிருந்தன. இவற்றின் மூலம் புதிதாக பிறந்த தமது குழந்தைகளை கிருமிகள் மற்றும் தொற்றுக்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும் முடியும். மேல், வட மத்திய மற்றும் வட மேல் மாகாணங்களில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மேலும், மேல் மற்றும் தென் மாகாணங்களைச் சேர்ந்த 2100 மருத்துவ மாதர்களுக்குப் பாதுகாப்பு மற்றும் தூய்மையான நுட்பமுறைகள் தொடர்பில் பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன. இந்தத் திட்டம் வடக்கு, மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களுக்கு 2015 இல் விஸ்தரிக்கப்படவுள்ளது. (த)

# ஹார்பிக்கின் புதிய திட்டம்




சிலிம் நீல்சன் மக்கள் விருதுகள் வழங்கும் விழாவில் வருடத்துக்கான சிறந்த எவ்.எம்.சி.ஜி. வீட்டு பராமரிப்பு வர்த்தக நாமமாக கௌரவிக்கப்பட்ட ஹார்பிக் ஆனது, தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக பல்வேறு சமய திருவிழாக்களில் மில்லியன் கணக்கான இலங்கையருக்கு நடமாடும் கழிவறை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருந்ததுடன், ஆயிரக் கணக்கான கிராமிய இல்லங்களில் முறையான கழிப்பறை தூய்மை மற்றும் சுகாதார பழக்கங்கள் குறித்த விழிப்புணர்வுகளை முன்னெடுத்து வருகின்றது. 2014 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஹார்பிக்கின் சி.எஸ்.ஆர் திட்டமான'சனிபாரக்ஷக சேவாவ' (சுகாதாரச் சேவைகள்) மூலம் நாடுமுழுவதும் இடம்பெறும் சமய திருவிழாக்களில் பங்கு கொள்ளும் பார்வையாளர்களுக்கு சுகாதார சேவைகள் வழங்கப்படுகின்றன. நடமாடும் பிரிவில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கெனதனித்தனியானவசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இந்தச் சேவை பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. பயன்படுத்துபவர்களுக்கு பாதுகாப்பான மற்றும் சுகாதாரமானகழிவறைச்சூழலை வழங்கும் வகையில் இந்த நடமாடும் கழிப்பறைகள் ஹார்பிக் மூலம்பராமரிக்கப்பட்டுவருகிறது. கடந்த மே மாதம் வெசாக் காலத்தில் கங்காராம தேவாலயத்திற்கு விஜயம் செய்த சுமார் 200,000 பக்தர்களுக்கு தேவையான சுகாதாரத் தீர்வுகளை ஹார்பிக் வழங்கியிருந்தது. பொசன் புனித யாத்திரை காலப் பகுதியில் மிகிந்தலையில் அமைக்கப்பட்டிருந்த முழுமையான நடமாடும் கழிவறைகள் மூலம் 1 மில்லியனுக்கும் அதிகமானோர் அனுகூலங்களைப் பெற்றிருந்தனர். அதேவேளை ஜுலை முதல் ஓகஸ்ட் மாதம் வரை இடம்பெற்ற கண்டி எசெல மஹா பெரஹெரவில் கலந்து கொண்ட சுமார் 3 மில்லியன் மக்களுக்கு ஹார்பிக் சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. மேலும் அனுராதபுர ஆலய திருவிழாவில் பங்குபற்றிய 600,000 பக்தர்களுக்கு பாதுகாப்பான, சுகாதார வசதிகளை ஹார்பிக்வழங்கியிருந்தது.

'இலங்கையின் முதல்தர கழிவறைதூய்மையாக்கியானஹார்பிக் வர்த்தகநாமமானது இந்த வருடம் வடக்கு, கிழக்கு, தெற்கு, மத்திய, வட மத்திய, வட மேற்கு, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் வீடு வீடாகச் சென்று கழிவறை தூய்மைப்படுத்தல் தொடர்பில் விழிப்புணர்வு திட்டங்களை முன்னெடுத்திருந்தது. கழிப்பறையின் சுகாதாரத்தை பராமரிப்பதற்கு ஹார்பிக் பயன்பாட்டின் அனுகூலங்கள் தொடர்பானவிழிப்புணர்வுஅமர்வுகளை ப்ளு ஹார்பிக் குழு விலுள்ள 6 உறுப்பினர்கள் முன்னெடுத்து வருகின்றனர்' என சிரேஷ்ட வர்த்தகநாம முகாமையாளர் ருச்சிர மணி தெரிவித்தார். (த)



# அஸர் அறிமுகப்படுத்தும் நோட்புக் மற்றும் டெப்லட்

நெகிழ்ச்சித் தன்மையுள்ள ஒரேயொரு உபகரணத்திலேயே 'நோட்புக்' மற்றும் 'டெப்லட்' என இருவகை பயன்பாட்டை வழங்கும் அஸர் அஸ்பயர் சுவிச் 10 உற்பத்தியை அஸர் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. இந்தச் சாதனமானது நான்கு வடிவங்களிலான – தொடுகை, டைப்செய்தல், பார்த்தல் வசதியையும் எந்த நேரத்திலும் பகிர்ந்து கொள்ளும் வசதியையும் தன்னகத்தே கொண்டுள்ளது. சிறுவர்கள் தொடக்கம் பெரிய அளவிலான வர்த்தகர்கள் வரை அனைத்து வயதுப் பிரிவினரையும், நோக்கங்களையும் மனதில் கொண்டு அஸர் அஸ்பயர் சுவிச் 10 என்ற நேர்த்தியான இந்தச் சாதனம் தயாரிக்கப்பட்டுள்ளது. அஸர் அஸ்பயர் சுவிச் 10 ஆனது, உங்கள் கைகளில் இருக்க வேண்டிய மிகப் பொருத்தமான சாதனமாகும். பாவனையாளர்கள் எந்த இடத்திற்குச் சென்றாலும் அவர்களை தொடர்பில் வைத்திருக்க இது உதவி புரிகின்றது.

கல்வி கற்பதற்கும், விளையாடுவதற்கும் ஓர் உபகரணம் தேவையாகவுள்ள மாணவர்கள் தொடக்கம், பல் தொழிற்பாட்டு முறைமையிலான பணிகளையும் அதேபோல் இனி வரும் சிறப்பாக்க் காலத்தின் தொடர்பில் இணைந்திருக்கத் தேவையாக இருக்கும் வணிகம்சார் பயணிகள் வரை எந்த இடத்திற்கும் அஸர் அஸ்பயர் சுவிச் 10 மிகப் பொருத்தமாக அமைகின்றது. நோட்புக், பேட், காட்சித்திரை (டிஸ்பிளே) மற்றும் கூடார வடிவம் (டென்ட்) என நான்கு விதத்திலான பயன்பாட்டு வசதியை இது அளிக்கின்றது.

ஒரு நோட்புக் என்ற வகையில், இது மிக விசாலமான 'கீபோட்' (விசைப்பலகை) மற்றும் சௌகரியமான டைப் செய்தலுக்கும் செயற்திறன் வாய்ந்த பணிக்கும் இடமளிக்கும் துல்லியமான டச்பேட் போன்ற சிறப்பம்சங்களை கொண்ட ஒரு முழுமையான செயலாற்றலுள்ள நோட்புக்காக காணப்படுகின்றது. ஒரு டெப்லட் சாதனம் என்ற வகையில், இணையத்தில் உலாவுதல், திரைப்படங்களைப் பார்த்தல் மற்றும் எல்லாவற்றையும் உங்கள் கைகளிலேயே வைத்திருக்கக் கூடிய வசதி போன்றவற்றையும் இது கொண்டுள்ளது. அதேவேளை கூட்டங்களில் முன்னிலைப்படுத்துகை கோவை போன்ற உள்ளடக்கங்களைக் காட்சிப்படுத்துவதற்கான அல்லது நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான வசதியை வழங்கும் ஒரு காட்சித் திரையாகவும் இது தொழிற்படுகின்றது. அத்துடன், விமானத்தின் இருக்கைப் பகுதி அல்லதுபக்கவாட்டுகோப்பிமேசை ஆகிய குறுகிய இடப்பரப்பிற்குள் வைத்து பயன்படுத்தும் விதத்தில் ஒரு கூடாரம் போன்ற வடிவத்திற்கு மாற்றியமைக்கக் கூடிய சிறப்பம்சத்தையும் அஸர் அஸ்பயர் சுவிச் 10 கொண்டிருக்கின்றது.

இலங்கையில் அஸர் தொடரிலான கணினிசார் கணிப்புப் பொறி உற்பத்தித் தொடர்களுக்கான அங்கீகாரம் பெற்ற ஏகவிநியோகஸ்தர் என்ற அடிப்படையில் மெட்ரோபொலிட்டன் நிறுவனமானது, மிகவும் முன்னேற்றகரமான தொழில்நுட்பத்தை உள்நாட்டு நுகர்வோருக்கு அறிமுகம் செய்து வைத்துள்ளது. இன்றைய வாடிக்கையாளர்களின் விரைவாக மாறுபட்டுச் செல்லும் தேவைகளை நிவர்த்தி செய்யக் கூடிய புதிய போக்குகள் மற்றும் தொழில்நுட்பத்தை அவர்களுக்கு வழங்குவதில் அஸர் மற்றும் மெட்ரோபொலிட்டன் நிறுவனங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றன. புதிய உற்பத்தியான அஸர் அஸ்பயர் சுவிச் 10 ஆனது, இளைஞர்கள் முதல் வயது முதிர்ந்தவர்கள் வரை அனைத்து இலங்கை வாடிக்கையாளர்களதும் மாறுபடும் வாழ்க்கைப் போக்குகளில் நாளாந்தம் எழுகின்ற கணினிசார் தேவைகளை நிவர்த்தி செய்வதை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திகள்

## ஆழிப் பேரலை நினைவு நிகழ்வாக மரநடுகை

கொழும்புத்துறை,டிசெ.28

ஆழிப் பேரலையால் காவு கொள்ளப்பட்ட மக்களின்10ஆம் ஆண்டு நினைவாக பாஷையூர் பகுதி கடற்கரைகளில் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. வடமாகாண சபை உறுப்பினர் இ.ஆனல்ட்டினால் இந்தப் பகுதியில் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ஒ–135)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி சிவபாக்கியம் கனகரத்தினம்

விநாயகர் வீதி, அல்வாய் தெற்கு, அல்வாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் கனகரத்தினம் நேற்று (27.12.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சடையர் - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனகரத்தினத்தின் (பொலிஸ் சார்ஜன்ட்) அன்பு மனைவியும், செல்வராஜா (நேஷன் பத்திரிகை), செல்வராணி, யோகராஜா (இத்தாலி), தவராஜா (ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்), யோகராணி, தவராணி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும், நடராஜா (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்), காலஞ்சென்றவர்களான இராஜகோபால் (ஜமுனா ஸ்ரோர்ஸ்), தர்மலிங்கம் (சுகாதாரப் பிரிவு உத்தியோகத்தர்) மற்றும் செல்வகுமாரி, காலஞ்சென்ற யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும், கோசலராகவன், பிரசன்னா, செராஜ்குமார், ரமணன், ரோகிலன், கபிலன், மதுசூதனன், அருண், அர்ஜுன்குமார், அர்வின், ஜானகி (சுவிஸ்), ஜமுனா (கனடா), ஜம்சனா, மைதிலி, சாதனா, அஞ்சனா, சோபனா, அனிதா, வாசுகி ஆகியோரின் பேர்த்தியும், ஜஸ்மிதா, மதுமிதா, பிரஜன், பிரஜினா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விநாயகர் வீதி,
அல்வாய் தெற்கு,
அல்வாய்

தகவல்:
குடும்பத்தினர்.
077 7422604
(51157) (45.3.7)



### திருமதி வடிவுடையம்மா (பெரிய தங்கா) குகநாதன்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் இந்தியா, சென்னையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வடிவுடையம்மா குகநாதன் 21.12.2014 ஞாயிற்றுக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சச்சிதானந்தம் - இராசலெட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான புண்ணியமூர்த்தி - நாகரெத்தினம்மாள் தம்பதியரின் அன்பு மருமகளும், குகநாதன் அவர்களின் அன்பு மனைவியும், ஆனந்த் (ஜதீஷ் - லண்டன்), காயத்திரி (அனு - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்றவர்களான தேவசிகாமணி, ரெத்தினசிகாமணி (அரி மாஸ்டர்), குண ஈஸ்வரி (கனடா), புத்திரசிகாமணி (இந்தியா), சுகுமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சுஜித்தா, சதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும், நிர்மலாதேவி (இலங்கை), இராசலெட்சுமி (நோர்வே), பிறேமச்சந்திரன் (கனடா), ஷோபா (இந்தியா), சாந்தி (கனடா), கிருபாமூர்த்தி (இலங்கை), கணேசமூர்த்தி (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஆகர்ஷனா, சுஜனா, ஷ்ரவன், சாய்ரக்ஷா, சாய்வர்ஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணிக்கு பெசன்ட்நகர் மின்மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
குகநாதன் - இந்தியா - + 914424524322
செல்லிடப்பேசி: - 00918056286083

தகவல்:
குடும்பத்தினர்.
(55293) (45.3.7)

## 'பச்சை நிற பிரசுரம்' பகிர்ந்தளித்த இருவர் ஓட ஓட விரட்டியடிப்பு

### அரசியல் பம்மாத்து நிந்தவூரில்

அம்பாறை,டிசெ.28

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவாக முஸ்லிம்களுக்குமத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வண்ணம் 'பச்சை நிற' துண்டுப்பிரசுரங்களை விநியோகித்த இருவர் பொதுமக்களாலும், வியாபாரிகளாலும் விரட்டியடிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம் பிரதேசமான நிந்தவூரில் நடைபெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

நிந்தவூர் பொதுச் சந்தைப் பகுதிக்கு திடீரென வருகைதந்த இரு நபர்கள் பொதுச் சந்தையில் கூடியிருந்த பொதுமக்களுக்கும் அங்கிருந்த வியாபாரிகளுக்கும் பச்சை நிறத்திலான ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் ஆதரவு தொடர்பான துண்டுப்பிரசுரங்களை விநியோகித்துள்ளனர்.

பிரசுரம் "பச்சை" நிறத்திலிருந்ததால் பலரும் ஆர்வத்துடன் பெற்று படிக்கத் தொடங்கியதும் தான் அவர்களுக்கு கோபம் கட்டு மீறிவந்துள்ளது.

அதை அடுத்து பிரசுரத்தை விநியோகித்த இருவரையும் சூழ்ந்து கொண்ட பொது மக்கள் மற்றும் வியாபாரிகள் பலர் தம்மிடமிருந்த துண்டுப் பிரசுரங்களை அந்த நபர்களின் முகத்தில் வீசியெறிந்து பொதுச் சந்தைப் பகுதியை விட்டும் உடனே வெளியேற வேண்டும் என்று ஆவேசத்துடன் கூறினர்.

இந்த நிலையில் குறித்த நபர்களை நையப்புடைப்பதற்கு சிலர் முயன்ற போதும் அதனைத் தடுத்து 'நைஸா'க இரு நபர்களையும் வேறு சிலர் சந்தைப் பகுதியை விட்டு அழைத்துச் சென்று அனுப்பி வைத்தனர்.

குறித்த நபர்கள் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த அமைச்சர் ஒருவரின் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று பின்னர் தெரியவந்தது.

"மேற்குலக ஏகாதிபத்தியத்துக்கு எதிராக கிளர்ந்தெழுவோம், ஒற்றுமையுடனான சமாதானத்தைப் பாதுகாப்போம்" என்ற தலைப்புடனான குறித்த பிரசுரத்தில்–

முஸ்லிம் சமயப் பெரியார்களே, பெற்றோர்களே, சகோதர சகோதரிகளே, நலன் விரும்பிகளே! எனவும் விழித்தெழுதப்பட்டிருந்தது.

கிழக்கு மாகாண அபிவிருத்தி ஒன்றியம் என்றும் அரசியல் கட்சி ஒன்றின் பெயரும் குறிப்பிட்டு மேற்படி துண்டுப் பிரசுரம் அமைந்திருந்தது.

தப்பினோம், பிழைத்தோமென பிரசுரம் விநியோகித்த இருவரும் நிந்தவூரை விட்டு ஓடித் தப்பினர்.

கிழக்கில் முஸ்லிம் பிரதேசங்களிலுள்ள முஸ்லிம் மக்களின் ஜனாதிபதித் தேர்தல் மனநிலை என்ன என்பதற்கு இந்தச் சம்பவம் எடுத்துக்காட்டெனப் பலரும் பேசிக் கொண்டனர். (ஒ–30)

CW K


## உள்ளூராட்சி வார இறுதி நாள் நிகழ்வு செவ்வாயன்று

வலிகாமம் மேற்கு, டிசெ. 28

வலிகாமம் மேற்கு சுழிபுரம் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார இறுதி நாள் நிகழ்வுகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை சபையின் கலாசார மண்டபத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதேச சபையின் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் தலைமை வகிக்கவுள்ளதுடன் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண இந்திய துணைத் தூதுவராலய துணைத் தூதுவர் எஸ்.தெட்சணாமூர்த்தியும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் வண. டி.எஸ்.சொலமனும் கௌரவ விருந்தினராக ஆர்.ஜே. அன்ரனி, எவ்.அலெக்ஸ் றொச் ஆகியோர் வருகை தரவுள்ளதாகவும் இந்த நிகழ்வில் வலி.மேற்கின் வசந்தம் வெளியீடும், 25 வருட சேவையைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர், ஊழியர் கௌரவிப்பு, கலைஞர் கௌரவிப்பு, கலை நிகழ்வுகள், முதியோருக்கான உதவி வழங்கல் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ–10)

## மரண அறிவித்தல்



### இராமலிங்கம் இராசரத்தினம்

தையிட்டிபுலம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் நவின்டில் சக்கலாவத்தையை வதிவிடமாகவும் கொண்ட இராமலிங்கம் இராசரத்தினம் 25.12.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்- மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அப்பையா-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், கலாநிதி சிவகுமார் (பொறியியலாளர் U.K), நந்தினி (U.K), உதயகுமார் (ஜேர்மனி), திருக்குமார் (இ.போ.சபை பருத்தித்துறை), சிவாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், லோகநாதன் (U.K), சசிகலா (U.K), கார்த்திகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகம், செல்லத்துரை, கிளிப்பிள்ளை, செல்லம்மா, சிவபாக்கியம் மற்றும் சோதிப்பிள்ளை, நல்லபிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரரும், பரராஜசிங்கம், தவராஜசிங்கம் (பொது முகாமையாளர் பல நோக்குக் கூட்டுறவு சங்கம்- உடுப்பிட்டி), குலசிங்கம், சங்கரப்பிள்ளை, தில்லைநாயகம், பூமலர், இராசமலர் காலஞ்சென்றவர்களான நடராஜா, மயில்வாகனம், சந்திரசேகரம், கந்தையா, வள்ளிப்பிள்ளை, உமாபதி ஆகியோரின் மைத்துனரும், ரூபிதா, வினிதா, சகானா, ஷர்சிகா, கேசிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல் லத்தில் நடைபெற்று, பூதவுடல் எள்ளம்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நவின்டில் சக்கலாவத்தை,
கரணவாய் வடக்கு,
கரவெட்டி.

(இ/18445)(4.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

## முன்பள்ளி கலை விழா

ஆவரங்கால் கிழக்கு, லிட்டில் மாஸ்டேர்ஸ் முன்பள்ளியின் கலைவிழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிவசக்தி மண்டபத்தில் கி.சதீஸ்குமார் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் அ.பரஞ்சோதி கலந்துகொள்வார். (ஒ–10)

## இந்திய கலைக்கூட மாணவர்களுக்கு இன்று சான்றிதழ்

யாழ். இந்திய துணைத்தூதரக வளாகத்தில்இயங்கும் 'இந்தியகலைக்கூடம்' மாணவர்கள் 66 பேருக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று மாலை 4 மணிக்கு கிறீன் கிறாஸ் விருந்தினர் விடுதியில் நடைபெறவுள்ளது. இந்திய துணைத் தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தநிகழ்வில்கர்நாடக சங்கீதம்,வயலின், யோகா மற்றும் ஹிந்தி மொழிக்கான பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ்களை வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறீ பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டுவழங்கவுள்ளார். (ஒ–10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திகள்


உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111


## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தராக (சிறுப்பிட்டி மேற்கு -J/272) கடமையாற்றும் செல்வி சிதம்பரநாதன் நந்தினி அவர்களின் அன்புத் தாய்

**திருமதி அமுதராணி சிதம்பரநாதன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலர், அனைத்து உத்தியோகத்தர்களும். (55321) (4.6.3)
வலியர் நலன்புரிசங்கம், பிரதேச செயலகம், வலிகாமம் கிழக்கு, கோப்பாய்.

## ஓராண்டு நினைவஞ்சலி

**வெங்கடாசலசர்மா சுப்பிரமணிசர்மா**



உதிர்வு 27 . 08 . 1940
மறைவு 08 . 01 . 2014

கடந்த 08.01.2014 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையும் மதியபோசனமும் எமது இல்லத்தில் இன்று (28.12.2014) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

[55326][4.3.6] குடும்பத்தினர்.

## அந்தியேட்டிக் கிரியையும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கடந்த 13.12.2014
சிவபதமடைந்த

**அமரர் மாரிமுத்து செல்வநாயகம் (துரைராசா)**




தோற்றம் 05.10.1932
மறைவு 13.12.2014

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (28.12.2014) ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் நாளை (29.12.2014) திங்கட்கிழமை வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் அவரின் இல்லத்திலும் இடம்பெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரதான வீதி, சங்கானை. (55264)(4.3.6) குடும்பத்தினர்.

## நினைவலைகள்...

முதலாம் ஆண்டு



தோற்றம் 17 . 07 . 1914
மறைவு 07 . 01 . 2014

**அமரர் கதிரவேலு சுப்பிரமணியம்**

9 ஆம் ஆண்டு



தோற்றம் 11 . 06 . 1927
மறைவு 08 . 02 . 2006

**அமரர் பாக்கியம் சுப்பிரமணியம்**

நெஞ்சம் மறக்கவில்லை நினைவுகள் அழியவில்லை
நம் கண்ணீரும் காயவில்லை கனவுகளும் ஓயவில்லை
காயங்கள் ஆறவில்லை ஆண்டு ஒன்றல்ல
பல ஆயிரம் ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்...
நிலைத்திருக்கும் உங்கள் நினைவுகள்

இல.109/42, கரந்தன்,
நீர்வேலி மேற்கு, நீர்வேலி.
குடும்பத்தினர்.
(55275(4.3.6)

தற்பொழுது இடம்பெற்று வரும் திருவெம்பாவை உற்சவத்தை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகிறது

# மார்கழி நீராடு எம்பாவாய் !



சிவசுப்பிரமணியம் சந்திர மௌலீசன்

பன்னிரு திருமுறைகளுள் எட்டாந் திருமுறையாக அமைவன மாணிக்கவாசகர் பாடிய திருவாசகமும் திருக்கோவையாருமாகும். பாவைபாடிய வாயால் ஒரு கோவை பாடுகவெனச் சிவனாலேயே போற்றப்பட்ட பாவையும் எழுதப்பட்ட கோவையும் ஓதுவோர் உள்ளத்தை உருக்குவனவாகும்.

திருவாசகமென்ற தேனிலுள்ள பதிகங்களுள் திருப்பள்ளி எழுச்சியும் திருவெம்பாவையும் அடங்குகின்றன. திருப்பள்ளியெழுச்சி பத்துப் பாடல்களையும் திருவெம்பாவை இருபது பாடல்களையும் கொண்டமைந்தன. மானிடர் உள்ளத்தில் தோன்றாத விதத்தில் ( திரோதானமாக) மறைந்திருக்கும் இறைவனை மறைவு நீங்கி உள்ளத்தில் தோன்றுமாறு வேண்டப்பா்டும் பாடல்களாதலால் திருப்பள்ளி எழுச்சி என்றும், பக்குவம் பெற்ற ஆன்மா பக்குவம் பெறாது மல இருளில் ஆழுந்திக் கிடக்கும் ஆன்மாவை மாயத் துயிலினின்றும் எழுப்பி இறைவனின் அருள் நீரில் திளைப்பதற்கு அழைத்துச் செல்வதாகத் திருவெம்பாவை பாடல்களும் தத்துவப் பொருள் தந்து நிற்கின்றன.

திருவெம்பாவை நோன்பானது மார்கழி மாதத்தில் வரும்திருவாதிரை நட்சத்திரமும் அதற்கு முன் உள்ள ஒன்பது நாள்களுமாகப் பத்து நாள்கள் அனுஷ்டிக்கப்படுகின்றது. சிவனுக்குரிய விரதங்களுள் சிவனின் நட்சத்திரத்திற்கேயுரிய சிறப்புமிக்க விரதம் திருவெம்பாவையாகும். இந்தச சிறப்புக் கருதியே சிவனை ஆதிரையின் முதல்வன் என்றும் ஆதிரையானென்றும் அழைப்பர்.

சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட அத்தனென்று சிவனின் அருட்டிறத்தை வியக்கும் மாணிக்கவாசகர்நினைக்கமுத்திதரும்திருவெண்ணாமலைத் தலத்தை மார்கழிமாத அதிகாலைப் பொழுதில் வலம் வந்தபோது அண்ணாமலையானைப் பாடி பரவும் அடியார்களைக் கண்டு புத்தடியாராய்ப் புன்மை கொண்டு விளங்கிய அடியார்களிடம் காணப்பட்ட மல இருளை, மயக்கத்தைவெளிக் காட்டி அந்த அடியவர்கள் மருள் நீங்கி அருள்பெற காரணமானவன் முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளான சிவனே யென்றும் சிவனின் இயப்புகளைத் தெளிவாகக்காட்டியுள்ளார். புத்தடியார்களாக மல இருளில் மயங்கித் தவிக்கும் ஆன்மாக்களின் அறியாமை மயக்க நிலையை வளருதியோ, இன்னம் புலர்ந்தின்றோ, கண்ணைத் துறன்றவமே காலத்தைப் போக்காதே பொக்கங்களே பேசும், ஓலமிடினும் உணராய் உணராய் காண், இன்னம் துயிலுதியோ, வாளாகிடத்தியால் ஈதென்ன உறக்கம், பேதை, பிறவித்துயர், மலங்கழுவுவார் போன்ற பாடலடிகளால் ஆன்மாவின் வாளா நிலையை கண்முன் நிறுத்தி னார்.

வாளா நிலையில் மயக்கத்துள் மூழ்கி நிற்கும் ஆன்மாக்கள் அருள்பெற அரும்பெருஞ் சோதியாகிய சிவனின் வண்ணங்களை வாயாரப் பாடியுய்யலாம் என்று சிவனின் நல் வண்ணங்களை அரும் பெரும்சோதி, மாதேவன், பரஞ்சோதி, கூசு மலர்பாதன், தேசன், சிவலோகன், ஈசன், அத்தன், அமுதன், ஆனந்தன், விண்ணுக்கொரு மருந்து, வேதவிழுப்பொருள், கண்ணுக்கினியான், அறிவரியான், உன்னற்கரியான், இன்னமுதன், விழுப்பொருள், ஊழி முதல்வன், ஏழை பங்காளன், முன் னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருள், பின்னைப் புதுமைக்கும் பெற்றியன், தீர்த்தன், கூத்தன், எங்கள் பிராட்டியு மெங்கோனும், சிற்றம் பலம், சோதி, அங்கண் அரசு, ஆரமுதென அண்ணா மலையானின் அருள் வடிவங்களை ஏத்தி இருஞ் சுனை நீராடி உய்தி பெறலாமென்கிறார்.

எங்கள் பிராட்டியு மெங்கோனும் போன்றிசைந்த திருவருட்தடாகத்துள் திளைத்து நீராடியதால் எங்கெழில் எஞ் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாயெனப் பற்றற்று இருவினையொப்பு மலபரிபாகம் பெற்றுப் பக்குவான்மாக்களாகி விடுகின்றனர். இப்பக்குவ நிலையில் ஆன்மா சிவத்துடன் இரண்டறக் கலந்து பேரின்பம் பெறுகின்றது.

திருவெம்பாவையின் இறுதி நாளாகிய ஆதிரை நட்சத்திரத்து அதிகாலை வேளையில் நடைபெறும் ஆருத்ரா தரிசனமும் சிவனின் அற்புத நடனமும் தென்முகப் பெருமானாக கல்லால மரநிழற்கீழ் வீற்றிருந்து சிவன் காட்டிய சின் முத்திரைத் தத்துவத்தையே விளக்கி நிற்கின்றன. பக்குவமடைந்த பசுவானது தலைவனாகிய பதியுடன்தாடைலைபோல் ஏகமாகக்கூடி நிலையான பேரானந்தம் பெறுவதே இத் திருவெம்பாவை நோன்பின் பயனாக விளங்குகின்றது. இதனையே " மலவிருளுற்றுறங்காமல் மன்னுபரி பாகர் அருட்செலமுழுக வருக எனச் செப்பல் திருவெம்பாவை" என்று போற்றப்படுகின்றது.

திருவாதவூரர்க்காகக் குருவாய், குதிரைப் பாகனாய், கூலியாளனாய், பிரம்படிபட்டவனாய் எழுந்தருளிய எம்பிரான் திருவாதவூரரிடம் பாவை பாடிய வாயாலொரு கோவை பாடுகவெனக் கடையூழி காலத்துத் தன் தனிமை கழிக்கத் தன் கைப்படவே திருக்கோவையாரை எழுதி அருளினார். பாவை பாடிய வாயால் உதித்த மணி போன்ற சொற்களால் மணிவாசகர் என்ற பெயரைப் பெற்றது மட்டுமன்றி அம்மணியான வாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கு முருகாராவார். ஆதலினால் திருவாசக மென்னும் தேனிலுள்ள திருப்பள்ளி எழுச்சி திருவெம்பாவையாகிய பாடல்களை சைவ மக்களாகிய யாம் மார்கழித் திருவாதிரையை நிறைவாகக் கொண்ட பத்துத் தினங்களில் பொரு ளுணர்ந்து மனமுருகி ஏழைப்பங்காளனைப் பாடிப் போற்றி மார்கழி நீராடிப் பேரின்பம் பெறுவோமாக!

# பைரவ கீதங்கள் அறிமுக விழா

ஞானரத்தின விரத மஞ்சரி காணொலி, பைரவ கீதங்கள் இறுவட்டு அறிமுக விழாவும் இசைநிகழ்வும் இன்று மாலை 5.00 மணிமுதல் 6.30 மணிவரை யாழ். பூநாறி மரத்தடியில் அமைந்துள்ள செல்வமஹால் மண்டபத்தில் நடைபெறும். இந்த நிகழ்வுக்கு ஆசிரியர் விஜயசுந்தரம் தலைமை வகிக்கவுள்ளதுடன் பிரதம விருந்தினர்களாக தாணு.மகாதேவக்குருக்கள் தம்பதிகளும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் என்.சண்முகலிங்கனும் கௌரவ விருந்தினராக வயலின் வித்துவான் எஸ்.ராதாகிருஸ்ணன், ஆசிரியர் க.கைலைநாதன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். தொடர்ந்து இசையமுதம் நிகழ்வும் இடம்பெறும்.

(ஒ–10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திகள்

## பொதுக் கூட்டம்

கைதடி.டிசெ.28

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத்தெரிவும் இன்று ஞாயிற்றுக் கிழமை கைதடியில் உள்ள தொழிற்பூங்காவில் சங்கத் தலைவர் வி.கனகசபை தலைமையில் நடைபெறவுள்ளது.

(ஒ-288)


பணியாளர் வெற்றிடம்

இந்திய புத்தகங்களை
பாடசாலைகளுக்கு விற்பனை
செய்யக்கூடியவர்கள் தேவை.
யாழ், மன்னார், வவுனியா, கிளிநொச்சியில்
உள்ள இருபாலாரும் தொடர்புகொள்ளவும்.
071 216 3315

(55310)
(45.3)

மாபெரும் நத்தார் புதுவருட அதிரடித் தள்ளுபடி
14 நாள்கள் கையிருப்பு உள்ளவரை மட்டுமே
32800/= 24300/=
14750/= 8750/=
Free Teapoy
41400/= 34900/=
8250/= 5900/=
5600/= 2140/=
5900/= 4100/=
இலவச பொருள்கள் · இலவச விநியோகம்
மற்றும் வீட்டு. அலுவலக தளபாடங்களையும் பெற்றுக்கொள்ளலாம்
230, நாவலர் வீதி. (இலுப்பையடி ஆனைப்பந்தி சந்திக்கு இடையில்)
077 3583879, 021 791 6911

சிங்கப்பூர் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ரீகொண்டிசன் மின்சார உபகரணங்கள்
இதோ சலவை இயந்திரம் மற்றும் 21", 25", 29" அங்குல TV மலிவு விற்பனையில்
MULTI MEDIA SPEAKER · SURROUND SPEAKERS · 2.1 SUB-WOOFER · SUB-WOOFER
MICROPHONE · AMPLIFIER
அனைத்து வகையான மின்சார உபகரணங்களும் பழுது பார்த்துத் தரப்படும்
ACN INTERNATIONAL
Catholic Press, Complex. No. 360/10, Main Street, Jaffna.
தொடர்புகளுக்கு : 077 382 8072

சர்வதேச அங்கீகாரம் பெற்ற
விமானப் பயணச்சீட்டு முகவர் நிறுவனமான
IATA Accredited Agent
METRO
Travles & Tours (Pvt) Ltd.

எமது சேவைகள்.....
- மிகக் குறைந்த விலையில் சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்.
- இந்தியா, மலேசியா, தாய்லாந்து, சீனா ஆகிய நாடுகளுக்கான விசா சேவைகள்.
- சகல நாடுகளுக்குமான பயணக் காப்புறுதிகள்
- உள்ளூர், வெளியூர் பிரயாணிகளுக்கான சுற்றுலா வசதிகள்
- குழு பிரயாண வசதிகள்
- வெளியூர் பிரயாணிகளுக்கு விசா புதுப்பித்தல்
- சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்பப்படிவம் பூரணப்படுத்தி ஒழுங்கமைத்தல்.

இவை அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.

METRO TRAVELS & TOURS (Pvt) Ltd,
#272/1, Stanley Road, Jaffna, Sri lanka.
Tel: +940212224647, +94 212217199, +94 777881115
Email: Jesurah@metrotravels.lk
(லி17992)
(12.5.7)


## திருவெம்பாவை



பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும் போதெப் போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்!
சீசி இவையும் சிலவோ விளையாடி
ஏசுமிடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்!

### பொருள் விளக்கம்:

சிறந்த நல்ல ஆபரணங்களை அணிந்த பெண்ணே! இரவும் பகலும் நாங்கள் பேசும்போதெல்லாம் "எல்லாம் கடந்து நிற்கின்ற ஒளிவடிவான சிவனுக்கே என் அன்பு" என்று நீ சொல்லுவாய்! அந்தப் புனிதமான அன்பை இந்த மலர்ப்படுக்கையின் மீது எப்போது வைத்தாய்!

அடிதோழி! சிறந்த அணிகலன் ஆபரணங்களை நான் மட்டும் அணிந்திருக்கவில்லையே! நீங்களும் தானே அணிந்திருக்கிறீர்களே! ஏய்தோழிமாரே! சீ சீ என்ன பேசுகின்றாய்? நீ பேசியது என்ன கொஞ்சநஞ்சமா! விளையாடி ஏசிக்கொள்ளும் இடம் இதுதானா? தேவர்களும் காணமுடியாதவாறு தங்கள் நிலைமைக்கு இரங்கிக் கூச்சப்படுகின்றவாறு உள்ளவை அவன் திருவடிகள். ஒளி மயமான இறைவன் தன்னுடைய காலடிகள் நிலத்திலே படும்படி நாம் காணுமாறு வந்தருள்வான்; தந்தருள்வான் அவன்தான் சிவலோகன். திருச்சிற்றம்பலத்திலே எழுந்தருளியிருக்கின்றான். நாம் யார் என்று கேட்டால் அவனுடைய அடிமைகளே என்பதாம்.




டென்மார்க் பிரண்டாபதி
அருள்மிகு ஸ்ரீ அபிராமி அம்பாள் ஆலயம்
ஸ்ரீ அபிராமி உபாசகி அம்மையாரின் அவதாரவிழா விஞ்ஞாபனமும்
சைவத் தமிழ் போட்டிகளும் 2014

அம்பிகை அடியார்களே!

நிகழும் ஜய வருடம் மார்கழித் திங்கள் 16ஆம் நாள் (31.12.2014) புதன்கிழமை குருவருளும் திருவருளும் கூடி இறையருளாக வீற்றிருக்கும் டென்மார்க் பிரண்டாபதி மாதாஜி ஸ்ரீ அபிராமி உபாசகி அம்மையாரின் அருள் மழை பொழியும் அவதார விழா நள்ளிரவு 12.00 மணிக்கு நடைபெற அபிராமி அம்பாளின் திருவருள் கைகூடியுள்ளது.

அவதார தினத்தையொட்டி மூன்று நாட்கள் விசேட அபிசேக பூசை யாகம் இடம்பெற்று 31.12.2014 நள்ளிரவு 12 மணிக்கு அன்னையார் அவதார உருத்தாங்கி பக்தர்களுக்கு அருட் பார்வையால் ஆசீர்வதிக்கும் அற்புத நிகழ்வு இடம்பெறும். அதனைத் தொடர்ந்து அன்னையாருக்கு விசேட அபிசேக தீப ஆராதனைகள் இடம்பெற்று மலர்களால் அலங்கரிக்கப்பட்ட திருத்தேரில் உள்வீதி உலாவரும் திருக்காட்சியும் இடம்பெறும். அன்றைய தினம் அன்னையின் திருக்கரங்களினால் அனைத்துப் பக்தர்களுக்கும் விபூதி பிரசாதம் கைவிசேடம் அவதாரக்காப்பு அணிதல் என்பன ஆசீர்வாதத்துடன் வழங்கப்படும்.

தொடர்ந்து மூன்று நாட்களும் அவதார உருத்தாங்கிய உபாசகித் தாயாருக்கு அபிசேக தீப ஆராதனைகள் இடம்பெற்று அன்னையின் திருக்கரங்களினால் சிறப்பான அருட்காட்சிகளுடன் ஆசீர்வாதங்களும் விபூதி பிரசாதங்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.

இந்நாட்களில் சகல நாடுகளிலும் இருந்தும் வருகை தரும் குழந்தைகளுக்கு சைவத்தமிழ் அறிவையும் தமிழ்ப் பண்பாட்டையும் ஊட்டி வளர்த்தெடுக்கும் நோக்கத்துடன் இவ்வருடமும் அன்னையார் திருவாய் மலர்ந்து பாலித்துள்ளார். (30.12.2014) செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள போட்டிகளில் குழந்தைகளை பங்குபெறச்செய்து அன்னை அவர்களை வழிநடத்தி அருள் ஆசியை வழங்கி ஆண்டு முழுவதும் கல்விக்கு நிறைவைத் தருவதோடு தமிழ் மொழி, அறிவு சிந்தனை ஆற்றல் ஆளுமை, சுயமாகச் சிந்தித்தல், திறமையாக பேசும் திண்மம் இவை மட்டும் அல்லாமல் சைவ சமய பண்பாடு கலாசார சிந்தனை, பண்பான பழக்க வழக்கம், ஆலய சிந்தனை, வெற்றி தோல்வியை தாங்கும் பக்குவம், பஜனை முறைகளை ஓதல் முறையை தெரிந்து கொள்ளும் வாய்ப்பு கூச்சம் இன்மை இவை அனைத்தும் குழந்தைகள் மனதில் பதிந்து சிந்தனையாக உதைக்கத் தங்களை ஆன்மிக வழிகளில் அர்ப்பணிக்கத் தாயார் இவர்களைத் தயார்படுத்தி அருள் கொடுத்து ஆசீர்வதிப்பார்.

அன்றைய தினம் போட்டிகளில் பங்கு பற்றும் அனைத்து குழந்தைகளுக்கும் அன்னையாரின் திருக்கரங்களினால் ஆசீர்வாதங்களுடன் தமிழ் பண்பாட்டு உடைகளும் பரிசில்களும் வழங்கப்படும்.

போட்டிகள் பற்றிய விபரங்கள் மற்றும் விண்ணப்பப் படிவம் பெற விரும்பும் அடியார்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

அன்னையின் அவதார ஒளியில் அனைத்து பக்தர்களும் மூழ்கி அருட்கடாட்சத்தைப் பெற்றுய்யும் வண்ணம் பேரன்புடன் வேண்டுகின்றோம்.

ஓம்சக்தி.

Nr. Askaejervej-24
7330 Brande
Denmark

www.abiramiamman.dk

ஆலயத் தொடர்புக்கு :
TEL: 0045 97180192
0045 40413431
Fax: 0045 97184192


## சின்மயா மிஷனில் பகவத்கீதை உரை

யாழ்ப்பாணம்,டிசெ.28

யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரதசைதன்யாசுவாமிகளால் இல 9 செட்டித்தெரு ஒழுங்கை நல்லூரில் அமைந்துள்ள சின்மயா மிஷன் ஆச்சிரமத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் காலை8மணிமுதல் 9 மணி வரை பகவத்கீதை வகுப்பு நடத்தப்பட்டு வருகின்றது. இது வரை முதலில் இருந்து 4ஆம் அத்தியாயம் வரை நிறைவடைந்துள்ளது. இன்று ஞாயிற்றுக்கிழமை 5ஆம் அத்தியாயமான கர்ம சன்னியாசயோகம்ஆரம்பமாகவுள்ளது. ஆர்வலர்கள் அனைவரும்கலந்துபயன் பெறுமாறு வேண்டப்படுகின்றனர்.

(ஒ)


வருட இறுதி அமோக மலிவு விற்பனை
ARPICO · NIPPONS · DAMRO · Piyestra · Nilkamal · Phoenix · Mangala
போன்ற நிறுவனங்களின் அனைத்துத் தளபாடப் பொருள்களுக்கும் மூங்கில், மரம், உருக்கு, வெளிநாட்டுத் தளபாடங்கள் மின்சாதனப் பொருள்கள் அனைத்துக்கும் அமோக விலைக் குறைப்பு
steal mirror cupboard 6x3 14,500/- 8,500/- · 6x4 15,600/- 9,990/-
Office cupboard 14,600/- 8,000/-
3 door steal cupboard 19,600/- 14,900/-
Arpico Rolling Chair XL 12,500/- 6250/- · L 10,500/- 4800/- · M 6,000/= 3000/-
Glass Dining Table set 24,900/- 14,900/-
New Table Mate 4,000/- 2,400/-
Iron Board 1,500/- 1000/-
Kitchen Rack SU-XL 2,600/- 1,500/- · SMKRI 2,800/- 2,000/-
10% → 50% தள்ளுபடி
முந்துங்கள்! கையிருப்பு உள்ளவரை மட்டுமே!!
Open 8 AM - 8 PM
மங்களா காட்சியறை
இல. 536, கே.கே.எஸ். வீதி, மனோகரா சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 8366, 8367, 0777 286069


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் குழந்தையின் எதிர்காலத்திற்கு சிறந்த அடித்தளம் அமையுங்கள்
யாழ் குடாநாட்டில் கல்விச் செயற்பாடுகளுக்கு பிரசித்தி பெற்ற BBC ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலையில் உங்கள் குழந்தையை இணையுங்கள்

BBC 12வது வருடத்தில்

பாலர் பாடசாலை பிரிவுகள்

| பிரிவு | Play Group | Montessori | Pre School |
|---|---|---|---|
| வயது | 2+ முதல் 3+ வரை | 3+ முதல் 4+ வரை | 4+ முதல் 5+ வரை |
| காலம் | 1 வருடம் | 1 வருடம் | 1 வருடம் |

கற்பித்தல் மொழி
ஆங்கில மொழி மூலம் தமிழ் கட்டாய பாடம்

சிறார்களின் அபிவிருத்திக்கான செயற்பாடுகள்
2+ முதல் 5+ குழந்தைகளின் அறிவுத்திறனை ஊக்குவிக்குமுகமாக எல்லாக் குழந்தைகளும் பின்வரும் கல்வி, விளையாட்டு சார் நிகழ்ச்சிகளில் பங்குபெறுவர்.

* Sports Meet * English Day Concert
* முத்தமிழ் விழா * Art & Craft Exhibition
* Carols * Pre School Graduation

பாட விதானமும் கற்பித்தல் முறையும்
NEW SYLLABUS
* Dr. Maria Montessori Method
* Canadian ECE Method
* German LKG, KG, UKG System
எமது கற்பித்தல் முறையும் பாட விதானமும் மேற் கூறப்பட்ட சர்வதேச முறைமைகளைச் சார்ந்து எமது சூழலிற்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

பாலர் பாடசாலையின் சாதனைகளும் மைல் கல்களும்
* கடந்த 11 ஆண்டுகளாக எமது 11 வளாகங்களில் 8000 மாணவர்களுக்கு மேல் பயனடைந்துள்ளார்கள்.
* யாழ் குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்ட 1வது ஆங்கில மொழிமூல பாலர் பாடசாலை
* யுத்த காலத்திலும் யாழ் சிறார்களுக்காக இயங்கிய ஒரேயொரு தனியார் பாடசாலை
* எமது பாடசாலைகளில் கல்வி பயின்ற 90% மாணவர்கள் Year 5 Scholarship பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

பாலர் கல்வியை மேலும் மேம்படுத்தும் எமது விசேட செயற்பாடுகள்
* Percussion Band, Meditation, Speech, Dance & Drama (in English & Tamil)
* குழந்தை- பெற்றோர்- ஆசிரியர் களிற்கிடையில் சிறந்த உறவையும் குழந்தையின் அறிவையும் வளர்ப்பதற்கு ஊக்குவிக்கும் மாதாந்தச் செயற்பாடுகள்.

BBC யின் 11 பாலர் பாடசாலை வளாகங்கள்

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் 1 | யாழ்ப்பாணம் 2 | கோப்பாய் |
| 64, கோயில் வீதி யாழ்ப்பாணம் | 625, K.K.S வீதி யாழ்ப்பாணம் | பருத்தித்துறை வீதி கோப்பாய் மத்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| மானிப்பாய் 1 | மானிப்பாய் 2 | சுன்னாகம் | வடமராட்சி | நீர்வேலி |
| 252, யாழ் வீதி, ஆலடிச்சந்தி, மானிப்பாய். | சங்கரப்பிள்ளை வீதி (மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதி) | Dr. சபாரத்தினம் வீதி, சுன்னாகம். | பருத்தித்துறை வீதி, மாலி சந்தி, கரவெட்டி. | 1வது மைல்கல், இராச வீதி, நீர்வேலி. |

| | | |
|---|---|---|
| சாவகச்சேரி | சங்கானை | புத்தூர் |
| சாவகச்சேரி Hindu College Primary School அருகாமை | பிரதேச செயலகம் அருகாமை நிகர வைரவர் கோவிலடி | பருத்தித்துறை வீதி, புத்தூர் கிழக்கு (ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரி முன்பாக) |

British Business College — Where Students Come First
BRITISH BUSINESS COLLEGE 64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 077 362 7055, 021 222 4060

# செய்திகள்

## கலைஞானியின் சிரார்த்த தினம்

கலைஞானிஅ. செல்வரத்தினத்தின் 13 ஆவது சிரார்த்த தினம் இன்று 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையாகும்.

எவருமற்ற தனிமனிதனாக பன்முகப் பார்வை கொண்ட கலைஞனாக தான் சார்ந்த சமூகத்தின் மீது பற்றுறுதி கொண்ட மாமனிதராக வாழ்ந்துவந்தவர் கலை ஞானி. இவர் ஓவியர், புகைப்படக் கலை ஞர், நாடக விற்பனர், தொல்பொருள் ஆய்வு மற்றும் சேகரிப்பாளர் மட்டுமல் லாது ஒரு பத்திரிகையாளராகவும் விளங் கினார். தானே ஆசிரியராக இருந்து கலைஞானி என்ற பத்திரிகையை கலை, இலக்கியம், வரலாறு, தொல்பொருள் சார் விடயங்கள் உள்ளடக்கியதாக வெளி யிட்டுவந்தார்.

இவ்வாறான பெருந்தொண்டர் 2001ஆம் ஆண்டு இதே நாளில் இவ்வுலகை விட்டுப் பிரிந்ததோடு அவர் பணியும் முற்றுப் பெற்றது. இவர் புகழுடன் மறைந்தாலும் மக்கள் மனங்களில் நின்று நீங்காத கலை ஞனாக கலைஞானியாகத்திகழ்ந்துகொண்டிருக்கிறார்.

## தொழில்நுட்பவியல் இறுதிப் பரீட்சை பிற்போடப்பட்டது

உயர்தொழில்நுட்பவியல் நிறுவன இரண் டாம் பருவகால இறுதியில் பரீட்சை பிற்போடப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது.

நாளை 29ஆம் திகதி ஆரம்பமாக இருந்த 2014ஆம் ஆண்டு 2 ஆம் பருவகால இறு திப் பரீட்சை நடவடிக்கைகள் அனைத்தும் நாட்டில் நிலவுகின்ற சீரற்ற காலநிலை யினால் பிற்போடப்பட்டுள்ளன. இந்தப் பரீட்சைகள் அனைத்தும் எதிர்வரும் 12ஆம் திகதி முதல் நடைபெறும் என்று உதவிப் பதிவாளர் யோ.ரிசாந்தன் அறிவித்துள்ளார். (ஒ)

## மாணவர் கௌரவிப்பு அரியாலையில் இன்று

கொழும்புத்துறை,டிசெ.28

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் 2015ஆம் ஆண்டில் இணைத்துக் கொள்ளப்படவுள்ள மாணவர் கௌரவிப்பும் 2014இல் உயர்நிலைக் கல்விக்குத் தெரிவாகியுள்ள மாணவர்களைப் பாராட்டும் வைபவமும் இன்று நடைபெறவுள்ளன.

அரியாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ்.ரி.பத்மநாதன் தலைமையில் அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலய மண்டபத்தில் இன்று ஞாயிறு பி.ப.3.30 மணிக்கு நிகழ்வு இடம்பெறும்.

பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட பீடாதிபதி கலாநிதி தி.வேல்நம்பியும் சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விவசாய இரசாயனத்துறை விரிவுரையாளர் கலாநிதி சி.வசந்தரூபாவும் கலந்துகொள்வர்.

தரம் 5மற்றும் உயர்க் கல்வியைத் தொடரும் வசதிகுறைந்த மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப் பரிசில் உதவித்திட்டத்தின் கீழ் கல்விகற்ற இரு மாணவர்கள் உயர்நிலைக் கல்விக்கு தெரிவாகியுள்ளதுடன் புதிதாக தரம் 5இற்கு 11மாணவர்களும் தரம் 10,13 இற்கு 9 மாணவர்களும் இம்முறை இணைத்துக்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-135)

A BETTER FUTURE WITH CIMA 2015
Join the Seminar that will Change Your Life
CIMA Chartered Institute of Management Accountants
spectra skills
Key Areas
1. Education & the Job Market
2. Income maximisation
3. Career Development
4. Personal Success
5. International Opportunities
FREE ENTROLLMENT ON DEC 30

Gajendra Liyanaarachchi
Managing Director – Virtual Business School
PhD ( Reading)
MBA ( Merit) University of Colombo
BSc Mgt Sp 2nd Class Up
Div University of Sri Jayewardenepura
ACMA
ACIM
CGMA
CIMA International Tutor of the Year 2006
Venue:- Spectra Skills
No-19, Stanley Road, Jaffna (peoples Bank 2nd floor)
For Registation
Call to - 076 752 0940

CIMA CLASSES (JAN-MAY 2015)

CIMA Objective Tests
Tution, Revision Courses & Question Based Days
CIMA Intergratede Case Study
Intergrated Courses
"Spectra Skills is the Only option for those serious about studying ; amazing facilities and great tutors"
spectra skills No-19, Stanley Road, Jaffna.
Call to : 076 752 0940

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திகள்

## இலங்கைக் கடலில் செல்ல வேண்டாம்

### இராமேஸ்வரம் மீனவருக்கு எச்சரிக்கை

இராமநாதபுரம்.டிசெ.28

இலங்கைக் கடற்பகுதிக்குள் மீன்பிடிக்கச் செல்லவேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் மீனவர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு நேற்று முதல் மீன்பிடிக்கச் சென்றுள்ளதாக இராமேஸ்வரம் மீனவ சங்கத் தலைவர் ஜேசு தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்படையினரால் எல்லை தாண்டி மீன்பிடித்தாகக் கைது செய்யப்பட்ட தமிழகம் மற்றும் புதுச்சேரியை சேர்ந்த 81 மீனவர்கள் மற்றும் 88 படகுகளை விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் கால வரையற்ற வேலை நிறுத்தத்தை கடந்த 10 நாள்களாக மேற்கொண்டனர். இதனையடுத்து இலங்கை மீனவர்கள் 30 பேரை தமிழக அரசு விடுவிப்புச் செய்துள்ளதால் இந்திய மீனவர்கள் 66 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மீனவர் சங்கங்கள் ஒன்று கூடி, கடந்த 10 நாள்களாக நடந்து வந்த வேலை நிறுத்தம் காரணமாக மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதால் வேலைநிறுத்தத்தை கைவிடலாம் என முடிவு செய்துள்ளதன் அடிப்படையில் நேற்று முதல் மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர்.

கடலுக்குச் செல்லும் மீனவர்கள் இலங்கைக் கடல் பகுதிக்குள் மீன்பிடிக்கச் செல்லவேண்டாம் என்று மீனவர் சங்கத்தினர் மீனவர்களுக்கு அறிவித்துள்ளனர். மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் எந்தவித பிரச்சினைகளும் இல்லாமல் மீன் பிடித்து கரை திரும்ப மத்திய மாநில அரசுகள் பாதுகாப்பு வழக்க வேண்டும் என மீனவர்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்–என்றார். (த–14)

## ஆளுந் தரப்பிலிருந்து 111 பேர் எதிரணிக்கு

### கடந்த ஒரு மாதத்துக்குள்

கொழும்பு, டிசெ. 28

கடந்த ஒரு மாத காலத்தினுள், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த 111 பேர் எதிரணியுடன் இணைந்து கொண்டுள்ளனர். அதே வேளை, எதிரணியைச் சேர்ந்த 44 பேர் ஆளும் கட்சியுடன் இணைந்து கொண்டுள்ளனர். இவர்களுள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் அடங்குவதாக கொழும்பு சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கையொப்பமிட்ட பின்னர், ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சேனநாயக்க எதிர்கட்சிக்குத் தாவியிருந்தார். இவரே இந்தக் கட்சித் தாவல்களை ஆரம்பித்து வைத்திருந்தார்.

இதன் பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன எதிரணியுடன் இணைந்தது மட்டுமல்லாமல், பொது எதிரணி வேட்பாளராகவும் அறிவிக்கப்பட்டார். இவ்வாறு ஆளுங்கட்சியிலிருந்து பல நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் எதிரணிக்கு தாவினர்.

இதேபோன்று எதிரணியிலிருந்து குறிப்பிடத்தக்கதாக, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க ஆளும்கட்சிக்கு தாவியிருந்தார். அது போன்று உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் சிலரும் ஆளுங்கட்சியுடன் இணைந்து கொண்டிருந்தனர்.

இதுவரையில் இடம்பெற்ற 155 கட்சித் தாவல்களில், ஆளும் கட்சியிலிருந்து எதிரணிக்கு 111 பேரும், எதிரணியிலிருந்து ஆளும் கட்சிக்கு 44 பேரும் தாவியுள்ளனர்.

(த–5)

## "லீலா" பஞ்சாங்க சித்திரக் கலண்டர்

தினக் கலண்டர் தினக்குறிப்பு பதிப்புகளை 50 வருடங்களுக்கு மேலாக வெளியிட்டு வரும் லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர் தமிழ், சிங்கள மொழிகளில் வெளிவந்துள்ளது. இம்முறை விசேடமாக புதுப்புது தகவல்கள் ஒவ்வொரு நாளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. மேலும் முக்கிய பிரமுகர்கள், அரசியல் வாதிகள்,விஞ்ஞானிகள் ஆகியோ ரின் நிழற் படங்கள் வர்ணத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

மாணவர்கள் முதல் பெரியோர் வரை அறிந்து கொள்வதற்கான பழமொழிகள், பொது அறிவுக் கருத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. தினப் புத்தகத்தில் லீவு நாள்கள்,சுப முகூர்த்தங்கள் போன்ற பல விடயங்கள் விவரமாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

## தப்பியோடிய நபர் பிடிபட்டார்; அவருக்கு மறியல்

தென்மராட்சி,டிசெ.28

கொடிகாமம் கச்சாய் ஒட்டங்கேணிப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட வேளையில் அங்கு வந்த பொலிஸாரைக் கண்டு தப்பியோடிய மற்றொரு நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்த நபரை நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் முற்படுத்தியபோது இவரை விளக்க மறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை உத்தரவிட்டார்.

கடந்த வாரம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பாலாவிப் பகுதியில் சுற்றிவளைத்து தேடிய போது அங்கிருந்தவர்கள் தப்பியோட ஒருவர் மட்டும் பிடிபட்டார். அவரை நீதிமன்றில் முற்படுத்திய போது எதிர்வரும் ஏழாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு உத்தரவிட்டிருந்தார். அங்கிருந்து தப்பியோடியவர்களில் ஒருவரையே பொலிஸார் கைது செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ–9)


**31ஆம் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**

தோற்றம் 25 . 10 . 1949



மறைவு 30 . 11 . 2014

**அமரர் கந்தையா துரைராசா**

கடந்த 30.11.2014 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார் உறவினர், நண்பர்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்கள் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவிப்பதுடன் .எதிர்வரும் 30.12.2014 செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*நீர்வேலி வீதி,*
*கைதடி வடக்கு, கைதடி.*

குடும்பத்தினர்



**கண்ணீர் காணிக்கை**



எமது ஆருயிர் தோழன்

**செல்வராசா ஜெயக்குமார் (குமார்)**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினர். உற்றார் உறவினர். நண்பர்கள் அனை வருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பட்டறை உறவுகள்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



**1ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



அன்னைமடியில் 12.09.1950 — மண்ணின் மடியில் 07.01.2014

**அமரர் கந்தன் தம்பித்துரை**

அன்பினால் எம்மைக் காத்து
உழைப்பினால் எம்மை உயர்த்தி
அறிவிலே உயர வைத்து
வாழும் வகையில் வாழவைத்து
பண்பிலும் உயர்ந்து நின்று
எமைக் காத்த குல விளக்கே!
நீங்கள் எம்முடன் வாழ்ந்த
காலங்கள் யாவும் பசுமையானவை
அது ஒரு பொற்காலம்
நீங்கள் மறைந்து போனாலும்
உங்கள் நினைவுகள் மறையாது!
ஓராண்டு என்ன? ஓராயிரம் ஆண்டுகள்
வந்து போனாலும் நீங்காது நினைவுகள்

அன்னாரின் ஆத்மசாந்திப் பிராத்தனையும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்வும் இன்று (28.12.2014) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

அத்தருணம் உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

533/11
தர்மபுரம்.

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திகள்



மக்கள் விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று 'சர்வதிகார குடும்ப ஆட்சியைத் தோற்க் கடிப் போம் என்னும் தொனிப்பொருளில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு வவுனியா இறம்பைக்குளம் வீதியில் உள்ள விடுதி ஒன்றில் இடம்பெற்றது. மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன் உரை நிகழ்த்துகிறார். கட்சியின் தலைவர் அனுரகுமார திஸ்நாயக்க உட்பட பலர் இதில் கலந்துகொண்டனர். (த-421)

## மின்சாரம் தாக்கி இளைஞர் காயம்

தென்மராட்சி ,டிசெ 28

ஏணியில் நின்று தொலைக்காட்சிப் பெட்டிக்கு கேபிள் இணைப்பு வழங்கிய இளைஞரை மின்சாரம் தாக்கி தூக்கி வீசியது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மீசாலையில் இடம்பெற்றது. மீசாலை கிழக்கைச் சேர்ந்த கதிரேசு ரமேஸ்குமார் (வயது–25) என்ற இளைஞர் பாதிக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி மருத்து வமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். (த-9)

## ஐ.தே.கவின் உறுப்பினர் மஹிந்தவுக்கு ஆதரவு

ஐக்கிய தேசியக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்சித்ராமந்திலக்க எதிர்வரும்ஜனா திபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த வுக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளார். நேற்றுக் காலை கண்டி ஜனாதிபதி மாளி கையில் வைத்து அவர் இந்த உறுதி மொழியை அளித்துள்ளார்.

63 வயதான சித்ரா மந்திலக்க கடந்த மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் தெரிவு செய்யப் பட்டார். முன்னாள் நாடாமன்ற உறுப் பினரான இவர் கடந்த 20 ஆண்டுகளுக் கும் மேலாக அரசியலில் ஈடுபட்டு வரு கின்றமை குறிப்பிடத்தக்கது. (த-10)

## தென்மராட்சிப் பகுதியில் டெங்குத் தாக்கம் அதிகம்

தென்மராட்சி,டிசெ. 28

தென்மராட்சி பிரதேசத்தில் டெங்குவின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதால் பொதுமக்கள் குடியிருப்புகளை துப்பரவாக வைத்திருக்குமாறு சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் வரை இந்த மாதத்தில் 27பேர் டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த வருடத்தில் 140 பேர் டெங் கினால் பாதிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் தென் பகுதிக்குச் சென்று வருபவர்களுக்கே காணப்பட்ட டெங்கு தற்போது உள்ளூரிலும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. குறிப்பாக மட்டுவில் மந்துவில் போன்ற பிரிவுகளிலேயே அதிகமானோர் பாதிக் கப்பட்டுள்ளனர். டெங்குக் காய்ச்சலின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த குடியிருப் புகளை துப்புரவாக வைத்திருப்பதுடன் நீர்நிலைகள் உள்ள இடங்களில் திரிய வேண்டாமெனவும் அறிவுறுத்தியுள் ளனர். (த-9)

## கடனைக் கடனால் அறவிடும் செயற்பாடு

### பயனாளிகள் விசனம்

யாழ்ப்பாணம்,டிசெ.28

பயனாளிகளுக்கு வழங்கிய கடனைக் கடனால் அறிவிடும் செயற்பாட்டை வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி மேற்கொண்டு வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றன.

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சமுர்த்தி பயன்பெறும் பயனா ளிகளுக்கு வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி சகன அருண கடன் திட்டத் தின் மூலம் 5ஆயிரம் ரூபா முதல் 50 ஆயிரம் ரூபா வரை கடனாக வழங்குகின்றது. கடன் தொகை மூன்று வருடங்களுக்குள் செலுத்தி முடிக்கவேண்டும். அதில் ஒரு வரு டத்துக்குள் வட்டியில்லாது செலுத்தலாம் என்று வங்கி அறிவித்துள்ளது.

இந்த வங்கியில் பணியாற்றும் அலுவலர்கள் சரியான பயனாளிகளைத் தெரிவு செய் யாது ஏற் கனவே கடன் பெற்று அவற்றைச் செலுத்தத் தவறியவர்களை மீண்டும் பயனாளிக ளாகத் தெரிவு செய்து கடன் களை வழங்குவதுடன் அவர் கள்கட்ட வேண் டிய கடனை முழுமையாக அறவிடுகின் றனர்.

இவர்களுடைய இந்தச் செயற் பாடானது தம்மை மேலும்கடனா ளிகளாக்கி வறுமைக் கோட் டுக்குள் தள் ளக்கூடிய சூழ் நிலையை ஏற் படுத்தி வருவ தாக பயனா ளி கள்விசனம்தெரி விக்கின்றனர். (த-108)

## மரண அறிவித்தல்

### செல்வராசா ஜெயக்குமார் (குமார்)



கலம்பரை கோப்பாய் வடக்கு, கோப் பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாக வும் கொண்ட செல்வராசா ஜெயக்குமார் நேற்று 27.12.2014 சனிக்கிழமை கால மானார்.

அன்னார் செல்வராசா (பத்தர்) கிரிசாலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், கௌசெலியா, மயூரி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - திட்டமிடல் கிளை, பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம்), குகன்யா (மாணவி - யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரி CSS) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - நாகேஸ்வரி, ஐயாத்துரை - செல்வமணி ஆகியோரின் அன்புப் பேரனும், பஞ்சாட்சரம் - சாந்தலட்சுமி, நந்தகோபால் - யோகலட்சுமி, ஆனந்தராசா - விஜயலட்சுமி, சிவேந்திரராசா - ஞானலட்சுமி ஆகி யோரின் பெறாமகனும், காலஞ்சென்ற மகிழ்ராஜா மற்றும் புனிதவதி, அருள்ராசன் - புஸ்பவதி, தவராசன் - அனபெல்லா ஆகியோரின் மருமகனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.12.2014) ஞாயிற் றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப. ஒரு மணியளவில் கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: 077 960 7165
077 135 8337 (55355)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### தேவசகாயம் செபமாலை

யாழ்ப்பாணம் டேவிற் வீதி, குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தேவசகாயம் செபமாலை 25.12.2014 வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரேசம்மாவின் அன்புக் கணவரும், சதாகுமார் (ஜேர்மனி), பிறேமசுதன் (ஜேர்மனி), கீத பொன்கலன் (பிரான்ஸ்), அருட்பணி பிரான்சிஸ் ஜெயம் (செ.தா.சபை), அன்ரன் யூட் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயந்தி (ஜேர்மனி), விஜி (ஜேர்மனி), சிபிலா (பிரான்ஸ்), எவரெஸ்ரா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், யூடி, சஞ்சஜா, நொபின் மெலானி, கெபின், இசபெல், நிலோபர், நீல்ஸ், ஜோயல், ஜெனுசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை நாளை (29.12.2014) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: 077 714 7207
021 492 5884 (55328)(12)

தகவல்:
அருட்பணி பிரான்சிஸ் ஜெயம்
செபமாலை தாசர்சபை (மகன்)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா பொன்னையா



பிறப்பு 28.04.1927 இறப்பு 27.12.2014

பருத்தித்துறை புலோலியைப் பிறப்பிட மாகவும் சங்கானை தேவாலய வீதியை வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா பொன்னையா (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தரின் மனைவி) நேற்று (27.12. 2014) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் சுசிலாதேவியின் (ஈசு) அன்புத் தாயும், சிற்றம்பலம் ஜெயபாலனின் (பாலா) அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறி விக்கப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 772 4593
Manager Operation
Avant Garde Security Services
North Region.

தகவல்:
சிற்றம்பலம் ஜெயபாலன்
BALA (மருமகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்திகள்



தெல்லிப்பழை கிழக்கு காசிப்பிள்ளையார் ஆலயத்தில் கடந்த சில நாள்களாக நடைபெற்ற பிள்ளையார் பெரும் கதையைத் தொடர்ந்து நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் கஜமுக சூரசங்காரம் இடம்பெற்றது. (த-86)

# வெள்ளத்தால் இடம்பெயர்ந்த மக்களின் நலன்களை பேணுக

### வவுனியா இடர் முகாமைத்துவ பிரிவினரிடம் கோரிக்கை

வவுனியா, டிசெ 28

வவுனியாவில் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தமையால் பாடசாலைகளில் தங்கியுள்ளவர்களின் நலன்களைப் பேணுமாறு வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினர் மற்றும் கல்விவலய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ரிசாத் பதியுதீன்ஆரம்பப் பாடசாலையில் சூடுவெந்தபுலவு கிராமத்தைச் சேர்ந்த 33 குடும்பங்களும், கணேசபுரம் சண்முகானந்தாவில் பெரியகட்டு கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 20 குடும்பங்களும், கந்தசாமி நகர் அ.த.க.பாடசாலையில் செட்டிக்குளம் கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 77 குடும்பங்களும், பிராமணாங்குளம் அ.த.க. பாடசாலையில் கண்ணாட்டி கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 38 குடும்பங்களும், சிவபுரம் பாடசாலையில் நெளுக்குளம் கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 80 குடும்பங்களும், அரபா முஸ்லீம் வித்தியாலத்தில் புளிதறித்த குளம் கிராம சேவர் பிரிவைச் சேர்ந்த 103 குடும்பங்களும், கந்தபுரம் வாணி வித்தியாலயத்தில் நாகர் இலுப்பைக்குளம் கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 34 குடும்பங்களும் உள்ளன.

இவர்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகள் குறித்து கவனம் செலுத்துமாறு இப்பாடசாலையில் தங்கியுள்ளவர்கள் வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவினரிடமும், கல்வித்திணைக்களத்திடமும் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-402)

# பாடசாலைக் கட்டடத்தில் தொடர்ந்தும் இராணுவம்

## மாணவர், பெற்றோர் விசனம்

வவுனியா, டிசெ 28

வவுனியா பூவரசங்குளம் ஆரம்பப் பாடசாலையை விட்டு இராணுவத்தை வெளியேறக் கோரி பாடசாலை நிர்வாகம் பல தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்தபோதும் இராணுவம் வெளியேறப் பின்னடித்து வருவதால் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்

5 ஆண்டுகளுக்கு மேலாக பூவரசங்குளம்பாடசாலையின் ஆரம்பப் பிரிவுக் கட்டட வளாகத்தில் இராணுவத்தினர்முகாம்அமைத்து தங்கியுள்ளனர்.

இதனால் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் தற்காலிக கொட்டகைகளில் பாடம் கற்கின்றனர். இதே வேளை உயர்தர மாணவர்களுக்கு இடப்பற்றாக்குறையும் காணப்படுகின்றது. மழைகாலங்களில் பெரும் துயருடன் மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

இவ் விடயம் வவனியா தெற்கு கல்வி வலயம், வடக்கு மாகாணக்கல்வித்திணைக்களம், கல்வி அமைச்சு,. வவுனியா மாவட்ட அரசஅதிபர், வவுனியாபொலிஸ் பொறுப்பதிகாரி, இராணுவ அதிகாரிகள் ஆகியோருக்குத் தெரியப்படுத்தப்பட்டபோதும் இதுவரை கட்டட வளாகத்தை விட்டு இராணுவம் வெளியேறவில்லை.

இது தொடர்பாக வவுனியா மாவட்ட அரச அதிபர் உரிய இடத்துக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளபோதும் இதுவரை எதுவித சாதகமான நடவடிக்கையும் கைகூடவில்லை எனப் பாடசாலை நிர்வாகத்தினர், பெற்றோர், நலன்விரும்பிகள் கவலை தெரிவித்துள்ளனர். (த-402)

# சுன்னாகம் பொலிஸாரின் நடமாடும் சேவை நிறைவு



வலி. வடக்கு, டிசெ 28

சுன்னாகம் பொலிஸார் கடந்த ஒரு மாத காலமாக ஏழாலைப் பகுதியில் நடத்திய நடமாடும் சேவையின் இறுதி நாள் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை பிற்பகல் ஏழாலை முத்தமிழ் மன்ற மண்டபத்தில்சுன்னாகம்பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.ஜ. துஸ்மந்த தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர, யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், உடுவில் பிரதேச சுகாதார வைத்தியதிகாரி அ.ஜெயக்குமார், பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் கிராம அலுவலர்கள், சிவில் பாதுகாப்புக் குழுக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தேசியக் கொடியை சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏற்றிவைக்க பொலிஸ் திணைக்களக் கொடியை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏற்றி வைத்தார்.

கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. (த-86)

## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | முல்லை | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 800 | 700 | 800 | 800 |
| நண்டு | 250 | 400 | 350 | 390 | 400 | 300 |
| கணவாய் | 450 | 600 | 400 | 400 | 600 | 500 |
| பாரை | 500 | 600 | 400 | 450 | 500 | 500 |
| சுறா | 600 | 550 | 600 | 600 | 650 | 700 |
| சீலா | 300 | 400 | 400 | 400 | 400 | 400 |
| விளை | 480 | 300 | 350 | 360 | 450 | 500 |
| முரல் | 250 | 400 | 300 | 320 | 200 | 300 |
| கும்பிளா | 400 | 500 | 300 | 370 | 300 | 500 |
| கிழாக்கன் | 180 | 500 | 400 | 460 | 500 | 400 |
| ஓரா | 250 | 300 | 300 | 270 | 300 | 250 |
| திரளி | 150 | 250 | 240 | 220 | 200 | 200 |
| நகரை | 150 | 250 | 200 | 210 | 400 | 300 |
| சூடை | 150 | 100 | 120 | 110 | 190 | 200 |
| திருக்கை | 120 | 350 | 200 | 250 | 250 | |
| பாலை | 380 | 330 | 250 | 250 | 440 | 400 |
| ஒட்டி | 190 | 240 | 200 | 170 | 240 | 200 |

## மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சுன்னாகம் | சாவகச்சேரி | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | முல்லை | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 120 | 100 | 90 | 80 | 80 | 80 | 70 | 60 | 80 |
| கத்தரி | 300 | 300 | 250 | 230 | 240 | 240 | 290 | 250 | 220 |
| கரட் | 120 | 200 | 180 | 190 | 180 | 260 | 300 | 250 | 250 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 40 | 40 | 60 | 70 | 50 | 30 |
| பயிற்றை | 300 | 280 | 250 | 220 | 280 | 320 | 360 | 250 | 250 |
| பாகல் | 320 | 350 | 400 | 340 | 360 | 320 | 380 | 280 | 250 |
| கருணைக்கிழங்கு | 50 | 50 | 60 | 70 | 50 | 90 | 80 | 80 | 40 |
| பெ.வெங்காயம் | 100 | 140 | 130 | 120 | 120 | 160 | 180 | 120 | 110 |
| சி.வெங்காயம் | 50 | 80 | 100 | 130 | 100 | 120 | 160 | 140 | 60 |
| பூசணி | 40 | 40 | 50 | 70 | 30 | 60 | 70 | 60 | 70 |
| தக்காளி | 220 | 250 | 300 | 280 | 240 | 340 | 360 | 240 | 280 |
| வாழைக்காய் | 70 | 50 | 80 | 60 | 70 | 120 | 140 | 120 | 90 |
| கீரை | 40 | 50 | 60 | 30 | 50 | 50 | 70 | 50 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 30 | 30 | 40 | 30 | 20 | 15 |
| மிளகாய் | 500 | 400 | 400 | 450 | 500 | 400 | 580 | 860 | 700 |
| புடோல் | 180 | 150 | 120 | 130 | 140 | 160 | 180 | 120 | 80 |
| கோவா | 160 | 120 | 140 | 140 | 120 | 160 | 190 | 160 | 120 |
| வெண்டி | 200 | 160 | 150 | 160 | 140 | 140 | 180 | 140 | 90 |
| போஞ்சி | 210 | 240 | 300 | 300 | 240 | 220 | 260 | 250 | 150 |
| லீக்ஸ் | 300 | 300 | 300 | 290 | 300 | 320 | 360 | 320 | 250 |
| தேங்காய் | 40 | 50 | 40 | 40 | 30 | 40 | 40 | 40 | 45 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 80 | 70 | 70 | 90 | 100 | 100 | 60 |
| தேசிக்காய் | 80 | 100 | 80 | 90 | 70 | 60 | 50 | 80 | 70 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 30 | 20 | 30 | 20 | 15 |
| கறிமிளகாய் | 400 | 300 | 360 | 320 | 360 | 320 | 370 | 350 | 350 |
| இராசவள்ளி | 120 | 140 | 170 | 160 | 140 | 160 | 190 | 140 | 130 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ச்சிகள்

## முல்லையிலும்

களில் தலா 5 பேர் டெங்கினால் பாதிக்கப்பட்ட நிலையில் கடந்த மாதம் 17 பேரும், இந்த மாதம் 23 பேரும் டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

டெங்குத் தொற்றினால் சிறுவன் ஒருவர் யாழ்.போதனா வைத்திய சாலையில் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (த–4)

## விடாமுயற்சியே

வருகிறோம். அப்பா பாக்கியராஜ் தென்மராட்சி முன்பள்ளி உதவிக் கல்வி பணிப்பாளர். எனக்கு ஒரு சகோதரி. அவர் இப்போது உயர் தரம் கற்று வருகின்றார். நான் இடை நிலைக்கல்வியையும் உயர் கல்வியையும் யாழ் இந்துக் கல்லூரியில் கற்றேன். எனது இந்த சாதனைக்கு எனது நண்பர்கள், ஆசிரியர், அதிபர், பெற்றோர் என் போர் பேருதவியாக இருந்தனர்.

குறிப்பாக என் பெற்றோர் கொடுத்த ஊக்கம் என்னை சாதிக்க வேண்டும் என்ற ஓர்மத்தை என்னுள் உருவாக்கியது. நான் உயர் தரப்பிரிவில் ஆங்கில மொழி மூலத்திலேயே தோற்றினேன். அதற்கு என் ஆசிரியர்கள் எனக்கு வழிகாட்டினார்கள். அதற்கு அவர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்

என் பாடசாலை எனக்குச் சாதிப்பதற்கு பேருதவி புரிந்தது. பாடசாலை நூலகம், ஆய்வுகூடம், கணனி அறை என எல்லா வளங்களும் எமது பாடசாலையில் இருந்தது. இதனை நான் சிறப்பாக பயன் படுத்தினேன். இணைப்பாடவிதான செயற்பாடுகளில் விளையாட்டில் ஆர்வம் இல்லாவிட்டாலும் வினாடி வினா போட்டிகள் உள்ளிட்ட போட்டிகளில் ஆர்வமுடன் பங்குகொண்டு வெற்றியும் பெற்றிருக்கிறேன்.

மிகுந்த ஆர்வத்துடன் வெல்ல வேண்டும் என்ற குறிக்கோளுடன் தன்னம்பிக்கையுடன் கூடிய கவனம் எடுத்துப் படித்தால் சாதிக்க முடியும்– என்றார். (த–109)

## சந்திரிகாவை

கிய தேசியக் கட்சியின் பேருவளை அமைப்பாளரின் வீட்டில் தேர்தல் பரப்புரை குறித்து ஆலோசனைக் கூட்டம் இடம்பெற்றது. இதில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, மாகாணசபை உறுப்பினர் ஹிருணிகா மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தோர் இதன் போது இருந்துள்ளனர்.

அந்தப் பகுதிக்கு வந்த ஆளும் கட்சியின் ஆதரவாளர் கள் ஐ.தே.க. அமைப்பாளரின் வீட்டின் மீது கற்களை வீசித் தாக்கினர். இந்தத் தாக்குதலில் ஐ.தே.கவின் பேருவளை அமைப்பாளர் காயமடைந்தார். இதையடுத்து இரு கட்சி ஆதரவாளர்களுக்கும் இடையே மோதல் மூண்டது.

இந்த மோதலில் சிக்கி மூவர் காயமடைந்தனர் என்பதை உறுதி செய்த பொலிஸ் பேச்சாளர் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வர விசேட அதிரடிப்படையினர் அனுப்பப்பட்டனர் என்றும் தெரிவித்தார். குறித்த தாக்குதலில் காயமடைந்த, இப்திகார் ஜமால் மற்றும் முன்னாள் நகர சபை உறுப்பினர் டஹ்லான் மன்சூர் ஆகியோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். குறித்த தாக்குதலில் முன்னாள் ஜனாதிபதி மற்றும் ஹிருணிகா ஆகியோருக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படவில்லை.

(த–5)

## 58,000 பேர்

கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. குளங்கள் வான் பாய்கின்றன. சுமார் 20 இற்கும் மேற்பட்ட சாதாரண குளங்கள் உடைப்பெடுத்துள்ளன. 93 வீடுகள் முழுமையாகவும், ஆயிரத்து 818 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

**வவுனியாவில்**

மழை வெள்ளம் காரணமாக வவுனியா மாவட்டத்திலேயே அதிக பாதிப்புப் பதிவாகியுள்ளது. அங்கு 8 ஆயிரத்து 680 குடும்பங்களைச் சேர்ந்த 31 ஆயிரத்து 536 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். வவுனியா பிரதேச செயலர் பிரிவில் அதிகளவாக 5 ஆயிரத்து 762 குடும்பங்களைச் சேர்ந்த 21 ஆயிரத்து 31 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 504 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 947 பேர் 20 நலன்புரி நிலையங்களிலும், செட்டிக்குளம் பிரதேச செயலர் பிரிவில் பாதிக்கப்பட்ட 2 ஆயிரத்து 362 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 524 பேரில்; 649 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 416 பேர் 16 நலன்புரி நிலையங்களிலும், தங்க வைக்கப்பட்டுள்ளனர். வவுனியா வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் 291 குடும்பங்களைச் சேர்ந்த 959 பேரும் வவுனியா தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் 265 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 22 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**கிளிநொச்சியில்**

4 ஆயிரத்து 664 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 896 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 301 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 320 பேரில்; ஆயிரத்து 114 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 752 பேர் இடம்பெயர்ந்து 7 நலன்புரி நிலையங்களில் தங்கி உள்ளனர்.

பளை பிரதேச செயலர் பிரிவில் 130 குடும்பங்களைச் சேர்ந்த 418 பேர் இடம்பெயர்ந்து உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர். பூநகரி பிரதேச செயலர் பிரிவில் பாதிக்கப்பட்ட 837 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 323 பேரில் 14 குடும்பங்களைச் சேர்ந்த 47 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் பாதிக்கப்பட்ட 2 ஆயிரத்து 396 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 835 பேரில் 118 குடும்பங்களைச் சேர்ந்த 387 பேர் 3 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**மன்னாரில்**

ஆயிரத்து 932 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 495 பேர் பாதிக்கப்பட்டள்ளனர். மாந்தை மேற்கில் 208 குடும்பங்களைச் சேர்ந்த 692 பேரும்; மடுவில் 442 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 477பேரும்; முசலியில் 232 குடும்பங்களைச் சேர்ந்த 997 பேரும்; 14 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மன்னார் பிரிவில் 192 குடும்பங்களைச் சேர்ந்த 593 பேரும் நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் 858 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 736 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**முல்லைத்தீவில்**

3 ஆயிரத்து 145 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 715 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். துணுக்காய் பிரிவில் 572 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 626 பேரும் ஒட்டுசுட்டானில் 160 குடும்பங்களைச் சேர்ந்த 565 பேரும் புதுக்குடியிருப்பில் 215 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 746 பேரும் கரைதுறைப்பற்றில் 258 குடும்பங்களைச் சேர்ந்த 764 பேரும் மணலாறில் (வெலிஓயா) 4 குடும்பங்களைச் சேர்ந்த 14 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாக இதுவரை 18 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அதனால் இதுவரை 23 பேர் உயிரிழந்துள்ளனர். கிளிநொச்சியில் விவசாய நிலப்பரப்பை அண்மித்துள்ள 20 குளங்கள் வான்பாய்ந்து உடைப்பெடுத்துள்ளன. அதனால் அவற்றுக்கு உரப்பைகளில் மண் நிரப்பி உடைப்பெடுத்த இடங்களில் வைக்கப்பட்டுள்ளன.

மன்னாரிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான தரைவழிப் பாதை தடைப்பட்டுள்ளதனால் வவுனியா ஊடாகவே யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொள்ளமுடிகிறது. அவ்வாறே பாலியாறு பெருக்கெடுத்ததனால் முசலியிலிருந்து தலைமன்னார் வரையான தரைவழிப்பாதையும் தடைப்பட்டுள்ளது. எனினும் மல்வத்து ஓயாவின் நீர்பாயும் அளவு 19 அடியிலிருந்து 13 அடி வரை குறைந்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கான உணவு உட்பட அனைத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, அம்பாந்தோட்டையிலிருந்து கிழக்காக சுமார் 400 கிலோ மீற்றர் தூரத்தில் நிலைகொண்டுள்ள தாழமுக்கம் வடக்கு நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. அதனால் கிழக்கு ஊடாக வடக்கு மாகாணம் வரை கடும் மழை எதிர்பார்க்கப்படுகிறது. சில இடங்களில் காற்று மணித்தியாலத்துக்கு 60 – 80 கிலோமீற்றர் வேகத்தில் வீசக்கூடும். கடல் கொந்தளிப்பாகக் காணப்படும் என்று யாழ்.திருநெல்வேலியிலுள்ள வானிலை அவதான நிலைய பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார். தவிர நாடு முழுவதும் நீடிக்கும் சீரற்ற காலநிலையால் இதுவரை 15 பேர் உயிரிழந்தனர் என்றும், 12 பேர் காணாமல் போயிருக்கின்றனர் என்றும் இடர் முகாமைத்துவ நிலையம் அறிவித்தது. அத்துடன் 9 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டனர் என இடர் முகாமைத்துவ நிலையத்தின் பேச்சாளர் சரத் லால் குமார தெரிவித்தார். கடந்த சில நாள்களில் மட்டும் பல மாவட்டங்களிலும் தொடரும் இடர் பாதிப்புக்களால் 17 ஆயிரத்து 200 வீடுகள் முழுமையாகவும், பகுதியளவிலும் சேதடைந்தன என்றும் அவர் தெரிவித்தார். அத்துடன் பதுளை, ரில்பொல பிரதேசங்களில் இடம்பெற்ற மண்சரிவுகளில் 15 பேர் உயிரிழந்தனர் என்றும் 12 பேரைக் காணவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த–4)

## யாழ்.

சாவச்சேரி இந்துக்கல்லூரி மாணவன் செல்வராஜா துசாந்தனும் மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றுக் கொண்டனர்.

வர்த்தகப் பிரிவில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவி பாலசுந்தரம் கௌசனா 3 ஏ சித்தி பெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும் தேசிய மட்டத்தில் 15ஆம் இடத்தையும் பெற்றுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவர்கள் இருவர் கணிதப்பிரிவில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றுள்ளனர். மாவட்ட நிலையில் கு.கதீஸ் (3ஏ) முதலாம் இடத்தையும் கா.சங்கீர்த்தனன் (2 ஏ,பி) இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர். அத்துடன் விஞ்ஞானப்பிரிவில் மாவட்ட நிலையில் முதலாமிடத்தை இதே பாடசாலை மாணவர் இராமமூர்த்தி ஜனத் (3 ஏ) பெற்றுள்ளார்.

வர்த்தகப் பிரிவில் மாவட்ட நிலையில் முதலிடத்தை கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரி மாணவி தி.தயந்திகா (3 ஏ) பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

(த– 101–109)

## துணைவேந்தரின்

இது தொடர்பில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு வின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் பிரதிகள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலைவருக்கும், யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தருக்கும், உயர் கல்வி அமைச்சின் செயலாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி மஹிந்த தேர்தலில் வெற்றி பெறுவதற்கு வாழ்த்துத் தெரிவித்து, யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தரினால், விரிவுரையாளர்களிடம் கையொப்பம் வாங்குவதற்கான நடவடிக்கை கடந்த சில தினங்களுக்கு முன்னர் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் யாழ்.மாவட்டத் தேர்தல்கள் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. குறித்த முறைப்பாடு உடனடியாகவே தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தது.

இது தொடர்பில் நேற்று விசாரணைகளை மேற்கொண்ட தேர்தல்கள் ஆணையாளர், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தரினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை தேர்தல் விதிமுறைகளை மீறிய செயல் என்று தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தின் 1984 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க உபவிதியின் கீழ் மேற்படி நடவடிக்கையைத் தேர்தல்கள் ஆணையாளர் தேர்தல் விதிமுறை மீறல் என்று குறிப்பிட்டுள்ளார். எனவே மேற்படி நடவடிக்கையை உடனடியாக நிறுத்துமாறு அவர் பணிப்புரை விடுத்துள்ளார். (த–5)

## ராணுவத்தின்

நடவடிக்கைகள் அடங்கிய பரப்புரைப் பத்திரிகையை, இராணுவத்தினரின் குடும்பங்களுக்கு தபால் மூலம் அனுப்பும் பணி முன்னெடுக்கப்பட்டது. இதற்காக இராணுவத்தினர் குறித்த நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இது தொடர்பில் டிரான்பரன்சி இன்ரநஷனல் நிறுவனம் தேர்தல்கள் ஆணையாளரிடம் முறையிட்டிருந்தது.

இந்த நிலையில், தேர்தல்கள் ஆணையாளர் குறித்த நடவடிக்கையை உடனடியாக நிறுத்துமாறு தபால்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பில் தபால் மா அதிபர் ரோகண அபேரத்தின தெரிவிக்கையில்,

இராணுவத்தின் புதுவருட வாழ்த்து அட்டைகள் அனுபுவதற்கு என்று கூறி இராணுவ காரியாலயத்திலிருந்து 50 இலட்சம் ரூபா காசோலை கிடைக்கப் பெற்றது. ஒரு தபாலுக்கு 25 ரூபா முத்திரை ஒட்டப்படவேண்டும். எங்களது இயந்திரம் மூலமே முத்திரை ஒட்டப்பட்டது.

கடிதங்களைக் கொண்டு வந்த இராணுவ அலுவலரையும் அலுவலகத்திலேயே நிறுத்தி வைத்திருந்தேன். குறித்த கடிதங்களுக்குள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார பத்திரிகை இருப்பதாக தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்தார். அவரின் உத்தரவுக்கு அமைய முத்திரை ஒட்டும் நடவடிக்கைகளை இடை நிறுத்தினேன் – என்றார்.

இந்த சம்பவம் தொடர்பில் இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவிக்கையில், இராணுவத்திலுள்ள நலன் புரிச் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டது. ஜனாதிபதி மஹிந்த போரினை வெற்றி கொண்டவர். இந்த நாட்டின் ஜனாதிபதி, அவரது படங்கள் கொண்ட பத்திரிகை அனுப்புவதில் என்ன தவறு இருக்கின்றது எனக் கேள்வி எழுப்பினார். (த–5)

## தலைமையின்

மருத்துவ சிகிச்சைக்காக இந்தியா சென்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இன்றைய தினம் நாடு திரும்புவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இன்று மாலை தமிழரசுக் கட்சியின் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. நாளை திங்கட்கிழமை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாரை ஆதரிக்கும் என்ற முடிவை 30 ஆம் திகதியே அறிவிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வவுனியா மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கலந்துரையாடல் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. இதில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோ நோதராதலிங்கம், சிவசக்தி ஆனந்தன், வடக்கு சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், ம.தியாகராஜா, இ.இந்திரராஜா, புளொட் அமைப்பின் மத்தியகுழு உறுப்பினர் சந்திரகுலசிங்கம், சுத்தானாந்தா இந்து இளைஞர் சங்கத் தலைவரும் தமிழரசுக் கட்சி மத்தியகுழு உறுப்பினருமான நவேனாதிராஜா, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உபதலைவர் து.ரவி ஆகியோர் இதில் பங்கெடுத்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் பரப்புரை நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பில் இதில் ஆராயப்பட்டுள்ளது. இதன் போது, கட்சியின் தலைமை யாரை ஆதரிப்பது என்று முடிவெடுத்த பின்னர் இது தொடர்பாகப் பேசலாம் என்று நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த–5)

## முடிவுகளை

கிடைத்துவரும் முறைப்பாடுகளின் காரணமாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் அரச தகவல்கள் திணைக்களத்துக்கு தேர்தல்கள் ஆணையாளர் ஏற்கனவே அறிவித்தல் கொடுத்துள்ளதாகவும் தேர்தல்கள் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரச தகவல் திணைக்களத்தின் இணையத்தளத்தில் அரசுக்கு சார்பான தகவல்கள் வெளியிடப்படுவதாகவும், அத்திணைக்களத்தின் பல்வேறு அதிகாரிகளின் நியமனங்களில் அரசியல் தலையீடு உள்ளதாகவும் அதன் காரணமாக அத்திணைக்களம் பாரபட்சமின்றி நடந்துகொள்ள முட்டுக்கட்டை இடப்பட்டுள்ளதாகவும் பல்வேறு அமைப்புகளில் இருந்தும் கிடைத்துள்ள முறைப்பாடுகளைக் கருத்திற்கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

அரச தகவல்கள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் மற்றும் அவை தொடர்பான செய்திகளை வெளியிட்டுவந்தமை தொடர்பில் அந்த இணையத்தளத்தின் பிரதானி நரேந்திரநாத் சந்திரசிறியை அப்பதவியிலிருந்து விலக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் அரச தகவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு ஏற்கனவே ஆலோசனை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு

## கலைப்பீடம் முதலிடத்தில்



வலி. வடக்கு, டிசெ. 28

யாழ். பல்கலைக்கழக புகுமுக மாணவர்களுக்கு இடையே நடைபெற்ற தடகளப் போட்டிகளில் முதலாம் இடத்தைக் கலைப் பீடம் பெற்றுக் கொண்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் இடம் பெற்ற பரிசளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக் கழகக் கலைப் பீடாதிபதி வி.பி.சிவநாதன் தம்பதியினர் வெற்றி பெற்ற பீடங்களுக்கான வெற்றிக் கிண்ணங்களை வழங்கி கௌரவித்தனர்.

முதலாம் இடம்–கலைப் பீடம் (307 புள்ளிகள்)

இரண்டாம் இடம்– முகாமைத்துவ பீடம் (273 புள்ளிகள்)

மூன்றாம் இடம்– விஞ்ஞான பீடம் (134 புள்ளிகள்)

(த–86)





## வெற்றி பெற்ற அணிகள்

கரவெட்டி, டிசெ. 28

கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 20 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இடம்பெற்ற ஆட்டங்களில் பங்கு பற்றி வெற்றியீட்டிய அணிகளின் விபரம் வருமாறு:

சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழகத்துக்கும் வல்வை விளையாட்டுக் கழகத்துக்கும் இடையிலான ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக் கழகம் 1:0 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

அடுத்து விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் நவிண்டில் ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக் கழகமும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் இரு அணியும் கோல்கள் எதனையும் போடாத நிலையில் வழங்கப்பட்ட சமனிலை தவிர்ப்பு உதைமூலம் 5–4 என்ற கோல் கணக்கில் நவஜீவன்ஸ் அணி வெற்றி பெற்றது.

வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக் கழகத்துக்கும் தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக் கழகத்துக்கும் இடையிலான ஆட்டத்தில் 5:0என்ற கோல் கணக்கில் கருணாகரன் விளையாட்டுக் கழகமும்

கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையிலான ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் 3:0என்ற கோல் அடிப்படையிலும்

வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்துக்கும் இடையிலான ஆட்டத்தில் 3:0 என்ற அடிப்படையில் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகமும் வெற்றியீட்டி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

(த–108)

## வார்த்தைகளில் கவனம் தேவை



இந்திய கிரிக்கெட் அணியின் ஓய்வு அறையில் ஒருவகை அமைதியின்மை நிலவியதாக அணித் தலைவர் டோனி கூறியது தவறு என்று முன்னாள் அணித்தலைவர் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

பிரிஸ்பேன் டெஸ்ட் போட்டியின்போது ஷிகர் தவான் காயம் அடைந்ததை அடுத்து, யார் களமிறங்குவது என்ற விடயத்தில், ஓய்வு அறையில் ஒரு வித அமைதியின்மை நிலவியதாக டோனி தெரிவித்திருந்தார்.

இது குறித்து கவாஸ்கர் கூறியதாவது, டோனி தவறான வார்த்தையைப் பிரயோகித்து விட்டார் என்று நினைக்கிறேன். அமைதியின்மை என்பதற்குப் பதிலாக நிச்சயமற்ற நிலை என்ற வார்த்தையைப் பயன்படுத்தி இருக்க வேண்டும்.

கோஹ்லி களமிறங்குவாரா, அல்லது தவான் களமிறங்குவரா என்ற நிச்சயமற்ற நிலையே அங்கு நிலவி இருக்க வேண்டும். எனவே, நிச்சயமற்ற நிலை என்பதே சரியான வார்த்தை. நேரடி ஒளிபரப்புக்குப் பேட்டி கொடுக்கும்போது கவனமாக வார்த்தைகளைப் பயன்படுத்தவேண்டும்.

தற்போது, கோஹ்லிக்கும், தவானுக்கும் இடையே பிளவு இல்லை என்பதை டோனி தெளிவுபடுத்தி விட்டார். எனவே, அணித்தலைவர் வார்த்தைக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.(த)

## எனக்கு கிடைத்த கௌரவம்



தூய்மை இந்தியா திட்டத்தில் பங்குபெறுமாறு பிரதமர் நரேந்திர மோடி அழைத்தது, தனக்கு கிடைத்த மிகப்பெரிய கௌரவம் என்று கூறியுள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, தூய்மை இந்தியா திட்டத்தை தொடங்கி, அதில் இணையுமாறு பிரபல நட்சத்திரங்களுக்கு அழைப்பு விடுத்து வருகிறார்.

அதில், இந்திய கிரிக்கெட் வீரர் கங்குலியும் ஒருவர். இது தனக்கு கிடைத்த கௌரவம் என்றும் மோடியின் அழைப்பை ஏற்றுக் கொள்வதாகவும் அறிவித்துள்ளார். (த)

## தர வரிசையில் இடம் பிடித்தார் ஸ்ரீகாந்த்



சர்வதேச பட்மின்ரன் தரவரிசையில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் 4ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். இதன் மூலம் ஆடவர் தரவரிசையில் முதல் 5 இடங்களுக்குள் முன்னேறிய 3ஆவது இந்தியர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

இதற்கு முன்னர் இந்தியாவின் படுகோன் முதலிடத்தையும் இந்திய அணியின் தற்போதைய பயிற்சியாளர் கோபிசந்த் 4ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர். சீன சுப்பர் சீரிஸ் போட்டியில் சம்பியன் பட்டம் வென்றதோடு ஹொங்கொங் மற்றும் டுபாய் போட்டிகளில் அரையிறுதி வரை முன்னேறினார் ஸ்ரீகாந்த். இதன்மூலம் அவர் 4ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

இது தொடர்பாக ஸ்ரீகாந்த் கூறுகையில், இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஏறக்குறைய 45ஆவது இடத்தில் இருந்தேன். அதனால் இந்த ஆண்டில் 4ஆவது இடத்துக்கு முன்னேறுவேன் என எதிர்பார்க்கவில்லை. எதிர்வரும் சீசனிலும் சிறப்பாகச் செயல்படுவதை எதிர்நோக்கியுள்ளேன். வரும் ஆண்டு 2016 ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெறுவதற்கான ஆண்டாகும் என்றார்.

பயிற்சியாளர் கோபிசந்த் கூறுகையில், நான் 4ஆவது இடத்துக்கு முன்னேறினேன். இப்போது ஸ்ரீகாந்த் 4ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். இது மிகப்பெரிய சாதனையாகும். படுகோன் முதலிடத்தைப் பிடித்தவர். ஆனால் அது அதிகாரப்பூர்வ தரவரிசையா என்பது எனக்கு தெரியாது என்றார்.

(த–ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸ்திரேலியா மீண்டும் அபாரம்



ஜாம்பவான்களின் தொடர் என வர்ணிக்கப்படும் இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான 4 டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவது ஆட்டம் தற்பொழுது ஆஸ்திரேலியாவின் மெல்போர்ண் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

ஏற்கனவே நடந்து முடிந்த இரண்டு ஆட்டத்திலும் ஆஸ்திரேலிய அணி வெற்றியைப் பதிவு செய்த காரணத்தினால் இந்திய அணி இந்த ஆட்டத்தில் நிச்சயம் வெற்றிபெற்றேயாக வேண்டும். மாறாக இந்த ஆட்டத்தினைச் சம நிலையில் முடித்தால் தொடர் ஆஸ்திரேலியாவிடம் சென்றுவிடும். இதனால் ஆட்டத்தில் வென்றேயாகவேண்டும் என்ற கட்டாயத்தில் இந்திய அணியும் இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றாலோ அல்லது குறைந்தபட்சம் சம நிலையில் முடித்தாலோ தொடரைக் கைப்பற்றிவிடலாம் என்ற எண்ணத்தில் ஆஸ்திரேலிய அணியும் களமிறங்கின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியஅணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி ஆரம்ப வீரராக களமிறங்கிய வோர்ணர் எந்தவொரு ஓட்டத்தினையும் பெறாது வெளியேற ஓட்டமெதனையும் பெறாதநிலையில் ஆஸ்திரேலியா தனது முதல் இலக்கினை இழந்து தவித்தது. இருப்பினும் தொடர்ந்துவந்த வீரர்கள் தமக்குள் சீரான இணைப்பாட்டத்தினை வழங்கி அணியை வலுவான நிலையை நோக்கி அழைத்துச் சென்றனர். அணித் தலைவர் சிமித் மற்றுமொரு தலைமைச் சதத்தினைப் பூர்த்தி செய்ய ஆஸ்திரேலியா மீண்டும் ஒரு தடவை 500 ஓட்டங்கள் என்னும் இமாலய இலக்கினை எட்டியது. இறுதியில் ஆஸ்திரேலிய அணி தனது முதலாவது இன்னிங்ஸிற்காகச் சகல இலக்குகளையும் இழந்து 530 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சிமித் 192 ஓட்டங்களையும், ஹரீஸ் 74, ஓட்டங்களையும் றொயேர்ஸ் 57 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இந்தியஅணி சார்பாக சமி 4 இலக்குகளையும் யாதவ் மற்றும் அஸ்வின் தலா 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு அதன் ஆரம்ப வீரர்களான தவான் மற்றும் விஜய் சிறந்த தொடக்கத்தை அமைத்துக்கொடுத்தனர். அணியின் ஓட்டம் 55 ஆக இருந்தபொழுது முதல் இலக்காக தவான் 28 ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து வந்த புஜாறா விஜய்யுடன் இணைந்து நிதானத்தை வெளிப்படுத்த நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர நிறைவில் ஒரு இலக்கு இழப்புக்கு 108 ஓட்டங்களைப் பெற்றுள்ளது இந்தியா. விஜய் 55 ஓட்டங்களுடனும் புஜாறா 25 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் ஹரீஸ் ஒரு இலக்கைக் கைப்பற்றினார்.

ஆட்டத்தின் மூன்றாம்நாள் இன்றாகும். ஆட்டம் இலங்கை நேரப்படி அதிகாலை 5 மணிக்கு ஆரம்பமாகும். (த–ரி)

# டெஸ்டுக்கு டோனி சரி வரமாட்டார்



தொடர்ந்து டெஸ்ட் ஆட்டங்களில் நல்ல நிலையிலிருந்து மோசமான நிலைக்கு இந்திய அணி செல்வதற்கு டோனியின் தலைமைத்துவ அணுகுமுறையே காரணம் என்று பலதரப்பிலும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

பொதுவாக டோனியை பாராட்டும் இயன் சப்பல், ஆஸ்திரேலியாவை 216–5 என்ற நிலையிலிருந்து 530 ஓட்டங்கள் எடுக்க விட்டதற்குக் காரணம் டோனியே என்று கூறியுள்ளார். களத்தில் டோனியின் எந்தவித நோக்கமுமற்ற அணுகுமுறையால் இந்திய அணி காயப்பட்டுள்ளது. இது படுமோசமான தலைமைத்துவம். பந்து வீச்சாளர்களுக்கு இவரது களவியூகத்தினால் எந்த பயனும் ஏற்படவில்லை.–என்று சாடினார்.

கங்குலியும் டோனியின் டெஸ்ட் தலைமைத்துவம் மற்றும் பயிற்சியாளர் டன்கன் பிளெட்சர் மீது தனது விமர்சனங்களைத் தொடுத்தார். இந்த 2 டெஸ்ட் ஆட்டங்களில் மட்டுமல்ல, தொடர்ந்து சிறிது காலமாக தோனி டெஸ்ட் தலைமைத்துவத்தில் தடுமாறுகிறார். டெஸ்ட் மட்டத்தில் அவர் அணியை எந்த ஒரு நம்பிக்கையான நிலைக்கும் அழைத்துச் செல்லவில்லை. ஒருநாள் ஆட்டங்களில் அவர் சாதனைகள் புரிந்துள்ளார். ஆனால் டெஸ்ட் ஆட்டங்களில் அவரது தலைமைத்துவம் வீழ்ச்சிகளை சந்தித்து வருகிறது. சுமார் 60 டெஸ்ட் ஆட்டங்களில் டோனி தலைவராக இருந்திருக்கிறார். அவருக்குப் போதுமான கால அவகாசம் அளித்துவிட்டதாகவே கருதுகிறேன். இந்திய அணியின் எதிர்காலம் விராட் கோஹ்லி தான் என்று நான் நினைக்கிறேன். கோஹ்லி ஒரு தன்னம்பிக்கை மிக்க தலைவர். ஆக்ரோஷமான தலைவர். அவருக்கு ஆட்டத்தின் மீது இருக்கும் நேசம் எனக்குப் பிடித்திருக்கிறது. சச்சின் தலைமைத்துவத்தை உதறிய பிறகு என் தலைமையின் கீழ் விளையாடினார். நான் டிராவிட்டின் தலைமையின் கீழ் ஆடினேன். டிராவிட் டோனியின் தலைமையின் கீழ் ஆடியுள்ளார். மைக்கல் கிளார்க்கின் தலைமையில் பொண்டிங் விளையாடினார். எனவே டெஸ்ட் ஆட்டங்களில் ஒரு வீரராக டோனி தொடரலாம் என்றார் கங்குலி. (த–ரி)

# ஆதிக்கத்தில் நியூஸிலாந்து நெருக்கடியில் இலங்கை

நியூஸிலாந்து மற்றும் இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டு டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதல் டெஸ்ட் ஆட்டம் தற்போழுது நியூஸிலாந்தின் கிறைஸ்ட் சேர்ச் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இறுதியாக இடம்பெற்ற தொடர்களில் நியூஸிலாந்துஅணி பாகிஸ்தானை வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றியும் இலங்கையணி இங்கிலாந்தை வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றியும் வலுவான நிலையில் உள்ளன. இதனால் இத் தொடர் விறுவிறுப்பாக அமையும் என்ற பரவலான எதிர்பார்ப்புகள் மத்தியில் இரு அணிகளும் களமிறங்கின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கையணி முதலில் நியூஸிலாந்தை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. இதன்படி நியூஸிலாந்தின் தலைவர் மக்கலத்தின் அதிரடி கைகொடுக்க அணி முதல் நாளிலேயே 7 இலக்குகள் இழப்புக்கு 429 ஓட்டங்களைக் குவித்தது. ஆட்டத்தின் இரண்டாவது நாளான நேற்றைய தினம் நியூஸிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸிற்காக சகல இலக்குகளையும் இழந்து 441 ஓட்டங்களைக் குவித்தது. அதிக பட்சமாக மக்கலம் 195 ஓட்டங்களையும் நீஸம் 85 ஓட்டங்களையும் வில்லியம்சன் 54 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக லக்மல் மற்றம் மத்தியூஸ் தலா 3 இலக்குகளையும் எரங்க, பிரசாத் மற்றும் கௌசல் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணிக்கு அதன் முன்னணி வீரர்களான கருணரட்ன 0, சில்வா 4, சங்கா 6 என நியூஸிலாந்தின் வேகத்தை தாக்குப்பிடிக்க முடியாமல் வெளியேற இலங்கை அணி 15 ஓட்டங்களுக்கு மூன்று இலக்குகளை இழந்து பரிதவித்தது. அடுத்து வந்த மத்தியூஸ் திரிமன்னேயுடன் இணைந்து அதிகபட்ச இணைப்பாட்டமாக 43 ஓட்டங்களைப்பகிர இலங்கை அணி ஒருவாறாக 50 ஓட்டங்களைத் தாண்டியது. இருப்பினும் தொடர்ந்து தாக்குப்பிடிக்க முடியாமல் அவர்களும் வெளியேற தொடர்ந்து வந்த டிக்வெல 2, பி.ஜெயவர்த்தன 10, பிரசாத் 18, கௌசல் 6, லக்மல் 2, என இரண்டு பந்துப்பரிமாற்றங்களுக்கு ஒரு இலக்கு என்ற சீரான இடைவெளியில் இலக்குகள் வீழ்த்தப்பட 42 பந்துப் பரிமாற்றங்களை மட்டுமே தாக்குப்பிடித்த இலங்கையணி சகல இலக்குகளையும் இழந்து 138 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதனால் களத்தடுப்பினை தொடர்வதற்கான தகுதியினை இழந்து தொடர்ந்து துடுப்பெடுத்தாடுமாறு பணிக்கப்பட்டது.

பந்துவீச்சில் நியூஸிலாந்து சார்பாக பொலாட் மற்றம் வோல்க்னர் தலா 3 இலக்குகளையும் சௌத்தி மற்றும் நீஸ்ஹம் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க வேண்டுமானால் 303 ஓட்டங்களை பெறவேண்டும் என்ற கட்டாயத்தில் தமது இரண்டாவது இன்னிங்ஸிற்காக களமிறங்கிய இலங்கை அணிக்கு அதன் ஆரம்ப வீரர்கள் நிதானத்தை வெளிப்படுத்த நேற்றைய இரண்டாவது ஆட்டநேர முடிவில் இலங்கை அணி இலக்குகள் இழப்பின்றி 84 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

ஆட்டத்தின் மூன்றாவது நாள் இன்றாகும். ஆட்டம் இலங்கை நேரப்படி அதிகாலை 3.30க்கு ஆரம்பமாகும். (த–ரி)

# எவரெஸ்டை தொடும் ஹியூக்ஸ்

சிட்னியில் நடந்த உள்ளூர் ஆட்டத்தில் அப்போட் வீசிய பவுன்சர் தாக்கியதில் ஆஸ்திரேலிய வீரர் பிலிப் ஹியுக்ஸ் மரணமடைந்தார். இவர் பயன்படுத்திய துடுப்புமட்டை உலகின் மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்திற்கு எடுத்து செல்லப்படவுள்ளது.

இது குறித்து ஆஸ்திரேலிய கிரிக்கெட் தலைவர் வாலி எட்வர்ட்ஸ் வெளியிட்ட அறிக்கையில் ஹியுக்ஸ் விளையாடிய ஏதாவது ஒரு துடுப்புமட்டையை அனுப்புமாறு நேபாளத் துடுப்பாட்டச் சங்கம் கடிதம் அனுப்பியுள்ளது. இவருக்கு அஞ்சலி செலுத்தும்விதமாக இந்தத் துடுப்புமட்டை உலகின் உயரமான எவரெஸ்ட் சிகரத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இதை அடுத்த ஆண்டு மார்ச்–ஏப்ரல் மாதங்களில் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளனர் என, தெரிவிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் வியாபார நிறுவனத்திற்கு வாகனங்களில் பொருட்கள் ஏற்றி இறக்கல் செய்வதற்கு வேலையாள்களும் கனரக வாகனங்களுக்குரிய சாரதிகளும் உடன் தேவை.

கீழ்க்காணும் முகவரிக்கு 05.01.2015 இற்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பவும்.
(தொலைபேசி இலக்கத்தை குறிப்பிடவும்)



முகவரி:
விளம்பர இல. 5039
மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## SCIENCE CORNER

A/L - 2017
கணித, விஞ்ஞான பிரிவுகள்
03.01.2015 சனிக்கிழமை
காலை: 7.00 மணிக்கு ஆரம்பிக்கப்படும்.
A/L - 2015, A/L - 2016
வகுப்புக்கள் யாவும் நடைபெறுகின்றன
இடம்: மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 077 611 6724 (56308) (45.3.7)

## பணிப்பெண் தேவை

சாவகச்சேரியில் வீட்டில் தங்கி நின்று வேலை செய் யக்கூடிய பணிப்பெண் தேவை தகுந்த சம்பளம் வழங்கப்படும். (55358)
தொடர்பு: 077 309 5952/ 021 227 0793

## கணினி விற்பனை

நல்ல நிலையில் உள்ள (Intel 61 Board) கணினியும் IBM Laptop உம் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு.
தொ.பே: 077 433 6247

## தொலைந்துவிட்டது

CPKRxxxx எனும் தொடரிலக்க முடைய காரின் முன்பக்க இலக்கத்தகடு, புளியங்குளத்துக்கும், கனகராயன் குளத்துக் குமிடையில் நேற்று 27.12.2014 காலை விழுந்து தொலைந்துவிட்டது. கண்டெடுத்த வர்கள் தயவு செய்து 071 487 2961 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு கையளிக்க வேண்டுகிறோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (55357)

## கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி
## German Language Academy


ஜேர்மன், சுவிஸ் செல்பவர்களுக்கான டொச் மொழிகள் ஜேர்மனியில் வசித்து வந்த ஆசிரியர் S.கோணேஸ்வரன் அவர்களால் இலகுவாக கற்பிக்கப்படுகின்றது.
தொலைபேசியில் தொடர்புகொண்ட பின் நேரில் வரவும்
077 9707 322
German Language Academy
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

## FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH

FALC

# FRENCH CLASSES





FRANCE, CANADA, BELGIUM, SWISS
செல்வோர்
இலகுவாகவும் விரைவாகவும் சரியான உச்சரிப்புடன் ஐரோப்பிய முறையில் French கற்றுக் கொள்ளலாம்..

ஆசிரியர்: MR. V. JEGAN
(Trained teacher in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்.)

International Diplomas in French(DELF A1,A2,B1) மற்றும் Certificates ஐயும் பெற்றுக் கொள்ளலாம்.

865 இற்கும் மேற்பட்டோர் French கற்றுச் சென்றுள்ளனர்.

கவனத்திற்கு :ஆரியகுளம் மற்றும் நெல்லியடியில் மட்டுமே எமது ஆசிரியரின் வகுப்புக்கள்.(யாழில் வேறெங்கும் வகுப்பு இல்லை)

ஆரம்பம்: 03.01.15 Sat @ 8am.
No. 40, Palaly Road, Jaffna. (ஆரியகுளம்.)

ஆரம்பம்: 05.01.15 Mon @ 3.45pm
No. 181, Main Street, நெல்லியடி.

Register Now Tel: 0779 789 456 / 021 320 2973

## இன்னும் 5 நாள்கள் மட்டுமே

புதுவருடத்தை முன்னிட்டு
மாபெரும் சிறப்பு தள்ளுபடி
வீட்டு, அலுவலக தளபாடங்களை மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.



அலுமாரி (வீட்டு பாவனைக் குரியது) ~~14750/=~~ 8990/=
Sofa ~~45500/=~~ 32900/=
மெத்தை ~~4115/=~~ 2320/=
மரக்கட்டில் ~~8750/=~~ 6100/=
பிளாஸ்டிக் கதிரை ~~900/=~~ 625/=

15, சிவப்பிரகாசம் வீதி, (தட்டாதெரு சந்தி)
077 180 7672, 077 831 4201

## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்.
ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்
S.Nகுமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா, வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச் சினைக்கும் நேரில் சந்திக்கவும்.
காலை 9 மணி முதல் மாலை 5.00 மணி வரை.
இல.97/8, கன்னாகி அம்மன் கோயில் ஒழுங்கை, கோப்பாய் வீதி, உரும்பிராய், யாழ்ப்பாணம்.
(உரும்பிராய் சந்திக்கு அருகில்) (50509) (4.3.7)
T.P: 072 681 6681, 072 681 6691

# விடுதலைப் பெருவிழா

கவலையா!!! கண்ணீரா!!! பாவங்களா!!!
பரம்பரை சாபங்களா!!! தீராத வியாதிகளா!!! ஆறாத காயங்களா!!!
பிசாசின் பிடியா!!! பில்லி-சூனியக்கட்டுக்களா!!! விட முடியாத பாவ பழக்கவழக்கங்களா!!! சகலவித அடிமைத்தனத்திலிருந்தும்...

## இயேசு விடுதலை கொடுக்கிறார்...



**இருதயத்திலிருந்த துவாரம் மறைந்தது...**
ஜயரோஸ்மன் கேதீஸ் ஜேடன் ஆகிய இவர் பிறப்பிலிருந்தே இருதயத்தில் துவாரமென வைத்தியர்களினால் கண்டறியப் பட்டது. ஜெபத்தின் பின்பு வைத்தியர்கள் கண்டு ஆச்சரியப்படத்தக்க விதத்தில் இயேசு அற்புத சுகத்தைக் கொடுத்தார். வைத்திய அறிக்கை கள் உறுதிசெய்துள்ளன. பரிபூரண சுகத்துடன் இருக் கின்றார்.



**வயிற்றிலிருந்த கட்டி மறைந்தது...**
மகேந்திரன் சுபத்திரா ஆகிய இவர் கருப் பையிலே ஏற்பட்ட கட்டியை சத்திர சிகிச்சை செய்யத்தான் வேண்டுமென வைத்தி யர்கள் கூறியிருந்த வேளை விடுதலைப் பெருவிழா நிகழ்வில் கலந்து கொண்டு பிரார்த்தனை செய்த பொழுது இயேசு அற்புதமாக கட்டியை மறையசெய்-தார்.

**காலம்:**
மார்கழி மாதம் 27ம், 28ம் திகதிகளில்
[சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில்]

பிரவேசம் இலவசம்!

இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை
ශ්‍රී ලංකා සිව්පතරශු සුභාරංචි සභාව
Church of the Foursquare Gospel in Sri Lanka

**இடம்:** சங்கிலியன் பூங்கா, முத்திரைச் சந்தி, நல்லூர்.

# மது பான்ஸி & பிள்ளையார் பூட்சிற்றி

நடத்தும் புதுவருட மற்றும் பொங்கலை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை

21.12.2014 தொடக்கம்....



சிறுவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் விளையாட்டு உபகரணங்கள், வீட்டுத் தளபாடங்கள் அலுமினியப் பொருள்கள், மின்சார உபகரணங்கள், சமையல் பாத்திரப் பொருள்கள், கோயில் தேவைகளுக்கான பித்தளை உபகரணங்கள் மற்றும் மெத்தை வகைகள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ். வீதி, மானிப்பாய். 021 2255 148, 0774156111

SHERRY
ஐரோப்பாவிலிருந்தும் தாய்வானிலிருந்தும் இறக்குமதி செய்யப்படும் அதி உயர்தர பேக்கரி இயந்திர உபகரணங்களை இறக்குமதி செய்வோரும் விநியோகிப்போரும்








24 மணி நேர விற்பனையின் பின்னர் சேவை Hotline: 071 4185982

3-7 நாட்களில் லீசிங் (இலகு தவணைமுறை) ஏற்பாடு செய்து தரப்படும்
Saturday & Sundays Open
பிராந்திய விற்பனை முகாமையாளர் வ / கி
Hotline:
0711 844 445
SHERRY BAKERY EQUIPMENT SUPPLIERS (PVT) LTD
No. 735/B, Colombo Road, Thalangama North, Malabe, Sri Lanka.
Tel: 2789782 / 5516886/7 Fax: 011 2788933
Email: sherry@sltnet.lk, Web: www.sherrybakeryequip.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவுகள்





தென்மராட்சி இலக்கிய அணியின் 'பாரதி விழா' சாவகச்சேரி நகரசபை பொன் விழா மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், ஓய்வுநிலை பேராசிரியர் க.அருணாசலத்துக்கு அணியின் சான்றோர் விருது வழங்கப்பட்டது. அணியால் உருவாக்கப்பட்ட 'நெருப்புக் குஞ்சு' நூல் வெளியீடும் கவியரங்கமும் இடம்பெற்றன. (வ-9)



யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடத்திய நாவலர் விழாவில் ஆறுமுக நாவலர் என்ற பொருளில் நாட்டிய நாடகத்தை நட்டுவாங்கம் செய்து மேடையேற்றிய யாழ். பல்கலைக்கழக நடனத் துறைத் தலைவர் அருட் செல்வி கிருபைராஜாவுக்கு யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ஜெயலஷ்மி இராசநாயகம் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கின்றார். (வ)










புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் வகுப்பறைக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் விருந்தினர்கள் பாண்ட் வாத்திய சகிதம் அழைத்து வரப்பட்டனர். அதையடுத்து மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், முல்லை மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் ஆகியோர் அடிக்கல் நட்டனர். (வ-435)








யாழ்ப்பாணம் ஈசிற்றி ஆங்கிலக் கல்லூரியின் ஒளி விழா மிக விமரிசையாகக் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. கல்லூரியின் 22 ஆம் அணி மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் செல்வி பத்மலோஜினி தலைமையில் நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன. (வ)





எழுவைதீவு முருகவேல் வித்தியாலயத்தின் ஒளிவிழா நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்ற போது... (வ-9)







பேராசிரியர் கைலாசபதியின் 32 ஆவது நினைவுதினக் கருத்தரங்கு வவுனியா மாவட்ட தேசிய கலை இலக்கியப் பேரவையால் நடத்தப்பட்டது. கருத்துரையை திருமதி கங்கைவேணி அமிர்தலிங்கம், தமிழ்மணி கே.கே.அருந்தவராஜா (மேழிக்குமரன்) ஆகியோர் நிகழ்த்தினர். செம்மலர் கலைக்குழு 'நீர்வளம் காப்போம்' வில்லுப்பாட்டு வழங்கினர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவுகள்



வரணி வடக்கு சைவப் பிரகாச வித்தியாசாலையில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவருக்கான கௌரவிப்பு நிகழ்வில் ர.பரத் என்ற மாணவனுக்கு சைக்கிள் பரிசாக வழங்கப்பட்டது. கௌரவிப்பு நிகழ்வில் மாணவனின் பெற்றோர், பாடசாலை உப அதிபர் வை.விஜயகுமாரன், தென்மராட்சி கல்வி வலய ஆரம்ப கல்வி பிரதிப் பணிப்பாளர் ந.சர்வேஸ்வரன் மற்றும் மாசேரி பிரதேச சமுர்த்தி அலுவலர் பா.ரஜீவன் ஆகியோர் காணப்படுகின்றனர். (ஒ–122)



கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மாணவர்களான பார்த்திபன் அருணன், பார்த்திபன் அயந்தன் ஆகிய இரட்டையர்கள் ஜனாதிபதி சாரணர் விருது பெற்றுக் கொண்டனர். அவர்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விருது வழங்கிக் கௌரவிக்கிறார். (ஒ–11)



உடுவில் மான்ஸ் த.க.பாடசாலையின் பரிசளிப்பு விழாவின் போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் கல்வி வலயத்தின் கணக்காளர் திருமதி குகலேஸ்வரி பார்த்திபன் தேசியக் கொடியை ஏற்றுவதையும் அருகில் அதிபர், சிறப்பு விருந்தினர்களையும் காணலாம். (ஒ)



சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையின் சாதனையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் அதிபர் க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் இரு காட்சிகள் (ஒ–9)





துணுக்காய் பிரதேச செயலகத்தின் 'சிறப்பாற்றல் உள்ளோரை கௌரவித்து மகிழ்வோம்' நிகழ்வு பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. பிரதேச பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக துணுக்காய் பிரதேச செயலாளர் சி.குணபாலன் கலந்து கொண்டார். நிகழ்வில் சில காட்சிகள். (ஒ–9)






சாவகச்சேரி மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலய பரிசில் நாள் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. நிகழ்வுக்கு வருகை தந்த விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும். விருந்தினரான கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தனுக்கு வித்தியாலய அதிபர் திருமதி ஜெ. தேவேஸ்வரன் நினைவுப் பரிசில் வழங்குவதையும் காணலாம். அருகில் மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் ச.ஞானலிங்கம் ஆகியோர். (ஒ–9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவுகள்







ஒலுமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் ஒளிவிழா முதல்வர் ரி.விமலேந்திரன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இதன் போது பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் பாடல்கள், பேச்சு, நடனம் போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றன.
(வ-435)





வவுனியா திருநாவற்குளம் உமாமகேஸ்வரன் முன்பள்ளியின் பெற்றோர் தின விழாவும் ஒளி விழாவும் அண்மையில் நடைபெற்றன. சமூக ஆர்வலர் த.நாகராஜா (லண்டன்) வின் அனுசரணையில் நடைபெற்ற பெற்றோர் தின மற்றும் ஒளி விழாவில் மழலைகளின் கலை நிகழ்வுகள் நடைபெற்றன. (வ-402)







சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவு கலை விழா அண்மையில் தென்மராட்சி கலைமன்ற மண்டபத்தில் இடம்பெற்றது. சித்திரப் போட்டியில் வெற்றி பெற்ற சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய சிறார்களுக்கு இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் கோ.சேதுகாவலர் சான்றிதழ்களை வழங்கினார். சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (வ-9)





சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. முதன்மை விருந்தினர் திருமதி இ.பாலசுப்பிரமணியம் மாணவர்களுக்கு விருது வழங்கினார். (வ-9)



"சாரணர் தருசின்னம்" பெற்ற பருத்தித்துறை மாவட்ட சாரணர் ஆணையாளர் எஸ். சண்முகலிங்கத்தை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் தருசின்னம் பெற்ற ஆணையாளர் மற்றும் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதைக் காணலாம்.

கிளிநொச்சி மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினரின் ஏற்பாட்டில் திருமுறிகண்டி இந்து மகா வித்தியாலய மாணவர்களின் பெற்றோருக்கான விழிப்புணர்வு செயலமர்வு வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் கலந்து கொண்ட பெற்றோர்களைக் காணலாம். (ஒ-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28 DEC 2014


# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பிதழ்


28.12.2014




# காணாமல் போன எம்மவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





■ பிரகாஸ்

யாரோ சொந்தக் காரரிடம் இருந்து கடிதம் வந்திருக்கு, என்று கூறி மகிழ்ச்சியில் நெஞ்சில் கைவைப்பதும் "ஐயோ அடைவுத்துண்டோ தெரியாது" என்று கூறி தலையிடியில் தலையில் கைவைப்பதும் இந்த தபால்காரனின் வருகையால் நிகழும் சம்பவங்கள்.

இற்றைக்குப் பதினைந்து வருடத்துக்கு முன்னர் தொழில்நுட்பமும் தொடர்பாடல் சாதனங்களும் பெரிதளவில் வளர்ச்சியடைந்திருக்கவில்லை. அந்தக் காலத்தில் காதல் முதல் கருமாதிவரை மக்கள் தமது செய்திகளை பரிமாறிக் கொள்வதற்காகவும், புதிய உறவுகளைத் தேடுவதற்காகவும், இருக்கும் உறவுகளுடன் உறவாடி அந்த உறவுகளைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவும் அவர்களிடம் இருந்த ஒரே தெரிவும் நிறைவான தெரிவும் தபால் மட்டுமே. அதனை கொண்டு வருவதும், கொண்டு செல்வதும் என்ற உன்னதக் கடைமையைச் செய்தவன் தபால்காரன் மட்டுமே.

தபால்காரனின் பெயர் சொல்லி அழைக்கும் அளவிற்கு எம் மக்கள் பலர் அவரோடு உறவாட பழக்கப்பட்டிருந்தனர். கல்வியறிவில் குறைந்த மட்டத்தில் இருந்த சில குடும்பங்கள் அவரைக் கடவுள் மாதிரிப் பார்த்தனர். அந்தக் குடும்பங்களுக்காக வந்திருக்கும் கடிதங்களை சுமந்து வந்ததுடன் மட்டும் நின்று விடாமல் அதை அவர்களுக்குப் படித்துக்காட்டி நல்ல செய்தியானால் வாழ்த்துத் தெரிவிப்பதும் துக்க செய்தியானால் ஆறுதல் கூறிச்செல்வதும் அவர் கூலி இல்லாமல் செய்த விசேட கடைமைகள்.

இதனால் அந்தக் காலத்தில் தபால்காரன் சமாதானப்புறாவாகக் காதல்தூர்துவனாக, சண்டை சச்சரவுகள் என வம்புகளை அள்ளிக்கொண்டு வரும் யுத்தக் கப்பலாக, உறவுகளை இணைக்கும் பாலமாக விளங்கினார். சுருங்கக் கூற வேண்டுமாயின் தற்போதைய தொடர்பாடல் சாதனங்களின் வேலைகள் அனைத்தையும் அப்போது செய்த ஒரு மனித இயந்திரம் அவரே.

"என்னதான் இப்பப் புதுசு புதுசா வந்தாலும் எங்கட உறவுகளின்ர ஞாபகம் வரேக்க அந்தக் கடிதங்களத் திருப்பி திருப்பி எடுத்துப் படிக்கிதில இருக்கிற சந்தோசம் எதில தம்பி வரும்"

சமுதாயத்தில் இருக்கும் பெரியவர்களின் இவ்வாறான வசனங்கள் தபாலும், கடிதங்களும் அந்தக் காலத்தில் கிராமங்களிலும், சமுதாயத்திலும் குடும்பங்களிலும் எந்த அளவுக்கு ஊறிப்போய் இருந்தது என்பதனை அறியும் வகையில் அமைந்துள்ளது. தபாலின் மூலம் எம் மக்களின் அன்பும் உறவும் பின்னிப் பிணைந் திருந்தன. காத்திருந்தால் தான் காதல் அதிகரிக் கும் என்பது காதலர்களுக்கு மட்டும் பொருத்தமான வசனம் அல்ல. அது அன்புப்பிணைப்பில் இருக்கும் அனைத்து உறவு களுக்கம் பொருத்தமானது.

ஒரு கடிதத்தை எழுதிய பின்னர் அதற்குரிய பதிலுக்காக காத்திருந்து காத்திருந்தே எம் மக்களின் உறவுகள் வலுப்பெற்றன. கிடைப்பதற்கு அரிய பொருள்களைப் போல உறவுகளின் கடிதங்களை ஒன்றின் பின் ஒன்றாக சேர்த்து வைத்தே எம் முதியவர்களின் வருடங்களும் வாழ்க்கையும் உருண்டோடின.

முன்னொரு காலத்தில் தபால்காரர் ஒரு நாளில் இரண்டு தடைவைகள் வந்தார். அப்பொழுது வானொலிகளும் தொலைக்காட்சிப் பெட்டிகளும் மட்டுமே எம்மிடம் இருந்தன. பின்னர் ஒரு நாளில் ஒரு தடைவை வந்தார். அப்போது கிராமங்களின் ஓரிரண்டு வீடுகள் தொலைபேசி மையங்களாக இருந்தன. பின்னர் இரண்டு நாள்களுக்கு ஒரு தடைவை வந்தார். அப்பொழுது பெரும்பாலான வீடுகளில் தொலைபேசிகள் அறிமுகமாகின.

பின்னர் மூன்று நாள்களுக்கு ஒரு தடைவை வந்தார். அப்போது இன்ரர்நெற், ஈ.மெயில் எமக்குப் பழக்கப் பட்டிருந்தன. அதன்பின்னர் நான்கு நாள்களுக்கு ஒரு தடைவை வந்தார். அப்பொழுது முகப்புத்தகத்தில் எமக்கென பக்கங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. இப்பொழுது வாரத்துக்கு ஒரு தடைவையோ அல்லது இரு வாரத்துக்கு ஒரு தடைவையோ வருகின்றான் ஏனென்றால் நாம் ருவிற்றர், வைபர், வாட்ஸ்அப் என்று ஏதேதோ கதைக்க ஆரம்பித்து விட்டோம்.

இவ்வாறு படிப்படியாக எம்கண்களில் இருந்து மறைந்து வரும் தபால்காரன் நிரந்தரமாக எம் கண்களில் இருந்து மறைந்துவிடுவாரோ என்ற சந்தேகம் பலருக்கு இருந்தாலும் தற்போது நடைமுறையில் இருக்கம் அரச அங்கிகாரமுறைமை இருக்கு மட்டும் தபால் துறை அழியாது. அதாவது அரச அங்கிகாரம் பெற்ற நிறுவனங்களின் உத்தியோக பூர்வ அறிக்கைகள் மற்றும் ஆவணப்பத்திரங்கள் என்பனவற்றுக்கு முத்திரை ஒட்டப்பட்டு பேனாமுனை கையெழுத்து வைக்கப்பட்டிருந்தாலே அது முறைப்படி அங்கீகரிக்கப்படும்.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை இருக்கும் வரைக்கும் தபால்துறை அழிவடையமாட்டாது. என்றாலும் தொடர்பாடலும் தொழில்றுட்பமும் சடுதியாக வளர்ந்துவரும் இந்தக் காலத்தில் அரசாங்கத்தின் இந்த நடைமுறையும் இன்னும் எவ்வளவு காலம் தாக்குப்பிடிக்கும்?.

அடுத்த தடைவை தபால்காரன் உங்கள் வீட்டுக்கு வரும் போது அவர் தாகத்தைத் தீர்க்க ஒரு குவளை தண்ணீர் கொடுங்கள் முடிந்தால் அவருடன் நின்று புகைப்படம் எடுத்துக்கொள்ளுங்கள். ஏனென்றால் தபால்காரனை காணும் கடைசித் தலைமுறை நாங்கள் தான்.



**ஒரு கடிதத்தை எழுதிய பின்னர் அதற்குரிய பதிலுக்காகக் காத்திருந்து காத்திருந்தே எம் மக்களின் உறவுகள் வலுப்பெற்றன.** கிடைப்பதற்கு அரிய பொருள்களைப் போல உறவுகளின் கடிதங்களை ஒன்றின் பின் ஒன்றாக சேர்த்து வைத்தே எம் முதியவர்களின் வருடங்களும், வாழ்க்கையும் உருண்டோடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரி வெல்வாரா?



திரு. ராஜ்

மைத்திரி வெல்வாரா?, போனமுறைஎலெக்ஷனிலநடந்தது போல மஹிந்த வென்றுடுவாரா?,இந்தச்சிங்களச்சனம்என்ன செய்யுதுகளோ தெரியாது. ஜனாதிபதித்தேர்தலுக்கானபரபரப்புமெல்ல மெல்ல தமிழ் மக்களிடத்தில் ஒட்டத் தொடங்கியிருக்கின்றது. இந்த வாசகங்களே தமிழ் மக்களின் இன்றைய முணுமுணுப்புகளாக இருக்கின்றன. மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் அனுபவித்தது போதும் என்பதே தமிழர்களின் இன்றைய மனநிலை. இதனால் ஆட்சி மாற்றம் ஒன்று தேவை என்பதை விரும்புகின்றனர். கடந்த வடக்கு மாகாணசபைத் தேர்தலின் போது காணப்பட்ட வாக்களிப்பு எழுச்சி இந்தத் தேர்தலிலும் தொடரும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஏனெனில் தபால்மூல வாக்களிப்பு 90 சதவீதத்திற்கு மேல் வடக்கில் பதிவாகியுள்ளது. இதனால் எதிர்வரும் 8 ஆம் திகதி இடம்பெறும் தேர்தலில் மக்களின் வாக்களிப்பு 65 சதவீதத்திற்கு மேல் இருக்கும் என்று எதிர்வுகூறப்படுகின்றது. வடக்கு – கிழக்கு தமிழ் பேசும் மக்கள் 86 சதவீதம் பேர் பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன வுக்கே வாக்களிப்பார்கள் என்று கருத்துக் கணிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

வடக்கு – கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது இதனையே செய்தார்கள். எனவே வடக்கு – கிழக்கில் பொது எதிரணி வேட்பாளரின் வெற்றி உறுதி செய்யப்பட்டிருக்கின்றது. ஆனாலும் இதனைத் தடுப்பதற்குப் பல்வேறு நடவடிக்கைகளில் ஆளும் கட்சியினர் களமிறங்கியுள்ளனர்.

பொதுஎதிரணியின் பங்காளிக் கட்சியாகவுள்ள ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசனும் இதனைத்தான் சுட்டிக்காட்டியுள்ளார். பயமுறுத்தல்கள், பகிஷ்கரிப்புஇவற்றினூடாகவடக்கு–கிழக்கு மக்களின் வாக்களிப்பு வீதத்தை சரிவடையச் செய்வதன் மூலம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ தனது வெற்றியை உறுதிப்படுத்தப் பார்க்கின்றார், என்று குறிப்பிட்டிருந்தார்.

இதுவரை நடந்த 6 ஜனாதிபதித் தேர்தல்களிலும் தமிழ் மக்கள், எப்போதுமே எதிரணித் தலைவர்களையே ஆதரித்து வாக்களித்துள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையில், தேர்தல் பகிஷ்கரிப்பு என்பது மறைமுகமாக ஆளும் கட்சியை ஆதரிப்பதாகவே அமையும். கடந்த 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் இதற்கு நல்ல உதாரணமாகும்.

ரணில் விக்கிரமசிங்க, மஹிந்த ராஜபக்ஷ இருவரும் 2005 ஆம் ஆண்டு போட்டியிட்ட போது, தமிழ் மக்கள் வாக்களிக்கவில்லை. வாக்களித்த பத்து சதவீதத்திற்கு குறைவான மக்களில் பெருவாரியானோர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்திருந்தனர். இந்த நிலையில் அன்றைய தேர்தலைப் பகிஷ்கரிக்காமல், வாக்களித்திருந்தால் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகியிருக்கக் கூடும். அவ்வாறு நடந்திருந்தால், இந்த சர்வதிகார ஆட்சியோ, குடும்ப ஆட்சியோ வந்திருக்காது. ஏன் இவ்வளவு பெருவாரியான இழப்புக்கள் கூட ஏற்பட்டிருக்காது.

தற்போதைய ஜனாதிபதித் தேர்தலையும் தமிழர் தரப்பு பகிஷ்கரிக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது. பகிஷ்கரிப்பு என்ற கோஷத்துக்கு அப்பால், இந்தத் தேர்தலில் பிரதான இரு வேட்பாளர்களும், தமிழ் மக்கள் தொடர்பில் எதனையும் தெரிவிக்கவில்லை. பின்பு ஏன் இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்ற கருத்தும் ஊட்டப்பட்டு வருகின்றது. இவையிரண்டுமே தமிழ் மக்களின் வாக்களிப்பை முடக்குவதற்கான நடவடிக்கையே.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிக்காமல் விடுவதன் ஊடாக எதனையாவது சாதிக்க முடியும் எனில், பகிஷ்கரிப்பது என்பது நியாயமானதுதான். ஆனால் நடைமுறையில், தமிழ் மக்கள் வாக்களிக்காவிட்டாலும், இலங்கையின் ஜனாதிபதியாக ஒருவர் தெரிவு செய்யப்படத்தான்போகின்றார். அவர்தமிழ் மக்களுக்கு விருப்பமானவரோ இல்லை விருப்பமில்லாதவரோவரக்கூடும்.

தமிழ் மக்கள் பகிஷ்கரித்தமையைக் காரணம் காட்டி எவராலும், எதையும் செய்ய முடியாது. சர்வதேச சமூகம் கூட, தமிழ் மக்கள் அவர்களுக்குரியஆகக்குறைந்த ஜனநாயக உரிமையைப்பயன்படுத்தவில்லை என்ற கண்ணோட்டத்தில் நோக்கும். அது தமிழ் மக்களுக்கான இழப்பாகவே அமையும். தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் ஊடாக, தமிழ் மக்களுக்குத் தனி நாடோ, சுயாட்சியையோ சர்வதேசம் வழங்கப் போவது கிடையாது. கடந்த 2005 ஆம் ஆண்டு தேர்தலை தமிழ் மக்கள் பகிஷ்கரித்தமைக்காக எதுவும் கிடைக்கவில்லை.

எனவே ஜனவரி 8 ஆம் திகதி நடக்கவுள்ள தேர்தலில் தமிழ் மக்கள் பகிஷ்கரிப்பது அல்லது அதற்கு ஒப்பான முடிவைத் திணிப்பதும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பது என்பதும் ஒன்றே.

பயமுறுத்தல் ஊடாகத்தமிழ் மக்களின் வாக்களிப்பைக் குறைப்பதற்குரிய நடவடிக்கைகளையும்ஆளும்கட்சிமேற்கொள்ளக்கூடும் என்று, மனோகணேசன் குறிப்பிட்டிருந்தார். கடந்த வடக்கு மாகாணசபைத் தேர்தலின் போது, இராணுவத்தினரை நேரடியாக அச்சுறுத்தல் நடவடிக்கைக்கு அரசு பயன்படுத்தியிருந்தது. தேர்தலுக்கு முதல் நாள், இரவோடு இரவாக இராணுவத்தினர் செய்த வேலைகள் எல்லாம் மறுநாள் தமிழ் மக்களின் வாக்களிப்பு வீதத்தில் பொய்த்துப் போனது.

அடக்குமுறைகள் காரணமாக, அதனைத் தாண்டி வாக்களிக்க வேண்டும் என்ற வீறாப்புடன் தமிழ் மக்கள் வாக்களித்திருந்தனர். எனவே ஆளும் கட்சி ஜனாதிபதித் தேர்தலின் போது, அடக்குமுறையைப் பிரயோகிக்க நேர்ந்தால் அது வாக்களிப்பை இன்னமும் அதிகரிக்கச் செய்வதுடன், சொந்தக் காசில் சூனியம் வைத்ததாகவே அமைந்து விடும்.


எத்தகைய நிலையிலும் தமிழ் மக்கள் வாக்களித்தே ஆக வேண்டியது கட்டாயமானதாகும். சந்தர்பத்தை தவறவிட்டு அதன் பின்னர், நிலைமை கையை மீறிச் சென்றுவிட்டதே என்று புலம்புவதில் எந்தப் பலனும் இல்லை. தற்போதைய நிலையில், ஒரு வெளி தமிழ் மக்களுக்குத்தேவையாக இருக்கின்றது.

தொடர்ச்சியான அடக்குமுறைகளிலிருந்து, சுவாசிப்பதற்கு ஒரு வெளி தேவையானதாகவே உள்ளது. சமானியன் தொடக்கம், அரச அதிகாரி வரையில் இந்த வெளியை விரும்புகின்றனர். சொல்லமுடியாதசிறைக்குள் சிக்குண்டிருப்பதாகவே தமிழர்கள் உணர்கின்றனர். இதிலிருந்து வெளியே வருவதற்கு தமிழ் மக்களுக்கு ஆட்சி மாற்றம் என்பது நிச்சயம் தேவையான ஒன்றே. தமிழ் மக்கள் ஆட்சி மாற்றத்தை எதிர்பார்க்கும் அதேவேளையில், கடந்த 2010 ஆம் ஆண்டு தேர்தலில் நடத்ததைப் போன்று நடக்கக் கூடாது என்பதையும் எதிர்பார்க்கின்றார்கள். 2010 ஆம் ஆண்டு தேர்தலிலும், தமிழ் மக்கள் ஒரு சுதந்திர வெளி தேவை என்பதற்காக மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகவே வாக்கைப் பதிவு செய்தனர். ஆனாலும் இறுதியில் அது ஏமாற்றத்திலேயே முடிவடைந்தது. இதனால் கடந்த 5 ஆண்டுகளிலும் அதிகமாகவே துன்பங்களைச் சந்தித்துவிட்டனர். எனவே தற்போதைய தேர்தல் அவ்வாறு அமையக் கூடாது என்ற எதிர்பார்ப்புடனே தமது வாக்கைச் செலுத்துவதற்கு தமிழ் மக்கள் தயாராகிவருகின்றனர். தற்போது ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வில்லையாயின் இன்னும் 7 ஆண்டுகளுக்குத் தமிழ் மக்களுக்கு விடிவேயில்லை என்பதுதான் நிலைமை.

ஏனெனில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தற்போதைய ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றால், 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதிதான் அடுத்த 6 ஆண்டுகளுக்குரிய பதவியை ஏற்பார். எனவே தமிழ் மக்களுக்கு 7 ஆண்டுகளுக்கு விமோசனம் என்பது கிடையாது. தற்போதைய கருத்துக் கணிப்பு நிலவரத்தில் மைத்திரிபால 52 சதவீத வாக்குகளையும், மஹிந்த 47 சதவீத வாக்குகளையும் பெறுவார்கள் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது. இதே நிலைமை தொடர்ந்து தேர்தல் வரையில் நீடிக்க வேண்டுமாக இருந்தால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாருக்கு ஆதரவு வழங்கப் போகின்றோம் என்று அறிவிப்பதை இன்னும் கொஞ்சக் காலத்துக்கு தள்ளிப் போட்டால் நல்லது.

**இதே நிலைமை தொடர்ந்து தேர்தல் வரையில் நீடிக்க வேண்டுமாக இருந்தால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாருக்கு ஆதரவு வழங்கப் போகின்றோம் என்று அறிவிப்பதை இன்னும் கொஞ்சக் காலத்துக்கு தள்ளிப் போட்டால் நல்லது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சரியான தருணங்களும் பிழையான முடிவுகளும்

சந்திரசேகர ஆசாத்

எப்போதுமே சரியான நேரத்தில் எடுக்கப்படும் ஒரு சரியான முடிவு வெற்றியை நோக்கியே இட்டுச் செல்வதுண்டு. அதேவேளையில் பிழையான தருணத்தில் எடுக்கும் சரியான முடிவு கூடப் பெரும்பின்னடைவை ஏற்படுத்தி விடும். ஆனால் சரியான ஒரு தருணத்தில் எடுக்கக் கூடிய ஒரு பிழையான முடிவு சில சந்தர்ப்பங்களில் எம்மை மீள முடியாத அதல பாதாளத்திலேயே தள்ளி விடக் கூடிய சாத்தியம் உண்டு.

தமிழ்மக்களின்உரிமைப்போராட்டம் ஆரம்பமான காலம் தொட்டு இன்றுவரை சரியான சந்தர்ப்பங்களைத் தவற விட்டமை தொடர்பாகவும் சரியான முடிவுகளை எடுக்கத் தவறியமை பற்றியும் வரலாறுமுழுவதுமே ஏராளமான உதாரணங்கள் உண்டு.

இப்போதும் மீண்டும் ஒருமுறை தமிழ்மக்கள் முடிவு எடுக்கவேண்டிய தருணத்தில் வந்து நிற்க வேண்டியுள்ளது. அது தொடர்பாக சரியான தீர்க்கதரிசனமான ஒரு முடிவை எடுக்க வேண்டிய கட்டாயமும் உண்டு.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பரப்புரை நடவடிக்கைகள், வன்முறைகள், கட்சித் தாவல்கள் எனத் தேர்தல் களம் கொதிநிலையை அடைந்துகொண்டிருக்கிறது. தபால் மூல வாக்களிப்பும் நிறைவு பெற்றுவிட்டது.

ஆளும் ஐக்கிய சுதந்திரக் கூட்டணியின் சார்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் எதிரணியின் சார்பில் மைத்திரிபால சிறிசேனவும் களத்தில் இறங்கியுள்ளனர். அவர்கள் தமது தேர்தல்விஞ்ஞாபனங்கள்மூலம்தமது எதிர்கால வேலைத் திட்டங்களை முன்வைத்துள்ளனர்.

எனினும் இந்த இருவரில் எவருமே தேசிய இனப் பிரச்சினை தொடர்பாக எந்தவிதமான ஒரு தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்கவில்லை. ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவைப்பொறுத்தவரை தற்சமயம் சமாதானமும் நல்லிணக்கமும் நிலவுவதாகவும் வடக்குக் கிழக்கு அபிவிருத்தி செய்யப்பட்டு வேகமாக முன்னேறி வருவதாகவும் தெரிவித்து வருகிறார். அவரைப் பொறுத்தவரையில்தேசிய இனப்பிரச்சினை என்பது ஒரு தீர்க்கப்பட்டுவிட்ட பிரச்சினை போலவே கருத்துக்கள் வெளிவருகின்றன. அதேவேளை மைத்திரிபால சிறிசேனவோ இனி அமைக்கப்படப் போகும் ஒரு தேசிய அரசின் மூலம் இனப்பிரச்சினை ஆராயப்படும் எனப் பந்தைத் தனது கைகளிலிருந்து எறிந்துவிட்டார்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்த இரு முக்கிய வேட்பாளர்களிடமும் இனப்பிரச்சினை தொடர்பாகத் திட்டவட்டமான எந்தவொரு வழிமுறையும் இல்லை என்பதைப் புரிந்து கொள்ள முடியும். அதேவேளையில் எந்தவொரு சிங்கள ஆட்சியாளர்களும் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்கத் தாமாகவே முன் வந்ததுமில்லை. அதற்கான ஒரு நியாயமான தீர்வுத் திட்டத்தைக்கொண்டிருக்கவுமில்லை.

எந்த வேட்பாளரும் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தாத நிலையில் எந்தவொரு வேட்பாளரையுமே தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டியதில்லை என்ற ஒரு மேலோட்டமான பார்வை எழவும் கூடும். அதில் நியாயம் இல்லை எனச் சொல்லிவிட முடியாது.

ஆனால் நாங்கள் விரும்பினாலென்ன, விரும்பாவிட்டால் என்ன ஆதரித்தால் என்ன, ஆதரிக்காவிட்டால் என்ன இந்தத் தேர்தலில் தெரிவு செய்யப்படும் ஒரு ஜனாதிபதி தான் எங்களை ஆட்சி செய்யப் போகிறார். அவரது அதிகாரம் எங்களின் ஒவ்வொரு விடயங்களிலும் ஆதிக்கம் செலுத்தத்தான் போகிறது. அதாவது நாம் ஒதுங்கி நின்றாலும்அதிகாரம்எம்மைஒதுக்கிவிடாது. எனவே ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக சரியான தருணத்தில் சரியான ஒரு முடிவை எடுத்து எமக்குச் சாதகமான ஒரு சூழலை ஏற்படுத்த இந்தத் தேர்தலைப் பயன்படுத்துவது முக்கியமானதாகும்.

எந்தவொரு ஆளுந்தரப்பும் எமது உரிமைகளைத் தாங்களாகவே தந்துவிடப் போவதில்லை. எமது உரிமைகளைப் பெற எம்மிடம் உள்ள ஒரே ஒரு வழி போராட்டம் தான்.அதுஆயுதப்போராட்டமாகவோ, ஜனநாயக வழியிலானதோ அல்லது சர்வதேச ராஜதந்திர அழுத்தங்கள் மூமானதாகவோ வடிவம் களத்துக்கேற்ப எப்படியும் அமையலாம். ஆனால் போராட்டம் என்பது மாற்று வழி இல்லாத ஒரு பாதையாகும்.

கடந்த காலங்களில் கூட போராட்டங்கள் மட்டுமே இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான சாதகமான நிலைமைகளை உருவாக்கினஎன்பதுவரலாறு. தந்தை செல்வா தலைமையிலான தமிழ் மக்களின் அஹிம்சைப் போராட்டங்களே பண்டா– செல்வா ஒப்பந்தம்; டட்லி – செல்வா ஒப்பந்தம் போன்றவை ஏற்பட வழி வகுத்தன. இளைஞர்களின் ஆயுதமேந்திய போராட்டமே ராஜீவ்– ஜேர்.ஆர் ஒப்பந்தம் உருவாக வழி கோலியது.

விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான போராட்டங்களே பல பேச்சுக்கள், ஒப்பந்தங்கள், சர்வதேசமயப்படுத்தப்படல், தமிழ் மக்கள் ஒரு சக்தியாக நிலைபெற்று நிற்றல் போன்ற ஆரோக்கியமான நிலை உருவாகக்காரணமாய் அமைந்தன. எனவே ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின்பும் கூட நாம் போராடியே தான் எமது உரிமையைப் பெற முடியும் என்பதற்கு மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அதனால் நாம் தேர்தலில் ஒதுங்கிநின்று விட முடியுமா? இல்லை நிச்சயமாக அப்படி இருந்து விட முடியாது. எமது போராட்டங்களை வெற்றியை நோக்கி முன் கொண்டு செல்ல ஒரு வாய்ப்பான சூழலைஉருவாக்க எந்தத் தேர்தலை எப்படிநாம்பயன்படுத்துவது என்பது பற்றியே சிந்திக்க வேண்டியுள்ளோம். அப்படி ஒரு முடிவை எடுக்கும் போது நாம் கடந்த கால அனுபவங்களைக்களத்தில் எடுப்பது பொருத்தமானதாகவே இருக்கும்.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றபோது தமிழ் மக்கள் தேர்தலைப் புறக்கணித்து வாக்களிக்காமல் விட்டனர். ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளுடன் பேச்சுகளை நடத்தியவாறே [illegible] கொண்டகாரணத்தால்தமிழ்மக்கள் ரணிலுக்கு ஆதரவளிக்க மறுத்து விட்டனர். அதன் காரணமாக மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி பீடமேறி 2009 இல் தமிழ் மக்களுக்குப் பேரழிவை ஏற்படுத்தி எமது ஆயுதப் போராட்டத்தைத் தோற்கடித்தார். எமது கதை, பொல்லுக் கொடுத்து அடிவாங்கிய கதையாக முடிந்தது. இதிலிருந்து தேர்தல் புறக்கணிப்பு எப்படி எதிரிக்குச் சாதகமான நிலையைத் தோற்றுவிக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

பலவீனமான தரப்பு வெற்றியை நோக்கி முன்செல்ல பொது எதிரிக்கெதிராக ஐக்கியப்படக் கூடிய சகல சக்திகளுடனும் ஐக்கியப்பட வேண்டும் என்பது ஒரு முக்கிய போர்த் தந்திரக் கோட்பாடாகும். இது அரசியலுக்கும் பொருந்தும்.

இலங்கையின் ஒட்டுமொத்த அரசியலில் நாம் ஒரு பலவீனமான தரப்பாயுள்ள அதேவேளையில் வடக்குக் கிழக்கில் நாம் மிகவும் பலம் வாய்ந்த தரப்பாகும்.

எனவே நாம் எமது பலத்தில் தங்கி நின்றுபலவீனத்தைவெற்றிகொண்டு முன்செல்ல வேண்டும். இன்று ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரு தரப்பிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒரு மிகப் பலமான சக்தி என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்க முடியாது. அதிகார பலம், அரச நிர்வாக பலம், இராணுவ பலம், பணபலம், பாதாள உலகக் கோஷ்டிகளின் பலம், இனவெறியர்களின் ஆதரவு எனப் பல்வேறு பலங்களைக் கொண்டவராக விளங்குகிறார். நிறைவேற்று அதிகாரம் மூலம் நீதித்துறை, சட்டம், ஒழுங்கு என்பவற்றைத்தான் நினைத்த வகையில் கையாளுமளவுக்கு அதிகாரம் கொண்டவராக விளங்குகிறார்.

இவர் மீண்டும் அதிகாரத்துக்கு வருவாரானால் இப்போது உள்ளதைவிட மேலும் பலம்பெற்ற சர்வாதிகாரியாக மாறுவார். அப்படியான ஒரு கொடிய சர்வாதிகாரியுடன் எமது உரிமைப் போராட்டத்தை முன் கொண்டு செல்வது எவ்வளவு கடினமானது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஜனநாயகப்போராட்டங்கள் என்பனநினைத்துப்பார்க்க முடியாத வகையில் ஒடுக்கப்படும். இராணுவ ஒடுக்குமுறைகள், காணி அபகரிப்பு போன்றவை மேலும் மேலும் விஸ்தரிக்கப்படும்.

அதேவேளையில் மஹிந்த ராஜபக்ஷவுடன் ஒப்பிடும் போது மைத்திரிபால சிறிசேன ஒரு பலவீனமான தரப்பேதான். அதுமட்டுமன்றி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதன் மூலம் அவரின் அதிகாரங்களும் மட்டுப்படுத்தப்படும். அவரது நாடாளுமன்றம் கூடப் பல கட்சிகளின் ஒரு கூட்டு அதிகாரமாகவே இருக்க முடியும். அவருக்கு சந்தர்ப்பங்களில் தமிழ், முஸ்லிம், மலையகத் தரப்பினரின் ஆதரவும் தேவைப்படும். எனவே மைத்திரிபாலஆட்சிக்குவருவாரானால் எமது உரிமைப் போராட்டங்களை முன்கொண்டு செல்வதற்கான வாய்ப்புகள் அதிகமாகவே அமையும். எனவே பலமான ஒரு எதிரியை விழுத்தப் பலவீனமான எதிரியுடன் இணைவதும் பின்பு பலவீனமான எதிரியுடன் போராடி எமது உரிமைகளைப் பெறுவதும் அரசியலில் அப்படி ஒன்றும்புதியதந்திரோபாயமல்ல.


இதேவேளையில் தமிழ் மக்கள் அனைவரும் தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் மூலம் தமது ஐக்கியத்தையும், இரு தரப்பின் மீதும் நம்பிக்கையின்மையையும் வெளிப்படுத்த வேண்டும் எனச் சிலர் கூறி வருகின்றனர். தமிழ் மக்கள் தமது ஐக்கியத்தைப் பல முறை மீண்டும் நிரூபித்துவிட்டனர். தொடர்ந்தும் தமிழ் மக்கள் தமது ஐக்கியத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். அதற்குத் தேர்தலைப் பகிஷ்கரிப்பதுதான் ஒரே வழியாகும்.

இன்றும் சிலர் மஹிந்த ஆட்சியில் இருந்தால் மட்டுமே சர்வதேசம் தமிழ் மக்கள் பிரச்சினைகளில் அக்கறை காட்டி அழுத்தங்களைப் பிரயோகிக்கும் எனவும் கூறி வருகின்றனர்.

சர்வதேசம் ஒரு நாட்டின் விவகாரங்களில் தலையிடுவதற்கு ஒருவரையறை உண்டு. அது மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் என்பன தொடர்பாகவே அக்கறை காட்டும். எவர் ஆட்சியில் இருந்தாலும் இந்த நடவடிக்கைகள் தொடரும். அதற்கு ஓர் எல்லை உண்டு. ஆனால் தேசிய இனப்பிரச்சினை போன்ற உள்நாட்டு விவகாரங்களில் சர்வதேசம் தலையிடப் போவதில்லை. எனவே தேர்தலைப் பகிஷ்கரிப்பது மஹிந்தவே அதிகாரத்தில் இருக்க வேண்டும்எனநினைப்பதுபோன்ற விடயங்கள் மிகுந்த அபாயகரமானவை. அவை சரியான தருணத்தில் எடுக்கப்படும் பிழையான முடிவுகளாகும்.

ஆனால் தமிழ் மக்கள் சரியான நேரத்தில் சரியான முடிவுகளை எடுப்பதன் மூலம் எமது உரிமைப் போராட்டம் முன்செல்வதற்கு வாய்ப்பான களத்தை உவாக்குவார்கள் என்பது மட்டும் நிச்சயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# பேய்ப் பட ரசிகர்களுக்கு வித்தியாசமான பேயை அறிமுகப்படுத்தும் படம் பிசாசு

மாடி மனைக் குடியிருப்பில் தனியாக வசித்துவரும்இளம் இசைக் கலைஞர் சித் தார்த், சினிமாவில் வயலினிஸ்ட். ஒரு ஸ்கூட்டர் விபத்துக்குள்ளாவதைப் பார்க்கும் சித்தார்த், தலையில் படுகாயத்துடன் சரிந்து விழும் இளம் பெண்ணைப் பதற்றத்துடன் மருத்துவமனைக்குக் கொண்டு செல்கிறார். தன் கையைப் பிடித்த படி உயிரை விடும் பெண்ணின் முகத்தைக் கண்டு நொறுங்கிப் போகிறார். அவள் விட்டுச் சென்ற ஒற்றைச் செருப்புடன் வீடு திரும்புகிறார். வீட்டுக்குள் வருவது அந்த ஒற்றைச் செருப்பு மட்டு மல்ல... அதன் பிறகு படத்தின்மையத்தை ஆக்கிரமித்துக் கொள்ளும்பேய் ஒவ்வொருவரையும் மிரட்டி எடுக்கிறது. பேய் இருப்பதை உணர்வது, பயந்து நடுங்கும் மனிதர்கள், பேயை விரட்டும் முயற்சிகள், பேயின் வருகைக்குக் காரணமறியும் முயற்சிகள் என்று செல்லும் படம் எதிர்பாராத திருப்பத்துடன் முடிகிறது.

வழக்கமான பேய்க் கதைகள் போலவே பேயை வைத்து மிரட்டினாலும் பேயின் இன்னொரு பரிமாணத்தை அதற்கான காரணத்தோடு காட்சிப்படுத்திய விதத்தில் மிஷ்கின் சபாஷ் போடவைக்கிறார். பார்வையாளர்களுக்குப் பிசாசு தொடர்பான புது அனுபவத்தை ஏற்படுத்துகிறார். பிசாசு ஏன் சித்தார்த் வீட்டுக்கு வந்தது என்பதற்கான காரணம் தேவதைக் கதைகளின் ஈரத்தைக் கொண்டது. கதை முன்னகரும் விதத்திலும் தேவதைக் கதைகளுக்கே உரிய வியப்பை அடையமுடிகிறது.

காட்சி ரூபமாகக் கதை சொல்வதில் தேர்ச்சி பெற்ற மிஷ்கின் இதிலும் காட்சிப் படிமங்கள் மூலம் நம்மைக் கவர்கிறார். ஒளிப்பதிவாளர் ரவிராயும் இசையமைப்பாளர் அரோல் குரோலி ஆகியோரும் மிஷ்கினுடன் இணைந்து வளமான அனுபவத்தை வழங்குகிறார்கள். சுரங்க நடைபாதையில் உருப்பெறும் பிச்சைக்காரர்கள் சித்திரம் கவித்துவமானது. பிசாசின்கரங்கள்தகப்பனைத்தொடும் காட்சி நெகிழ்ச்சியூட்டுவது.

வித்தியாசமான கதையையும் அதற்கேற்ற திரைக்கதையையும் உருவாக்கியுள்ள மிஷ்கின், தனக்கே உரிய சில பலவீனங்களின் மூலம் திரைக்கதையின் தாக்கத்தை நீர்த்துப் போகச் செய்கிறார். ஏராளமான முடியுடன் சற்றே தலையைச் சாய்த்துக்கொண்டு வித்தியாசமான உடல்மொழியுடன் வரும்இளைஞன், பாத்திரங்கள் பேசும்முறை, சண்டை போடும் விதம், கால்களைப் படம் பிடிக்கும் கெமரா, உறைந்து நிற்கும் காட்சிப் படிமங்கள் என மிஷ்கின் படங்களுக்கே உரிய தனித்துவங்கள் விரவிக் கிடக்கின்றன. இவை படைப்புக்கு வலிமை சேர்க்கவில்லை. சுமார் இரண்டு மணி நேரம் மட்டுமே ஓடும் படத்தில் பல காட்சிகள் கூறியது கூறலாகிச் சலிப்படைய வைக் கின்றன. பேயின் இருப்பையும் அதன் சுபாவத்தையும் காட்ட இத்தனை காட்சிகள்தேவையா? பேயின்தன்மையைமாற்றும்கதையில்பேயின் தோற்றத்தில்மட்டும்பழைய அடையாளமே இருப்பது ஏன்? மகளின் பிணத்தைஅப்பாபாதுகாத்துவைக்கும்விதம்நம்பகத்தன்மைஅற்று, செயற்கையான திருப்பமாகவே துருத்திக் கொண்டிருக்கிறது.

மிஷ்கினின் வார்ப்புக்குள் நின்று தன் பாத்திரத்தைத் திறம்படச் செய்திருக்கிறார் இளம் நடிகர் நாகா. நாயகி பிரயாகா வரும் காட்சிகள் மிகக் குறைவு என்றாலும் மனதில் நிற்கிறார். ராதா ரவி தனது இயல்பான நடிப்பால் ரசிகர்களின் நெஞ்சத்தை அலட்சியமாகக் கிள்ளிச் செல்கிறார். நாயகனின் நண்பர்கள், அம்மா, பக்கத்து வீட்டு அன்றி, ஆட்டிசம் பாதித்த சிறுவன், ஆட்டோ டிரைவர், வெட்டிஅறிவுஜீவி இளைஞன் என எல்லாப் பாத்திரங்களுக்கும் நடிகர்கள் தேர்வு பொருத்தமானது. ஆரம்பம்முதல் இறுதி வரை படத்தைத் தூக்கி நிறுத்துபவை பின்னணி இசை, ஒளிப்பதிவு, எடிட்டிங். இளம் இசையமைப்பாளர் அரோல் குரோலி வயலினில் விளையாடி இருக்கிறார். அந்த ஒற்றைப் பாடலும் அது உருவாக்கப்பட்ட விதமும் அற்புதம். பேய்ப் படங்களுக்கே உரிய மிரட்டல் காட்சிகளுக்குக் கூடுதல் வலு சேர்த்திருக்கிறது ரவி ராயின் கேமராவும், கோபிநாத்தின் எடிட்டிங்கும். இவை இரண்டுமே தனித்துத் தெரியாமல், காட்சிகள் மீது ஒட்டுமொத்த கவனத்தைக் குவியச் செய்யும் வகையில் பொருந்துவது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக, பேய்ப் படங்களை இரண்டாக வகைப்படுத்தலாம். 'ஈவில் டெட்', 'எக்ஸார்ஸிஸ்ட்' முதலான ரத்தமும் கோரமும் நிறைந்த தீவிர மிரட்டல்படங்கள் ஒருவகை. சிக்ஸ்த் சென்ஸ் முதலான, அதீத அச்சுறுத்தல் இல்லாத சஸ்பென்ஸை உள்ளடக்கிய சைக்கலாஜிக்கல் த்ரில்லர் மற்றொரு வகை. மிஷ்கின் இதில் இரண்டாவது வகையைத் தேர்ந்தெடுத்துள்ளார். பாடல்களையும் காமெடி ட்ராக்கையும் ஒதுக்கிவிட்டு, அசல் சினிமா அனுபவத்தைத் தர முனையும் அவரது முயற்சி பாராட்டப்பட வேண்டியது. தனது தனித்துவங்களின் மீது இருக்கும் பற்று குறைந்தால் மிஷ்கினால் மேலும் நேர்த்தியான அனுபவத்தைத் தர முடியும்.

# லிங்காவுமா?

ஒரு படம் வெளிவருவதற்கு முன் அந்தப் படத்தின் கதை தன்னுடையது எனச் சிலர் பிரச்சினையை எழுப்புவதும், வழக்குத் தொடுப்பதும் சமீபகாலத்தில் அதிகமாகிவிட்டது. அப்படிப்பட்ட விவகாரங்களைச் சம்பந்தப்பட்ட படக் குழுவினர் படம் வெளிவருவதற்குள் சமாளிப்பது பெரிய விடயம். பரபரப்பாக எதிர்பார்க்கப்படும் ஒரு படம் வெளியாகும் முன் அதன்மீது குவிபவை கதைத் திருட்டுப் வழக்குகள். படம் வெளியான பின் படக்குழு சமாளிக்க வேண்டியிருப்பது சமூக வலைத்தளங்களை. படம் மொக்கை என்று பரப்புரை செய்வதைக்கூடச் சம்மந்தப்பட்டவர்கள் பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை. மாறாக அது எந்த ஆங்கில, அல்லது உலக சினிமாவின் பிரதி, காட்சிகளை எந்தெந்தப் படங்களிலிருந்து உருவியிருக்கிறார்கள் என்பதை யூடியூப் காணொளிகளோடு புட்டுப் புட்டு வைப்பதால் குட்டு வெளிப்பட்டுவிடுகிறதே என்று கவலைப்படுவார்கள்.

இதுவரை சமீபத்திய ரஜினி படங்களுக்கு அப்படி ஒரு பிரச்சினை வந்ததில்லை. தற்போது 'லிங்கா' படத்தை வறுக்க ஆரம்பித்துவிட்டார்கள். 'லிங்கா' படத்தின் ஆரம்பத்தில் வரும் ஒரு நகைக் கண்காட்சியில் பேரன் ரஜினி மூன்று கோடி ரூபாய் மதிப்புள்ள ஒரு நெக்லஸைத் திருடிச் செல்வார். அப்போது ஒரு குறுகலான ஒரு சின்ன அறைக்குள் ரஜினியும், அனுஷ்காவும் மாட்டிக் கொள்வார்கள். அந்த அறையிலிருந்து கொண்டு, காந்தத் துண்டின் உதவியுடன் அறைக்கு வெளியே மாட்டி வைக்கப்பட்டுள்ள சாவியை, ரஜினி தன் கைக்குக் கொண்டு வரும் காட்சி ஒரு ஹொலிவுட் படத்திலிருந்து பிரதி அடிக்கப்பட்டுள்ளதாகப் போட்டு உடைத்திருக்கிறார்கள்.

1966ஆம் ஆண்டு வெளிவந்த 'ஹௌ டு ஸ்டீல் எ மில்லியன்' என்ற படத்தில் மேலே குறிப்பிட்டுள்ள காட்சி அப்படியே இருக்கிறதாம். வில்லியம் வைலர் இயக்கிய இந்தப் படத்தில் ரஜினியும் அனுஷ்காவும் சிக்கிக்கொண்டதுபோல் சிக்கிக் கொண்டவர்கள் பீட்டர் ஓ டூல், ஆட்ரி ஹீப்பர்ன் ஆகிய நடிகர்கள். அடுத்து 'லிங்கா' படத்தின் கிளைமாக்ஸ் பலூன் காட்சி. இந்தக் காட்சிக்காக அவர்கள் எந்த ஹொலிவுட் படத்தையும் பார்க்கவில்லை போலிருக்கிறது. தர் இயக்கத்தில் 1969ஆம் ஆண்டு வெளிவந்த 'சிவந்த மண்' இந்தப் படத்தின் கிளைமாக்ஸ் காட்சியில் நாயகி காஞ்சனாவை, பலூனில் கடத்திச் செல்வார் வில்லன் எம்.என். நம்பியார். அப்போது, நாயகன் சிவாஜி பலூனுக்குள் தாவி ஏறி நாயகியைக் காப்பாற்றுவார். அந்தக் காட்சிதான் அப்படியே 'லிங்காவில்' நவீனமயமாகியிருக்கிறது என்கிறார்கள் இணையவாசிகள்



படத்தின் மையத்தை ஆக்கிரமித்துக் கொள்ளும் பேய், ஒவ்வொருவரையும் மிரட்டி எடுக்கிறது. பேய் இருப்பதை உணர்வது, பயந்து நடுங்கும் மனிதர்கள், பேயை விரட்டும் முயற்சிகள், பேயின் வருகைக்குக் காரணமறியும் முயற்சிகள் என்று செல்லும் படம் எதிர்பாராத திருப்பத்துடன் முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேலைக்குள்ளே வாழ்வின் பொருள்...

ஜானி டி. விம்ப்ரே

நான் கூகுளிலிருந்து ஏன் வெளியேறினேன்? என்ற ஒரு குறும்படத்தை யூடியூபில் பார்க்க நேர்ந்தது.

கூகுள் ஒரு கனவு நிறுவனம். ஒரு பணியாளரால் நினைத்துப் பார்க்க முடியாத அத்தனை சௌகரியங்களையும் கொண்ட அலுவலக வளாகம் அவர்களுடையது. ஓர் உல்லாசக்கூடத்தில்கூட கிடைக்காத கேளிக்கைகள் அங்கு உள்ளன. உடற்பயிற்சி செய்யலாம். படிக்கலாம். சைக்கிள் ஓட்டலாம். படுத்து உறங்கலாம். வேலை கூட செய்யலாமாம்!

### சொர்க்கத்தின் நிர்ப்பந்தம்

மக்களைக் கவர்வது இந்த வசதிகள் தரும் கவர்ச்சிகள் அல்ல. அதன் அடிநாதமாய் உள்ள சுதந்திர உணர்வு. பரிபூரண சுதந்திர உணர்வை அனுபவித்தவர்கள் அதைத் துறப்பது மிகவும் கடினம். அந்தக் குறும்படத்தில் இது போல இன்னொரு இடம் வாய்க்காது. இருந்தும் இதைத்துறந்து புது அனுபவத்தைத் தேடிப் போகிறேன் என்று செல்கிறார் அந்த இளைஞர். மற்றவர் பொறாமைப்படும் பணியிடத்தை வேண்டாம் என்று உதற எப்படி மனம் வந்தது?

சொர்க்கம் என்னை நிர்ப்பந்தம் செய்வதாய் உணர்ந்தால் அதிலிருந்து சுவர் ஏறிக் குதித்து நான் நரகத்துக்குப் போகத்தயங்க மாட்டேன் என்று ஒரு கவிஞர் எழுதியது நினைவுக்கு வந்தது. இந்த இளைஞர் கூகுளில் எந்தப் பிரச்சினையுமில்லை என்று அதன் அத்தனை வசதிகளையும் படம் பிடித்துக் காட்டி கூகுளுக்கு நன்றி என்றுதான் கிளம்புகிறார்.

ஆனால் ஒரு புதுக் கிளர்ச்சியைத் தேடி அவர் போவதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. எந்த உச்ச அனுபவமும் தரை தொடும். நெருக்கடிகளைத் தரும் புது அனுபவங்களைத் தேடிப்போகும் இளைஞர்கள் பெருகிவிட்டார்கள் எனத் தோன்றுகிறது.

### வெற்றியின் அலுப்பு

மிக நல்ல நிறுவனங்களிலிருந்தும் பெரிய காரணம் எதுவுமின்றி விலகுவோர் ஓர் உளவியல் தேவைக்காகத்தான் வெளியேறுகின்றனர்.

ஐ.டி. கம்பெனி வாலிபர் விவசாயம் செய்ய முயலுகிறார். கார்ப்பரேட் மானேஜர் ஒருவர் வேலையைத்துறந்துவிட்டு கிராமத்தில் பள்ளிக்கூடம் நடத்துகிறார். இன்னொரு கார்ப்பரேட் நண்பர் பக்தி மார்க்கத்தில் தீவிரமாக ஈடுபட்டுப் பெரிய வேலையைத் துறந்துள்ளார். மனித வளம் படித்த என் மாணவி தற்போது தன் சொந்தப் பணத்தில் பிராணிகள் காப்பகம் நடத்துகிறார்.

> வாழ்க்கைத் தேவைக்குப் பொருள் தேடி அலைபவர்கள் பலர். வாழ்க்கையின் பொருள் தேடி அலைபவர்கள் சிலர். பொருளாதார வசதி நிறைய உள்ள பணிகளில்தான் உளவியல் வெறுமை அதிகம் உண்டாகிறது என்பது உண்மை தான்.

பொறியில் மாட்டியதுபோல பொறியியலில் மாட்டிய மாணவர்கள் பலர் டிஜிட்டல்கெமராவைதூக்கிக்கொண்டு படம் எடுக்க ஏற்கனவே வந்து விட்டார்கள். அதே போல படிக்கும் படிப்பை கடைசி வருடத்தில் விட்டு விட்டு வேறு துறைப் படிப்பைத் தேடி ஓடும் போக்கும் அதிகரித்து வருகிறது.

### இவர்களின் தேவை என்ன?

வெற்றிகூட அலுப்பைத்தரும். சௌகரியத்தில் கூட சுவாரஸ்யம் குறையும். மனம் ஒரு புரியாத இடத்தைத் தேடி ஓடும். எங்கு செல்வது என்று தெரியாவிட்டாலும் இருக்கும் இடம் தனதல்ல என்று தெளிவாகத் தெரியும். ஒரு மனித வள மேலாளருக்கும் வேலையை ராஜினாமா செய்த ஒரு மேலாளருக்கும் நடந்த உரையாடல் இது:

நீங்கள் வேலையை விட்டுப் போகும் காரணம் சொல்லுங்கள்?

நான் இங்கு வேலையில் இருப்பதற்கான காரணமே எனக்குத் தெரியவில்லையே!

சம்பளம் போதவில்லை. பதவி உயர்வு கிடைக்கவில்லை. வசதிகள் போதவில்லை. இப்படிக் காரணங்கள் இருந்தால் பரவாயில்லை. எனக்கு என்ன வேண்டும் என எனக்குத் தெரியவில்லை? என்றால் என்ன செய்வது?

### ஆன்மிகத் தேடல்

படித்து நல்ல வேலையில் இருக்கும் இளைஞர்கள்தான் சாமியார் மடங்களிலும் சேர்கிறார்கள். தீவிரவாத அமைப்பிலும் சேர்கிறார்கள். என்றார் ஒரு பேராசிரியர். அவர் சொன்னதில் உண்மை இல்லாமல் இல்லை.

இன்றைய பணிச்சூழல் ஓர் உள் மன நெருக்கடியை ஏற்படுத்தி ஒரு ஆன்மிகத் தேடலை தோற்றுவிக்கிறது என்று தோன்றுகிறது. ஆன்மிகம் என்றால் கடவுள் அல்லது மதம் சம்பந்தமானதாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. ஏன் என்ற கேள்வி மட்டும் போதும். நாம் செய்யும் பணியின் நோக்கம் பற்றி யோசிக்கையில் ஒரு வெறுமை பிறந்தால் இந்தத் தேடல் தீவிரப்படும். அந்த நேரத்தில் மனதுக்கு நெருக்கமாகப்படும் மதமோ, கொள்கையோ, செயல்பாடோ ஒரு புதிய பரிமாணத்துடன் காணப்படும். அதை நோக்கி மனம் பயணிக்கையில் அவர்களின் வாழ்க்கை திசை மாறிப் போகின்றது.

எங்கள் காலத்தில் வேலை கிடைச்சாலே பெரிய விடயம். அதுவும் நல்ல வேலை என்றால் எந்த வலி வந்தாலும் பொறுத்துக் கொள்ளக் காரணம் அவ்வளவு குடும்பப் பொறுப்புகள் இருக்கும். எல்லாரையும் கரையேற்றி தனக்காக ஒரு வீடு கட்டி அமர்ந்தாலே முக்கால் வாழ்க்கை முடிந்துவிடும். அதனால் இந்த மாதிரி பாதியில் போகும் எண்ணமும் வராது. தைரியமும் இருக்காது. இன்றைக்கு ஒரு சின்னக் குடும்பத்துக்கே பெரிய சம்பளம் வருகிறது. வேற குடும்பப் பொறுப்புகள் கிடையாது. இப்படியான மனம் இப்படித் தறிகெட்டுத் தானே போகும்? என்றார் ஒரு முதியவர்.

### வாழ்வின் பொருள்

வாழ்க்கைத் தேவைக்குப் பொருள் தேடி அலைபவர்கள் பலர். வாழ்க்கையின் பொருள் தேடி அலைபவர்கள் சிலர். பொருளாதார வசதி நிறைய உள்ள பணிகளில் தான் உளவியல் வெறுமை அதிகம் உண்டாகிறது என்பது உண்மைதான். நம் வாழ்க்கையின் குறிக்கோளுக்கு நெருக்கமான ஒன்று நாம் செய்யும் வேலையிலேயே கிடைத்து விட்டால் வெளியே தேடி அலைய வேண்டாம். அல்லது அப்படிப்பட்ட வேலையை முதலிலேயே தேடிக் கொள்வது புத்திசாலித்தனம்.

---

கேள்விகள் கேட்டவன்
ஒரு நாள் மட்டுமே
மடையனாகின்றான்
கேட்காதவனோ
வாழ்நாள் முழுவதும்
மடையனாகின்றான்
தமிழ்ப் பாடச் சிந்தனை
மூளை நரம்புகளின்
பதிவாய்...
"எது சந்தோஷம்?"
ஹாட்லி மேடைக்
கேள்வி
பார்வையாளனான
என்னைப்
பங்காளியாக்க
எட்டடுக்கு
வாழ்க்கையிலே
அடுக்கடுக்கு
கோணங்களாய்...
தாயின் மடிப்படுக்கை
குழந்தைக்கு அது
சந்தோஷம்
பள்ளியின் கடைசி மணி
பாலகனுக்களிக்கும் அது
சந்தோஷம்
மழலையின் நூறு
கேள்வி-பதில்
சொல்கையில் அது
சந்தோஷம்
படலையின் காத்திருப்பு
விடலைக்கு அது
சந்தோஷம்
குண மணாளனின்
கைப்பரிசம்
கன்னிக்கு அது சந்தோஷம்
சுகமான தாய்மை
பெண்ணுக்கு அது
சந்தோஷம்
ஆணுக்குக் கை நிறைந்த
தொழில் அது சந்தோஷம்
மண்ணுக்கு மரம்
சந்தோஷம்
மார்கழிக்கு மழை
சந்தோஷம்
காற்றுக்குப் பூ மணம்
சந்தோஷம் இரவுக்குப்
பகல் சந்தோஷம்
வாழ்வுக்கு வழி சந்தோஷம்
பொக்கைப் பாட்டிக்குத்
திடீர் ஜமன் சந்தோஷம்
தவசிக்குத் தவம்
சந்தோஷம்
கடைசியிலே நிரந்தரமாய்
தன்னையே அறிவது
பட்டினத்தாருக்கு
அது பேரானந்தம்.

ஏ.ம்.ஜெயசேனல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாட்சி

■ கணேசதாசன்

பானுவுக்கும் அவளுடைய மூன்று பிள்ளைகளுக்கம் மிகுந்த சந்தோஷமான நாள். தடுப்பில் இருந்த நகுலன் இன்று விடுதலை. அந்த செய்தி கேட்டதில் இருந்து அவளின் உள்ளத்தில் பெரும் சந்தோசம். போர் நிறைவடைந்து எல்லோரும் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்தபோது, நகுலன் ஓமந்தை இராணுவ முகாமில் வைத்துக் கைது செய்யப்பட்டு மூன்றாண்டுகளாகப் புனர்வாழ்வு அளித்து இன்று சமூகத்தோடு இணைக் கும் நாள்.

யாழ்ப்பாண வீரசிங்கம் மண்டபத்தில் அரங்கு நிறைந்த கூட்டம் எல்லோருக்கும் சந்தோசம். விடுதலையாகும் விடுதலைப்புலி உறுப்பனர்களின் முகத்தில் ஓர் ஏக்கம். நிகழ் வில் உரையாற்றிய பொறுப்பு வாய்ந்தஓர் இராணுவ அதிகாரி "உங்களுக்கு இனி நல்ல காலம் நீங்க சுகந்திரமாக எதையும் செய்யலாம், எங்க ஆட்களால் உங்களுக்குத் தொந்தரவு இல்லை" எனப் பல கருத்துக்களை முன்வைத்தார்.

நகுலன் விடுதலை பெற்று தனது மனைவி பிள்ளைகளைக் கட்யணைத்து முத்தமிட்டான். அவர்கள் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. நாம் இன்று விடும் கண்ணீர் இறுதியானது என அவர்கள் நினைத்திருக்கலாம்.

விடுதலைப் புலிகளில் இருந்த நகுலன், அவர்களின் படையணி ஒன்றுக்கு நிர்வாகப் பொறுப்பாளராக இருந்தவன். திருமணத்துக்குரிய வயதுவர அவர்களே நகுலனுக்குத் திருமணம் செய்து வைத்தனர். இன்று விடுதலையாகும் நகுலனுக்குத் தனது குடும்பத்தை எப்படிக் காப்பாற்றப் போறேனோ என்ற ஏக்கம் அவன் மனதில் கலக்கத்தை ஏற்படத்தியது.

விடுதலையான புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்தவர்களை இராணுவத்தினர் ஒரு பஸ்சில் ஏற்றிக்கொண்டு அவர்களின் வீடுகளில் விட்டனர்.

நகுலனின் வீடு புதுக்குடியிருப்பு கைவேலியில் அரை ஏக்கர் திட்டத்தில் உள்ளது. விடுதலையான நாளில் இருந்து நகுலனின் வேலை தேடும் பணி மிக மூர்க்கத்தனமாக நடந்தது. தெரிந்தவர்கள் எல்லோரிடமும் "வேலையிருந்தால் சொல்லுங்கோ" என சொல்லி வைத்தான். வீட்டுச்சீவியம் படுமோசமாக இருந்தது. கொடுக்கும் நிவாரண உதவிகளும் இப்போது இடை நிறுத்தியாச்சு. அவர்கள் பசியை பச்சையரிசிக் கஞ்சிதான் ஓரளவுக்குத் தீர்த்தது.

ஒருமாதிரியாகப் புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் உள்ள தனியார் வங்கி ஒன்றுக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் வேலையொன்று நகுலனின் நண்பனின் உதவியால் கிடைத்தது. மாதம் பதினைந்தாயிரம். பகலும் இரவும் மாறிமாறி வேலை வரும். ஒரு நாளைக்குப் பன்னிரண்டு மணி நேரம் வேலை செய்ய வேண்டும்.

மறுமொழி ஏதுமின்றி சம்மதித்த நகுலன் வேலையை செய்யத் தொடங்கினான். லீவு எடுத்தால் சம்பளம் வெட்டுப்படும். லீவு ஏதும் எடுக்காமல் நகுலன் வேலை செய்தான். ஒரு நாள் இரவு நல்ல மழை, வேலை முடிந்து வீட்டுக்கு வந்த நகுலனுக்கு பானு பெரும் முறைப்பாடு ஒன்றை செய்தாள். "இரவில இஞ்ச படுக்கவே பயமாக்கிடக்கு. ஓரே நாய்கள் குரைக்குது, ஆட்கள் வேற நடமாடுற மாதிரி இருக்கு, சாப்பிடாம இருந்தாலும் பரவாயில்லை. இனி நீங்க இரவு வேலைக்குப் போக வேண்டாம். பிள்ளைகளும் அழுதுகொண்டு, அப்பா எங்களுக்கு பயமா இருக்கு"

அவர்கள் சொன்னதை நகுலனால் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தாலும் வீட்டின் நிலைமையால் உடனடியாக முடிவெடுக்க முடியவில்லை. அன்றிரவும் ஆட்கள் நடமாடுவதும், நாய்கள் குரைத்துக்கொண்டே இருந்தன. பாத்தியலே இப்படித்தான் நேற்றும் நகுலன் அன்றிலிருந்து வங்கி பாதுகாவலர் வேலைக்கு வரமாட்டேன் என பொறுப்பானவருக்கு அறிவித்தான். மீண்டும் வேலை தேடலானான்.

நகுலனுடன் தடுப்பிலிருந்து வந்த குணா இப்ப நல்ல மேசன் தொழிலாளியாகி விட்டான். மேசன் வேலைக்குரிய பொருள்களுடன் சைக்கிளில் சென்றகுணாவை கைவேலி கணேசவித்தியாலயத்துக்கு முன்னால் வைத்துக் கண்டான் நகுலன்.

"மச்சான் டேய் வேலையிருந்தால் சொல்லடா. என்ன வேலை என்றாலும் பரவாயில்லை"

எனக்கொரு உதவியாள் தேவை இப்ப வாறியா. நகுலனுக்குப் பெரும் சந்தோசம். உடனேயே குணாவுடன் சென்றான்.

கைவேலிக் கிராமத்தில் இந்தியன் அரசாங்கத்தின் உதவியால் பல வீடுகள் கட்டப்பட்டுக்கொண்டிருந்தன. அதில் பல வீடுகளை குணாவே கட்டிவந்தான். நகுலனுக்கு சீமெந்து வேலை புதிதாக இருந்த படியால் அவனுக்குப் பெரும் சிரமமாக இருந்தது.

சுண்ணாம்பு வெக்கையில கால்கள் புண்ணாகிப்போயின வலிகளை பொருட்படுத்தாது வேலை செய்தான். அதுவே பழக்கமாகவும் போய்விட்டது. குணாவுக்கு உதவியாக நின்று மூன்று வீடுகள் கட்டிய பிறகு நகுலனும் மேசன் ஆகிவிட்டான். அவனும் தனக்கொரு உதவியாளை வைத்து வேலை செய்யத் தொடங்கினான். நகுலனும், குணாவும் சேர்ந்து இந்தியன் வீட்டுத்திட்ட வீடுகளைக் கட்டி முடித்தனர். இவர்கள் இருவரும் புதுக்குடியிருப்பு பகுதியில் மிகச்சிறந்த மேசன் எனப் பேரும் எடுத்தாச்சு.

நகுலன் என்னதான் தலைக்கு மேல வேலை இருந்தாலும், இரவு வீட்டுக்கு சென்று விடுவான். பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பது, மனைவிக்கு சமையலுக்கு உதவிசெய்வது எனக் குடும்பத்தில் கண்ணும் கருத்துமாய் இருந்தான். "நாங்க பட்ட கஸ்ரமெல்லாம் எங்களோடேயே போக வேண்டும். பிள்ளையளை வடிவா படிக்க வைக்கவேணும்" என பானுவுக்கு அடிக்கடி சொல்லிக் கொண்டே இருப்பான்.

நகுலனின் குடிசை வாழ்க்கைக்கு ஒரு முற்றுப்புள்ளி வந்து விட்டது. புதிய இந்தியன் வீட்டுத்திட்டம் பெறும் பெயரில் நகுலனின் பெயரும் கிராமசேவையாளர் அலுவலகத்தில் ஒட்டப்பட்டிருந்தது. உடனடியாக வீட்டு வேலைகள் தொடங்கியாச்சு. நகுலன் வீடுகட்டுவதற்கு அத்திவாரம் வெட்டிக் கொண்டிருக்கும் போது அவனுடன் பாடசாலையில் படித்த நண்பன் சுபன் வந்தான்.

"என்னடா வீடும் கட்டவெளிக்கிட்ட போல."

'வா வா நீ சும்மா வரமாட்டாய் ஏதும் அலுவல் என்டாத்தானே வருவ. சொல்லு. என்ன அலுவல்"

"அதெடாப்பா ஐ.நா. போர்க்குற்ற விசாரணைக்குப் போராலா பாதிக் கப்பட்ட எங்களப்போல ஆக்க ளிட்ட இருந்து சாட்சி சொல்லச் சொல்லி எங்கட எம்.பி. கேட்டவர் நீ வடிவா எழுதித் தந்தாய் என்றால் அத நான் அனுப்பி விடுவன், எங்கட இனம் பட்ட துன்பத் துக்கு அதாலயாவது ஒரு தீர்வு வரட்டும். "இப்பத்தான் தடுப்பால வந்து கொஞ்சக்காலமாகுது அதிக்கிடையில ஏன் இந்த தேவையில்லாத வேல."

என்னடா நகுலன், நீயே இப்படிப் பயந்தா? யார் தெளிவா சாட்சி சொல்லிறது? உண்மைய சொல்லுறதுக்கு ஏன் பயப்படுணும். சரி சரி நாளைக்கு வா. நான் இரவு எழுதிப்போட்டு தாரன். இத வெளியில யாருக்கும் சொல்லிப்போடதே. நானும் நேற்று எல்லாம் வடிவ எழுதி அனுப்பிப்போட்டுத்தான் இருக்கிறன். இரவோடு இரவாகக் கடந்த முப்பது வருட காலமாக எமது இனம் பட்ட துன்பங்கள் அத்தனையையும் அழகாக அறிக்கைப்படுத்தினான்.

வேலைக்குக் கிளம்ப முன்னமே சுபன் வந்து விட்டான். நகுலன் எழுதியதைக் கொடுத்துவிட்டு வேலைக்கு புறப்பட்டான். "இத வெளிய யாருக்கும் உளறிவிட்டுடாதே" மன்றாட்டமாகக் கேட்டான். தலையாட்டியபடியே சுபன் அதனைப் பெற்றுக் கொண்டு சென்றான்.

நகுலனுக்கு அதனை வெளியில சொல்லாமல் இருக்க முடியவில்லை நடந்தவற்றை எல்லாம் குணா வுக்கு சொன்னான். "டேய் விசரா உன்னை யாரட இதையெல்லாம் சொல்லச் சொன்னது அவன் என்னையும் கேட்டான் நான் பேசி அனுப்பினான்.



(14 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வலைப்பக்கம்

## facebook



வீட்டில் கணவன், மனைவியிடையே சண்டை நடந்து முடிந்த நிலையில்,
**மகன்:** அம்மா நாய்என்றால் என்னம்மா?
**அம்மா:** உன்ர அப்பாதானடா நாய்.
**மகன் :** அப்பா பேய் என்றால் என்னப்பா?
**அப்பா:** உன்ர அம்மா தானடா பேய்
**மகன்:** முண்டம் என்றால் என்னப்பா?
**அப்பா:** எங்கட வீட்டில கிடக்குதே கதிரை அதுகள் தானடா முண்டம்
**மகன் :** விஷம் எண்டால் என்னப்பா?
**அப்பா :** உன்ர அம்மா காலையில குடிக்க தேத்தண்ணி தாராளே. அதான் விஷம்
**மகன் :** தண்டம் எண்டால் என்னப்பா?
**அப்பா :** எங்கட வீட்டுக்கு சொந்தக்காரர் எண்டு சொல்லிக் கொண்டு
வருவினமே, அவையள்தான் தண்டம்.
(அம்மா கடைக்குப் போய்விடுகிறார். அப்பா தோட்டத்துக்கு போய்விடுகிறார்.
மகன் மட்டும் வீட்டில் தனியா இருக்கிறான்)
இந்த நேரத்தில் அவர்களின் சொந்தகாரர்கள் வீட்டுக்கு வருகின்றார்கள்.
இப்போது பாருங்கோ எங்கட பெடியனின்ர உபசரிப்பை, வாருங்கள் தண்டங்களே, வந்து முண்டத்தில் அமருங்கள்.
பேய் கடைக்கு சென்றுள்ளது, நாய் தோட்டத்திற்கு சென்றுள்ளது. உங்களுக்கு அருந்த சூடாக விஷம் கொண்டு வருகிறேன்.
வந்தவர்கள்...?????




ஓர் ஊரில் ஆட்டிறைச்சிக் கடை ஒன்று இருந்தது. அந்தக் கடையில் முதலாளியே தொழிலாளி. ஒவ்வொருநாளும்,கடையை மூடப்போகும் சமயம், திமிர்பிடித்தவன் ஒருவன் அந்தக் கடைக்கு வந்து, முதலாளியிடம், "முதலாளி மூளையிருக்கா?" என்று கேட்பான்.
அதற்கு முதலாளியோ, மூளை இல்லை என்றவுடன், என்ன முதலாளி இன்றும் உங்களிடம் மூளை இல்லைய்யா? என்று கிண்டலுடன் கேட்டுவிட்டு செல்வான்.
இதையே வழக்கமாகக் கொண்டிருந்த அவனை, எப்படியாவது சொற்போரில் தோற்கடிக்க வேண்டும் என்பது அந்த முதலாளியின் நிறைவேறாத ஆசை. நாள்கள் நகர்ந்தன. ஒருநாள், அந்த முதலாளியின், நன்கு படித்த நண்பன் ஒருவன் அந்தக் கடைக்கு வந்தான். அவனிடம் தன் நிறைவேறாத ஆசை பற்றி முதலாளியும் கூற, அட இவ்வளவு தானே, நான் பார்த்துக் கொள்கிறேன் என்று நண்பனும் கூறினான்.
கடையை மூடப்போகும் சமயம், அந்தத் திமிர்பிடித்தவன் வந்து, முதலாளியிடம்,
"முதலாளி மூளையிருக்கா?" என்று வழக்கம் போலக் கேட்டான்.
அதற்கு முதலாளியின் நண்பன் அவனைப் பார்த்து,
"இதுவரை வந்த அனைவருக்கும் மூளை இருந்தது, ஆனால் துரதிஷ்டவசமாக உனக்குத்தான் இல்லை" என்றான். திமிர்பிடித்தவனின் பேயறைந்த முகத்தைப் பார்த்த, கடை முதலாளியின் முகத்தில்தான் எத்தனை மகிழ்ச்சி.!



கவிப்பிரியா







**கதிரவன் @ kathirRath**
எதிரி என்று சொல்லி உதவாதவன் எதிரி. நான் இருக்கிறேன் என்று சொல்லி முதுகில் குத்துபவன்துரோகி!



**டேனியப்பா @minimeens**
விபத்துகளும் கொலைகளும் காலம் காலமாய் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. பெரிய தலைகள் பலியாகும் போது மட்டும் அவற்றுக்கு நிறைய வர்ணம் பூசப்படுகிறது



**கருணைமலர் @yazhiniappa**
பரபரப்பான செய்திகள் எல்லாமே முதல் முறைதான் பரபரப்பாக இருக்கின்றன.



**தமிழ்திரு @krpthiru**
வாசலாய் இருக்கும் மொட்டைமாடியில் விழுந்து துள்ளி விழும் மழைத்துளிஎல்லாவற்றையும் விட அழகாய் இருக்கு.



**சிறிராம் @sriram**
கேள்விக்கு உட்படுத்தாமல், புனிதப்படுத்தும் எல்லாமே மூடத்தனமாகிறது.



**சௌமியா @arattaigirl**
ஒரு விடியலில் உலகின் அத்தனை கைபேசிகளும் உயிர் விட்டுவிடக்கூடாதா!!!? #பேராசை!



**சௌமியா @arattaigirl**
தங்களை அறிவாளிகளென அறிவாளிகள் காட்டிக்கொள்ளாத போதும்கூட, அவர்களை அறிவாளிகள் என அடையாளம் காண்பதும் கூடஅறிவாளித் தனம்தானே!



## பாசம்

ஓர் ஊரில் தம்பதியினர் சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை இருந்தது. அவளின் பெயர் அனிதா.அவளின் தாய் மீண்டும் கருவுற்றிருந்தாள். அவர்களுக்குத் தெரியும் வயிற்றில் வளர்வது ஆண் குழந்தையாகத்தான் இருக்கும் என்று.
பெற்றோர்கள் இருவரும் அனிதாவிடம் உனக்காக ஒரு தம்பி வரப் போகிறான். நீயும் அவனும் சேர்ந்து சந்தோஷமாக விளையாடப் போறீங்கள் என்று சொல்லியே வளர்த்தார்கள்.
அனிதா அவளின் அம்மாவின் வயிற்றில் தினமும் கைகளால் தடவிக்கொண்டே டேய் தம்பி கெதியா வெளியே வாடா. நாங்கள் சந்தோஷமாக விளையாடலாம். நான் உன்னை யாருக்கும் குடுக்க மாட்டேன், நான் மட்டுமே உன்னோட விளையாடுவேன் என்று சொல்லிக் கொண்டே இருப்பாள்.
அனிதா இன்னும்முகம் பார்க்காத தன் தம்பியிடம் அவ்வளவு பாசமாக இருப்பதைப் பார்த்து அவளின் பெற்றோர் மகிழ்ச்சி அடைந்தார்கள்.
அனிதாவுக்கும் தினமும் அம்மா வயிற்றில் இருக்கும் குழந்தையிடம் பேசுவதே வாடிக்கையாக இருந்தது.
நாள்கள் உருண்டோடின. அனிதாவின் அம்மாவுக்குப் பிரசவ வலி எடுக்கவே மருத்துவமனையில் சேர்த்தார்கள். பிரசவம் சாதாரணமாக இருக்கும் என்று நினைத்தார்கள். ஆனால் மிக சிக்கலாகி சத்திரசிகிச்சை செய்துதான் குழந்தையை வெளியே எடுத்தார்கள். மருத்துவர்கள் குழந்தை மிகப் பலவீனமாக இருக்கிறது. இன்னும் சில நாள்களே உயிரோடு இருக்கும் என்று கூறி அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்த்தார்கள். அனிதாவையும் அவளின் தந்தையையும், குழந்தையையும் அம்மாவையும் பார்க்க அனுமதிக்கவே இல்லை. பிறகு அனிதாவின் தந்தையை மட்டும் அனுமதித்தார்கள். அவர் உள்ளே சென்று குழந்தையைப் பார்த்துவிட்டு வந்தார்.
ஒரு வாரம் கடந்துவிட்டது. அனிதா அடம் பிடிக்க ஆரம்பித்தாள். நீங்கள் மட்டும் பார்த்துட்டு வந்தியள்.நானும்தம்பியை பார்க்கோணும், என்று அழுதாள். உன் தம்பி கடவுளிடம் போகப் போறான். உன்னை மருத்துவ மனையில் பார்க்க அனுமதிக்கமாட்டாங்கம்மா என்று அவளின் அப்பா சொன்னார். அவள் அழுது ஆர்ப்பாட்டம் செய்யவே, சரி நாளைக்கு எப்படியாவது உன்னை உள்ளே கூட்டிக் கொண்டு போகிறேன் என்றார்.
மறுநாள் மருத்துவமனயில் அனிதாவையும் குழந்தையை பார்க்க அனுமதிக்கவேண்டும் என்று கேட்டார். ஆனால் குழந்தையை அவசர சிகிச்சைப் பிரிவுக்குள் செல்ல அனுமதிக்க மாட்டோம் என்று கூறினர். பிறகு அவர்கள் கெஞ்சுவதைப் பார்த்து அனுமதித்தார்கள்.

அனிதா உள்ளே ஓடிச் சென்று குழந்தையின் பிஞ்சு விரலை பிடித்தாள். அவளின் கை பட்டதும் குழந்தை லேசாக அசைந்தது .டேய் தம்பி எழுந்து வாடா. நாங்கள் விளையாடலாம் என்றாள். குழந்தை லேசாக மூச்சு விட ஆரம்பித்தது.உன்னை நான் சாமியிட்ட குடுக்கமாட்டேன். நானேவைத்துக்கொள்வேன். நீ என்னோடத்தான் இருக்க வேணும் என்றாள். இப்போது குழந்தையின் மூச்சு சீராக வர ஆரம்பித்தது.
மருத்துவர்களே ஆச்சரியப் பட்டார்கள். குழந்தையைப் பரிசோதித்துப் பார்த்து விட்டு இனி நீங்கள் பயப்படத் தேவை இல்லை என்றார்கள்.
நாம் ஒரு பொருள் மேல் உண்மையான பாசம்வைத்துவிட்டால் அந்த ஆண்டவனே நினைத்தாலும் அதை நம்மிடமிருந்து பிரிக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களை வெல்ல முடியாத பொதுவேட்பாளர்கள்

வந்தியத்தேவா்

வடபகுதி மக்களின் வாக்குகள் தங்களுக்கே என்ற நம்பிக்கையுடன் இந்த மக்களைச் சந்திப்பதில் ஆர்வம் கொண்டுள்ள ஜனாதிபதி வேட்பாளர்கள், தமிழ் மக்கள் விடயத்தில் தங்களின் நிலைப்பாடு என்ன என்பதைக் கூறத் தயாராக இல்லை. தமிழ் மக்கள் இந்த நாட்டின் பிரஜைகள் என்பதைக் கூட முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாத அவர்கள், தமிழ் கட்சிகளின் ஆதரவைத் தம்பால் ஈர்ப்பதில் இரகசிய அக்கறை கொண்டுள்ளனர். தென்பகுதி மக்களைத் திருப்திப்படுத்தவும், அவர்களது வாக்குகளை அள்ளிக்கொள்வதிலும் நாட்டம் கொண்டுள்ள முக்கிய வேட்பாளர்கள் அங்கெல்லாம் இனவாதத்தைக் கக்கிக் கொண்டு, தமிழ் மக்களை ஏமாற்றி அவர்களின் ஆதரவைப் பெற்றுவிடும் முயற்சியில் மனந்தளராத விக்கிரமாதித்தனாக வட பகுதிக்கான சுற்றுப் பயணங்களை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர். இதன் ஒரு செயற்பாடே ஜனாதிபதி மஹிந்தவின் முல்லைத்தீவுப் பரப்புரை.


"நான் உங்களை நம்புகிறேன். நீங்கள் என்னை நம்புங்கள்" என்று கூறும் அரசுத் தலைவரின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தனது பல்வேறு வேலைத்திட்டங்களில் அதாவது கிராமப்புறப் பாடசாலைகளின் துப்புரவு, கிராமத்துக்கு ஒருமில்லியன் வேலைத்திட்டம் போன்ற திட்டங்களில் வடக்கு மாகாணத்தைப் புறக்கணித்துள்ளதாக செய்திகள் கூறுகின்றன. இது வரை நம்பியதில் கிடைத்தது என்ன?

அரசில் மின்சார அமைச்சராக இருந்து கட்சி தாவி தனது அரசியல் வாழ்வைத் தொடர்ந்தும் தக்க வைத்துக்கொள்ள தென்பகுதி மக்களிடம் தனது இருப்பை உறுதிப்படுத்திக் கொள்ள இப்படிப் பேசுகிறார் சம்பிக்க. தொடர்ந்தும் தமிழ் மக்களை இராணுவத்தின் கெடுபிடியிலேயே வைக்கப்படுவார்கள், வட பகுதியில் இராணுவம் அகற்றப்பட மாட்டாது என்பதன் மூலம் எதிரணியின் கருத்தை வெளிப்படுத்துகிறார் ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் சம்பிக்க ரணவக்க. கட்டுக் கட்டாகக் கைமாறிய பணத்துக்காகக் கட்சிமாறிய அரசியல்வாதிகள் தமது வருமானம், பதவி, சுகம் என்பவற்றைச் சிந்தித்தார்களே தவிர ஒருவராவது தமிழர்கள் குறித்து ஒரு நீதியான தீர்வை எட்ட முன்வரவில்லை என்று கூறி, அதற்குத் தமது எதிர்ப்பை வெளிக்காட்டும் வகையில் இரு சாராரிடமிருந்தும் விலகி இலங்கை அரசியலில் ஒரு முன்மாதிரியை ஏற்படுத்தவில்லை. ஆதாயம் இல்லாமல் செட்டி ஆற்றிலே இறங்க மாட்டான் என்பது போல் இவர்களின் கட்சித் தாவல் ஏதோ ஒரு வகையில் அவர்களுக்கு ஆதாயத்தையே ஏற்படுத்தியிருக்கும் என்பது மறுக்க முடியாதது.


இருபிரதானவேட்பாளர்களும்தமிழர்கள்பிரச்சினைக்கு தீர்வு இது என வெளிப்படையாக எதையும் கூற முன்வராத போது தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடும் கட்சிகள் தமது ஆதரவு இன்னாருக்கே என தெளிவுபடுத்த வேண்டியது அவசியமில்லாமல் ஆகின்றது. எனினும் அரசியல் மாற்றம் ஒன்றின் மூலம் தற்போது தமிழர்களுக்கு எதிரான கெடுபிடிகளில் இருந்து ஓரளவாவது விடுபட நாம் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்துத் தமிழ் மக்களுக்கு விளக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு உள்ளது.

இங்குள்ள அனைத்து மக்களும் தத்தமது உரிமைகள் சுதந்திரம் என்பவற்றுடன் கௌரவமாக வாழும் ஒரு தீர்வின் மூலமே மக்கள் மனங்களை வெல்ல முடியும் என்ற கோட்பாட்டில் சிந்திக்காத தென்பகுதி அரசியல்வாதி களால் ஒருபோதும் உலகத்தை அல்ல இலங்கையைக் கூட வெல்ல முடியாது. இன்றைய சூழலில் தேர்தல் விஞ்ஞாபனங்களை நம்பி மக்களை ஏமாற்றி அதில் தரப்பட்டிருக்கும் வரிகளை நம்பி அதற்கு ஏற்ப வாக் களிக்க நினைப்பது கூட தமிழ் மக்களைப் பொறுத்த வரை ஏற்புடையதல்ல.

கடந்த காலங்களில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிடும் அரசுகளுடன் தமிழர்கள் கொள்ளும் தொடர்பு பயனற்றது. இதைப் புரிந்து கொண்டு தேர்தல் காலங்களில் செயற்பட வேண்டும். காற்றில் பறக்க அரசுகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் தீப்பந்தங்களுக்கு இரையாக இதுதான் இன்றைய அரசியல் துன்பங் களில் இருந்து சிறிதாவது ஆறுதலை எதிர்பார்க்கும் ஒரு மாறுதல் தேவை என்பதை மக்கள் குறிப்பாக வடக்கு, கிழக்கு மக்கள் உணர வேண்டும்.







# காயங்கள்

சி.அஜந்தன்

காயங்கள் அழகாக்கிய கற்களைத் தானே சிலைகள் என்கிறோம். ஆயிரம் ஆயிரம் வேர்கள் பிளந்துபோட்ட பூமியைத் தானே மூங்கில் காடென்று இரசிக்கிறோம். வானத்திலிருந்து விழுந்து காயப்பட்ட துளிகளைத் தானே நதிப்படுக்கை என்று நேசிக்கிறோம். பேனா முனைகள் காயப்படுத்திய பக்கங்களைத் தானே கவிதைகள் என்று படிக்கிறோம். வண்டுகளால் காயப்பட்ட பூக்கள் தந்ததுதானே நாம் சுவைக்கும் தேன்கூட. ஆகவே காயங்கள் அழகு செய்கின்றன. ஏன் இந்த மனிதன் மட்டும் காயங்களைக் களங்கங்களாகப் பார்க்கிறான்?

காயங்கள் அழகு செய்கின்றன. ஆனால் காயங்கள் வரும்போது வலிகள் என்ற நண்பர்களையும் அழைத்துக் கொண்டே வருகின்றன. இதனால்தான் காயங்களுக்கு வாசற் கோலம் போட்டு வரவேற்காமல், நாம் கதவடைப்புச் செய்கின்றோம். வெற்றிகள் வேண்டும் வியர்வைகள் வேண்டாமென்கின்றோம். மாலைகள் வேண்டும் பூப்பறிக்கக் கூடாதென்கின்றோம். சிலுவைகள் இல்லாமல் இயேசுக்களாக நினைக்கின்றோம். அகிம்சைவலிகள் வேண்டாம், பசிகள் வேண்டாம் ஆனால் மகாத்மாகாந்திகளாக வேண்டுமென்கிறீர்கள். எப்படி சாத்தியமாகும்? துளைகள் இல்லாமல் புல்லாங்குழலா? வலிகள், காயங்கள் நெருப்புப் போல, வாழ்க்கையோ ஒரு பொன். புடமிடுங்கள் பிரகாசமாய் ஒளிர்வீர்கள். ஒரு கரிய இரவைக் கடக்க சம்மதிப்பதால் தானே, இன்னொரு சூரிய உதயம் கிடைக்கிறது.

ஓடங்கள் கரையில் கட்டப்படுவது பாதுகாப்பானது தான். ஆனால் ஓடங்கள் செய்யப்படுவதன் நோக்கம் அதுவல்லவே. கண்ணீர்களால் நீங்கள் அழுக்காகி விடுவதில்லையே. கண்ணீர் கூட வாழ்க்கைப் பூந்தோட்டத்துக்குப் பன்னீர். இரத்தக்கோடுகள் உங்கள் வெற்றிப் பாதைக்கு வர்ணமடிக்கின்றனவே!

இதோ காயப்படத் தயாராகுங்கள். காயங்களை யாசியுங்கள். சிலைகளாக வேண்டுமா உளிகளை நேசியுங்கள். வலிகளை எப்போதும் வாசியுங்கள். வாழ்க்கை முற்றத்தை காயக் கோலங்களால் அலங்கரியுங்கள். வாழ்க்கைக்கு வெளியே பயந்து ஓடுவதால் வெறுமையாகி விடுகிறீர்கள். காயங்களோடு வாழ்க் கைக்கு வாருங்கள். அழகிய சிற்பங்களாவீர்கள் வாழ்த்துக்கள்.

## புதிதல்ல...

புகை வண்டி ஒன்றும்
புதிதல்ல வன்னி வானில்
புகை கக்கும்
பகை வண்டிகள்
கண்ட எமக்கு
தொடர் வண்டி
நமக்கொன்றும்
புதிதல்ல
தொடர் (பல்குழல்)

அவலங்கள் கண்ட
நமக்குத் தண்டவாளம்
புதிதல்ல உங்கள்
வண்ட வாளம்
கண்ட எமக்கு
சுக்குப் பக்கு சுக்குப் பக்கு
டும் டும் டும்

துரை. அலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனித உரிமைகள் என்ன விலை?

சி.ஐ.ஏ–வின் ரகசிய சிறைச்சாலை, சித்திரவதை, மனித உரிமை மீறலுக்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியமே இல்லாத நாட்டில் விசாரணை என்பதையெல்லாம் கேள்விப் பட்டவர்களுக்குக் கூட, அமெரிக்க செனட் கமிட்டி அளித்த சித்திரவதை முகாம்களைப் பற்றிய அறிக்கை ரத்தத்தை உறைய வைத்திருக்கும்.

விசாரணைக்காக அழைத்துச் சென்றவர்களையும் கைது செய்தவர்களையும் திட்டமிட்ட வகையில் சி.ஐ.ஏ. சித்திரவதை செய்தது, மனித உரிமைகளை மதிக்காமல் நடத்தி யது என்பதைவிட, அமெரிக்க அரசுக்கும் வேறு சில நாடுகளின் அனைத்து நிலை அதிகாரவர்க்கத்துக்கும் தெரிந்தே தான் இவையெல்லாம் நடந்திருக்கிறது என்பதுதான் அந்த அதிர்ச்சிக்குக் காரணமாக இருக்கும். இப்படிப்பட்ட ரகசிய முகாம்கள், கைதுகள், சித்திரவதைகள்குறித்து இத் தனை ஆண்டுகளாக யாரும், ஏதும் அறிய முடியாத படிக்கு மறைத்து வைக்க முடிந்திருக்கிறது என்பதைத்தான் அறிக்கை வெட்டவெளிச்சமாக்குகிறது.

இப்படிக் கைதானவர்களில் ஒருவரான அபு சுபைதாவின் வழக்கறிஞர் நான். போலந்து, லிதுவேனியா நாடுகளுக்கு எதிராக ஐரோப்பிய மனித உரிமை நீதிமன்றங்களில் தொடுத்துள்ள வழக்குகளில் அவர் சார்பில் வாதாடுகிறேன். தன்னுடைய நாட்டு எல்லையில் ரகசிய இடத்தில் முகாம் அமைத்து, சி.ஐ.ஏ. நடத்திய சித்திரவதைகளுக்கு போலந்து அரசுதான் பொறுப்பு என்று அந்த நாட்டு நீதிமன்றம் ஜூலை 24ஆம் திகதி சுட்டிக்காட்டியிருக்கிறது. அப்படி நடந்தது குறித்து விசாரிக்கவும் தவறி ழைத்தவர்கள் மீது நட வடிக்கை எடுக்கவும் தவறி விட்டதாகவும் போலந்து அரசை அது குற்றம் சாட்டியிருக்கிறது.

### 1,001 முறை குறிப்பு

செனட் கொமிட்டி அறிக்கையில் அபு சுபைதாவை ஆதாரம்–1 என்று இனி குறிப்பிடக்கூடும். சி.ஐ.ஏ யின் ரகசிய விசாரணை முகாமின் முதல் விருந்தாளி அவர். அவர்கள் படிப்படியாக சித்திரவதைகளை அதிகரித்துக்கொண்டே போனதற்கும் சாட்சி அவர்தான். சி.ஐ.ஏ. கையாண்ட அத்தனை வகை சித்திரவதை களுக்கும் அவர் உள்ளாகியிருக்கிறார். செனட் அறிக்கையில் அவரைப்பற்றி மட்டும் 1,001 முறை குறிப்பிடப்பட்டிருக்கிறது.



சுவரில் அறைதல், பெட்டிக்குள் கை–கால்களை மடக்கியபடி உட்கார வைத்தல், தொடர்ந்து 180 மணி நேரத்துக்குத் உறங்க விடாமல் தடுத்துக்கொண்டே இருத்தல், ஆடையே இல்லாமல் – மிகவும் அசௌகரியமானவகைகளில் அமரவும் நிற்கவும் வைத்தல், முகத்தைத் துணியால் மூடி, ஈரத் துணியால் முகத்தை அழுத்தி மூச்சுவிட முடியாமல் திணற வைத்து, தண்ணீரில் மூழ்கும்போது தத்தளிப்பவரின் நிலைக்குக் கொண்டு சென்று, மூச்சு அடங்கப்போகும் கடைசி நொடியில் மீண்டும் சுவாசிக்க விடுதல் என்ற சித்திரவதைகளுக்கு அவர் ஆட்படுத்தப்பட்டார். இந்த முறையால் வலிப்பும் வாந்தி யும்கூட வந்துகொண்டே இருக்கும்.

இந்த சித்திரவதையை ஒரே மாதத்தில் 83 முறை அவரிடம் மேற்கொண்டுள்ளார்கள். உடலெல்லாம் விறைத்து மரக்கட்டையாகி வாயிலிருந்து நுரை வருமளவுக்கு அவரை சித்திரவதை செய்துள்ளார்கள்.

இங்கேபட்டியலிட்டதைவிட மோசமான வழிகளிலும் சித்திரவதை செய்துள்ளார்கள். ஆனால், அவை பற்றியெல்லாம் விசாரணைக்கு வந்தவர்களிடமோ மேலதிகாரிகளிடமோ அவர்கள் தெரிவிக்கவேயில்லை.

### உண்மைக்கு மாறான தகவல்கள்

சித்திரவதை ஒருபக்கம் இருந்தாலும், அபு சுபைதா போன்ற முக்கியக் கைதிகளை மனிதாபிமானமற்ற முறையில் நடத்தியதை நியாயப்படுத்தி அறிக்கை அளித்திருக்கிறது சி.ஐ.ஏ. அமைப்பு. அல்–குவைதா அமைப்பில் 3ஆவது அல்லது 4ஆவது இடத்தில் இருப்பவர்தான் அபு சுபைதா என்று பலமுறை கூறிவிட்டு, இறுதியில் அவர் அதன் உறுப்பினர் அல்ல என்றும் முடிவுரையாகக் குறிப்பிட்டுள்ளது.

இரட்டைக் கோபுரத் தகர்ப்பில் அவருக்கு முக்கியப் பங்கு உண்டு, பல விஷயங்களை மறைக்கிறார், சித்திரவதையால்தான் பல துப்புகளை அளித்துவருகிறார் என்றெல்லாம் முதலில் கூறிவிட்டு, அந்தச் சம்பவத்தில் அவருக்குத் தொடர்பு இல்லை என்று கடைசியில் தெரிவித்திருக்கிறது. இதையெல்லாம் ஆராய்ந்த செனட் கமிட்டி, சி.ஐ.ஏயின் இந்த சித்திரவதைகளால் துல்லியமான தகவல்களையும் கறக்க முடியவில்லை, புலனாய்வில் கைதிகளின் ஒத்துழைப்பையும் பெற முடியவில்லை என்று சுட்டிக்காட்டியிருக்கிறது.

### குவாண்டாநாமோ கொடுஞ்சிறை

கியூபாவின் குவாண்டாநாமோ விரிகுடாவில் சி.ஐ.ஏ. வைத்திருந்த ரகசியச் சிறையிலும் அபு சுபைதா அடைக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார். அவருக்கு எதிராக எந்தக் கிரிமினல் குற்றச்சாட்டும் சுமத்தப்படவில்லை. எந்தச் சட்டப் பிரிவின் கீழ் அவர் அங்குசிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார் என்று எந்த அதிகாரியும் விசாரிக்கவில்லை. அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி விசாரியுங்கள் என்று அவருடைய அமெரிக்க வழக்கறிஞர் வலியுறுத்தியும் கூட அதிகாரிகள் கேட்கவில்லை.

அமெரிக்காவுக்கு எதிராகத் தாக்குதல் நடத்துவதைத் தடுக்கும் சட்டத்தின் கீழ் அவரைக் காலவரம்பின்றி காவலில் வைத்திருக்க முடியும் என்றே அதிகாரிகள் வாதிட்டார்கள். அவரை இரகசியச் சிறையில் அடைத்திருக்கிறார்கள், சித்திரவதை செய்திருக்கிறார்கள், எந்த விதக் குற்றச்சாட்டையும் சுமத்தவில்லை, நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை என்று எல்லாவற்றையும் சுட்டிக் காட்டியும் எங்களுக்கு நீதி கிடைக்கவில்லை. ஐரோப்பிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான நீதிமன்றம் ஆணையிடும்வரை அவருடைய அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதற்குக்கூட ஓர் அங்கீகாரம் இல்லை,

### விவரம் இல்லாத அறிக்கை

செனட் கொமிட்டி அறிக்கை அளித்திருந்தாலும் அதில் பல தகவல்கள் மறைக்கப்பட்டிருக்கின்றன. அதாவது, எந்த நாட்டில் சிறை வைக்கப்பட்டிருந்தார் என்பது போன்ற தகவல்கள் எழுத்துபூர்வமாக இடம்பெறவில்லை. ஆனால், அதைக் கண்டுபிடிப்பது கடினமல்ல. விசாரணைக்காகப் பிடிக்கப்படுபவரை அந்த நாட்டில் வைத்து விசாரிக்க அமெரிக்காவுக்கும் அந்த நாட்டுக்கும் இடையில் ஒப்பந்தம் செய்துகொள்ளப் பட்டிருக்கிறது. ஒரு கட்டத்தில் அந்த நாடும் தனக்கு ஏற்படும் அசௌகரியத்தைச் சுட்டிக்காட்டியது. உடனே, அந்நாட்டுக்கான அமெரிக்கத் தூதர் அங்கு வந்து லட்சக் கணக்கான டொலர்களைக் கொடுத்ததும், எத்தனை பேரை வேண்டுமானாலும் இங்கு வைத்து விசாரித்துக்கொள்ளுங்கள் என்பதைப் போல அனுமதித்துவிட்டார்கள். இப்படி ஏராளமானவர்களை தங்கள் நாட்டுக்கு அழைத்துவந்து விசாரணை என்ற பெயரில் சித்திரவதை செய்கிறார்களே என்று அந்த அதிகாரிகள் வருத்தப்படவில்லை. மாறாக, இதிலெல்லாம் ரகசியத்தைக் காக்க முடியாதவர்களாக இருக்கிறீர்களே என்றே வருத்தப்பட்டார்கள்.


### போலந்தின் ஆட்சேபம்

ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றத்திடம் போலந்து அரசு ஆட்சேபம் தெரிவித்துள்ளது. எங்கள் நாட்டில் இப்படியொரு சித்திரவதைக்கூடமே கிடையாது. நீங்கள் இதைக் கண்டித்திருக்கக் கூடாது என்பதுதான் அந்த ஆட்சேபம். இனி, இந்த விவகாரத்தை நீங்கள் விசாரிக்க வேண்டாம். உங்களுடைய உச்ச நீதிமன்றம் விசாரிக்கட்டும் என்றும் கூறியிருக்கிறது. எங்கள் நாட்டு ரகசிய விவகாரங்களை உங்களுடன் விவாதிக்க முடியாது என்று கூறி, போலந்து அரசு ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றத்துக்கு ஒத்துழைப்பு அளிக்க மறுத்துவிட்டது.

செனட் அறிக்கை வந்த பிறகு, போலந்தின் பல்லவி மாறிவிட்டது. அந்த சிறைச்சாலை இருப்பது உண்மைதான். ஆனால், அறிக்கையில் குறிப்பிட்டபடி எதுவும் நடக்கவில்லை என்று மறுத்துள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைத்துவிடக் கூடாது என்று தடுக்கவும் தாமதப்படுத்தவும் போலந்து அரசு அடுக்கடுக்காக நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. இப்படியொரு அறிக்கை வெளியான பிறகு, முறையாக அதுகுறித்து வழக்குப் பதிவு செய்வதும் விசாரிப்பதும் போலந்து, பிரிட்டன் போன்ற நாடுகளின் சர்வதேச சட்டக் கடமையாகும்.

எந்தெந்த நாடுகளில் இந்த வதைக்கூடங்கள் இருந்தனவோ அந்த நாடுகளின் கடமை இது. அப்படி அவை நடவடிக்கை எடுக்காவிட்டால், மனித உரிமை நீதிமன்றங்கள் விசாரிக்க வேண்டும். உண்மை, நீதி, பொறுப்பேற்றல் என்ற கடமைகளை நிறைவேற்றவும், சட்டப்படியான ஆட்சி என்பதை நிலைநாட்டவும் நீதி விசாரணை அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிகரம் சரிந்தது

பாலச்சந்தர் என்ற உன்னத சிற்பி நூறாண்டு வாழ்வார் என்கிற எதிர்பார்ப்பு பொய்த்துவிட்டது. காலன் அவசரப்பட்டு விட்டான். இயக்குநர் சிகரம் கே.பாலச்சந்தர் அகவை எண்பத்தி மூன்றுடன் தனது வாழ்க்கைப் பயணத்தை முடித்துக்கொண்டு அமரராகி விட்டார். இந்திய சினிமாவின் குறிப்பிடத்தக்க ஆளுமைகளின் பட்டியல் எடுக்கப்பட்டால், அதில் முதல் பத்து பேர்களில் கே.பாலச்சந்தர் ஒருவர். தமிழ் சினிமா பிரமுகர்களின் பட்டியலில் அவர் முதல்வர்.

தமிழ் சினிமா சரித்திரம் எழுதப்படும்போதெல்லாம் அதில் 'பாலச்சந்தர் சகாப்தம்' என்றுதான் கடந்த நூற்றாண்டின் கடைசி முப்பது ஆண்டுகளைக் குறிப்பிட்டாக வேண்டும். அந்த முப்பது ஆண்டுகளில் எத்தனையோ அற்புதக் கலைஞர்களும், இமயம் தொட்ட இயக்குநர்களும் இருந்திருந்தாலும் அவர்களை எல்லாம்விட உயர்ந்து நின்றவரும், அவர்களுக்கெல்லாம் முன்னோடியாகவும், முன்மாதிரியாகவும் இருந்தவர் கே.பாலச்சந்தர். பாலசந்தரின் திரையுலக வாழ்க்கையைப் புரட்டிப் பார்த்தால் பிரமிப்பாக இருக்கும். நாடக மேடையிலிருந்து வசனகர்த்தாவாக எம்.ஜி.ஆரின் 'தெய்வத்தாய்' திரைப்படத்தின் மூலம் அறிமுகமான அடுத்த சில ஆண்டுகளிலேயே, 'நீர்க்குமிழி', 'மேஜர் சந்திரகாந்த்', 'நாணல்' என்று படங்களை எழுதி, இயக்கிக் குறிப்பிடத்தக்க இயக்குநர்களில் ஒருவராக அவர் வலம் வரத் தொடங்கியிருந்தார். அடுத்த 10 ஆண்டுகளில் பாலச்சந்தர் என்கிற பெயர் தமிழில் மட்டுமல்ல, மலையாளம், தெலுங்கு, கன்னடம், இந்தி என்று அகில இந்திய அளவில் பேசப்படும், பாராட்டப்படும் திரையுலக பிரமிப்பாக மாறிவிட்டிருந்தது.

கருப்பு–வெள்ளையிலிருந்துதிரையுலகம்வண்ணப் படங்களுக்கு மாறிக் கொண்டிருந்த நிலையில், முதலில் நான்கு சுவர்கள்மூலம்அவர் செய்துபார்த்த பரிசோதனை தோல்வி அடைந்தது. வண்ணப் படங்களுக்கு மத்தியிலும் தொடர்ந்து கறுப்பு – வெள்ளை திரைப்படங்களை இயக்கி வெற்றிபெற முடியும் என்பதை அவரால் மட்டுமே நிரூபித்துத் தாக்குப் பிடிக்க முடிந்தது. ஜாம்பவான்களான கே.எஸ். கோபால கிருஷ்ணனும், பி.மாதவனும்கூடத் தாக்குப் பிடிக்க முடியாமல் போனபோது, கே.பாலச்சந்தரால் மட்டும் வெற்றி பவனிவர முடிந்தது என்றால், அதற்குக் காரணம், அவரிடமிருந்த தன்னம்பிக்கையும், காலத்தைக் கடந்து சிந்தித்த புத்திசாலித்தனமும் தான்.

அரங்கேற்றம் திரைப்படம் இயக்குநர் கே.பாலசந்தருக்கு மட்டுமல்ல, தமிழகத் திரைப்பட வரலாற்றிலேயே திருப்புமுனையை ஏற்படுத்திய திரைப்படம். கமல்ஹாசன் என்கிற அற்புதக் கலைஞனைத் தமிழுக்கு அறிமுகப்படுத்திய திரைப்படமும்கூட. அரங்கேற்றத்திற்குப் பிறகு கே.பாலச்சந்தர் முற்றிலும் மாறுபட்ட ஒரு பரிமாணத்துக்கு மாறினார்.

**நூறு திரைப்படங்களைத் தந்து, நூற்றுக்கணக்கான கலைஞர்களை அறிமுகப்படுத்திய இயக்குநர் சிகரம் கே.பாலச்சந்தரின் மறைவு என்பது தமிழ் சினிமாவில் ஒரு சகாப்தத்தின் முடிவு.**



'மன்மத லீலை', 'நினைத்தாலே இனிக்கும்', 'வறுமையின் நிறம் சிவப்பு' என்று அடுத்த கட்ட வளர்ச்சிக்கும் அவரால் இயல்பாக நகர முடிந்தது. பாலசந்தரின் திரைப்படங்கள் என்கிற ஆரம்பகாலக் குற்றச்சாட்டுகளை எல்லாம் பொய்யாக்கி, எழுத்தின் வலிமைக்கு எள்ளளவும் குறையாத ஒளிப்பதிவு வளமையையும் அவரால் படைக்க முடிந்தது. அவரது 'ஏக் துஜே கேலியே...'யும், 'புன்னகை மன்னனும்' பாலச்சந்தர் என்கிற இயக்குநருக்கு இருந்த சினிமா என்கிற ஊடகத்தைப் பற்றிய புரிதலுக்கு சாட்சி.

'இரு கோடுகள்', 'கண்ணா நலமா', 'வெள்ளி விழா', 'புன்னகை', 'அரங்கேற்றம்', 'அவள் ஒரு தொடர்கதை', 'நிழல் நிஜமாகிறது', 'தப்புத் தாளங்கள்', 'தண்ணீர் தண்ணீர்', 'அச்சமில்லை அச்சமில்லை', 'புதுப்புது அர்த்தங்கள்', 'மனதில் உறுதி வேண்டும்', 'கல்கி' என்று பட்டியலிட்டால் திரையுலகில் மட்டுமல்ல, திரைப்படங் கள் மூலம் பாலச்சந்தர் தமிழ்ச் சமூகத்துக்கு உணர்த்த முற்பட்ட சமுதாயப் பிரக்ஞையையும் புரிந்துகொள்ள முடியும். நாடக இயக்குநராக, திரைப்பட வசனகர்த்தாவாக, கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் என்று முழுநேரத் திரைப்பட இயக்குநராக, தயாரிப்பாளராக, நடிகராக, சின் னத்திரை இயக்குநராக என்று கே.பாலசந்தர் எடுத்த சினிமா அவ தாரங்கள் பல.

அவரால் அறிமுகப்படுத்தப்பட்ட நடிக, நடிகையர், தொழில்நுட்பக் கலைஞர்கள், இயக் குநர்கள், நரசிம்மன், ஏ.ஆர்.ரஹ் மான் போன்ற இசையமைப்பாளர்கள் என்று பார்த்தால் எண்ணிலடங்காது.

அரை நூற்றாண்டு காலம் தமிழ்த் திரையுலகின் தனிப்பெரும் ஆளுமையாக, நூறு திரைப்படங் களைத் தந்து, நூற்றுக்கணக்கான கலைஞர்களை அறிமுகப்படுத்திய இயக்குநர் சிகரம் கே.பாலச்சந்தரின் மறைவு என் பது தமிழ் சினிமாவில் ஒரு சகாப் தத்தின் முடிவு. இனியொரு வன் நிக ரில்லை உனக்கு!

## அழகிய ரோஜா மலர்ந்தது

அழகு ரோஜா விழித்தது
வானைப் பார்த்து சிரித்தது
சிரிக்கும் ரோஜா இதழ்களில்
பனித்துளி வந்து படுத்தது


வண்டு பறந்து வந்தது
ரோஜா இதழ்களில் அமர்ந்தது
தேனை உறிஞ்சி உண்டது
சிரித்துக் கொண்டே பறந்தது

தென்றல் மெல்ல வருகிறது
ரோஜா தலையை அசைக்கிறது
ஆடும் மலரைப் பார்க்கையிலே
ஆனந்தம் மனதில் எழுகிறது.



இராமச்சந்திரன் சுபாஷினி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்து மதத்தை காப்போம்

அம்பலவாணர் இராஜரட்னம்,

இந்துமதம் இன்று உலகிலிருக்கும் மதங்கள் அனைத்தையும் விட அநாதியானது. உலகெங்கும் வியாபித்திருக்கும் பெருமை பெற்றது. மிகவும் பரந்த நோக்கோடு பிற சமயங்களை மதிப்பது. கொலை செய்வதையும் புலால் உண்ணுவதையும் மறுக்கும் சமயங்களிலொன்று. இவ்வாறு அதன் பெருமைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். உண்மையில் இந்துவாகப் பிறக்க நாம் தவம் இயற்றியிருக்கவேண்டும். ஆனால் இதை நம்மில் பலர் உணர்வதில்லை. இந்தியாவிலும் சரி இலங்கையிலும் சரி எத்தனையோ கோயில்கள் அநேக வருடங்களாகக் கும்பாபிஷேகம் செய்யப்படாமல் பாழடைந்த நிலையில் இருக்கின்றன என்பதை நாம் ஞானபூமி, பக்தி, சக்தி விகடன் போன்ற ஆன்மிக சஞ்சிகைகள் மூலமாக அறிகிறோம். இது வேதனைப்படவேண்டிய விடயம். இந்தக் கோயில்களைத் திருத்துவதற்கும் கும்பாபிஷேகம் செய்வதற்கும் போதிய பண வசதியின்மையே காரணம். இதை ஈடு செய்ய ஏழை எளியவர்கள் முன்வர மாட்டார்கள். இந்துக் கனவான்களே முன்வரவேண்டும்.

நாட்டில் புதுப் புதுக் கோயில்களைக் கட்டிக் கும்பாபிஷேகம் செய்கிறார்கள். இது வரவேற்கத்தக்க விடயம். அதேவேளை பழைய கோயில்களைத் திருத்தி அந்தக் கோயில்களுக்கும் கும்பாபிஷேகம் செய்து இறைவனின் கீர்த்தியை மேலோங்கச் செய்ய வசதி படைத்தவர்கள் முன்வர வேண்டும். முன்வருவார்களேயானால் மிக மிக வரவேற்கத்தக்க விடயமாக அமையும். கோடி புண்ணியம் அவர்களைச் சாரும்.

**நாட்டில் புதுப்புதுக் கோயில்களைக் கட்டிக் கும்பாபிஷேகம் செய்கிறார்கள். இது வரவேற்கத்தக்க விடயம். அதேவேளை பழைய கோயில்களைத் திருத்தி அந்தக் கோயில்களுக்கும் கும்பாபிஷேகம் செய்து இறைவனின் கீர்த்தியை மேலோங்கச் செய்ய வசதி படைத்தவர்கள் முன்வர வேண்டும்.**

முதலில் இந்துக்கள் தமது பிறப்பின் பெருமையை, தாம் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள் என்பதை, தம் மதத்தின் பெருமையை உணர வேண்டும். இவை அடிக்கடி, மீண்டும் மீண்டும் செவிகளுக்குள் ஒலித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

இதைவிட இந்துவாக வாழ்வது எப்படி என்பதை எவ்வாறு கற்கின்றோம். பாடசாலைச் சமய பாடங்களில் மட்டும் படித்து, புள்ளிகளுக்காக மனனமும் செய்கின்றோம். ஆனால் இதை எத்தனை சத வீதத்தினர் கடைப்பிடிக்கின்றனர்? எனவே இந்துவாக வாழும் வழிகளும், நம் பெருமைகளும் அடிக்கடி மீண்டும் மீண்டும் மூளையில் பதியப்பட வேண்டும். இதற்காக அர்ச்சகர்களுக்கான கல்விமுறையில் திருத்தங்கள் செய்யலாம். அல்லது நிறைய சமயப் பண்டிதர்களை உருவாக்கி (பல்கலைக்கழக பட்டமாக அல்லது சிறப்புப் பட்டப் படிப்பாக ) கோயில்களில் ஊதியத்துடன் தொழிலும்(இந்துமத போதகர்)வழங்க வேண்டும். இவர்கள் அர்ச்சகர்களோடு இணைந்து சேவைகளை முன்னெடுக்கவேண்டும்.

கோயில்களில் பூஜையின்பின் 10–15 நிமிடங்கள் அமைதியான தியானத்துக்கென ஒதுக்கிப் பூசகரின் வழிநடத்தலில் தியானம் இடம்பெறவேண்டும். இது இன்றைய அவசரயுகத்தில் ஓடிக்கொண்டிருக்கும் மக்கள் சமயத்தோடும், இறைவனோடும் ஒன்றிப்பதை மேலும் வலுப்படுத்தும்.

ஒவ்வொரு பூசையின்பின் 10–15 நிமிடங்களாவது சுருக்க சொற்பொழிவு நிகழ்த்துங்கள். ஏதாவது ஒரு கருப்பொருள் / வாழும் வழி / மதத்தின் மேன்மை பற்றி.... அதற்காக மணிக் கணக்கில் ஓரிரு வயோதிபர்களைக் கொண்ட மண்டபத்தில் சொற்பொழிவாற்றுவதை விட 10 நிமிடம் மட்டும் நிறைந்த கூட்டத்தில் உரை நிகழ்த்துங்கள். அதன் பின்புதான் அர்ச்சனை. இங்கும் மற்றைய மதங்களை மதித்து நடப்பதால் இந்து மதம் ஒருபடி மேலே என்ற உண்மையை வலியுறுத்திக் கூறுங்கள். அத்துடன் தேவார, திருமுறைகளின் பொருளென்ன? அவற்றை எச்சந்தர்ப்பத்தில் எவ்வாறு பாடி அதன் முழுப் பலனைப் பெற முடியும் என்பதை விளக்கிக் கூறுங்கள்.

ஒரு சில சமய நிறுவனங்கள் மாத்திரம் ஏழை எளியவர்களுக்கும், அநாதைச் சிறுவர்களுக்கும் இயற்கை இன்னல்களால் துன்புறுவோருக்கும் உதவிக்கரம் நீட்டி, அவர்கள் நன்கு கல்வி கற்கவும், வருவாய் தேடவும் துன்பத்திலிருந்து விடுபடவும் செயற்படுவது மிக மிக வரவேற்கத்தக்க விடயம். ஆனால் இவை மிகவும் போதாது. தேவைகள் அதிகம் இருப்பதால் இன்னும் கூடுதலான செயற்பாட்டில் இறங்க வேண்டும். இந்துக்கள் வாழும் நகரங்கள் தோறும் கிளை நிறுவனங்களை நிறுவியோ அல்லது பிரபல்யமான கோயில்களின் பரிபாலன சபைகள் மூலமோ துன்பப்படும் மக்களை இனங்கண்டு அவர்களைக் கூட்டி உரையாடி உறவாடி அவர்களுக்கு மனத்தைரியத்தைவழங்குங்கள்.இடைக்கிடை கூட்டங்களைக் கூட்டி என்ன முன்னேற்றம் நடந்துள்ளது? என்னென்ன பிரச்சினைகள் இன்னமும் உள்ளன? அவைகளைத் தீர்க்கும் வழிதான் என்ன? என அலசி ஆராய்ந்து நடைமுறைப்படுத்த வேண்டும். தேவையானளவு இளைஞர் சமூகத்தை இதில் ஈடுபடுத்தினால் ஒரே கல்லில் இருமாங்காய் போல் எதிர்காலச் சந்ததியினருக்கு இரட்டிப்பு நன்மைகள் கிடைக்கும்.

# எம் அன்னைக்கேன் இந்த நிலை

ஆடை கழுவினேன்
அம்மா ஏசினார்
சவர்க்காரத் தண்ணீர்
கிணற்றுக்குள் போகும் என்று
ஆடு மாட்டுக் கஞ்சி வாளி
அருகிலே வைத்ததற்காய்
அப்பா திட்டினார்

அசிங்கமாகும் கிணறு என்று
ஈர் உருளி வாகனத்தை
இலகுவாகக் கழுவதற்கு
கொண்டு சென்றேன் கிணற்றடிக்கு
குறைப்பட்டார் என் மனைவி
அத்தகை பிரியம்
அத்துணை பேரிற்கும்
அந்த நம் கிணற்றில்
அன்று
வெட்டி நீர் கண்டு
வெள்ளைக் கல் வரி வைத்து
தட்டி நேர் செய்து
தடக்காத மிதி வைத்துக் கோழி

வெட்டிப் பலி கொடுத்து
வெள்ளைப் பால் பொங்கல் செய்து
வேட்டி சட்டை எல்லாம் கிணறு
வெட்டியோர்க்குத் தானம் செய்து
பாட்டுப் பாடி ஆடி நாம்
பறைந்த கதை ஏராளம் இன்று...
மின்சார நிலையத்து
மீதமான எரிபொருளால்
நன்னீர் நிலைகள் எல்லாம்
நாசமாய்ப் போகுதன்றோ
மாவட்டக் கிணறுகளில்
மலக்கசிவும் இருப்பதா
பாழ்பட்ட கதை அறிந்து

பதறுகின்றோம் நாங்கள் இன்று
தாயைப் பழித்தாலும்
தண்ணீரைப் பழிக்காதே...
என் தாத்தா சொன்ன வார்த்தை
காத்தோடு போய்விடுமா?
ஆத்தாவை இன்று
ஆராய்ச்சி செய்வதற்காய்
போத்தலில் அடைத்துப்
போகின்றேன் ஆய்வுகூடம்
ஆர் செய்த பாவமோ?
யார் போட்ட சாபமோ– எம்
அன்னைக்கேன் இந்த நிலை
யாரிடம் நாம் நோவதோ?

*க.அபராசுதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28 DEC 2014

# நல்ல சிந்தனைகளே சிறந்த மனிதர்களின் பிறப்பிடம்

ம.துவாரகா

மனிதர்கள் எப்பொழுதும் சுயமாகச் சிந்திக்க வேண்டும். தாங்களாக சுயமாகச் சிந்திக்கத் தெரியாமல் சிலர் இருக்கிறார்கள். மேலும் இவர்கள் குறிப்பிட்ட ஒரு சிலர் சொல்வதை மட்டும் நம்பி செயற்பட்டுக் கொண்டிருப்பார்கள். அந்தக் குறிப்பிட்ட சிலரும் தனிப்பட்ட திறனுடையவராக இல்லாவிட்டாலும் பிறரைக் குறை கூறுவதில் மட்டும் வல்லவராக இருப்பார்கள். இந்த வல்லவர்களின் பேச்சைக் கேட்டு செயற்படுபவர்கள் நன்மை, தீமைகளைப் பற்றி சிந்திப்பதில்லை. சொன்னதைச் செய்வதில் மட்டும் அக்கறையாயிருப்பர். இந்தச் செயற்பாட்டால் சில ஆபத்துகள் வரும் போதுதான் நாம் இவ்வாறு செய்திருக்கக் கூடாதோ என்று கவலைப்படுகிறார்கள். இந்தக் கவலையில் நியாயமிருக்கிறதா? ஒரு செயலைச் செய்வதற்கு முன்பு சிலரிடம் ஆலோசனைகள் கேட்பதில் தவறில்லை. ஆலோசனை அளிப்பவர்கள் அதற்குத் தகுதியுடையவர்கள்தானா என்று சிந்திக்க வேண்டும். மேலும் அளிக்கும் ஆலோசனைகளை தாமும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு செயலைச் செய்வதற்கு முன்பாக அதனால் ஏற்படும் விளைவுகளையும் முன்கூட்டியே சிந்தித்துப் பார்க்கவேண்டும். அப்போதுதான் நாம் எடுத்துக்கொண்ட செயலில் வெற்றியையும் அதன் மூலம் நல்ல நிலையையும் அடைய முடியும். இப்படித்தான் வாழ்க்கையில் பலரும் சுயநலத்துடன் தமக்கு ஆதரவாகச் சொல்லப்படும் ஆலோசனைகளை எவ்வித சிந்தனையுமில்லாமல் செயற்படுத்திப் பின்னால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எந்த ஒரு ஆலோசனையாக இருந்தாலும், யார் தெரிவித்த ஆலோசனையாக இருந்தாலும் அது குறித்து முழுமையாகச் சிந்தித்துத் தாமாக ஒரு நல்ல முடிவை எடுக்கத் தெரிய வேண்டும். தன் விருப்பத்தின்படி செயற்படும் பலர் அடுத்தவர் சொற்களை ஏற்றுக் கொள்வதில்லை. மேலும் இவர்கள் செயலுக்கு எவ்விதமான எதிர்ப்பையும் விரும்புவதில்லை. தன்னிச்சையாகத் தான் செய்யும் செயலே சரி என்று செயற்படுகிறார்கள். இவர்கள் உழைப்பும், இவர்களுக்குக் கிடைத்த வாய்ப்பும் இவர்களாலேயே வீணாகிப் போய்விடுகிறது. சிலர் தங்களால் இயலாது இதைப் பிறராலும் செய்ய இயலாது என்று எண்ணிக் கொள்வார்கள். இவர்கள் முயற்சிக்காமலே முடிவெடுக்கிறார்கள். சிலருக்கு தங்களால் எதையும் செய்ய முடியும் என்கிற நம்பிக்கை அதிகமாக இருக்கும். இவர்கள் முயற்சியுடன் முன்னேற்றமடைகிறார்கள். எந்த ஒரு செயலையும் செய்ய வேண்டும் என்கிற எண்ணம் ஏற்பட்டு விட்டால் அந்த செயலைச் செய்ய முடியாது என்கின்ற போதிலும் மாற்று வழிகளைச் சிந்திக்க வேண்டும். அப்படி சிந்திக்கும் போதுதான் நமக்கு புதியதொரு வழி பிறக்கிறது. தங்கள் பேச்சை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிற எண்ணம் பலரிடமும் இருக்கிறது. தங்களைப் பற்றி மிகவும் உயர்வாக நினைத்துக் கொள்ளும் இவர்கள், தாங்கள் சொல்லும் கருத்துக்கள் மற்றவரகளால் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லாவிட்டாலும் அதை எல்லோரும் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்புவார்கள். தனக்கு மாறாக தன்னை எதிரப்பவர்கள் யாராக இருந்தாலும் சரி அவர்களை அழித்து விடவேண்டுமென்று பலரும் நினைக்கிறார்கள். எதையும் அழிப்பது என்பது சுலபம். உருவாக்குவது என்பது மிகவும் கடினம் என்பதை அவர்கள் உணர்வதில்லை. தன்னுடைய தவறுகளைச் சுட்டிக்காட்டுபவர் யாராக இருந்தாலும் சரி அவர்களை எதிரிகளாக்கிப் பார்க்கிற இவர்களது தவறான மனோபாவமே இவர்கள் உயர்வுக்கு தடையாக இருக்கிறது. இருந்தாலும் இவர்கள் தங்கள் நிலையிலிருந்து தங்களை மாற்றிக் கொள்வதில்லை. இவர்களிடம் தங்கள் உயர்வுக்கு உறுதுணையாக இருந்தவர்களை அப்படியே தூக்கி வீசுவதும், அவ்வப்போது தங்களுக்குத் துணையாக யாரை யாவது தேடிக் கொள்வதும் அதன்பின்பு அவர்களிடம் மாட்டிக் கொண்டு விடுபட முடியாமல் விழிப்பதும் தொடர்ந்து கொண்டிருக்கும். இருப்பினும் இவர்கள் தங்கள் எண்ணத்தையோ, செயல்களையோ மாற்றிக் கொள்வதில்லை. தாங்கள் தூக்கி எறிந்தவர்கள் தன்னை விடக் கீழாகவே இருக்க வேண்டும், அவர்கள் தங்களை விட எங்கே முன்னே போய்விடுவார்களோ என்கிற அச்சத்தில் அவர்களைக் கண்காணித்துக் கொண்டே இருப்பதுடன் அவர்களை ஒழித்துக்கட்டி விடவேண்டும் என்று தீய செயல்களைச் செய்து கொண்டே இருப்பார்கள். இதற்குக் காரணம், அவர்களின் வளர்ச்சியை இவர்களால் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. அடுத்தவரை அழிக்கும் எண்ணம் வந்து விட்டாலே தவறான செயல்களும் தானாகவே வந்து ஒட்டிக் கொள்கிறது. இந்தத் தவறான செயல்களையே தங்களுடைய வலிமையாகவும், வெற்றியாகவும் நினைக்கத் தொடங்குகின்றனர். கடைசியில் கெட்டவர்களாக மாறி விடுகின்றனர். **இந்த நிலையை இவர்கள் எப்போது மாற்றிக் கொள்கிறார்களோ அப்போதுதான் அவர்கள் நல்லவர்களாக மாறுகின்றனர். ஒருவரை நல்லவராக்குவதற்கு வாழ்க்கையின் அனுபவங்கள் எப்பொழுதும் நல் வழிகாட்டிகளாக அமையும். அனுபவங்கள் மனிதனைப் பக்குவப்படுத்தும்.**

# மேட்டு நிலத்து ஊற்று

தொடர்கதை 7

தேவி பரமலிங்கம்



"என்ன காணும் மறந்து போய் உம்மிட பாட்டிலை வெளிக்கிட்டீட்டீர் போல கிடக்கு..."

ஓட்டமும், நடையுமாக வந்த பாலசிங்கத்தின் வாயில் இருந்து வார்த்தைகள் உதிர்ந்தன.

"ஓம் பாரும் வீட்டு யோசினேல மறந்திட்டன்..."

பாலசிங்கம் அருகில் வந்ததும் கணேசன் சொன்னான். பேச்சை ஆதாரமா வைத்து பாலசிங்கம், கணேசனிடம் கேட்டான்.

"உமக்குக் கல்யாணம் முடிஞ்சிதே..."

"சிச்சீ இல்லை..."

எதிர்பாராத கேள்வி, பாலசிங்கம் அருவருக்கத்தக்க ஒன்றைக் கேட்டு விட்டதான தோறணையில் கணேசன் அப்படிக் கூறினான்.

"அப்ப என்ன காணும் வீட்டு யோசினை..."

பாலசிங்கம் திரும்பவும், அழுத்திச் சொல்கையிலே அந்தக் கேள்விக்கான காரணம். தன்னுடைய பேச்சில் மறைந்திருந்ததைக் கணேசன் உணர்ந்தான்.

வெவ்வேறு விடயங்களையும் அலசிக் கொண்டே இருவரும் பஸ்தரிப்பை நோக்கி நடைபோட்டனர்.

"இதுதான் என்ரை தரிப்பிடம்..."

பாலசிங்கம் கூறியவாறே நுழைந்த அறையுள் கணேசனின் கண்கள் மேய்ந்தன. நான்கு கட்டில்கள் நான்கு மூலைகளிலும் போடப்பட்டிருந்தன. மூன்று கட்டில் வாசிகளும் ஏற்கனவே கட்டில்களில் இருந்து தமது சோலிகளில் ஈடுபட்டிருந்தது தெரிந்தது. அறை அமைந்த வீடு விசாலமானதாய் இருந்தது. அத்துடன் இன்னும் பல அறைகள் இருந்தன.

அவைகளிலும் கொழும்பில் உத்தியோகமாக இருக்கும் பிற மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் தங்கி இருந்தனர்.

"இவர் இன்றைக்குப் புதிசா எங்கட கந்தோரிலை வேலைக்குச் சேர்ந்த யாழ்ப்பாண இளைஞன் பெயர் கணேசன்.."

அங்கிருந்த மூன்று கட்டில் நண்பர்களுக்கும் கணேசனை அறிமுகம் செய்து வைத்தான் பாலசிங்கம்.

"அவர் பசுபதி, கொழும்புக் கச்சேரியில் குமாஸ்த்தா.... இவர் பூபாலசிங்கம் அரச அச்சகத்தில் கிளார்க்.... மற்றவர் மாரிமுத்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் டைப்பிஸ்ட்..."

தொடர்ந்து அவர்களையும் கணேசனுக்கு அறிமுகம் செய்தான் பாலசிங்கம். மாலை ஆறரை மணிவரை அங்கே தங்கி கதைத்து விட்டு கணேசன் வெளிக்கிட்டான். உரையாடல் இடையே பாலசிங்கம் ஓய்வு நேரங்கள், விடுமுறை நாள்களில் கணேசனை அறைக்கு வந்து செல்லும்படியும் கேட்டுக் கொண்டான்.

★ ★ ★

வீட்டு விறாந்தையில் ஏறியபோது கந்தையரும் விசாலாட்சியும் இருந்தது, கணேசனின் பார்வையில் பட்டது. அவர்களின் இளைய மகன் தரையில் ஒரு பக்கமாக விளையாடிக் கொண்டிருந்தான்.

கணேசனைக் கண்டதும் விசாலாட்சி எழுந்து கந்தையருக்குப் பின்னால் நடுஅறைக்குப் போகும் வாசல் நிலையுடன் சாய்ந்து நின்றாள்.

"ஏன் தம்பி... இவ்வளவு சுணங்கினே..."

படித்துக் கொண்டிருந்த பத்திரிகையை மடித்து வைத்து விட்டுக் கந்தையா, கணேசனிடம் விசாரித்தார்.

"கந்தோர் சிநேகிதன் விடாமல் தன்ர அறைக்குக் கூட்டிப் போனான்.... அதுதான் கொஞ்சம் மினக்கெட்டுப் போச்சு..."

கூறி அறையை நோக்கிப் போனவனை கந்தையர் அழைத்து கதிரையில் இருத்தினார்.

"கதைக்க வேணும் இப்படிக் கொஞ்சம் இரும் தம்பி..."

அறைக் கதவுச் சாவியைத் துவாரத்துள் விட்டு வந்த கணேசன் எதிராக இருந்தான்.

"வேலுப்பிள்ளையர் உங்களுக்கு இனமோ தம்பி..."

கந்தையர் கேட்டார். விசாலாட்சி கதவருகோடு நின்று அவனையே உற்றுப் பார்த்தாள். அறையுள்ளே நின்ற பாமா, கதைகளைக் கேட்பதற்கு வசதியாக இரைந்து கொண்டிருந்த றேடியோவை நிறுத்தி விட்டாள்.

"இல்லைப் பாருங்க... எண்டாலும் அவருக்கும் எங்கட குடும்பத்துக்கும் நெருக்கமான உறவிருக்கு..."

விவரித்தான் கணேசன். கந்தையர் யாழ்ப்பாண உயர் வகுப்பைச் சேர்ந்தவர். அவருடைய கிராமம் இவர்களின் கிராமத்தில் இருந்து இருபது கிலோ மீற்றர் தொலைவில் அமைந்திருந்தது.

அப்போதைக்கு அவ்வளவும் போதுமெனத் திருப்திப்பட்டுக் கொண்டு கந்தையர், கணேசனைக் கருமங்களைப் பார்க்க அனுப்பி வைத்தார்.

மேல்காலை கழுவி வந்தவன் சைவ ஹோட்டலில் இரவுச் சாப்பாட்டை முடித்து வந்து துயின்றான்.

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாட்சி....

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏன்ரா குணா, அவன எனக்கு முதலே தெரியும், இப்ப ஏதோ அரசியல் அது, இது என்று திரியிறான். அவனத் தெரியும். ஆனா அவன் வேறுயாருக் கோதான் அனுப்பப் போறான். அவன் எப்படிப்பட்டவன் என்று உனக்குத் தெரியுமா"

"இப்ப என்னடா செய்யிறது"

"எனக்குச் சொன்ன மாதிரி வேறயாருக்கும் சொல்லிப் போடாதே. மனுசி, பிள்ளைகளுக்கும் கூட சொல்லிப்போடாதே" நகுலனுக்கு அதை நினைத்தாலே ஒரே பயமாக இருந்தது. நாள்கள் நகர்ந்தன. நகுலனின் வீடும் கட்டுமான பணியில் இறுதிக் கட்டத்தை அடைந்துவிட்டது. மாலை நேரம் நகுலன் வீட்டின் முன் பகுதியை அழகுபடுத்திக் கொண்டிருந்தான். பானு சமையல் வேலையை கவனித்துக்கொண்டிருந்தாள், பிள்ளைகள் மூவரும் முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்தனர். வாசலில் மோட்டார் சைக்கிள் கோண் அடிக்கும் சத்தம் கேட்க நகுலன் படலைக்குச் சென்றான். மோட்டச் சைக்கிளில் இரண்டு பேர் வந்திருந்தனர்.

"நகுலன் வீடா..." "ஓம் சேர் ஓம் சேர்" என வீட்டுக்குள் அழைத்து வந்தான். "நாங்க தான் உங்க இப்ப ஊருக்குப் புதுச வந்திருக்கிறம். மௌனமாக நின்றான் நகுலன். வந்த இருவரும் மீண்டும் பல பதிவுகளை எடுத்துக்கொண்டு போகும் போது நகுலன் "ஏதும் எண்டால் எங்களுக்கு சொல்லனும் இல்லாட்டி பிறகு தெரியும்தானே" என்று சொல்லிவிட்டு சென்றனர். நகுலனுக்கு ஒரே கலக்கமாக இருந்தது. அன்றிலிருந்து அவனுடைய நடவடிக்கைகள் மாறத்தொடங்கின. எதைக்காண்டாலும் பயம், பச்சை உடுப்புடன் யார் சென்றாலும், வாகனங்களின் சத்தம் கேட்டாலும் தலையை ஒரு துணியால் முடிக்கொண்டு நானில்லை, நானில்லை எனத் தனக்குள் சொல்லிக்கொண்டு வீட்டுக்குள் மறைந்து விடுவான். நகுலனின் மூத்த பெடியன் படிப்பை விட்டுவிட்டு குணாவுடன் உதவிக்குச் செல்லத் தொடங்கினான். ஊரில் உள்ள எல்லோரும் நகுலனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்றார்கள்.




மலையென எழுந்து வந்த
அலையினாலே வந்த துயர்
மனதை விட்டு மறைந்து போகுமா?-எங்கள்
மனதை விட்டு மறைந்து போகுமா?


ஆண்டு பத்து கழிந்தாலும்
உங்கள் சாவை நினைக்கையிலே
எங்கள் மனம் பதை பதைக்குதே
எங்கள் மனம் துடி துடிக்குதே
ஊருக்குள்ளே கடல் வருமா
என்று நாங்கள் நினைக்கையிலே
வீட்டுக்குள்ளும் வந்தழித்ததே!-அலை
வீட்டுக்குள்ளும் வந்தழித்ததே!

பூவுகளும், பிஞ்சுகளும்
பூப்பெய்த கன்னியரும்
போன இடம் தெரியவில்லையே-இன்றும்
போன இடம் தெரியவில்லையே!
படுக்கையிலே தங்கள் வாழ்வைக்
கழித்திருந்த வயோதிபரைக்
கடல் குளிக்கச் செய்து விட்டதே-சுனாமி
கடல் குளிக்கச் செய்து விட்டதே!
"குண்டடி"க்கும், "ஷெல்" அடிக்கும்
தப்பித்துப் போவதற்கு
"பங்கரு"க்குள் ஒளித்திருந்தோமே-அன்று
"பங்கரு"க்குள் ஒளித்திருந்தோமே

சட்டென்று வந்து எம்மைத்
தாக்கிய அலைகளினால்
தப்பிக்க முடியவில்லையே- உயிர்
தப்பிக்க முடியவில்லையே!
மாண்டுபோன உறவுகளின்
ஆத்மாக்கள் சாந்தி பெற
மனம் உருகிப் பிரார்த்தனை செய்வோம்
மண்டியிட்டுத் தீபம் ஏற்றுவோம்
எத்தனை துன்பங்களை
இதுவரையில் அனுபவித்தோம்
மீள ஒரு வழியுமில்லையா?
எம்மை மீட்பதற்கு எவரும் இல்லையா?
போரினாலே இடம்பெயர்வு
சுனாமியாலே இடம் பெயர்வு
நிம்மதியாய் எம் நிலத்திலே -நாம்
நிரந்தரமாய் வாழவில்லையே!
அடிமையாக வாழுவதும்
அகதியாக ஓடுவதும்......
நிலைமைதான் மாறிப்போகுமா? -இல்லை
இனிமேலும் தொடர்கதையா?
நாளை வரும் எங்கள் வம்சம்
சுதந்திரமாய் வாழ்வதற்கு
சமாதானம் வந்திடவேண்டும்-எமக்கும்
சம உரிமை கிடைத்திட வேண்டும்.

*செல்வி தேவி அருணாசலம்*

## சொற்சிலம்பம் - போட்டி இல: 349



அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்: ..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### இடமிருந்து வலம்

1. இலங்கை அரசின் வெளியுறவு அமைச்சராக இருந்த தமிழர் இவர்
6. பெருக்கல் அடையாளம்
7. உயர வளரும் ஒரு மரம்
8. மரம்
9. திருடன்
11. (சீர்) கெட்டது
12. உயிரின் மிகச் சிறிய அலகு
13. கவிச் சக்கரவர்த்தி எனப் பெயர் பெற்றவன்
15. பூகோளம்
17. எல்லையில் இருப்பது
18. ஒரு வாசனைத் திரவியம்
20. (நல்ல) உபதேசம் செய்பவர்
22. எல்லா
24. சிதம்பரம்
25. உலோக வேலை செய்பவன்

### மேலிருந்து கீழ்

1. ஒரு நாட்டிய வகை
2. ஒன்று சேர்ந்தமையால் வருவது
3. ஒரு மூலகம்
4. வீடு
5. ஒருவருக்கு இதை வழங்கிக் கௌரவிப்பர்
8. மறு
10. காடு
11. சில என்பதையும் தாண்டியது
12. பசு, எருமை போன்றவற்றின் குட்டி
13. திண்மப் பொருள் திரவத்துள் ஒன்றிப் போதல்
14. கூறு
16. கதாநாயகனின் எதிரி
17. கண் தெரியாதவன்
19. கதவு இருப்பது இங்கே
21. இது அறுபத்தி நான்கு
23. ஒன்று சேர்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 347 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) விவசாயி (4) மாதவி (7) வானம் (8) ஈர்விழி (9) தம்பிமார் (11) ராசி (12) அப்பு (14) ஏணி (15) தம்புரா (16) நான் (17) கும்மி (18) நம்ப (19) கன (20) குண்டு (21) திட்டம்

### மேலிருந்து கீழ்

(1) விவாதம் (2) வனம் (3) சாம்பிராணி (4) மார் (5) தவிர்ப்பு (6) விழி (8) ஈர் (10) மாசி (12) அம்மி (13) புராதனம் (14) ஏன் (15) தம்பதி (16) நான்கு (17) கும் (18) நடு (19) கட

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி
இல.349
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிகேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்,
(07.01.2015 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.349 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 11.01.2015 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 347 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**

செல்வி ச.கார்த்திகா,
வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், வவுனியா.

**2 ஆம் பரிசு**

ஆரணி மகேந்திரராஜா,
வைத்தியசாலை வீதி, கட்டைக்காடு, தருமபுரம், கிளிநொச்சி.

**3 ஆம் பரிசு**

க.சிந்துஜா,
இல.33, பாடசாலை வீதி, தாவடி தெற்கு, தாவடி.

**4 ஆம் பரிசு**

கே.கிஷாந்த்,
பண்டாவத்தை, புலோலி வடக்கு, பருத்தித்துறை.

**5 ஆம் பரிசு**

தர்ஷிகா பாலச்சந்திரன்,
இல.73/7, காட்டுப் பள்ளிவாசல் வீதி, புதியமூர் வீதி, மன்னார்.

**பாராட்டுப் பெறுவோர்**

ஏ.எம்.ஜெயகணேஷ்,
இல.30, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

இ.கிருஷாந்தி,
ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம், ஒட்டுசுட்டான்.

வி.தவமலர்,
இல.39/17 'மணிவாசா', எழுத்தூர், மன்னார்.

சொற்சிலம்பம் போட்டி 347 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

28.12.2014 முதல்
03.01.2015 வரை

## மேடம்

எதிர்ப்புக்களைக் கடந்து வாழ்வில் முன்னேற்றம் காண்பீர்கள். செய்து வரும் தொழில் விருத்தி அடையும். இட மாற்றம் கிடைக்கும். பயணத்தின் மூலம் அனுகூலம் உண்டாகும். கலைஞர்கள் வெற்றி நடைபோடுவார்கள். நண்பர்கள், உறவினர்களால் நல்லதும் அல்லாததுமான பயன்கள் கலந்தவாறு ஏற்படும். தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் பிரச்சினைகள் சூழும். மனத்துணிச்சல் அதிகரிக்கும்.

## இடபம்

எதிர்ப்புக்களை வெல்லும் சக்தி பிறக்கும். போட்டிகளில் வெற்றி கிடைக்கும். நல்லவர்களின் தொடர்பை வலுப்படுத்திக் கொண்டு அவர்களின் ஆலோசனைகளின்படி செயற்படுவதன் மூலம் நலம் கூடப் பெறலாம். நல்லவர் அல்லாதவர்களது தொடர்பு அடியோடு கூடாது. மாணவர்கள் தங்கள் திறமைக்குரிய வளர்ச்சியைக் காண்பார்கள்.

## மிதுனம்

உழைப்புக்கும் திறமைக்கும் உரிய பயன் கிடைத்துவரும். தொழிலாளர்களது கோரிக்கைகளில் சில இப்போது நிறைவேறும். பொது நலப்பணிகளில் ஈடுபாடு உள்ளவர்களுக்கு நற்பெயர் கிடைக்கும். குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் பழகுவது நல்லது. பிறரிடம் கோபப்படாமல் நிதானமாகப் பேசுவது அவசியமாகும். வீண்விவகாரங்களில் தலைல்யிடலாகாது.

## கடகம்

முக்கிய பதவிகளும் பட்டங்களும் கிடைக்கும். பெரியவர்கள், மேலதிகாரிகள் ஆகியோரது ஆதரவைப் பெறுவீர்கள். நிர்வாகத் திறமை கூடும். அதிர்ஷ்ட வாய்ப்புக்களை எண்ணி ஏமாற வேண்டாம். வயிறு சம்பந்தமான உபாதைகள் சிலருக்கு ஏற்படும். கலைஞர்களுக்குச் சோதனைகள் சூழும். கேளிக்கை, உல்லாசங்களைத் தவிர்ப்பது நல்லது. மூத்த சகோதரியால் சங்கடம் ஏற்படும்.

## சிம்மம்

நல்ல தகவல் வந்து சேரும். கலைத்துறையினருக்கு சுபிட்சம் கூடும். புத்திசாலித்தனம் கூடும். எதிரிகள் விலகிப் போவார்கள். குடும்பத்தில் சிறுசிறு சலசலப்புக்கள் ஏற்படும். வீண் வம்புகளைத் தவிருங்கள். அலைச்சலைக் குறைத்துக் கொள்வது நல்லது. மார்பு, இதயம் சம்பந்தப்பட்ட நோய் உள்ளவர்கள் விழிப்புடன் இருப்பது அவசியமாகும்.

## கன்னி

வாக்குவன்மை கூடும். நண்பர்களும் உறவினர்களும் உங்களுக்கு உதவுவார்கள். சொத்துக்களால் ஆதாயமும் கிடைக்கும். பொது நலப்பணிகளில் ஈடுபாடு உள்ளவர்களுக்கு மதிப்பு உயரும். கேளிக்கை, உல்லாசங்களிலும் விருந்து, உபசாரங்களிலும் ஈடுபாடு கூடும். தாய் நலம் சிறக்கும். அலைச்சல் சற்று கூடவே செய்யும்.

## துலாம்

மதிப்பும் அந்தஸ்தும் உயரும். நல்ல தகவல் வந்துசேரும். புதிய பதவி, பட்டங்கள் வந்து சேரும். முக்கியஸ்தர்கள் உங்களுக்கு உதவுவார்கள். தந்தையால் அனுகூலம் உண்டாகும். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றி நடைபோடுவார்கள். புதிய ஒப்பந்தங்தள் கையெழுத்தாகும். மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்துவது அவசியமாகும்.

## விருச்சிகம்

செல்வாக்கும் மதிப்பும் அந்தஸ்தும் உயரும். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். சுப காரியங்கள் நிகழச் சந்தர்ப்பம் கூடிவரும். கலைஞர்களுக்கு வெற்றி வாய்ப்புக்கள் கூடும். புதிய ஆடை, அணிமணிகள் சேரும். மனத்துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். எதிரிகள் அடங்கிப் போவார்கள். உழைப்புக்கும் திறமைக்கும் உரிய பயன் கிடைத்து வரும்.

## தனுசு

கலைஞர்கள் வளர்ச்சி காண்பார்கள். வெளிநாட்டுத் தொடர்புகள் பயன்படும். பயணத்தால் அனுகூலம் உண்டாகும். மதிப்பும் அந்தஸ்தும் உயரும். அலைச்சலும் உழைப்பும் கூடும். பெற்றோர் நலனில் கவனம் செலுத்த வேண்டிவரும். பேச்சில் நிதானம் தேவை. யாருக்கும் வாக்குக் கொடுக்க வேண்டாம். பிணை கொடுப்பதும் கூடாது.

## மகரம்

எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவீர்கள். செல்வாக்கும் மதிப்பும் அந்தஸ்தும் உயரும். கூட்டுத் தொழிலில் ஓரளவு வளர்ச்சி காணலாம். வார பின்பகுதியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். அரசு விவகாரங்களில் விழிப்புத் தேவை. நிறுவன, நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்குச் சோதனைகள் சூழும். தந்தை நலனில் கவனம் தேவைப்படும்.

## கும்பம்

தொலைதூரத் தொடர்பு ஓரளவு பயன்படும். உழைப்புக்கும் திறமைக்கும் உரிய பயன் கிடைக்கவே செய்யும். முக்கியஸ்தர்களது சந்திப்பால் நலம் உண்டாகும். கூட்டாளிகள் ஒத்துழைப்பார்கள். நண்பர்கள், உறவினர்களால் ஓரிரு எண்ணங்கள் நிறைவேறும். கலைஞர்களுக்கு வெற்றி வாய்ப்புக்கள் கூடும். வாரக் கடைசியில் உடன் பிறந்தவர்களால் செலவுகள் ஏற்படும்.

## மீனம்

புதிய பதவி, பட்டங்கள் சிலருக்கு இப்போது கிடைக்கும். முக்கியஸ்தர்களும் மேலதிகாரிகளும் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். நண்பர்கள், உறவினர்களால் ஓரிரு காரியங்கள் நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் உங்களுக்குப் பக்கபலமாக இருப்பார்கள். நிறுவன, நிர்வாகத் துறையினருக்கு முன்னேற்றமான சூழ்நிலை நிலவிவரும். முக்கியமான எண்ணங்களும் நிறைவேறும்.

# தேர்தல் காலத் திருக்குறள்

1.கரும்பாய் இனித்தவை
கசக்கும், தேர்தல் நெருங்கிட
வேம்பும் இனிக்கும்.

2.பொய்யுரைக்க வார்த்தை
தடுமாறின், சென்றிடுக
மெய்யறியா அரசியலார் பால்

3.அனுபவித்த மீதியெலாம்
தமர்வாழச் சேர்த்து குவித்த
பின் ஞானம் வரும்.

4.தாவுவதில் மந்திதான்
முந்துமென்பர். கட்சித்
தாவலின் வேகம் அறியார்.



5.நெருநல் உள கட்சிதனில்
இன்றில்லை யென்னும்
பெருமை உடைத்து எம்நாடு.

6.ஏலத்தில் விலைபோகும்
தேசத்தின் தலைமைகளுக்கு
ஞாலத்தில் நிகர்யாரும் இல்.

புத்தூர் வே. இளையகுட்டி.



# நல்ல மனிதனாய் வாழ்ந்துவிடு...

எண்ணத்தில் தோன்றி எழுத்தாய்
வருவதெல்லாம் ஒரு பாட்டல்ல – பல
வண்ணங்கள் சேர்ந்து வரைவ
தெல்லாம் ஒரு படமுமல்ல

நெல் உடைத்து சமைப்ப
தெல்லாம் சோறல்ல – கருங்
கல்லுடைத்துப் படைப்ப
தெல்லாம் சிலையுமல்ல

பச்சிளம் பாலகரை இச்சையாய்
தொடுவது தவறல்லவா– உன்
இச்சை தீர்ந்ததும் தூக்கி
எறிவது கொடுமையல்லவா?

பொன் நகையை விரும்பாதார்
பலருண்டு இந்நாட்டில்– தன்
புன்னகையை சிந்தாமல் வாழ்ந்தோர்
யார் உண்டு இப்புவியில்.

தேசத்தை அரிக்கின்ற புற்றுநோய்
மதுவும் புகையுமன்றோ – உன்
தேகத்தை நீறாக்கிப் போடுவது
இவை யிரண்டும் தானன்றோ

பல லட்சம் ரூபாயில் – பவனி
வர மோட்டார் கார்– ஐயா
சில லட்சம் பேருக்கு உடுக்கையும்
உணவும் தர வருவார் யார்

மேடையில் முழங்குவதை
நிறுத்திடுவீர்– இந்த
சமுதாய சீர்கேட்டை– நினைத்து
வருந்திடுவீர்

குற்றம் குறை பேச
உனக்கு நேரமுண்டு– உன்
சுற்றத்தை அணைத்து
மகிழ நேரமில்லை
மனிதனைப் போல வாழ வேண்டும்
என்று நினைக்காதே– நல்ல
மனிதனாய் வாழு! வாழ்ந்து
நிலைத்துவிடு இம்மண்ணில்!

*பாவரன், வவுனியா.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்று ஒழியும் இவர்களின் லயன் அறை வாழ்வு!

■ ரம்யன்

அபரிமிதமான வெளிநாட்டு செலாவணியைத் தமது அன்றாட உழைப்பின் மூலம் ஈட்டித்தரும் ஏழைத் தொழிலாளர்கள் மழையிலும் வெயிலிலும் பத்து சதுர அடி லயன் அறைகளில் முடங்கிக்கிடக்க அவர்களின் உழைப்பைச் சுரண்டிவாழும் தோட்டத்துரைமாரும் தொழிலாளர் தலைவர்கள் என்போரும் விஸ்தாரமான பங்களாக்களிலும், வீடுகளிலும் சொகுசு வாழ்க்கை வாழ்கிறார்கள்.

இந்த மக்களின் லயன் அறைவாழ்க்கைக்குபதவியிலிருக்கும் அரசுகள்தான் முடிவு கட்ட வேண்டும். ரத்மலானையைச் சேர்ந்த சிறிலால் ஜயசூரிய என்பவர் ஆங்கிலப் பத்திரிகையொன்றில் எழுதியிருக்கும் ஆக்கம் இது.



கொஸ்லாந்தை மீரியாபெத்த தேயிலைத்தோட்டத்தில் ஏற்பட்ட மண்சரிவில் எண்ணிக்கை தெரியாத அளவு தொழிலாளர்கள் புதைந்து போனதுடன் 75 பாடசாலை சிறுவர், சிறுமிகள் அநாதைகள் ஆகிவிட்டமையானது இலங்கையில் மிக ஏழ்மை நிலையில் தினசரி உழைத்துக் கொடுக்கும் தொழிலாளர்கள் எவ்வாறு வாழ்கிறார்கள் என்பதை முழுஉலகுக்கும் எடுத்துக் காட்டுவதாக இருந்தது. அவர்கள் உழைப்பின் ஏற்றுமதி பெறுமதியானது, 2013 ஆண்டு மட்டும் 1.54 பில்லியன் அமெரிக்க டொலர் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

தோட்டத்துரைமாரும் அவர்களின் உதவியாளர்களும் வாழும் சொகுசு வாழ்க்கையுடன் ஒப்பிடுகையில் மிக பெருமளவில் வித்தியாசத்தைக் காணலாம். அவர்களின் விஸ்தாரமான பங்களாக்களில் குளிர்காலத்தில் அறைகளுக்கெல்லாம் வெப்பம் ஏற்றிக்கொள்ளும் தணல் அடுப்புக்களும் உண்டு. அதேவேளை தொழிலாளர்களும் அவர்களின் குடும்பங்களும் 10' × 10' சதுர அறைகளில் தகரக்கூரைகளின் கீழ் வெயில் மழையென்று பாராமல் வாழ்கின்ற துர்ப்பாக்கியத்தைக் காணலாம். முழுக் குடும்பமும் வாழ்வதற்கும், சமைப்பதற்கும் சாப்பிடுவதற்கும் உறங்குவதற்கும் அதுதான்அவர்களுக்குவழங்கப்பட்டுள்ளவாழ்விடம். அவர்களுக்குள்ள கழிப்பிட வசதிகள் மிகவும் கீழ் நிலையில் காணப்படுவதுடன், சுத்தமான குடிதண்ணீர், இருள்சூழ்ந்த அறைகளை ஒளி ஊட்டும் மின்சாரம் என்பவை நினைத்துக்கூடப் பார்க்க முடியாதவை. 1948 ஆம் ஆண்டு நாடு சுதந்திரமடைந்தது என்றாலும் அதற்கு முந்தியிருந்த நிலையில் 65 ஆண்டுகள் கழிந்த பிறகும் அதேநிலையில் அவர்களின் வாழ்வாதாரம் நீடிக்கின்றது. அவர்கள் நாடற்றவர்கள் என அறிவிக்கப்பட்டதால் அரசு தரப்பிலிருந்து எதுவித உதவியுமின்றி மனித நிலைக்கும் கீழ் மட்ட வாழ்க்கையையே அவர்கள் நடத்தி வந்திருக்கிறார்கள். சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதையடுத்து நாடற்றவர்களாகக் கருதப்பட்ட அவர்களுக்கு சற்று கௌரவம் கிடைக்கலாயிற்று. அந்த வகையில் இலங்கையில் தங்கியிருந்த இந்திய வம்சாவளியினருக்கு இலங்கை அரசு குடியுரிமை வழங்கியது. 1977 இல் ஜே.ஆர். பதவிக்கு வந்தபோது எஞ்சியிருந்த அனைத்து இந்திய வம்சாவளியினருக்கும் குடியுரிமை வழங்கப்பட்டது.

1964 –1977 வருட காலத்தில் தென்னிலங்கையிலிருந்தமுன்னிலை அரசியல் கட்சிகள் இடதுசாரிகளும்கூட கிடைத்திருந்த அருமையான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளாமல் குடியுரிமை பெற்ற தோட்டத் தொழிலாளர்களின் சார்பில் நிற்காமல் தொண்டமான் போன்றவர்கள் அவர்களை சுரண்டும்படி விட்டுவிட்டார்கள். தன்னலம் கருதாத பாலதம்பு போன்ற உழைப்பாளர் தலைவர்கள் இதில் கவனம் செலுத்தியிருந்தால், இந்த தொழிலாளர் சக்தியை நன்கு பயன்படுத்தி அவர்களைமேன்நிலைப்படுத்தியிருக்கலாம்.இன்றுதொண்டமான்கள் நாடாளுமன்றத்திலும் மாகாண சபைகளிலும் காணப்படுகிறார்கள். திகாம்பரங்கள், சந்திரசேகரன்கள், சிறிரங்காக்களும் காணப்படுகிறார்கள். இவர்கள் எல்லாம் துரதிர்ஷ்டசாலிகளான அந்த மக்களின் முதுகுகளில் பயணம் செய்து வெளிச்சத்துக்கு வந்தவர் கள்.

இன்று தோட்டத் தொழிலாளர்கள் அனுபவிக்கும் துன்பங்களுக்கெல்லாம் தொழிலாளர் தலைவர்களாக மாறியுள்ள இந்த அரசியல்வாதிகள்தான் பொறுப்பேற்க வேண்டும். இந்தத் தலைவர்களுக்கு இப்போது தேவைப்படுவதெல்லாம் தமது அமைச்சுப் பதவிகளை எவ்வாறு தக்கவைத்துக்கொள்வது என்பது மட்டும்தான். அதனால் எந்த அரசு பதவியிலிருந்தாலும் அதற்கு ஆதரவு அளிப்பார்கள்.

அரசியல் குத்துக்கரணம் அடித்துக் கொண்டிருக்கும் இவ்வாறான தொழிற்சங்கத் தலைவர்களை ஒரு புறம் ஒதுக்கிவிட்டு, நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான வெளிநாட்டு செலாவணியைத் தேடித்தரும் இந்த மக்களுக்கு நியாயமும் நீதியும் கிடைக்கப் பதவியிலிருக்கும் அரசுதான் நடவடிக்கை எடுத்து உதவவேண்டும். கொஸ்லாந்தையில் 30 அடி ஆழத்தில் 60 லயன் அறைகள் மறைந்துபோனதுபோல அவர்களின் இந்த லயன் அறை வாழ்க்கை முறை என்றென்றுக்கும் மறைந்து போக வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு முறையான வீடமைப்புத் திட்டம் ஒன்றை செயல்படுத்தும் வகையில் ஏற்றுமதி செய்யப்படும் ஒவ்வொரு இறாத்தல் தேயிலைக்கும் இரண்டு ரூபாய் மேலதிக வரிவசூலிக்க சட்டம் இயற்ற வேண்டும். இந்தப் பணம் தோட்டத்தொழிலாளருக்கான வீடமைப்பு அதிகார சபையொன்றில் கணக்கிலிடப்பட வேண்டும். அது தோட்டத் தொழில்துறை அமைச்சின் கீழ் செயற்படவேண்டும்.

150 வருடங்களுக்கு மேலாக இந்த நாட்டுக்கு உழைத்துக் கொடுத்த மக்களுக்கு அதனை திருப்பிச் செலுத்த வேண்டிய காலம் உதயமாகியிருக்கிறது. ஆம், இந்த நாட்டில் ஜேம்ஸ் ரெய்லர் என்பவரால் லூல் கொண்டேரா தோட்டத்தில் முதலாவது தேயிலைப் பதிகள் நடப்பட்டு இப்போது 150 ஆண்டுகள் ஆகின்றன.


கறுப்பினத்தின் கண்டல் இரத்தங்கள்தான்
அமெரிக்க, பிரித்தானிய தேசங்களின்
கட்டடங்களும் சாலைகளும்
அடிமைகளாய் உங்களை
ஆபிரிக்காவில் இருந்து ஏற்றினார்கள்
அந்த அதிகாரப் பேய்கள் –ஆனால்
இன்று ஆளும் வரை உயர்ந்தீர்கள்
அமெரிக்காவில்–இருந்தும்
அடிமை நிலை நீங்கவில்லை–என்பதை
அண்மைய மரணம்–எமக்குச் சொல்லியது
ஓர் அடிமைக்குத்தான் தெரியும் அடிமையின் வலி
ஆயிரம் ஆபிரகாம் லிங்கன்களும்
மண்டேலாக்களும், லூதர் கிங்குகளும்
[illegible]
[illegible]

அடிமைச் சங்கிலிகள் பலமடையுமே தவிர
பலவீனமடையாது உன்னை நீ அறிவாயாயின்
உடையும் விலங்குகள் ஓர் நாள்.

*தேன்மொழியான்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தண்டனை

அரிமா இளங்கண்ணன்

குற்றங்கள் பெருகும்போது அவற்றிற்குரிய தண்டனைகளைப் பற்றி அறிஞர்கள் சிந்திக்கத் தொடங்கினர். சாலமண்டு என்னும் அறிஞர் உடனடியாகப் பாதிக்கப்படுபவர் ஒரு தனி நபராக இருந்தபோதிலும் அச்செயல் பொதுவாக ஒரு சமுதாயத்துக்குத் தீமை விளைவிக்கும் என்று சட்டத்தால் கருதப்படுமேயானால் அது குற்றம் எனப்படும் என்கிறார்.

சமுதாயத்தை அச்சுறுத்தும் குற்றவாளிகளுக்குச் சில தண்டனைக் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டன. குற்றவாளிக்கு வழங்கப்படும் தண்டனை மற்றவர்கள் மனத்தில் அச்சத்தை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும் என்பது அச்சுறுத்தும் தண்டனைக் கோட்பாடு. பாதிக்கப்பட்டவனுக்கு ஏற்பட்ட வலியையும் துன்பத்தையும் குற்றவாளியும் பெறவேண்டும் என்பது பழிக்குப்பழி என்னும் கோட்பாடு. தடுத்தல் அல்லது செயல்படுத்த முடியாமல் செய்தல் என்பது குற்றவாளியைச் சிறையில் அடைத்து மீண்டும் குற்றம் செய்ய முடியாதவாறு தடுத்தல் ஆகும். மேற்குறிப்பிட்ட மூன்று கோட்பாடுகளையும் தாண்டி ஒரு குற்றவாளியின் மனத்தை மாற்றி அவனை சமுதாயத்தில் ஒரு நல்ல மனிதனாக்குவதே சீர்திருத்தக் கோட்பாடாகும்.

தமிழ் இலக்கியங்களில் குற்றங்களும் அவற்றிற்குரிய தண்டனைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

*கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்*
*களைகட் டதனோடு நேர்*

என்கிறார் திருவள்ளுவர்.

கள்வனைக் கோறல் கொடுங்கோல் அன்று

என்கிறார் இளங்கோவடிகள். மரண தண்டனைக்கு எதிராக மக்கள் இன்று குரல் கொடுக்கின்றனர். ஆனால், சிலப்பதிகாரம் ஊர்சூழ்வரியில் மரண தண்டனைப் பற்றிய ஒரு காட்சி (புண்டாழ் குருதி புறஞ்சோர) உள்ளது.

மரண தண்டனை பற்றிய இன்னொரு காட்சியைக் காண்போம்:

சோழ மன்னன் அமராவதியைக் காதலித்த குற்றத்திற்காக இறுதியில் மரண தண்டனைக்குள்ளான தன் மகன் அம்பிகாபதியின் உடலை கம்பர் தன் மடிமீது கிடத்தி, மகனே! பெண்ணின் மோக மயக்கத்தில் சிக்கிக்கொண்ட மன்மதனின் மலரம்பினால் துன்பப்பட்டு வருந்திய பிறகாவது தெளிவடைவாயோ என்று கவலையோடு எண்ணி இருந்தேன். முன்னைய ஊழின்படியே நீ வாளால் வெட்டப்பட்டுக் கிடக்கின்றாயே! என்று கதறுவது நெஞ்சைச் சுடுகிறது. இதுபோன்ற தீர்ப்புகள் இனிமேலாவது திருத்தப்பட வேண்டும்.

*மட்டுப்ப டாக்கொங்கை மானார் கலவி மயக்கத்திலே*
*கட்டுப்பட் டாயென்ன காதல்பெற் றாய்மதன் கையம்பினாற்*
*பட்டுப்பட் டாயினுந் தேறுவை யேயென்று பார்த்திருந்தேன்*
*வெட்டுப்பட் டாய்மக னேதலை நாளின் விதிப் படியே. (தனிப்பாடல் திரட்டு)*

# தமிழர் வீரம் தனித்துவமானது

அ.உமாமகேஸ்வரி

**அறத்துடன் நிற்பது, தமிழரது வீரப்பண்பு. அது தனித்துவமானது. மிக நுட்பமானது. ஆக்ரோஷமானது,** வெற்றியை மாத்திரமே இலக்காகக் கொண்டது மார்பிலே புண்ணடைவது, அதையே விரும்பி ஏற்பது, தமிழரது வீரப்பண்பு உலகத்தில் விசேடமாக வைத்து நோக்கத்தக்கது. இப்பேற்பட்ட தமிழரது வீரப்பண்பு சங்க இலக்கியங்களிலே மிகச் சிறப்பாகவும் எமது உணர்ச்சியைத் தட்டி எழுப்பத்தக்கதாகவும் விவரிக்கப்பட்டுள்ளது. தமிழர் தம் வீரப்பண்பை காட்டுவதற்குரிய சந்தர்ப்பங்கள் பலவாறாக விதந்துரைக்கப்படுகின்றன. அந்த ரீதியில் நோக்கும் போது உளவியல் காரணி வீரத்தை வெளிப்படுத்துகின்ற ஆசை, தன்னுடைய இனத்துக்கு அநீதிகள் இழைக்கப் படுவதால் ஏற்படும் போர், சுயமரியாதையை யாராவது இகழ்வதால் உண்டாவது, தமது குலம் மற்றும் குடிப்பெண்களுக்கும், அவர்களது மானத்துக்கும் பங்கம் ஏற்படும் போது உருவாவது, காலாகாலமாக ஒரு பகுதியிடம் உள்ள பகை, மனங்கவர்ந்த பெண்ணை திருமணம் செய்வதற்கு என்று பல்வேறு விதங்களில் தமிழன் தனது வீர உணர்வை வெளிப்படுத்த முனைகிறான். இதனால் பல போர்கள் உருவாகின. இவை நன்மை கருதிய போர்களாகவே காணப்பட்டன. இவை தமிழருக்குரியவை. ஆயினும் ஆங்காங்கே தீய எண்ணத்தால் போர்த் தொடுத்தவர்கள் பற்றிய செய்திகளும் உண்டு. அவர்களது தோல்வி உலகத்துக்கு பாடமாகியதை வரலாறுகள் சுட்டிக்காட்டுகின்றன.

இவ்வாறாக தமிழரது வீரப்பண்புகளை சங்க இலக்கியங்கள் சிறப்பாகவே எடுத்தியம்புகின்றன. மன்னர், மறவர், மக்கள் என யாவரும் போரையே தமது நோக்கமாகக் கொண்டிருந்தனர். "விழுப்புண் அடையாத நாளெல்லாம் வீணான நாளே" என்று வருந்துபவர்களாய் விளங்கினர் சங்கத்தமிழர்கள், பகைவனது நாட்டிலே படையெடுத்து போர் செய்யக் கருதிய வேந்தன் ஒருவன் அந்த நாட்டிலே வாழுகின்ற அந்தணர்கள் பெண்கள், நோயாளிகள் முதியோருக்கு தீங்கு செய்யக்கூடாது என்பதை மனதிற்கொண்டும் அவர்களுக்கு எந்தவித இடையூறும் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்றும் எண்ணி "நாங்கள் போரின் நிமித்தம் உம்முடைய நாட்டுக்கு வர இருக்கிறோம் நீங்கள் உங்களுடைய பாதுகாப்பிற்கான இடங்களை நாடிச்செல்லுங்கள்" என்று அறிவித்ததன் பின்னர் போர்தொடுத்த அறப் போரை மேற்கொண்டவன் சங்கத்தமிழனே. இப்பேற்பட்ட வீரமும், மனோநிலையும் தமிழருக்கு மட்டுமே உரித்தானது.

ஆனால் இன்று உலக நாடுகள் பலவற்றிலும் இடம்பெறுகின்ற போர்கள் அவ்வாறில்லை. அவர்கள் பெண்களையும், சிறுவர்களையும் பகடைக்காய்களாகவும், பணயக்கைதிகளாகவும் பயன்படுத்துகிறார்கள். அவர்களிடத்திலேயே தமது வீரத்தை வெளிப்படுத்தும் கோழைகளாகிறார்கள். அவர்களது மானத்துக்கு குந்தகம் விளைவிப்பதையே வெற்றிக்களிப்பாகக் கொண்டாடுகிறார்கள். இன்னும் சிலர் நிராயுதபாணிகளாக நிற்கும் பொதுமக்களையும் பிரபலமானவர்களையும் பிடித்து கை, கால்களைக் கட்டி தமது வீரத்தை வெளிப்படுத்துகிறார்கள். போருக்கென்று உள்ள விதிமுறைகளை மீறி குள்ளத்தனமாக முயன்று வெற்றியை நெருங்குகிறார்கள். இதெல்லாம் தமிழர்களிடம் இல்லை.

"தமிழர் போர் என்று கேட்டால் அதனை விரும்பி ஆர்ப்பரிக்கும் சிவந்த கண்களை உடையவர்கள், ஊரில் உள்ள பொது மன்றங்களில் தொங்கும் முழவு காற்றுப்பட்டு ஒலி எழுப்ப அதனைப் போர்ப்பறை ஒலி என்று மகிழ்வர். வீரர்கள் தம்முடைய பூரித்த தோள்களைத்தட்டி ஒருவரோடு ஒருவர் போரிட்டு மடிய வேண்டும் என்று பூரித்து நிற்பர். மன்னர் தம் நகரில் இருப்பதைக் காட்டிலும் போர்ப் பாசறையில் நிற்பதையே அதிகம் விரும்புவர்" இது தமிழரது வீரம் தொடர்பான தொல்காப்பியரின் கூற்று. அதுமட்டுமன்றி தன்னுடன் போரிட வந்த பகைவர்கள் அலறிப் புறமுதுகிட்டு ஓடுமாறு செய்யாது போயின் என் தேவியை இழப்பேனாகுக என்றும் பகைவர் வருந்தும்படி போரிடாது போயின் பொதுமகளிர் மார்பில் என் மாலை துவளும் இழிநிலையை அடைக என்று தம் வீரத்தில் நம்பிக்கை கொண்டு சூளுரைப்பவராயிருந்தனர். பண்டைத் தமிழர்களால் போர்க் களத்திலே வீரம் செறிந்த உயிர் இழக்கும் மறவர்கள் வானுலகத்திலே வரவேற்கப்படுவர் என்ற நம்பிக்கை பின்பற்றப்பட்டது.

இப்பேற்பட்ட வீர உணர்வு கொண்ட தமிழர்களாகச் சங்கத்தமிழர்கள் வாழ்ந்தார்கள். அவர்களது ஆட்சிப் பரப்பின் விரிவுகள் இதனை எமக்குப் பறைசாற்றுகின்றன.

*விண்ணை இடிக்கும் தலை இமயம் – என்னும்*
*வெற்பை அடக்கும் திறலுடையார் சமர்*
*பண்ணிக் கலிங்கத்து இருள் கெடுத்தார் – தமிழர்*
*பார்த்திபர் நின்ற தமிழ்நாடு*

என்று தமிழர் வீரத்தைப் பறைசாற்றுகிறார் பாரதி. இது வரலாற்று உண்மை நிலத்திலே தமிழருடைய போர் தந்த வெற்றிகள் இமயம் வரை பரந்திருந்தது. சேரன், சோழன், பாண்டியன் என்னும் தமிழ் மூவேந்தரும் தமது வில், கயல், புலி ஆகிய முத்தமிழ் கொடிகளை இமயமலையின் உச்சியில் ஏற்றினார்கள். அம்மலை உச்சியால் தமிழரின் வீரம் வானுலகத்துக்கு எடுத்துக்காட்டப்பட்டது. இமயத்தைத் தொடர்ந்து இருக்கும் கங்கை நாடும் வங்கமும் மற்றும் கலிங்கமும் தமிழ் மூவேந்தரின் ஆட்சியாகின. கரிகாலச்சோழன் மேரு மலையின் உச்சியில் நின்றான். சேரன் செங்குட்டுவன் கங்கைக்கரை கடந்து ஆரிய மன்னர்களை முறியடித்தான். இவை ஒருபுறமிருக்க தமிழரது வீரப்பண்பு மேலும் விஸ்தாரமாகியது. தரை வழியாக நீண்ட ஆட்சி கடல்வழியாகவும் பரந்தது. சேர, சோழ, பாண்டியர்கள் இலங்கை, பர்மா, மலாயா, அந்தமான், நிக்கோபார் தீவுகள், சுமாத்ரா, ஜாவா, இந்து, சீனா ஆகிய தென்கிழக்காசிய பகுதிகளில் பரவியிருந்தன. அந்த நாட்டிலே பாண்டியரும் சோழரும் தம் கொடியை ஏற்றினர். சிந்துவெளி, சுமேரிய நாகரிகம், பாபிலோனிய, அஸ்பிரியர், பாலஸ்தீனம், எகிப்து, உரோமம் போன்ற நாடுவரை பரந்தது. இது தமிழர் வீர வரலாற்றை எடுத்துக்காட்டுவது.

தமிழன் எப்போதும் வீரனாகவே வாழ்ந்தவன், வீரனாகவே மடிந்தவன் என்பது சங்க வரலாறு கூறும் உண்மை. எனவே தமிழர் வீரம் தனித்துவமானதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அகன்றது புலி ஆபத்து

ஒரு சிறிய காட்டிலே மான், முயல், மரை ஆகிய மூன்று மிருகங்கள் நட்புடன் வசித்து வந்தன. அந்தக் காட்டிலே சிங்கம், புலி, கரடி போன்ற கொடிய மிருகங்கள் இல்லாததால் இவை மூன்றும் எதுவித அச்சமுமின்றி மகிழ்ச்சியுடன் வசிக்கக் கூடியதாக இருந்தது. காட்டிலுள்ள இலை, தழைகளை உண்பதும், காட்டின் நடுவே அமைந்துள்ள குளத்தில் நீரை அருந்தித் தமது தாகத்தைத் தணிப்பதும் இவற்றின் வழக்கமாக இருந்தது. அத்துடன் இந்த மூன்று மிருகங்களும் இரவு வேளையில் ஒன்றாகப் படுத்து ஓய்வெடுப்பதும் வழமையாகும்.

ஒரு நாள் இரவு குளக்கரைப் பக்கமிருந்து புலியொன்று பலத்த குரலில் உறுமும் ஓசை கேட்டது. இதைக் கேட்ட இந்த மூன்று மிருகங்களும் அந்தக் கொடிய புலியால் தமக்கு ஆபத்து ஏற்பட்டு விடும் எனப் பயந்து நடுங்கின. மறுநாள் காலை அந்தப் புலியின் நடமாட்டம் தொடர்பாக மறைந் திருந்து பார்ப்பதெனவும் இவை முடிவு செய்தன.

அதன் பிரகாரம் இவை மறுநாள் பற்றை யொன்றின் மறைவில் மறைந்திருந்தவாறு பார்த்தபோது அந்தப் புலி குளக்கரையில் நின்று கொண்டு ஏதாவது இரை கிடைக்கு மாவென அங்குமிங்கும் பார்ப்பதைக் கண்டு கொண்டன. அந்தப் புலியை எவ் வாறாயினும் கொன்றுவிடுவது அல்லது காட்டைவிட்டே துரத்தி விடுவதென அவை முடிவு செய்தன.

அந்தக் காட்டிலே எருமை மாடொன்றும் வசித்து வந்தது. அது பருத்த உடலமைப் புடன் பார்ப்பவர்கள் அச்சமடையக் கூடிய விதத்திலான தோற்றத்தைக் கொண்டிருந் தது. அதன் கொம்புகள் கூர்மையுடன் காணப்பட்டன. அந்த எருமை மாட்டைக் கொண்டே அந்தப் புலிக்குச் சமாதி கட்டி விடுவதென மான், முயல், மரை ஆகியன தீர்மானித்துக் கொண்டன.



அதற்கான வேளையும் வாய்த்தது. ஒரு நாள் புலி குளக்கரையில் நின்றபோது இந்த மூன்று மிருகங்களும் அந்த எருமை மாட் டிடம் சென்று எமக்கு ஆபத்து வந்து விட்டது. புலியொன்று எம் அனைவரையும் கொல் வதற்குத் தருணம் பார்த்துக் குளக்கரையில் காத்துக் கொண்டிருக்கின்றது. அதிலும் கொழுத்துப் போய்க் காணப்படும் உம்மை விட்டு வைக்கவே மாட்டாது எனக் கூறின. இதைக் கேட்டதும் அந்த எருமை மாட்டுக் குக் கடுமையான கோபம் வந்து விட்டது. உடனே குளக்கரையை நோக்கி ஓடிச் சென்றது. அங்கு பசியுடன் காத்திருந்த புலி அதன் மீது வேகமாகப் பாய்ந்தது.

ஆனால் எருமை மாடு தனது கூரிய கொம்புகளால் புலியின் வயிற்றைக் குத்திக் கிழித்து விட்டது. இதனால் நிலை குலைந்து போன புலி இரத்தம் பெருகிய நிலையில் நிலத்தில் வீழ்ந்து துடித்தது. சிறிது நேரத்தில் அதன் உயிர் பிரிந்து விட்டது.

தமது உயிருக்கு இயமனாக வந்த புலி இறந்து விட்டதால் மகிழ்ச்சியடைந்த அந்த மூன்று மிருகங்களும் தமது வழமையான அலு வல்களைக் கவனிக்கவெனச் சென்றன.

சு.றிசானிகா



செ.ஆன்தர்சனா
யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்



தர்சி



அ.விசாகன்
யாழ்ப்பாணக் கல்லூரி



இ.ஹீர்த்திகன்
சென்.ஜோன்ஸ் கல்லூரி
யாழ்ப்பாணம்

## அம்மா

*ஆசையாய் கவிதை ஒன்றை வரைந்தேன்*
*ஆதி உயிராகவும் அந்தம் மெய்யாகவும்*
*என் அம்மாவை நினைத்து...*

*ஐயிரண்டு திங்கள்*
*சுமந்தாள் கருவாக எனை*
*மாறாத பந்தம் தந்தாள் உருவாக நான்*
*உத்தமராக ஊட்டி வளர்த்த*
*அவளை விட உண்மையான*
*பந்தம் உலகில் வேறெது...*

*ஆடி என்பதில் பிறந்த என்னை – தான்*
*வாடி அன்பதில் வளர்த்தாள் – நான்*
*தேடிச் சொன்ன பதில் என்ன?*
*கோடி விண்மீனால் வெண்ணிலா*
*நீ அம்மா!...*

ப.அனோஜா,
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை



## விடை தெரியுமா ? 295

### உங்களுக்கும் பரிசுகள்

1. ஆகாய விமானம் எந்த ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது?
2. உலகிலேயே மிகப் பெரிய தீப கற்பம் எது?
3. அல்டி மீற்றர் கருவியின் பயன்பாடு என்ன?
4. பைசா என அழைக்கப்படும் சாய்ந்த கோபுரம் எந்த நாட்டில் உள்ளது?
5. ஆஷஸ் கிரிக்கெற் போட்டிகளில் பங்கு பற்றும் நாடுகள் எவை?

சிறுவர் கதிருக்கான ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் **"சிறுவர் கதிர்"**, உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

### விடைகள் 293

1. பிலிப் ஹியுக்ஸ்
2. திருமதி சந்திரிகா குமாரதுங்க
3. இந்தியா
4. தேயிலை
5. 2016

### விடை தெரியுமா?

தெரிந்தால் 04.01.2015 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாண வர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 பெறு மதியான பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### வெற்றி பெற்றவர் விவரம் (293)

- அ.விசாகன், தரம்-5, யாழ்ப்பாணக் கல்லூரி.
- நோ.துஷாளின், தரம்-7, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை
- அ.ஆதித்தன், தரம்-3, யாழ்ப்பாணக் கல்லூரி
- வி.மிதுனன், தரம்-6ஏ, யா/வட்டு இந்து கல்லூரி
- சு.ஹரிபிரசாத், தரம்-5பி, கொக்குவில் இந்து அரம்ப பாடசாலை



செ.டினுசன்
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி

## தெரிந்து கொள்ளுங்கள்

- நைல் நதி எந்தக் கண்டத்தில் பாய்ந்து ஓடுகின்றது? ஆபிரிக்கா
- இஸ்ரேல் நாட்டின் தலைநகரம் எது? டெல் அவிவ்
- கங்காருகளின் பூமியென எந்த நாட்டை அழைப் பார்கள்? ஆஸ்திரேலியா
- இரண்டாவது உலகப் போர் எந்த ஆண்டு ஆரம்பிக் கப்பட்டது? 1939 ஆம் ஆண்டு
- இந்தியாவின் தேசிய மலர் எது? தாமரை
- நயாகரா நீர் வீழ்ச்சி எந்த நாட்டில் அமைந்துள்ளது? கனடா
- இந்தியாவின் தலைநகரம் எது? டெல்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(தொடரும்)

# நான்கு முட்டாள்கள்

என்னவோ தினசரி மிகப் பெரிய அறிவாளிகளையே சந்தித்துக் கொண்டிருந்தது போலவும், அப்படி சந்தித்து சந்தித்து மிகவும் அலுப்புத் தட்டி விட்டது போலவும், அக்பருக்கு இருப்பதிலேயே படு முட்டாள்களை சந்திக்க வேண்டும் என்ற விபரீத ஆசை ஒரு நாள் உண்டாகி விட்டது! டில்லி பாதுஷாக்கள் என்றாலே அன்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி கொஞ்சம் விபரீதமான, வித்தியாசமான, மறை கழன்ற கேசுகள் தான் என்பதைத் தனியாகச் சொல்ல வேண்டியதில்லை தானே! முட்டாள்களை சந்திக்க வேண்டுமென்ற ஆசை வந்தது சரி, அவர்களை எப்படிக் கண்டு பிடிப்பது?

அக்பர் டில்லி பாதுஷா அல்லவா, உத்தரவு போட்டால் போயிற்று! அத்தனை முட்டாள்களும் வரிசையில் வந்து நிற்க மாட்டார்களா என்ன?! ஆனாலும் அதில் கடினமான பகுதி என்னவென்றால், இருப்பதிலேயே வடிகட்டின முட்டாள்களாகப் பார்த்து அதில் நான்கு பேரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமே! அதற்குப் புத்திசாலித்தனமும், சாதுர்யமும் உள்ள ஒருவர் வேண்டாமா!

கூப்பிடு பீர்பாலை! பாதுஷா அக்பர் காவலருக்கு உத்தரவிட்டார். பீர் பாலும் அரசவைக்கு வந்து சேர்ந்தார்.

பீர்பால்! இருப்பதிலேயே வடி கட்டின முட்டாளிலும் வடி கட் டின ம்ட்டாளாக நான்கு பேரைப் பார்க்கவேண்டும்! கண்டு பிடித்து அரசவைக்கு அழைத்து வாரும்! அப்படியே செய்கிறேன் பாதுஷா! சொல்லி விட்டுப் பீர்பால் புறப்பட்டு விட்டார்.

போகிற வழியில் தென்படும் மனிதர்களைக் கவனித்துக் கொண்டே பீர்பால் அவர்களுடைய நடை உடை பாவனைகளைக் கவனித்துக் கொண்டி ருந்தார். முட்டாள்களை எளி தில் அடையாளம் கண்டுபிடித்து விட லாம், இருப்பதிலேயே அடிமுட்டாள்களாகப் பொறுக்கிஎடுக்க வேண்டாமா!

எதிரே ஒரு மனிதன், ஒரு திருமணத்திற்கு சீர்வரிசை கொண்டு போவது போல, பரிசுப் பொருள்களை ஊர்வலமாகக் கொண்டுபோவதைப் பார்த்தார். அந்த மனிதனுடைய நடவடிக்கைகள் கொஞ்சம் வித்தியாசமாக இருக்கவே அவனை நிறுத்தி விசாரித்தார்.

ஐயா! எனக்கும் சோனியா என்ற பெண்ணுக்கும் திருமணம் நிச்சயமாகி இருந்தது. திடீரென்று அந்தப் பெண் என்னுடன் நிச்சயத்தைமுறித்துக்கொண்டுவேறொருவனுடன் திருமணம் செய்து கொண்டு விட்டாள். வம்பு வழக்கு, ஏகப்பட்டரகளை, பிரச்சினைக்குப் பிறகுதான் திருமணம் நடந்ததாம். அவளுக்குத் தான் இந்த சீர்வரிசையெல்லாம் எடுத்துப் போகிறேன். என்று விவரம் சொன்னான் அந்த மனிதன். அவன் யார், அந்தச் சானியா யார் என்பதையெல்லாம் விசாரித்துப் பார்த்து விட்டு, பீர்பால் இவன் அடி முட்டாளிலும் வடிகட்டினமுட்டாள்என்றுமுடிவுசெய்தார்.

அடுத்து ஒரு மனிதன், தலைக்கு மேல் புல்கட்டுச் சுமையைச் சுமந்து கொண்டு சினையாயிருந்த எருமை மீது அமர்ந்து கொண்டு போய்க் கொண்டிருந்தான். அவனை நிறுத்தி பீர்பால், புல் கட்டை எருமை மீது வைத்துக் கொள்ளாமல் எதற்காகத் தன் தலை மீது சுமந்து கொண்டு போகிறான் என்று விசாரித்தார்.

ஐயா! என்னுடைய எருமை சினையாயிருக்கிறது! அதன் மேல் புல்லுக்கட்டை வைத்துக் கொண்டு போனால், அதற்கு சுமையாக இருக்குமே என்று தான், நான் அதன் மேல் அமர்ந்து கொண்டு, என் தலைமேல் புல்கட்டைச் சுமந்துகொண்டு போய்க்கொண்டிருக்கிறேன். எருமைக்கு பாரம் குறையும் அல்லவா? என்று பதில் சொன்னானாம். அக்பருக்குக் காட்ட இவனை விட அடிமுட்டாள் வேறு எவனும் கிடைக்க மாட்டான் என்று பீர்பால் முடிவு செய்தார்.

சோனியாவுக்கு சீர்வரிசை கொண்டுபோனவன், எருமைக்கு சுமையைக் குறைக்கிறேன் என்று அதன் மேல் ஏறி அமர்ந்து கொண்டு, புல்லுக்கட்டை சுமந்து போனவன் ஆக இந்த இரண்டு பேர்வழிகளையும் அழைத்துக் கொண்டு பீர்பால் அக்பரிடம் போனார்.

இரண்டு பேர் கதையையும் கேட்ட அக்பர், பீர்பால் தேர்ந்தெடுத்தது சரிதான் என்று ஒப்புக் கொண்டார். கொஞ்ச நேரம் கழித்துத் தான், தான் சொன்னது நான்கு பேர், பார்த்தது இரண்டைத்தான் என்று அக்பருக்கு உறைத்தது. பாதுஷாக்களாக இருப்பதில் மிகப் பெரிய சிரமம், தாங்கள் என்ன உத்தரவு போட்டோம் என்பதை நினைவு வைத்துக் கொள்வது தான். பீர்பால்! உம்மை நான்கு முட்டாள்களை அல்லவா க்ண்டு பிடித்துக் கொண்டு வரச் சொன்னேன். மீதி இரண்டு பேர் எங்கே? என்று கேட்டார் அக்பர்.

நான்கு முட்டாள்களும் இங்கேயே இருக்கிறார்கள் பாதுஷா! என்றார் பீர் பால். அக்பருக்குக் கோபம் வந்து விட்டது. பாதுஷாவாக இருப்பதனால் ஒன்று இரண்டுக்கு மேல் எண்ணத் தெரியாது என்று பீர்பால் நினைத்து விட்டானா என்ன?

எங்கே அந்த மீதம் இரண்டு பேர்?

இதோ என்னைப் பாருங்கள் பாதுஷா! மூன்றாவதாக நான் இருக்கிறேன்! முட்டாள்களைத் தேடிக் கொண்டு போன என்னை விடப் பெரிய முட்டாள் வேறு எவராவது இருக்க முடியுமா? பீர்பால் இப்படித் தன்னையே முட்டாள் என்று சொல்லிக் கொண்டதில் அக்பருக்கு மிகவும் சந்தோஷம்! இத்தனை நாள் இவன் பெரிய புத்தி சாலி, பெரிய சாமர்த்தியக் காரன் என்று எல்லோரும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். நானே கூட இவனைப் பாராட்டி நிறைய சன்மானம் அளித்துப் பாராட்டியிருக்கிறேன். ஆனால், அவனே தன்னைப் பெரிய முட்டாள் என்று சொல்லிக் கொள்வது கேட்பதற்கே எவ்வளவு சுகமாக இருக்கிறது! புத்திசாலிகளுக்கு பாதுஷா ஒரு பொருட்டே அல்ல! முட்டாள்கள் இருந்தால் தான் பாதுஷாக்கள் பாதுஷாக்களாக இருக்க முடியும்!

பாதுஷாவின் சந்தோஷம் கொஞ்ச நேரம் நீடித்தது! அப்புறம் வழக்கமாக வருகிற சந்தேகம்வந்து விட்டது! பீர்பால்,கண்ணில் இரண்டைக் காட்டினான், தன்னையே மூன்றாவது முட்டாள் என்று சொல்லிக் கொண்டான். நாலாவது எங்கே?

பீர்பால்! ஒன்று, இரண்டு, மூன்று! எங்கே அந்த நாலாவது முட்டாள்? இங்கேயே இருப்பதாக வேறு சொல்கிறாய்! என்னை ஏமாற்றுகிறாயா? அக்பரின் கேள்வியில் கோபம் கொஞ்சம், குழப்பம் கொஞ்சம் கலப்படமாக வந்தது.

பீர்பால் மிகவும் பணிவோடு முகம் பார்க்கும் கண்ணாடி ஒன்றை பாதுஷாவிடம் நீட்டி, நான்காவது மிகப் பெரிய முட்டாளை இதிலேயே பார்க்கலாம், பாதுஷா! என்றார்! கண்ணாடியில் தன்னுடைய முகத்தையே பார்த்துக் கொண்ட பாதுஷாவுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை! மறுபடியும், பீர்பால் தன்னுடைய சாமர்த்தியத்தைக் காட்டிவிட்டதும், தான் தோற்றுவிட்டதும் புரிந்தது.

உருப்படியான வேலைகளை விட்டு விட்டு, முட்டாள்களைத் தேடி அலைந்த நான் பெரிய முட்டாள் என்றால், அப்படி என்னைத் தேட அனுப்பித்தவர் என்னைவிடப் பெரிய முட்டாளாகத் தான் இருக்க வேண்டும்! இல்லையா பாதுஷா?! ஆக, நான்கு முட்டாள்கள் இங்கேயே இருப்பதாகச் சொன்னது தவறில்லையே!

அசடு வழிய, பீர்பால் சொல்வதற்குத் தலையாட்டி சிரித்து மழுப்புவதைத் தவிர டில்லி பாதுஷாவுக்கு வேறு வழிதெரியவில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பப்பாளி பேஸ்ட் குளியல்

இளமையையும், நிறத்தையும் அள்ளிக் கொடுக்கும் இந்தப் பப்பாளி பேஸ்ட் குளியல். பப்பாளி பழக்கூழ், மஞ்சள், வாழைப் பழக் கூழ், சந்தனப்பொடி, பயத்தமாவு பொடி நான்கையும் ஒரே அளவு எடுத்து, சூடான நீரை ஊற்றி பேஸ்ட் ஆக்குங் கள்.

முகம் முதல் பாதம் வரை இதைப் பூசி, பத்து நிமிடம் ஊறவிட்டு, பின்னர் ஓரளவாகத் தண்ணீரை ஊற்றிக் குளியுங்கள். 10 நாளைக்கு ஒரு முறை இப்படி குளித்து வந்தால், இறந்த செல் புதுப்பிக்கப்பட்டு அழகும் இளமையும் அள்ளிப்போகும்.

முகத்தைப் பராமரிக்கும் அளவுக்குப் பலரும் பாதத்தின் மீது கவனம் செலுத்துவதில்லை. இதனால், ஒட்டுமொத்த உடம்பையும் தாங்கிப் பிடிக்கும் பாதத்தில் சுருக்கமும், கருமையும் படர்ந்து கரடு முரடாகிவிடும். இதற்குப் பப்பாளி தரும் டிப்ஸ் இதோ...

பப்பாளி கூழ் – 2 தேக்கரண்டி, கஸ்தூரி மஞ்சள் தூள் – கால் தேக்கரண்டி, விளக் கெண்ணெய் – கால் தேக்கரண்டி மூன்றையும் கலந்து பேஸ்ட் ஆக்குங்கள். இந்தப் பேஸ்ட்டை பாதங் களில் தடவி, காய்ந்ததும் கழுவுங்கள். கருமையும் சுருக்கமும் காணாமல் போவதுடன் மெத்மெத்தென்ற பாதங்கள் கிடைக்கும்.

சிவந்த மேனியை விரும்புகிறவர்களுக்கான ஸ்பெஷல் பேக் இது..

உலர்ந்த திராட்சை – 10, வித நீக்கிய பேரீச்சம் பழம் – 1 இவற்றை முதல் நாளே வெந்நீரில் ஊறவைத்து, மறுநாள் மிக்ஸியில் அரைத்துக் கொள்ளுங்கள். இதனுடன் பப்பாளி கூழ் – அரை தேக்கரண்டி கலந்து கொள்ளுங்கள். இதை முகத்துக்குப் பேக் ஆகப் போட்டு 15 நிமிடம் கழித்து மிதமான சுடுநீரில் கழுவி வர சிவப்பழகு க்ரீம் விளம்பரங்களில் வரும் பெண்கள் போன்ற மந்திர மாற்றத்துடன் ஜொலிப்பீர்கள்.



# மீன் கட்லெட்


மீன் குழம்பு, மீன் வறுவல் எனச் சாப்பிட்டு போரடித்து விட்டதா? இதோ உங்களுக்காக சுவையான மீன் கட்லெட் சுவைத்துப் பாருங் கள் இதன் ருசியே தனிதான்.

**தேவையான பொருள்கள்**

மீன் - 1/2 கிலோ
உருளைக்கிழங்கு - 2
சின்ன வெங்காயம் - 100 கிராம்
பச்சைமிளகாய் - 5
சீரகத்தூள், மிளகுத்தூள், மிளகாய் தூள் - 1/2 தேக்கரண்டி
இஞ்சி, பூண்டுவிழுது - 1/4 தேக் கரண்டி
கொத்தமல்லி, புதினா -ஒரு கொத்து
ரஸ்க் 4 (தேவைக்கு ஏற்ப)
முட்டை 4 (தேவைக்கு ஏற்ப)
எலுமிச்சை சாறு 1/2 தேக்கரண்டி
உப்பு, எண்ணெய் தேவையான அளவு.

**செய்முறை**

முதலில் மீன், உருளைக்கிழங்கு இரண்டையும் ஆவியில் வேக வைத்து மசித்து வைத்துக் கொள்ளவும். அதன் பின்பு சட்டியில் சிறிது எண்ணெய் விட்டு வெங்காயம், பச்சை மிளகாய், இஞ்சி பூண்டு விழுது, கொத்த மல்லி– புதினா இலை ஆகியவற்றை ஒவ்வொன்றாக சேர்த்து நன்கு வதக்கவும். அதனை மீன் கலவையில் சேர்த்து நன்கு கிளற வேண்டும். அந்தக் கலவையில் மிளகாய்த்தூள், சீரகத்தூள், மிளகுத்தூள், எலு மிச்சை சாறு மற்றும் தேவையான அளவு உப்பு சேர்த்து நன்றாகப் பிசைந்து கொள்ளவும். முட்டையின் வெள்ளைக் கருவை மட்டும் தனி யாகஎடுத்துஅகன்றபாத்திரத்தைஉடைத்துநன்குஅடித்துவைத்துக்கொள்ள வும். சட்டியில் தேவையான அளவு எண்ணெய் ஊற்றி, மீன் கலவையை சிறிய உருண்டைகளாகத் தட்டி முட்டையில் தோய்த்த பின், ரஸ்க் தூளில் புரட்டி எடுத்து பொரித்தால் சுவையான மீன் கட்லெட் தயார்.



# கண்களை அலங்கரிக்க

புருவங்களில் உள்ள முடி வளர்ச்சிக்கு விளக்கெண்ணெய் மிகமுக்கியம். அத்துடன்சமஅளவுபாதாம்எண்ணெயும், ஆலிவ் என்ணெயும் கலந்து சில துளிகள் அரோமா எண்ணெய் கலந்து மசாஜ் செய்யலாம். அதனால் அந்த இடங்களில் இரத்த ஓட்டம் அதிகரித்து, ரோம வளர்ச்சியும் அதிகரிக்கும். எண்ணெய் தடவி மசாஜ் செய்வதற்கு முன்பாக, புருவங் களை இரண்டு விரல்களால் மெதுவாகக் கிள்ளி விட வேண்டும். எண்ணெய் மசாஜ் புருவத்தில் முடி வளர உதவுவதோடு, அது அடர்த்தியாகவும் கருமையாகவும் வளரவும் வழி செய் கிறது. தினசரி குளிப்பதற்கு முன்பாகப் புருவங்களின் மேல் கொஞ்சம் தேங்காய் எண்ணெயைத் தடவி மசாஜ் செய்து விட்டு, ஊறியதும் குளிக்கலாம். இதுவும் புருவங்கள் அழகாக உதவும். புருவங்களை எப்போதும் திரெடிங் முறையில் அகற்றுவதே நல்லது. சிலர் வோக்சிங் முறையிலும் அகற்றுவதுண்டு. வோக்சிங் செய்வதால் அந்த இடத்துத் தசைகள் சுருங்கித் தொய்ந்து போகக் கூடும்.

கண்களுக்கு அடிக்கடி ஐ பேட் உபயோகிக்கலாம். கண்கள் குளிர்ச்சியாவதுடன், புருவங்களின் சீரான வளர்ச்சிக்கும் உதவும். புருவங்களின் வளர்ச்சிக்கு லாவண்டர், ரேஸ்மெரி, யிலாங் யிலாங் மாதிரியான அரோமா எண்ணெய்கள் மிகச் சிறந்தவை. அவற்றை சூடுபடுத்தா மல் அப்படியே மசாஜ் செய்ய உபயோகிக்கலாம்.

கண்களை அலங்கரியுங்கள். கண்களை மட்டும் நன்றாக அலங்கரித்துவிட்டாலே போதும் பாதி அழகு வந்து விடும். எனவே உங்களைச் சொல்லும் கண்களை அழகாக அலங்கரித்துக்கொள்ளுங்கள். சிலருக்கு ஐலைனர் போடத் தெரியாது. ஆனால் தெரியாது என்று விட்டுவிட வேண்டாம். வீட்டில் இருக்கும் போது போட்டு முயற்சி செய்து கொண்டே இருங்கள்.

உங்கள் கண்கள் பெரிய இமைகளைக் கொண்டிருப்பின் கண் இமைகள் சிறியது போன்று காட்டுவதற்கு இமை களின் மேல்முனைப் பகுதியில் அழுத்தமான ஐ ஷேடோக்களை இடவும். பிறகு அதே வர்ணத்தின் இளம் நிறத்தை நடுப்பகுதியில் இட்டு மீண்டும் அழுத்தமான நிறத்தைக் கொண்டு முடியுங்கள். கண்ணின் முனைப் பகுதியில் ஐ லைனரை நன்கு அழுத்தமாக வைத்து கண்களின் அழகுக்கு அழகு சேருங்கள்.

சிறிய கண்களைக் கொண்டவர்கள் நன்கு அழுத்தமான ஐ ஷேடோவைக் கொண்டு இமைகளின் மேற்பரப்புகளில் கோடிட்டுக் கொள்ளுங்கள். பின்னர் இளம் நிற ஐ ஷேடோ வைக் கொண்டு நிரப்புங்கள். இப்போது ஐ லைனரைக் கொண்டு அழுத்தமான கோட்டில் ஆரம்பித்து மிக மெல்லிய கோட்டுடன் இமைகளின் இறுதியை முடியுங்கள். சிறிய கண்களும் தற்போது எடுப்பாகத் தோன்றும். கண்கள் மீது ஐ ஷேடோக்களை இடாமல் மேல் இமையில் அழுத்தமாக ஐ லைனரை மட்டும் அழகாகப் போட்டு, இமையின் முடிவில் அழுத்தமாக முடிக்கவும். இது உங்கள் கண்களை அழகாக்கும்.



# முகப்பருவை நீக்கும் துளசி பேக்

குளிர்காலத்தில் பருக்கள் ஏற்படாது. அவ்வாறு வந்தால் இலகுவில் நீங்கா. இப்படி வரும் பருக் களை விரட்டியடிக்கிறது துளசி பேக். சந்தனத் தூள், எலுமிச்சைச் சாறு, துளசிச் சாறு, வெட்டி வேர் பவுடர் தலா ஒரு தேக்கரண்டி எடுத்து, கலந்து, பருக்கள் மீது தடவி 10 நிமிடம் கழித்து கழுவுங்கள். ஒரே வாரத்தில் பருக்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும். பனிக்காலத் தில் மேக்கப் போடும்போது, முகத்தில் நீர் கோர்த் துக் கொண்டு பொதபொதவென்று ஆகிவிடும். இதற்கும் தீர்வு இருக்கிறது. 10 துளசி இலையு டன், சுக்குப் பவுடர் 2 சிட்டிகை, லவங்கம்– 1. இவை மூன்றையும் நன்றாக அரைத்து, முகத்தில் தடவி கழுவுங்கள். பின்னர் மேக்கப் போடுங்கள். இதனால், தோல் இறுக்கமாகும். கண்ணுக்குக் கீழே கருவளையம் தோன்றி கருமை படர் கிறதா? கவலையை விடுங்கள். துளசி இலையு டன், பத்து கிராம் வெள்ளரி விதை, சிறிது கஸ்தூரி மஞ்சள் கலந்து அரைத்து, கண்களைச் சுற்றிலும் பூசிக் கழுவுங்கள். தோல் மிருதுவாகி கருமை காணாமல் போய்விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னியூரான்

அரசியல் திருவிளையாடல் யாழ்.தேவியில்வந்துஇறங்கி நிற்கிறது. அத்தோடு, 4000 மோ. சைக்கிள்களும் மானிய விலை மாதிரிசிலமாதம்கழியகாசுகறக்கும்விதத்தில் மாயியிருக்கின்றன. தேர்தலுக்குப் பின்நடைமுறைமாறலாம்அல்லது மாறாமல்விடலாம்.அதுபுள்ளடிஇயை பொறுத்தது. ஐயா படித்தவர்களே, பார்த்துச் செய்யுங்கள். பட்டம்பெற்றவர்களே, பட்டறிவை சிந்தியுங்கள். புத்திஜீவிகளே, உங்கள் பெயருக்கு களங்கம் வராது பார்த்துக் கொள்ளுங்கள். நீதிபதிகளே, உங்கள் நீதித்தராசு இப்போது இல்லை. நவீன தராசு நம்பர் மட்டுமேதெரிகிறது.ஆதலால் அரசு சொன்னபடி தீர்ப்பு வழங்க முடியும் என்றுஎண்ணாதீர்கள்.ஆண்டவன்கணக்கு தவறாது. முன்னைய காலங்களில் தேர்தல்கள் தெற்கில் இருந்துதான் ஆரம்பித்தன. இப்போ வடக்கிலிருந்து ஆரம்பிக்கிறது. இதிலிருந்து தெரிகிறது வெற்றியின் இலக்கு எங்கே இருக்கிறது என்று.

அரசு வடக்கு மக்களை வலை வீசுகிறது. அதேவேளை எதிரணி புலம்பெயர் தமிழர்களிடம் வலை வீசுகிறது. ஒருவர் நேரடி முகவர் ஊடாக, மற்றவர் சுற்றி வளைத்து காய் நகர்த்துகிறார்கள். ஆனால் வலை வீசப்படும்இடம்எல்லாம்இவர்களால்பாதிக்கப்பட்ட பட்டறிவாளர்களே உள்ளார்கள். எனவே கடந்த கால கசப்பான வாழ்வையும் அரசுடன் இணைந்திருக்கும் தமிழ் தலைவர்கள் பற்றியும் கூறலாம் என எண்ணுகிறேன். ஐயா தமிழ் மக்களை பொறுத்த மட்டில் நிதானமாக இருக்கிறார்கள். நேர்மையாக இருக்கிறார்கள். விழிப்பாக இருக்கிறார்கள். முள்ளிவாய்க்கல் நினைவோடு இருக்கிறார்கள். இராணுவ ஆக்கிரமிப்பை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். கைப்பொம்மைகளினால் காட்டிக்கொடுப்பைக்கண்டுகொண்டிருக்கிறார்கள். கைப் பொம்மையாக விளங்கும் தமிழ் தலைவர்கள் என்று கூறுபவர்கள் எது எப்படியானாலும் பரவாயில்லை, எனதுபை நிரம்பினால் போதும் என்று எண்ணிக் கொண்டு அரசிடம் கையேந்தி அபிவிருத்தி என்ற போர்வையில் ஆளுக்குப் பாதி என்ற வீதத்தில் தமிழர் சொத்துக்களை கூறு போடுகிறார்கள்.

அதேவேளை வடக்கிலிருந்து ஒரு தொகை வாக்கைப் பெற்றுத் தருவோம் என அரசுக்கு உறுதி மொழி கூறிவிட்டு சில வாழ்வாதார வடிவில் வாட்டர் பம்,தையல்மெசின், ஆடு, மாடு, கோழிகளைக் கொண்டு வந்து தங்கள் ஆதரவாளர்கள் என்று ஒரு தலைப்பட்சமாக எண்ணிக் கொண்டு கிராமங்களில் தொழில்படுகிறார்கள்.

ஓம்ஐயா,வாருங்கோ,தாருங்கோபுள்ளடிஎடுங்கே என்று சொல்லுங்கோ, என்ற பாணியில் நாடகம் அரங்கேறுகின்றது. அரசும் அதன் கைப் பொம்மையாக நடமாடும் தமிழ் தலைவர்களும் ஒன்றை சிந்திக்கவேண்டும்.

மாகாண சபைத் தேர்தல் நடந்த வேளை மக்கள் முன் நீங்கள் எப்படி காய் நகர்த்தினீர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எப்படி காய் நகர்த்தியது. இறுதியில் என்ன நடந்தது என்பது சகலரும் அறிந்ததே . அப்படி தமிழ் மக்களால் தூக்கி தூர வீசப்பட்ட பின்பும் அரசு என்ன செய்தது? செய்து கொண்டிருக்கிறது என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். மக்கள்மனங்களைவெல்லுவதற்காகஜனநாயக வழி முறைகளைக்கையாளாது அடக்குமுறையில் நம்பிக்கை கொண்டு ஆள் வைத்து அடிப்பது போல ஆளுநரை வைத்து மாகாண சபையைமடக்கிமுடக்கிவைத்துக்கொண்டுஅடுத்த புள்ளடிக்கு ஆயுதமாக வந்துள்ளார்கள்.

நாம் அரசிடம் எந்தக் காலப்பகுதியிலாவது வீதிவேண்டும் வேலை வேண்டும் யாழ். தேவி வேண்டும் என்றும் அல்லது வாட்டர் பம், தையல் மெசின், ஆடு, மாடு,கோழி வேண்டும், என்றும் கேட்டு போராடினோமா? அல்லது இவைதான் எமது குறையா? வயித்து வலியால் குழந்தை ஏணையில் கிடந்து அழுகிறது. அந்தக் குழந் தைக்கு விளையாட்டு சாமான்களையும் போச்சி போத்திலையும் காட்டினால் எப்படி இருக்கும். இதுதான் இன்றைய அரசியல் நவீனமயப்படுத்தல் முறை.

நீங்கள் விளங்கிக்கொள்ளாதவர் போல்நடிக்கலாம். நாம் என்ன செய்வது? உயிரைக் கொடுத்துஉண்மைஇல்லை,உண்மைஇல்லை என்று கூற முடியுமா? எம் மக்களைப் பொறுத்த அளவில் ஜனாதிபதி தேர்தலைப் பற்றி கவலையில்லை. ஏன் என்றால் எமக்கு இரண்டு கட்சிகளும் ஒன்றுதான். இருந்தும் வித்தியா சம் இருக்கு என்று கூறும் அரசுடன் இணைந்த தமிழ் தலைவர்களுக்குக் கூறுகின்றோம். எமக்கும் ஒரு வித்தியாசம் தெரிகிறது என்று அதாவது ஐக்கிய தேசியக் கட்சி அரசு எத் தனை லட்சம்தமிழரை கொன்றது. எத்தனை ஆயிரம் தமிழரை சிறையில் அடைத்தது. எத்தனை ஆயிரம் பெண்களை மானபங்கம் செய்தது. எத்தனை விதவைகளை உருவாக்கியது.

ஐக்கிய மக்கள்சுதந்திரக்கூட்டமைப்பு எத்தனை ஆயிரம்தமிழ் இளைஞர்களை நிர்வாணமாய் சுட்டு எரித்தது. எத்தனை ஆயிரம் தமிழர்களைஉயிரோடுபுதைத்தது. வகைவகையான கொத்துக் குண்டுகளையும், பல்குழல் துப்பாக்கி ஷெல்களாலும் எம்மினத்தைப் பூண்டோடு அழிக்க அரும்பாடுபட்டதையும், பல ஆயிரம்விதவைகளுக்குகாரணமாகஇருந்தார்கள் பல ஆயிரம் தமிழர்களை முடவர்களாய் ஆக்கியவர், ஒன்றும் அறியாத பச்சிளம் குழந்தைகளை எவர் உதவியும்அற்ற அநாதைகளாய் ஆக்கியவர்கள். பல ஆயிரம் தமிழ் இளைஞர்களை காணவில்லை, என்று சர்வதேசம் முன் அகங்கார பொய் கூறியவர்கள் இவைகள் எல்லாவற்றையும் புள்ளியிட்டு வட்டி பெருக்கிக் கழித்துப் பார்க்கும்போது எந்தக் கட்சியின் கொடுமை குறைவாக இருக்கிறதோ அந்தக் கட்சிக்கு வாக்களித்து, அந்தக் கட்சியை வெற்றி பெறச் செய்து, அவர் வந்து, தான் விட்ட குறையை நிரப்புவார் என்ற நம்பிக்கையோடு வாக்களிப்பதா?

சிங்கள ஏகாதிபத்திய அரசுகள் காலத்துக்கு காலம் எமக்கிழைத்த தாங்க முடியாத கொடுமைகளைப் புள்ளடியால் சீர் செய்ய முடியுமா? இறந்தவர்களுக்குப் பிதிர் கடன் கூட செய்ய முடியாது என்ற கேவலமான சட்டத்தை எம் மக்கள் மீது திணித்தவர்களுக்கு எந்த முகத்தோடு வாக்களிப்பது. நீங்கள் தெளிவாக இருக்கிறீர்கள் என்பது விளங்காமல் இல்லை. இருந்தும் உருவேத்து பவர்கள் பணப் பெட்டியுடன் பல முகவர் களைத் தயார் செய்து பறந்து திரிகிறார்கள். அதனால் ஒரு மனப்பயத்தில் இதைக் கூறுகிறார்கள். ஒரு கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் என்பது அந்த விஞ்ஞா பனத்தை சமர்ப்பிப்பவர் நாட்டை ஆளக் கூடியவர் என்று அடையாளப்படுத்துவது.

எமது நாட்டில் அப்படியில்லை. தேர்தல் விஞ்ஞாபனம் என்பது தேர்தல் முடியும் வரைதான். சும்மா சொல்லக் கூடாது. ஜனநாயக முறைப்படி மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு தேர்தல் விஞ்ஞாபனத்தை செயலிழக்கச் செய்து அதை பகிடியாக்கி, ஐந்தோ பத்தோ வருடம் தொடர்ந்து இன அழிப்பை செய்துவிட்டு, மீண்டும் தேர்தல் விஞ்ஞாபனத்துடன் வருவார்கள்.

இதுதான் ஐயா பெரும்பான்மை இனத்தின் பெரும்பான்மை கட்சிகள் இரண்டும் நடந்து கொள்ளும் விதம். சர்வதேசம் உலக ஒழுங்குகளுக்கு அமைவாகவும், இந்து சமுத்திர பிராந்தியப் பாதுகாப்பு, அமெரிக்கா இந்தியாவைவிட யாரும்இலங்கைக்குள் வந்து போவது பற்றியும், அதனால் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் பற்றியும்கவலைப்படுவதும்சீர்செய்வதுமாகவே நடவடிக்கை நடைபெறுகிறது. ஆனால் எம்மைப் பற்றி யாரும் அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை. போர் நடந்தகாலங்களில் அரசும் அயல் நாடொன்றும் மேற்குலக நாடுகள் பலவும் இணைந்து போரை முடிவுக்குக் கொண்டதாக இலங்கை வரலாற்றின் இறுதிப் பக்கத்தில் குறிப்பிட்டிருப்பார்கள்.

ஆனால் தமிழ் இனம் ஆளப்படும் இனமாக இருந்து கொண்டு ஆளும் இனத்தின் அடிமைகளாக வாழ வேண்டுமென்பதே பேரின வாதக் கட்சிகளின் அணுக முடியா பிடிவாதக்கொள்கை. எமது நிலையை எந்தவொரு நாடும் கேட்க ஆயத்தமானால் அந்த நாட்டை ஓரம் கட்டும் நடவடிக்கையை மேற்கொள்வார்கள்.

இதுவே இலங்கையின் அரசியல்.

# யாழ். தேவி

## தேர்தல் 2015




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இணையத்தள போர் ஆரம்பம்

## அமெரிக்கா வடகொரியா ஏட்டிக்குப் போட்டி தாக்குதல்

### சொனி நிறுவன படத் தயாரிப்பு ஏற்படுத்தியுள்ள சிக்கல்

■ ரெங்கன்

அமெரிக்காவுக்கும் – வடகொரியாவுக்குமிடையில் அரசியல் மற்றும் ராஜதந்திர மோதல்கள் சமீப காலமாக வெகுவாக அதிகரித்தும், விரிவடைந்தும் காணப்படும் நிலையில் இப்போது இணையத்தள மோதல் ஒன்று உருவாகிப் பரபரப்பை ஏற்படுத்தி வருகின்றது. சொனி திரைப்பட நிறுவனம் நகைச்சுவைப்படம் ஒன்றை வடகொரியாவைக் கிண்டல் செய்யும் வகையில் தயாரித்ததைத் தொடர்ந்து இந்தப் புதிய மோதல் தலைதூக்கியுள்ளது. இரண்டு முட்டாள்கள் வடகொரிய தலைவர் கிம் ஜொங் உன்–ஐ கொலை செய்யும் படியாகக் கேட்கப்படுவது, போன்ற காட்சிகள் இந்தத் திரைப்படத்தில் இடம்பெற்றிருப்பதாகத் தெரிகின்றது. இதையடுத்து சொனி நிறுவனம் ஓரளவு நிலைகுலைந்து போகும் வகையில் அதன் மீது இணையத்தள தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலை வடகொரியாவே செய்திருக்க வேண்டும் என்ற சந்தேகம் எழுந்த நிலையில், இந்தத் தாக்குதலுக்கு வீதாசார அளவில் பதிலளிக்கப்படும் என்று அதிபர் பராக் ஒபாமா அறிவித்திருந்தார். இந்த நிலைமையில் வடகொரியாவின் ஆரம்ப நிலையிலுள்ள இணையத்தளம் கடந்த திங்கட்கிழமை நீண்டநேரம் இருட்டடிப்புக்குள்ளானது. அமெரிக்காதான் இவ்வாறு செய்திருக்கவேண்டும் என்ற சந்தேகம் பரவலாக உருவானாலும் அதனை அமெரிக்கா முற்றாக உறுதி செய்யவில்லை.

இவ்வாறு யார் செய்திருக்கமுடியும் என்ற கேள்வி இப்போது எல்லோராலும் கேட்கப்படுவதாக இருக்கிறது. இணையத்தள வரலாற்றில் இது ஒரு பெரிய மர்மம் சூழ்ந்த நிகழ்வாகவும் கருதப்படுகின்றது.

அநாமதேயன் என்ற பெயரில் மறைமுகமான கொரில்லா போராளிகள் குழுவின் வேலையாக இருக்குமா? அமெரிக்கா மேற்கொண்ட பழிவாங்கல் செயற்பாடா? வடகொரியாவின் நெருங்கிய நண்பனும் வாயில் காப்போன் போன்று செயற்பட்டு வரும் சீனாவின் துரோகச் செயலா? அல்லது அந்த நாட்டின் தொழில்நுட்ப செயற்பாட்டில் அல்லது பாதுகாப்பு ஏற்பாட்டில் ஏற்பட்ட தவறா? என்றெல்லாம் இப்போது ஆராயப்பட்டு வருகின்றது. சொனி நிறுவனம் வெளியிட்ட திரைப்படம் காரணமாக வடகொரியா அதன் மீது நடத்தியிருப்பதாகக் கருதப்படும் சைபர் தாக்குதலுக்கு எவ்வாறு அமெரிக்கா பழிவாங்கப் போகிறது என்று கேட்டபோது அமெரிக்க அதிகாரி ஒருவர் மறுப்புக் கூறாத வகையிலான ஒரு பதிலைக் கூறினார். நாம் பதில் செயல்பாட்டை மேற்கொள்ளும்போது அவைகளில் சில வெளியில் தெரிவதாய் இருக்கும். வேறு சில வெளியில் தெரிவதாய் இருக்காது – என்றார் அவர். சொனி நிறுவனம் முடங்கும் அளவுக்கு இணையத்தள தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதற்கு தாங்கள் காரணமில்லை என்று வடகொரியா தொடர்ந்து மறுத்து வருகின்றது.

வியாழக்கிழமையன்று வடகொரியாவின் இணையத்தள உள்கட்டமைப்பின் தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்படுவதின் அடையாளத்தை ஆய்வாளர்கள் கண்டுபிடித்து அறிவித்தார்கள். இணையத்தள சேவைகளை அளவுக்கும் மீறிய வகையில் இருக்கும்படி செய்யும் வகையில் போலியான வழித்தடங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. இது மாதிரியான தாக்குதல்கள் முழு இணையத்தள சேவைகளையும் செயற்படாமல் செய்து விடக் கூடியவை என்று கூறப்படுகின்றது. அடுத்தநாள் டுவிட்டரில் அநாமதேயன் என்ற பெயரில் வடகொரியாவுக்கு எதிரான எதிர்த் தாக்குதல் ஆரம்பமாகிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. வடகொரியாவைக் கிழிக்கும் செயற்பாடு துவங்கிவிட்டது என்ற பொருளில் அது அமைந்திருந்தது. வடகொரியா மீதான தாக்குதலுக்கு அநாமதேயன் இணையத்துடன் தொடர்புடைய வேறொரு அமைப்பும் உரிமை கொண்டாடியிருந்தது.

திங்கட்கிழமை ஐ.நாவுக்கான அமெரிக்க தூதுவர், 'சொனி' நிறுவனம் மீதான தாக்குதலுக்கும் வேறு மனித உரிமை மீறல்களுக்கு வடகொரியாவைப் பொறுப்புக்கூறும்படிசெய்யுமாறு உலகம்முழுவதிலுமுள்ள அமெரிக்க பங்காளிகளைக் கேட்டுக்கொண்டார்.

வடகொரியா தொடர்பாக 'சொனி' நிறுவனம் தயாரித்த 'இன்ரர்வியூ' என்ற நகைச்சுவைப் படத்தை இணையத்தள நெருக்குதல்களால் கிடப்பில் வைத்திருந்த அந்த நிறுவனம் இப்போது பல திரை அரங்குகளில் திரையிடத் தீர்மானித்திருப்பதை அதிபர் பராக் ஒபாமா வரவேற்றிருக்கிறார் என்று வெள்ளை மாளிகை அதிகாரி எரிக் ஸ்சுல்ட்ஸ் தெரிவித்துள்ளார்.

சுயாதீன பேச்சு மற்றும் கலைத்துவ வெளிப்பாடுகளில் நம்பிக்கையுள்ளது எமது நாடு, சொனி நிறுவனப் படத்தை அரங்குகளில் திரையிடுவதானது மக்கள் அந்தப்படம் தொடர்பாகத் தமது அபிப்பிராயங்களை உருவாக்கிக் கொள்ள உதவுவதாய் இருக்கும் என்றார் ஒபாமா.

வடகொரியாவின் இணையத்தளங்கள் மீண்டும் கடந்த 23 ஆம் திகதியும் செயல் இழந்து காணப்பட்டுள்ளன. அமெரிக்க இணையத்தள ஆய்வுக் குழுவொன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. சீன யுனிகோன் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள வடகொரியாவின் நான்கு இணையத்தள நிறுவனங்களும் கடந்த செவ்வாய்க்கிழமை 15.41 ஜி.எம்.ரி. நேரத்தில் செயல் இழந்துபோய்விட்டதாக ஆய்வுக் குழு தெரிவித்தது. கடந்த திங்கட் கிழமையும் வடகொரிய இணையத்தளங்கள் 9 மணி நேரத்துக்கு மேலாக செயல் இழந்துபோய் இருந்தன. 'சொனி' பட நிறுவனத்தின் மீது வடகொரியா இணையத்தள தாக்குதல் நடத்தியதான குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலடியாக வடகொரிய இணையத்தளங்கள் மீது அமெரிக்கா தாக்குதல் மேற்கொண்டிருப்பதாகக் கருதப்படுகின்றது.

## பகிரங்கமாக பிரார்த்தனை செய்யத்தடை

இஸ்லாமிய அரசு தான் கைப்பற்றியுள்ள பகுதிகளில் இஸ்லாமியர் அல்லாதவர்கள் பின்பற்றுவதற்கென்று ஏழுவிதிகள் கொண்ட அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது. குறிப்பாக சிரியாவின் ரக்கா நகரில் வாழும் முஸ்லிம் அல்லாத கிறிஸ்தவர்கள் இந்த விதிகளைக் கட்டாயம் அனுஷ்டிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

அந்த விதிகளில் ஒன்று கிறிஸ்தவர்கள் பகிரங்கமாகப் பிரார்த்தனைகளில் ஈடுபடலாகாது. அத்துடன் அவர்கள் செய்யும் பிரார்த்தனை முஸ்லிம்களின் காதில் விழுவதாகவும் இருக்கலாகாது என்பது முக்கியமானது. இஸ்லாமிய அரசு தீவிரவாதிகள் கூறுவதைக் கேட்டு நடக்கவேண்டும். இஸ்லாமிய அரசுபடைகளுக்கு எதிரான சதிவேலைகள் எதிலும் இறங்கக் கூடாது. முஸ்லிம்கள் அல்லது இஸ்லாத்துக்கு எதிரான கேலிகிண்டல்களிலும் ஈடுபடலாகாது.

இந்தக் கட்டாய விதிமுறைகள் முன்பு சிரியாவின் கட்டுப்பாட்டில் சகல சமயங்களும் தாராளமாக செயல்பட அனுமதிக்கப்பட்டிருந்த சிரியாவின் இஸ்லாமிய அரசுக்குட்பட்டுள்ள பகுதிகளில் இப்போது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கட்டாய விதிகளை கிறிஸ்தவர்கள் கடைப்பிடிப்பார்களானால் அவர்களை இஸ்லாமிய அரசு தலைவர் அல் பக்தாதி பாதுகாப்பார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஒபாமாவுக்கு ரஷ்யா அழைப்பு



இரண்டாம் உலகப் போரின் போது சோவியத் யூனியன், நாஸி ஜேர்மனியை வெற்றிகொண்ட 70 ஆவது வருடாந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு ரஷ்யா, அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவுக்கு அழைப்பு விடுத்துள்ளது. ஹிட்லரின் நாஸி அரசுக்கு எதிராகப் போரிட்ட அனைத்து நாடுகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகக் கிரெம்ளின் அதிகாரிகள் கூறினார்கள்.

# உலக நடப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்களைப் பாதுகாப்போம்...

இன்றைய உலகில் பெண்களைப் பாதுகாப்பது என்பது எல்லோருடைய மிகப் பெரிய பொறுப்பாக விளங்குகிறது. ஏனெனில் தற்காலத்தில் பாலியல் பலாத்காரங்களே, சிறுவர் முதல் பெரியவர் வரை தடுக்க முடியாத ஒரு நிகழ்வாகத் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

"பெண்களே நாட்டின் கண்கள்"' இவ்வாக்கியத்துக்கமைய நாம் எல்லோரும் இணைந்து செயற்பட்டாலே அதனைத் தடுக்க முடியும். இதற்கு நாம் பாலியல் கல்வியை மாத்திரம் போதித்தல் கூடாது. எமது கலாசார இயல்புகளை அழிந்து போகாது வளர்ப்பதனூடாக இந்தப் பிரச்சினைகளைக் கட்டுப்படுத்த முடியும். இதில் ஒன்று வெளிப்படையாகக் கூறப்பட வேண்டிய விடயம் என்னவெனில் இயற்கையின் படைப்பில் ஆணுக்கும், பெண்ணுக்கும் அன்பும், ஆசையும் ஒரு தவிர்க்க முடியாத தேவையாகத்தானிருக்கிறது. ஆனால் எந்த விருப்பத்தையும் "ஒருவருடைய மனதையோ, உடலையோ வருத்தாது அனுபவிக்கப்படும் சுதந்திரம் இனிமையானது" இந்தக் கூற்று எல்லோராலும் ஆதரிக்கப்பட்டால் பாலியல் பலாத்காரம் என்பது "சூரியனைக் கண்ட பனிபோல" அழிந்து, மறைந்து வேரோடு சாய்ந்து விடும். இதனை ஒவ்வொருவரும் ஆராய்ந்துணர்ந்து செயற்பட்டால் பெண் என்பவள் பெருமைக்குரியவளாகப் போற்றப்பட நாமும் காரணமாவோம். பாலியல் பலாத்காரத்துடன் போராடும் பெண்ணினத்தைப் பாதுகாப்போம்.

■ தனியா

# மனிதாபிமானம் உள்ள மனிதர்களாக...!



மயக்கமென்ன மனிதா?
மரணிக்கும் வாழ்வு
எமக்குமுண்டு!

இதயத் துடிப்பு இன்றோ
நாளையோ?
ஓய்வெடுத்தால் என்னாகும்
எமது நிலை?

என்றோ ஒருநாள்
இறந்துவிடும்
எம்மதிகாரமும் ஆணவச்
செயலும்!
ஏனிந்தப் பகை வாழ்வு?

எம்மினத்தையாவது
எம்மவர்களாக
ஏற்று நாமும் ஏற்றம்பெற
வைத்தே

மனிதாபிமானம் உள்ள
மனிதர்களாக
மமதையின்றி வாழந்தாலென்ன?

*அரியாலையூர்
நிஷாந்தி செல்வராஜா.*

# துன்பமா? தோல்வியா? அவமானமா? எதுவானாலும் சுமக்காதே தூக்கியெறி

■ சு.சிவாஜினி, சுன்னாகம்.

இன்று எமக்கு நடக்கின்ற பிரச்சினைகளிலிருந்து எப்படி விடுபடுவது என்று எதிர் நீச்சலடிக்கையில், அடுத்த கட்டமாக வேறு ஒரு சிக்கல் வந்து விடுகின்றது. அப்போது, எமது உயிரை மாய்த்தால் என்ன. இந்த இடத்தை விட்டு எங்காவது போய்த் தொலைந்தால் என்ன, என்ற சிந்தனைகள் தோன்றுவது இயல்பானதுதான். இருந்தாலும் எம் மனம் நினைக்கின்ற செயல்கள் யாவற்றையும் செய்தால் எம்மை வாட்டுகின்ற பிரச்சினைகள் தீருமா? அல்லது வாழ்வில் நிம்மதிதான் கிடைக்குமா? மாற்றம் ஒன்று வரவேண்டும் என்றாலோ அல்லது தீர்வு ஒன்று கிடைக்க வேண்டும் என்றாலோ நாம் நிதானமானவர்களாக இருக்கா விட்டால் தொடர்ந்து சிக்கல்களும், துன்பங்களும் வந்து கொண்டேதான் இருக்கும். எதையும் இறக்கி வைக்காமல் சுமந்து கொண்டு செல்வோமானால் சுகமாக வாழவும் முடியாது. வாழ்வில் நாம் சாதிக்க நினைத்ததையும் செய்யவும் முடியாது.


உண்மையில் பெண்களாகிய நாம், இந்த விடயத்தில் நிறையவே சிந்திக்க வேண்டும், ஏனெனில் அன்றாடம் ஆண்களை விடப் பெண்களாகிய நாம் பல்வேறு பட்ட சம்பவங்களால் பல வடிவங்களில் துன்பங்களை எதிர் கொள்கின்றோம். அனைத்தையும் தாங்குவது என்றால் இரும்பையொத்த, மனத்திடம் எமக்கு இருக்க வேண்டும். தொட்டதுக்கும் அழுது புலம்புவது, எமது இயலாமையையும், ஒரு மனத்திடம் அற்ற தன்மையையுமே வெளிப்படுத்தும். காலம் காலமாக நாம், சமூகத்தினர் என்ன நினைப்பார்கள், எப்படி கதைப்பார்கள் என்று அனைத்துப் பிரச்சினைகளையும் இறக்கி வைக்காமல் சுமந்து கொண்டு புலம்புவோமானால் நாம் நடைப் பிணமாகத் தான் இருக்க வேண்டும். 'நீங்கள் அத்தனை பேரும் உத்தமர் தானா சொல்லுங்கள்' என்பார்கள். உண்மையில் அவரவர் உண்மைகள் வெளிவரும் வரை யாவரும் நல்லவர்கள் தான், மனிதப் பிறவி எடுத்த அனைவரும் இறைவன் படைப்பில் நல்லவர்களே. நாம் வளர்கின்ற முறை, பழகுகின்ற பழக்க வழக்கங்கள், சந்தர்ப்பம் சூழ்நிலைகள் சில சமயங்களில் எம்மை தவறானவர்களாக வெளியுலகுக்குக் காட்டி விடுகின்றது. இது பொதுவாகத் தவிர்க்கப்பட வேண்டியவைதான். இருந்தாலும் சில விடயங்கள் நாம் நல்லது என்று நினைத்து செய்கின்றோம். கடைசியில் கெட்டதாக முடிகின்றது. சிலவற்றைக் கூடாது என்றுநினைக்கின்றோம். ஆனால் அது நல்லபடியாக முடிகின்றது. பெண்கள் இன்று பல்வேறு துறைகளில் கால் பதித்து உலகையாளும் வல்லமை பெற்ற போதும் நாம் வாழும் சமூகத்தினரின் வசைபாடுதல்கள், கட்டுக் கதைகள், சந்தேகப் பார்வைகள் இவற்றால் மனமுடைந்துபோவதுதான் சகிக்க முடியாத துன்பம். ஏனெனில் பெண்களான எமக்கு ஒவ்வொரு நாளும் ஏற்படுகின்ற இடர்பாடுகள்தான் எக்கச்சக்கம். அதிலும் வீட்டிலுள்ள பெண்களை விட வேலைக்குப் போகும் பெண்களுக்கும் சமூகத்தோடு இணைந்து பொது வேலைகளில் ஈடுபடும் பெண்களுக்கும் ஏற்படுகின்ற துன்பங்கள் தான் பெரிதாக இருக்கின்றன. துன்பம் என்று சொல்வதை விட சவால்கள் என்றுதான் சொல்லவேண்டும். உண்மையில் எமது வேலை நிமித்தம் சமமாக இருந்து ஓர் ஆணுடன் கதைத்தால் போதும். உடனடியாகக் கண் வாய் மூக்கு வைத்து அந்த நபரையும் அந்தப் பெண்ணையும் கற்பனை செய்து கதையைக் கட்டிவிடும் விஷ மனிதர்கள் நிறைந்ததே எமது சமூகம். எந்தச் சாட்சியும் இல்லை. ஒரு தவறும் இடம் பெறவில்லை. வீணாக ஒரு பெண்ணை அவமானமாகக் கதைக்கின்றோம் என்ற, நாக் கூச்சம் கொஞ்சமும் இன்றிப் பெண்களை வசை பாடும் நபர்கள் தமக்கும் பெண் பிள்ளைகள் இருக்கிறார்கள் சகோதரி உண்டு என்பதனை ஏன் உணர மறுக்கின்றனர். இன்று வீணாகக் கட்டவிழ்த்து விட்ட வீணான வசையால் ஒரு பெண்ணின் வாழ்வு எதிர்காலத்தில் பாதிக்கப்படுமே என்ற நல்லெண்ணம் இருக்குமானால் இப்படியான சம்பவங்களைத் தேவையில்லாமல் பெண்களுக்கு ஏற்படுத்தி உள்ளூர சுகம் காணும் இழிவான மனித மனம் கொண்டவர்கள் திருந்துவார்கள். "முற்கால் செய்யின் பிற்கால் விளையும்" என்பார்கள். நாம் அடுத்த வீட்டுப் பிள்ளைக்கு வீணாக அள்ளி வழங்கும் வசை நிச்சயம் எமது பிள்ளைகளுக்கும் திரும்பி இரட்டிப்பாகக் கிடைக்கும். இது தான் இறைவனின் தீர்ப்பு. அடுத்த வீட்டுப் பெண் பிள்ளைக்குத் தேவையற்ற வசைபாடி அந்தக் குடும்பத்திலுள்ள பெற்றோரையும் கண்கலங்கச் செய்யும் மனித வர்க்கம் இன்று எக்காளமிட்டுச் சிரிக்கலாம். ஆனால் நிச்சயம் இறைவனால் கிடைக்கும் இரட்டிப்பு அவமானத் தையும் அவர்கள் குடும்பமும் சுமந்தே ஆக வேண்டும்.

"முற்கால் செய்யின் பிற்கால் விளையும் என்பார்கள்" நாம் அடுத்த வீட்டுப் பிள்ளைக்கு வீணாக அள்ளி வழங்கும் வசை, நிச்சயம் எமது பிள்ளைகளுக்கும் திரும்பி இரட்டிப்பாக கிடைக்கும். இதுதான் இறைவனின் தீர்ப்பு அடுத்தவீட்டுப்பெண்பிள்ளைக்குத் தேவையற்ற வசைபாடி அந்தக் குடும்பத்திலுள்ள பெற்றோரை யும் கண்கலங்கச் செய்யும் மனித வர்க்கம் இன்று எக்காளமிட்டுச் சிரிக்கலாம், ஆனால் நிச்சயம் இறைவனால் கிடைக்கும் இரட்டிப்பு அவமானத்தையும் அவர்கள் குடும்பமும் சுமந்தே ஆக வேண்டும்.

இன்று வீணாக என்னை அவமானப்படுத்தி விட்டார்களே என்று கவலைப்படும் பெண்மணிகளே! பெண்களான எமக்கு இவ்வைகள் எல்லாம் சவால்கள்என்று நினையுங்கள். எதற்கும் கலங்கி நீங்கள் உங்கள் இலட்சியப் பயணத்தைக் கைவிடாதீர்கள். ஏனெனில் எதிலும் துணிந்து நின்று எதிர் நீச்சலடித்து முன்னேற நினைத்த உங்கள் மீது பொறாமை கொண்டு, உங்களை எப்படியாவது வீழ்த்த வேண்டும் என்று ஒரு கூட்டம் எப்போதும் உங்கள் மீது பார்வையை பதித்துக் கொண்டே வீணான கதைகளை முழந்து விடுகின்றது. எனவே பெண்களே நீங்கள் எதற்கும் கலங்காமல் உங்களுடைய நடத்தையில், செயற்பாட்டில் தூய்மையோடு செயற்படுங்கள். எப்போதும் நாம் நாமாகவும், ஒழுக்கமுடையவர்களாகவும் இருந்தால் எம்மை எந்தத் துயரமும் உடைத்து விடாது. அனைத்தையும் தூக்கி எறி பெண்ணே. நீ கொண்ட இலட்சியத்தில் மட்டுமே குறியாய் இரு. வேறு எந்தக் கலக்கமும் வேண்டாம். நாம் துணிந்து நின்றால் எம்மை துரத்தும் துன்பம் ஓடிவிடும். இல்லையேல் எம்மைத்துன்பம் விழுங்கிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்திய அணியிடம் ரசிகர்கள் எதிர்பார்ப்பது என்ன?

பிரிஸ்பேன் டெஸ்ட் போட்டியில் தோற்ற பிறகு செய்தியாளர்களைச் சந்தித்த இந்திய அணித் தலைவர் மகேந்திர சிங் தோனி பயிற்சி ஆடுகளங்களில் காணப்படும் வசதிக் குறைவு பற்றி குற்றச்சாட்டை முன்வைத்தார். பயிற்சி யின்போது ஷிகர் தவனுக்கு அடிபட்டதையும் அவருக்குப் பதிலாக விராட் கோலி அவசர அவசரமாகக் களம் இறங்க வேண்டியிருந்ததையும் சுட்டிக் காட்டினார். மேலும் சில குற்றச்சாட்டுகளும் இந்திய அணியின் தரப்பில் முன்வைக்கப்பட்டன. தங்களுக்கு வழங்கப்பட்ட உணவு சரியில்லை என்பது அவற்றில் ஒன்று. நடுவர்களின் தீர்ப்புகள் தங்களுக்கு எதிராகச் சென்றது பற்றியும் இந்திய முகாமிலிருந்து பேச்சுக் கள் கேட்டன.

இந்தியாவுக்கு வரும் வெளிநாட்டு அணிகளும் இதுபோன்ற குற்றச்சாட்டுகளைச் சொல்லியிருக்கின்றன. போட்டி அட்டவணை, கடும் குளிரில் ஒரு நாள் ஆட்டங்களைப் பகல் ஆட்டமாக நடத்துவதால் வரும் சிக்கல்கள், ஆட்டம் நடக்கும் இடத்தில் உள்ள வசதிகள், உணவு, தண்ணீர், ஆடுகளத்தின் தரம் ஆகியவை பற்றி ஆஸ்திரேலிய அணி உள்பட சில அணிகள் கூறியிருக்கின்றன. எந்தக் குற்றச்சாட்டாக இருந்தாலும் அதைத் தீவிரமாக எடுத்துக்கொண்டு அதன் பெறுமானத்தின் அடிப்படையில் தீர்வு வழங்க முனைவதே போட்டியை நடத்தும் நாடு / வாரியத்தின் பொறுப்பு. எனவே இந்திய அணி முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளை ஆஸ்திரேலிய வாரியம் எந்த வகையிலும் ஒரு சிறிதளவேனும் அலட்சியப்படுத்துவதை எந்தக் காரணம் கொண்டும் ஏற்க இயலாது என்பதை இந்திய கிரிக்கெட் வாரியம் தெளிவுபடுத்த வேண்டும்.

**தோனியின் சப்பைக்கட்டு**

இந்தத் தொடரில் நடுவர்களின் தவறான தீர்ப்புகளால் இந்தியா பாதிக்கப்பட்டது போலவே பலனும் பெற்றிருக்கிறது. தீர்ப்பை மறுபரிசீலனை செய்யும் ஏற்பாட்டை ஏற்க மறுக்கும் இந்தியா இதுபற்றிப் பேசுவதில் பொருளில்லை. பிரச்சினை குற்றச்சாட்டுக்களைப் பற்றியது மட்டுமல்ல. இதுபோன்ற குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்வதிலும் கையாள்வதிலும் உள்ள மனநிலைதான் முக்கியமான பிரச்சினை. தவனுக்கு அடிபட்டதைப்பற்றியும்கோலியின்அவஸ்தை பற்றியும் தோனி குறைபட்டுக்கொண்ட விதம்தோல்விக்கானசப்பைக்கட்டுபோல இருந்தது. சர்வதேச அளவில் விளையாடும் ஓர் அணியின் தலைவரிடம் இதுபோன்ற அணுகுமுறையை வெளிப்படுத்தும் தொனி இருப்பது ஆரோக்கியமானதல்ல. கோலி ஆட்டமிழந்ததும் அடுத்தடுத்து மூவர் ஆட்டமிழக்க, நான்கு ஓவர்களுக்குள் இந்தியா தோல்விக்குப் பக்கத்தில் போய் நின்றுகொண்டது.

இங்கிலாந்தில் ரவீந்திர ஜடேஜாவுக்கும் ஜேம்ஸ் ஆண்டர்சனுக்கும் இடையில் நடந்த மோதலில் இந்திய அணியின் சொல், அம்பலம் ஏறவில்லை. மோதலில் ஆண்டர்சன் மீதான குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கான ஆதாரம் இல்லை என்று விசாரணை நடுவர் தீர்ப்பளித்தார். இது இந்திய அணியின் மனநிலையைப் பாதித்தது. அந்தத் தொடரில் அதன் பிறகான இந்தியாவின் ஆட்டம் மிகவும் ஆட்டம் கண்டது. பிரச்சினைகளைச் சொல்லிப் போராடுவதில் தவறு இல்லை. ஆனால் அந்தப் போராட்டத்தின் தாக்கம் களத்தில் தெரியக் கூடாது. ஒருவேளை தெரிந்தால் ஆக்கபூர்வமாகத்தான் தெரிய வேண்டும்.

**அனில் கும்ப்ளேவின் அணுகுமுறை**

2007–08இல் அனில் கும்ப்ளே தலைமையிலான அணி இதையெல்லாம் விடப் பெரிய நெருக்கடியைச் சந்தித்தது. ஹர்பஜன் சிங்குக்கும் ஆண்ட்ரூ சைமண்ட்ஸுக்கும் இடையே நடந்த மோதல் தொடரையே ரத்து செய்துவிடும் அளவுக்குப் பெரிதாயிற்று. போட்டியில் நடுவர்கள் அளித்த சொதப்பலான தீர்ப்புகள் இந்தியாவுக்கு எதிராகவே அமைந்தன.

ஆஸ்திரேலிய அணியினர் முறையீடு செய்த விதமும் ஆட்ட உணர்வை வெளிப்படுத்துவதாக இல்லை. ஹர்பஜன் விவகாரத்தில் இந்தியா கடுமையான நிலைப்பாட்டை எடுத்தது. தீர்ப்புகள், ஆஸி. அணியினரின் அணுகுமுறை ஆகிய விடயத்தில் கும்ப்ளே தனக்கே உரிய கண்ணியத்தை இழக்காமல் வெளிப்படையாகக் கண்டனம் தெரிவித்தார்.

இன்று ஒரு அணிதான் ஆட்டத்துக்குப் பொருத்தமான உணர்வுடன் ஆடியது என்று அவர் பத்திரிகையாளர்களிடம் சொன்னது பரபரப்பை ஏற்படுத்தியது. பல ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்துக்கு எதிரான ஒரு தொடரின்போது ஆஸ்திரேலிய அணித் தலைவர் பில் வுட்பால் சொன்னதைத்தான் கும்ப்ளே பயன்படுத்திக்கொண்டார். அந்தச் சொற்கள் ஆஸ்திரேலியர்களின் குறிப்பாக, ஆஸ்திரேலிய ஊடகங்களின் மனசாட்சியைத் தொட்டன. அந்த நாட்டு ஊடகங்களே ஆஸ்திரேலிய அணியை விமர்சிக்கத் தொடங்கின.

இது அல்ல விடயம். இத்தனை கொந்தளிப்புகளுக்குப் பிறகு நடந்த பெர்த் டெஸ்டில் இந்தியா தீவிரமாக ஆடி வெற்றியை பெற்றது.

பிரச்சினைகளின் சுமை களத்தில் தங்கள் ஆட்டத்தைப் பாதிக்க அந்த அணி அனுமதிக்க வில்லை. மாறாக, அது அவர்களது உறுதியை, போராடும் தன்மையைக் கூட்டவே உதவியது. அணியின் ஒவ்வொரு வீரரும் ஏதேனும் ஒரு விதத்தில் வெற்றிக்குப் பங்காற்றினர்.

# இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்ட்:

## ஒரே நாளில் 429 ரன்கள் குவித்தது நியூசிலாந்து

இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்டில் நியூசிலாந்து அணி ஒரே நாளில் 429 ஓட்டங்கள் குவித்து பட்டையை கிளப்பியது. அந்த அணியின் தலைவர் பிரன்டன் மெக்கல்லம் 11 சிக்சர் உள்பட 195 ஓட்டங்கள் விளாசினார்.


**டெஸ்ட் கிரிக்கெட்**

நியூசிலாந்துக்கு சென்றுள்ள இலங்கை கிரிக்கெட் அணி 2 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இதன் முதலாவது டெஸ்ட் கிறைஸ்ட்சர்ச் ஹாக்லே ஓவல் மைதானத்தில் நேற்றுமுன்தினம் தொடங்கியது. கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு மறுநாள் அதாவது பொக்சிங் டே அன்று நியூசிலாந்தில் டெஸ்ட் நடப்பது 11 ஆண்டுகளுக்கு பிறகு இதுவே முதல் முறையாகும்.

வேகப்பந்து வீச்சுக்குக் கைகொடுக்கும் வகையில் ஆடுகளத்தில் புற்கள் நிறைந்து காணப்பட்டதால், டாஸ்வென்றதும் தயக்கமின்றி இலங்கை அணித் தலைவர் மத்யூஸ் முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தார். ஆனால் போட்டி நாளான நேற்றுமுன்தினம் அதிகமான புற்கள் அகற்றப்பட்டிருந்தன. அது இலங்கை பந்துவீச்சாளர்களுக்கு பெருத்த ஏமாற்றத்தை அளித்தது.

**74 பந்தில் சதம்**

முதலில் பேட் செய்த நியூசிலாந்து அணியில் ருதர்போர்டு (18 ரன்), டாம் லதாம் (27 ரன்), முன்னாள் தலைவர் ராஸ் டெய்லர் (7 ரன்) ஆகியோர் 88 ஓட்டங்களுக்குள் நடையைக் கட்டினர். இதன் பின்னர் 4ஆவது விக்கெட்டுக்கு அணித் தலைவர் பிரன்டன் மெக்கல்லம், கனே வில்லியம்சனு டன் ஜோடி சேர்ந்தார். இவர்கள் அணியை சரிவில் இருந்து எளிதாக மீட்டனர். பிரன்டன் மெக்கல்லம், ஒரு நாள் போட்டி போன்று அதிரடி காட்டி உள்ளூர் ரசிகர்களைக் குதூகலப்படுத்தினார். இலங்கை



யின் எந்த பந்து வீச்சுக்கும் வளைந்து கொடுக்காமல் சுனாமியாய் புரட்டியெடுத்தார். அபாரமாக ஆடிய அவர் 74 பந்துகளில் தனது 11ஆவது சதத்தை ருசித்தார். இதன் மூலம் குறைந்த பந்தில் சதம் அடித்த நியூசிலாந்து வீரர் என்ற பெருமையும் கிடைத்தது. செஞ்சுரியைத் தாண்டிய பிறகும் அவரது ருத்ரதாண்டவம் நீடித்தது. மறுமுனை யில் கனே வில்லியம்சன் 54 ரன்களில் போல்டு ஆனார். இதன் பின்னர் ஜிம்மி நீஷம் களம் புகுந்தார். அவரும் சுழன்றடிக்க ஓட்ட வேகம் ஜெட் வேகத்தில் இறக்கை கட்டி பறந்தது. இலங்கை பந்துவீச்சாளர்களை விழிபிதுங்க வைத்த பிரன்டன் மெக்கல்லம், இரட்டை சதத்தை நெருங்கிய சமயத்தில் ஆட்டம் இழந்தார். அவர் 195 ஓட்டங்களில் (134 பந்து, 18 பவுண்டரி, 11 சிக்சர்) அறிமுக சுழற்பந்து வீச்சாளர் தாரிந்து கவ்ஷலின் பந்து வீச்சில் 'கேட்ச் ஆனார். மெக்கலம்–நீஷம் ஜோடி 5ஆவது விக்கெட்டுக்கு 117 பந்துகளில் 153 ஓட்டங் கள் திரட்டியது கவனித்தக்க அம்சமாகும்.

**429 ரன் குவிப்பு**

அடுத்து நீஷம் தனது பங்குக்கு 85 ரன்களும் (80 பந்து, 10 பவுண்டரி, 3 சிக்சர்), விக்கெட் கீப்பர் வாட்லிங் 26 ஓட்டங்களும் எடுத்து அணி 400 ஓட்டங்களை கடக்க உதவினார். முதல் நாள் ஆட்ட நேர முடிவில் நியூசிலாந்து அணி முதல் இன்னிங்சில் 80.3 ஓவர்களில் 7 விக்கெட்டுக்கு 429 ஓட்டங்கள் குவித்தது. டெஸ்ட் கிரிக்கெட்டில் ஒரே நாளில் நியூசிலாந்து எடுத்த அதிகபட்ச ரன்கள் இது தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org